உ

ஸ்ரீ குமாரதேவர் திருவாய் மலர்ந்தருளிய

# மகாராஜா துறவு

## மூலமும்,

செம்பை, ஆறுமுகனார்

இயற்றிய

## உரையும்.

பிரசுரகர்த்தா:

**M. முத்திருளாண்டி பிள்ளை அவர்கள்**

**M. நடனசுந்தரம் பிரதர்ஸ்,**

புத்தக வர்த்தகம், புதுமண்டபம், மதுரை.

மதுரை, ஸ்ரீராம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

விலை] 1935 [ரூ. 2—0—0.

(Copy Right. ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.)

# முகவுரை.

"மகாராஜா துறவு" என்னும் இந்நூல் ஆதியில், சூதமாமுனிவரால் நைமிசாரணிய வாசிகளுக்கு வடமொழியிற் கூறப்பட்டிருந்தது. பின்னர்த் தமிழ் நாட்டினர்க்குப் பயன்படுமாறு, ஸ்ரீகுமாரதேவர் இதனைத் தமிழ்ச் செய்யுட்களால் இந்த ரூபமாக இயற்றினார்.

ஸ்ரீகுமாரதேவர், முற்பிறப்பில் ஓர் தவசிரேஷ்டராய் மல்லிகார்ச்சுன பர்வதத்தில், பரமசிவனை நோக்கி நிட்காமிய தவஞ்செய்துகொண்டிருந்தார். அப்போது அவரோடு கூட மற்றொருவர், வேறோர் பக்கத்தில் அமர்ந்து தவஞ்செய்துகொண்டிருந்தார். பரமசிவன், அவருடைய தவத்திற்கிரங்கி அவருக்கு முன்னே பிரசன்னமாகி, "பக்தா! உனக்கு வேண்டிய வரம் யாது?" என்று கேட்டார். அவர் மனத்தில் ஒன்றைக் கருதிக்கொண்டு வாயால் வேறொன்றைக் கேட்டார். இச்செயல்களை உணர்ந்த பரமசிவனார் கோபங்கொண்டு, அவரை நோக்கி, "நீ மனத்திலொன்றும் வாயிலொன்றுமுடையவனாயிருப்பதால் சடாமுனியாகக் கடவாய்" என்று சபித்தார். அத்தவசி, அச்சாபத்தைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து வணங்கி நின்று, "சுவாமி! என் ஊழ்வினை வசத்தால் நான் கருதியதைக் கேளாமல் வேறொன்றைக் கேட்டேன்; அதனால் இக்கொடிய சாபத்தைப் பெற்றேன்; இனி இச்சாபம் அடியேனைவிட்டு எக்காலத்தில் நீங்கும்?" என்று பரமசிவமூர்த்தியைக் கேட்டார். சிவனார், "நீ முனி வடிவமாய்ச் சென்று விருத்தாசலத்தில் மணிமுத்தா நதிக்கரையில் வளர்ந்து செழித்திருக்கும் அரசமரத்தில் தங்கியிரு;

அங்கே மற்றொரு பக்கத்தில் தவஞ்செய்துகொண்டிருக்கும் என் அன்பன் பின்னொரு காலத்தில் கன்னட தேசத்து அரசனாக அவதரித்துச் சில தினங்கள் அரசு புரிந்து பிறகு உலக வாழ்க்கையில் வெறுப்புற்றுத் துறவடைந்து வெளியேறிப் பேறையூர்ச் சாந்தலிங்க சுவாமிகளிடத்தில் உபதேசம் பெற்று அவர் கட்டளைப்படி விருத்தாசலம் வந்து நீ தங்கியிருக்கும் அரசமரத்தின் நிழலில் அமர்ந்திருப்பான். அப்போது நீ அவன்முன் சென்று வணங்கினால், அவன் உன்னுடைய சாபத்தை நீக்கியருளுவான்'' என்று கூறினார். அதைக் கேட்டதும் அத்தவசி சிவபெருமானை நோக்கி, "சுவாமி! அவர் முத்தியை எப்போது அடைவர்?'' என்று கேட்டார். சிவபெருமான், "அந்தப் பக்தன் இதற்குமுன் ஐந்து சுத்த தேகமெடுத்து நம்மையே நோக்கி நிட்காமிய தவஞ் செய்திருக்கிறான்; இப்போதவன் எடுத்திருப்பது ஆறாவது தேகமாகும்; இனி ஏழாவதாகிய அடுத்த தேகத்தை எடுப்பான்; அதில் முத்தியைப் பெறுவான்'' என்று கூறியருளினார். பின்னர் அத்தவசி வணங்கிப் பரமசிவனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சடாமுனி ரூபமாய்ச் சென்று மேற்கூறிய அரசமரத்திற் றங்கியிருந்தான்.

சிவபெருமான் திருவருட்படி குமாரதேவர், கன்னட தேசத்தில் அரசராய்ப் பிறந்து சிலநாட்கள் வரை அரசு புரிந்து பின்னர் துறவுபூண்டு, தம்முடைய முதல் மந்திரியால் பேறையூர்ச் சாந்தலிங்க சுவாமிகட்குத் தமது வரலாற்றினைத் தெரிவித்துப் பின்னர் தாமே நேரிற்சென்று அவரைக்கண்டு வணங்கி நின்றனர். சாந்தலிங்க சுவாமிகள், குமாரதேவருடைய பக்குவத்தை அறியும்பொருட்டுத் தம்

முடைய கையேட்டுத்தம்பிரானை நோக்கி, "இவன் அரசனைப் போல் விளங்குகின்றான்; இவன் துறவறவாசிரமத்துக்குரியவனல்லன்; ஆதலால், இவனை மீண்டும்போய் அரசாட்சியிலிருக்கும்படி அனுப்பிவிடு" என்று திருவாய் மலர்ந்தருளினார். அதற்குத் தம்பிரான், "இவனிடத்தில் உத்தம சீடனுக்குள்ள குறிகளெல்லாம் காணப்படுகின்றன" என்று சைகையினால் தெரிவித்தார். அதன்மேல் சாந்தலிங்க சுவாமிகளும் அக்குறிகளை உணர்ந்து, "அப்படியானால் இவனை நம் எருதுக்குப் புல்லறுத்துப்போடும் வேலையில் வை" என்று கட்டளையிட்டார். அவ்வாறே தம்பிரான், அரிவாளும், புல்லுக்கட்டக் கயிறுங் கொடுத்துக் குமாரதேவரை அவ் வேலையில் நியமித்தார். குமாரதேவர், அக்கட்டளைப்படியே வயற்பக்கத்திற்போய், மற்றவர்கள் புல்லறுப்பதைப் பார்த்துத் தாமும் அவ்வாறே அறுக்கத் தொடங்கி இடக்கையால் புல்லைப் பற்றிக்கொண்டு வலக்கையால் அரிவாளைப் புல்லின் மேற் சேர்த்திழுக்காமல் இடக்கைமேல் சேர்த்திழுத்தார். இடக்கை அறுபட்டுவிட்டது. அப்படி அறுபடவே அவர், வலக்கையைப் பார்த்துக் கோபித்தார். அங்கே புல்லறுத்துக் கொண்டிருந்தவர்கள், அவருடைய செய்கையைப் பார்த்து அதிசயித்து, அவரை நோக்கி, "நீர் யாரையா?" என்று வினவினர். அவர், "நான் பேறையூர்ச் சாந்தலிங்க சுவாமிகளுடைய எருதுக்குப் புல்லறுப்பவன்" என்று சொன்னார். அவர்கள், அவருடைய வடிவத்தைப் பார்த்து, "இவரோ அரசனைப்போலிருக்கின்றார்; இவருக்குப் புல்லறுக்கும் பழக்கமில்லை; நாமே புல்லறுத்துக் கொடுப்போம்" என்று தாங்களே புல்லை அறுத்துக்கட்டி அவருடைய

சிரசின்மேல் தூக்கிவைத்தார்கள். அவருடைய சிரம் அச்சுமையைத் தாங்கமுடியாமையால் சாய்ந்தது. அதைக்கண்ட அந்த மனிதர்கள், அந்தப் புற்கட்டைத் தூக்கிக்கொண்டு அவருடன் சென்று மடத்துக்கு வெளியில் வைத்துவிட்டுப் போனார்கள். குமாரதேவர் அதையெடுத்து எருதுக்குப் போட்டார். இவ்வாறே இரண்டு தினங்கள்வரை இவ்வேலை நடந்து வந்தது,

மூன்றாவது நாள், புற்சுமையைத் தூக்கிக்கொண்டு வந்து வைத்த அந்த மனிதர்கள், குமாரதேவர் செய்தியைக் கையேட்டுத் தம்பிரானுக்குத் தெரிவித்தார்கள். அவர் இதனைச் சாந்தலிங்க சுவாமிகளுக்குத் தெரிவித்தார். சுவாமிகள், குமாரதேவரைச் சோதிக்கும் பொருட்டுக் கோபிப்பவரைப்போல நடித்தார். குமாரதேவர் மெய்யாகவே அதற்குப் பயந்து ஒருபக்கத்தில் ஒதுங்கி நின்றார்.

அன்றிரவு சாந்தலிங்க சுவாமி, கையேட்டுத் தம்பிரானை நோக்கி, "எனக்கும் குமாரதேவனுக்கும் வெவ்வேறாகக் கட்டுச்சோறு கட்டி ஒரு தண்டத்தில் முடிந்து அவனிடம் கொடுத்து அவனை என்னுடன் அனுப்பு" என்று கட்டளையிட்டு வெளியிற்செல்லப் பிரயாணமானார். அவர், சுவாமி கட்டளையை நிறைவேற்றினார். சாந்தலிங்க சுவாமி முன்னே நடந்தார்; குமாரதேவர் கட்டுச்சோற்று மூட்டைகளைத் தண்டத்திற் மாட்டிச் சுமந்தபடியே அவருக்குப் பின் சென்றார்.

இவ்வாறு இருவரும் செல்லும்போது சிறிது தூரம் சென்றபின், சாந்தலிங்க சுவாமிகள், சற்று விரைவாக நடந்

தார்; குமாரதேவர் சுமை தம்மை நடக்கவொட்டாமற் செய்தபடியால் மெதுவாக நடந்தார். அப்போது சாந்தலிங்க சுவாமி திரும்பிப் பார்த்து, 'தாமதமென்ன' என்று அவரை அதட்டினார். அவர் பயந்து, "சுவாமி! ஒருபக்கத்தில் அச்சுலிங்கமும், மற்றொரு பக்கத்தில் கணயுத்தமுமாகச் சுமை என்னை இழுத்து நடக்கவொட்டாமற் செய்கின்றதே" என்று சொன்னார். சாந்தலிங்க சுவாமிகள் அவர் நிலைமையை உணர்ந்து மகிழ்ந்து அங்கிருந்த ஒரு குளக்கரைமேல் தங்கிக் குமாரதேவரையும் உட்காரச்செய்து இரண்டு மூட்டைச் சோற்றையும் ஒன்றாகச் சேர்த்துப் பரிமாறும்படி அவரிடம் தெரிவித்தார். அவர் அவ்வாறே சுவாமிகளுக்குப் பரிமாறினார். சுவாமி, அதில் தமக்குத் தேவையானமட்டும் அமுது கொண்டெழுந்தார். சேடமான அமுதைக் குமாரதேவர் உட்கொண்டார். பின்னர் இருவரும் அங்கே சிறிதுநேரம் வரை சிற்சில விஷயங்களைப்பற்றிச் சம்பாஷித்துக்கொண்டிருந்து, மடாலயத்திற்குத் திரும்பிவந்து சேர்ந்தார்கள். சில தினங்கள் சென்றபின், குமாரதேவர், சுவாமிகளிடத்தில் அநுக்கிரகம் பெற்று யோக சாதனங்களைச் செய்து வந்தார்.

அச்சாதனை முதிர்ந்த காலத்தில் ஒருநாள் சாந்தலிங்க சுவாமிகள் குமாரதேவரை, 'மகாராஜா' என்று பெயரிட்டழைத்து, 'நீ விருத்தாசலத்திற்குச் செல்வாயாக' என்று அவருக்குக் கட்டளையிட்டார். அவர் அவ்வாறே சுவாமிகளிடம் விடைபெற்றுக்கொண்டு விருத்தாசலத்தை நோக்கிச் சென்றார். அப்படிச் செல்லும்போது சின்னச் சேலத்திற்குக் கீழ்புறத்திலிருந்த காட்டில், விருத்தாசலநாதர், அவர் மீதன்புகூர்ந்து ஒரு பிராமணனைப்போல் வடிவந்தாங்கி

வந்து தண்ணீர்ப்பந்தல் வைத்துக்கொண்டிருந்தார். குமார தேவர் அதன் சமீபத்தில் சென்றார். பழமலைநாதராகிய வேதியர் அவரைப் பார்த்து, "அப்பனே! நீ தாகத்தால் இளைத்துச் செல்கின்றனை; இங்கே குளிர்ந்த ஜலமிருக்கின்றது; நீ உனக்கு வேண்டியமட்டும் தண்ணீரைப் பருகித் தாகத்தைத் தணித்துக்கொண்டு செல்வாயாக" என்று உபசரித்து அவருக்குத் தண்ணீர் கொடுத்தார். அவர் அதைப் பருகித் தாகந்தணிந்து நடந்து விருத்தாசலத்தை யடைந்து, மணிமுத்தா நதிக்கரையிலிருந்த அரசமரத்தின் நிழலில் அலுப்புத் தீருமாறு படுத்து நித்திரை செய்தார்.

விருத்தாசல நாயகியாகிய பெரியநாயகி அம்மையார், குமாரதேவர் அவ்வாறுவந்து படுத்திருப்பதை யுணர்ந்து, தனது அபிடேகத்திற்குப் பொற்பாத்திரத்தில் வைத்திருந்த பசுவின்பாலை எடுத்துக்கொண்டு ஒரு பிராமணப் பெண்போல வடிவந்தாங்கி அவரிடம் வந்து தலைமாட்டில் உட்கார்ந்து, தனது மடியின்மேல் அவருடைய தலையைத் தூக்கிவைத்து அவர்வாயில் அந்தப் பாலைப் புகட்டினாள். அவர் ஆயாசந்தீர்ந்து விழித்து விருத்தாம்பிகையைப் பார்த்தார். பார்த்ததும், 'நீயார் அம்மா?' என்று வினவினார். அதற்கு விருத்தாம்பிகை, "அப்பா! குமாரதேவனே! நான் பெரியநாயகி; நீ எப்போதும் என்னிடத்திலேயே அமர்ந்து சௌக்கியமாயிரு" என்று சொல்லி உடனே மறைந்தனள். குமாரதேவர், "அம்மையே! உன் கிருபையே கிருபை; நான் இதற்கென்ன கைம்மாறு செய்யப்போகின்றேன்." என்று விருத்தாம்பிகையைத் துதித்து அவ்விடத்திலே ஆனந்த பரவசமடைந்திருந்தார்.

அப்படியிருக்கும்போது, சிவபெருமானுடைய சாபத்தால் அந்த அரசமரத்தில் வந்திருந்த முனி, 'நாம் தேடியிருந்த மகாத்மா வந்துவிட்டனர்' என்றுணர்ந்து, அந்த மரத்தைவிட்டுக் கீழேயிறங்கிப் பிராமண வடிவத்துடன் வந்து குமாரதேவருக்கு முன்னே நின்று வணங்கிற்று. அவர், 'நீ யார்?' என்று சடாமுனியை வினவினார். முனி, 'நான் சடாமுனி' என்று சொல்லிற்று. தேவர், 'நீ இங்கு வந்ததற்குக் காரணமென்ன?' என்று கேட்டார். சடாமுனி, தன்னுடைய முன் வரலாற்றினைக் கூறிற்று. குமாரதேவர் அதைக் கேட்டு மகிழ்ந்து அதன் சாபத்தை நீக்கியருளினார். பின்னர் அவர் கரபாத்திரத்தில் உத்தமரிடம் அமுது வாங்கி யுண்டுகொண்டு அவ்விடத்திற்றானே தங்கியிருந்தார்.

அக்காலத்தில் அவ்வூரிலிருந்த குடும்பஸ்தனொருவன், குமாரதேவரை மகாத்மாவென் றுணர்ந்து, தினந்தோறும் உண்மையான பக்தியோடு தரிசித்து வந்தான். அதனால் அவனுக்குச் சகல பாக்கியங்களும் உண்டாகி வந்தன. அக்காலத்தில் ஒருநாள் அவன், குமாரதேவரைக் கண்டுவணங்கி, "சுவாமி! ஏதேனுமொரு திருப்பணி செய்யுமாறு அடிமைக்குக் கட்டளையிட் டருளவேண்டும்" என்று சொன்னான். அவர், "பெரியநாயகி சன்னிதானத்திற்கெதிரில் ஒரு மண்டபங் கட்டி வை" என்று கட்டளையிட்டார். அவன் அவ்வாறே மண்டபங் கட்டினான். அப்போது உத்திரக்கல் மேலேறாமல் அவனைக் கஷ்டப்படுத்திற்று. அதனால் அவன் கவலையுற்றுக் குமாரதேவருக் கதனைத் தெரிவித்தான். அவர், விபூதியை அவனிடம் கொடுத்து, 'இதை அக்கல்லின் மேல் போட்டு அதைத் தூக்கு' என்று கட்டளையிட்டார்.

அவன் அப்படியே தூக்கினான். அக்கல் மேலேறிற்று. உடனே அவன் மண்டபத்தைக் கட்டிமுடித்துக் குமார தேவரைப் புகழ்ந்து ஸ்தோத்திரம் செய்தான். பின்னர்க் குமாரதேவர் அவனை அழைத்துக்கொண்டுபோய் விருத்தாசலக் கோயிலின் கோபுர வாயிலிற் செய்துவைத்திருந்த இரண்டு துவாரபாலகருடைய முதுகுகள் உரைபட்டிருக்க அதை அவனுக்குக் காட்டி, "இவர்களுக்குத் தவனக்கஞ்சி காய்ச்சி நைவேத்தியம் பண்ணுவாயாக" என்று கட்டளையிட்டார். அவன் அப்படியே அக்கட்டளையை நிறைவேற்றிக் கிருதகிருத்தியனாயினான்.

பின்னர்க் குமாரதேவர் ஒருநாள் ஒரு வீட்டு வாயிலிற் சென்று பிச்சைக்குக் கையேந்தினார். அவ்வீட்டிலிருந்தவர்கள் அவருடைய மகிமையை உணராமல் அவர்கள் வீட்டில் சமையல் செய்துவைத்திருந்த மச்சத்தை அன்னத்தோடு கலந்து அவர் கையிலிட்டார்கள். குமாரதேவர் அதனைத் தெரிந்துகொண்டு அவ்வன்னத்துடன் அங்கிருந்த குளத்தின் நீரருகிற் சென்றார். அன்னத்தோடு கலந்திருந்த மச்சம் உயிர்பெற்றுக் குளத்திற் குதித்துப்போய்விட்டது. அதன் மேல் குஷ்டரோகியொருவன் தன்னுடைய தேகவருத்தம் தீரவேண்டுமென்று நாள்தோறும் தவறாமல் குமாரதேவரைத் தரிசனம் செய்துகொண்டு வந்தான். அப்படிச் செய்து வரும்போது ஒருநாள் அவன், தனக்கு வாதனை அதிகமாயிருந்தபடியால் அதைச் சகிக்கமுடியாமல், குமாரதேவருடைய பாதத்தில் வீழ்ந்து கோவென்று கதறினான். குமாரதேவர் அவனைப் பார்த்து, "அப்பா! நான் வைத்தியனல்லன்; என்னால் என்ன செய்யமுடியும்?" என்று சொன்

ஞர். அவன், "சுவாமி! தங்களுடைய திருக்கரத்தால் விபூதி கொடுத்தால் எனது ரோகம் தீரும்" என்று கூறினன். குமாரதேவர் மனதிரங்கித் திருநீற்றை அள்ளி அவனுடைய இடக்கையில் வைத்து, 'வலக்கையால் இதை மூடிக் கொள்' என்று அவனிடம் சொன்னர். அவ்வாறே அவன் மூடிக்கொண்டான். பின்னர்க் குமாரதேவர், பழமலைநாதருடைய சன்னிதானத்தினுள் ஒரு மாடத்திலிருந்த ஒரு விநாயகரை அவனுக்குக் காண்பித்து, "நீ அந்த விநாயகர் முன்னே சென்று இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு நின்று அங்கு காணப்படும் அதிசயத்தை நம்மிடம் வந்து தெரிவி" என்று கட்டளையிட்டார். அவன் அப்படியே போய் நின்றான். அவனுக்குச் சுழுத்தி அவஸ்தை தோன்றிற்று, அந்த அவஸ்தையில் அவ்விநாயகர், தமது துதிக்கையை நீட்டி அவனுடைய இடக்கையிலிருந்த விபூதியைத் தொட்டதாக ஒரு தோற்றம் அவனுக்குக் காணப்பட்டது. உடனே அவன் விழித்துக் குமாரதேவரிடம்வந்து, தான் கண்ட அதிசயத்தைக் கூறினன். அவர் மகிழ்ச்சியடைந்து அவ்விபூதியைத் தொட்டுத் தரித்துக்கொண்டு அவனையும் தரித்துக் கொள்ளும்படி அவனுக்குக் கட்டளையிட்டார். அவன் அவ்வாறே தரித்துக்கொண்டு வந்தான். அதனல் அவனுடைய குஷ்டரோகம் நீங்கிற்று. அவன் சௌக்கியமுற்றிருந்தான்.

பின்னர் ஒருசமயம், குமாரதேவர், திருவாரூர் மகோற்சவத்திற்குப் போயிருந்தார். இரதோற்சவ தினத்தன்று தியாகராஜப் பெருமான் தேரேறி மாடவீதியில் வலமாக வந்தார். அப்போது குமாரதேவர் தேருக்கு நேரேநின்று

தியாகராஜரைத் தரிசித்து ஸ்தோத்திரம் செய்தார். அவரை இரண்டு சைவர்கள் கண்டு, "வீரசைவ மருளேப் பார்த்தீர்களோ" என்று ஒருவரோடொருவர் விகடமாய்ப் பேசிக் கொண்டார்கள். அவ்வார்த்தைகளைக் குமாரதேவர் கேட்டுத் தியாகராஜரைப் பார்த்து, "பெருமானே! வீரசைவம் மருளானால் இரதம் நடக்க, அருளானால் நிற்க" என்று சொன்னார். உடனே இரதம் நின்றுவிட்டது. குமாரதேவர், கொஞ்ச தூரத்திலிருந்த ஒரு மர நிழலிற்போய் உட்கார்ந்திருந்தார். அக்கோயிலின் தர்மகர்த்தாவாயிருந்த தஞ்சாவூர் அரசன், இரதம் நிலேக்கு வந்து சேர்ந்தபிறகு போஜனம் செய்யும் நியமம் பூண்டிருந்தானதலின், இரதம் நின்றது தெரிந்து, அதன் காரணத்தை யுணராமல், வருந்திச் சூரியன் அஸ்தமிக்கும்வரை அந்த இரதத்தை நடத்தப் பற்பல பிரயத்தனங்கள் செய்வித்துப் பார்த்தான். இரதம் சற்றும் அசையவில்லை. அதுகண்டு அரசன் படாத பாடுபட்டுப் பெரிதும் வருந்தி முடிவில் நடந்த இரகசியத்தை யுணர்ந்து, குமாரதேவரைக் கண்டு வணங்கி, "இரதத்தை நடக்கச் செய்ய வேண்டும்" என்று கெஞ்சினன். குமாரதேவர், "இந்த மருளனிடத்தில் உங்களுக்கு என்ன வேலே? என்னல் என்ன ஆகும்? நீங்கள் செல்லுங்கள்" என்று சொன்னார். அரசன் அதைக் கேட்டு, "சுவாமி! இந்தப் பிழையை மன்னித்தருளுக; இரதத்தை நடக்கும்படி செய்யவேண்டும்" என்று பெரிதும் அவரை ஸ்தோத்திரம் செய்தான். அதன்மேல் குமாரதேவர் மனதிரங்கி, அரசனுடன் சென்று தேரின் முன்னே நின்று, தியாகராஜரை நோக்கி, "தியாகராஜ மூர்த்தியே! வீரசைவம் அருளானல் தேர் நடக்க, மருளா

ளுல் நிற்க" என்ருர். உடனே இரதம் நடந்து நிலேயில் வந்து நின்றது. யாவருங்கண் டதிசயித்து மகிழ்ந்தார்கள்.

பின்னர்க் குமாரதேவர், விருத்தாசலத்திற்குத் திரும்பிப்போய் முன் உரைத்த அரச மரத்தின்கீழ் வாசம் பண்ணிக்கொண்டிருந்தார். அக்காலத்தில் அன்னிய நாட்டு மாந்திரீக னொருவன், விருத்தாசலத்திலிருக்கும் பத்திர காளியைத் தன்வசப்படுத்த நினேத்துப் புறப்பட்டு மணிமுத்தா நதிக்கு வடக்கில் ஒருசமயம் வந்துகொண்டிருந்தான். பத்திரகாளி அதையுணர்ந்து பயந்தவளாய் ஒரு பெண்ணேப் போல வடிவெடுத்துக் குமாரதேவரிடம் சென்று அவரை வலமாகவந்து வணங்கி அவருக்கெதிரில் நின்ருள். குமாரதேவர் அவளேப் பார்த்து, 'நீ யார்?" என்று வினவினுர். பத்திரகாளி, "சுவாமி! நான் பத்திரகாளி; ஒரு சண்டாளன் என்னேத் தன்வசப்படுத்திக்கொள்ள நினேத்து வருகிருன்; அதற்குப் பயந்து உம்மிடம் நான்வந்தேன்" என்று சொன்னுள். அதற்குக் குமாரதேவர், "அதற்காக நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார். பத்திரகாளி, "தங்களுடைய திருப்பாதங்களே அடியாளின் சிரசின்மீது சூட்டிஞல் எனக்கு வந்திருக்கும் ஆபத்து நீங்கும்" என்று தெரிவித்தாள். ஸ்ரீ குமாரதேவர், அதற்கிசைந்து பத்திரகாளியின் சன்னிதிக்கெதிரில்வந்து, அந்த விக்கிரகத்தின் சிரசின் மேல் தம்முடைய திருப்பாதங்களேத் தூக்கிவைத்தார். உடனே அந்த மாந்திரீகனுடைய இரண்டு கண்களும் கெட்டுப் போயின. அவ்வாருனதும், மாந்திரீகன், " இந்த ஸ்தலத்தில் பெரியோர்கள் வாசஞ் செய்யக்கூடும்; அதனுலேயே நமக்கிந்த விபத்து நேர்ந்திருக்கின்றது" என்றஞ்சி,

'இங்கே யாரும் பெரியோர்கள் இருக்கின்றார்களா?' என்று அங்குள்ளவர்களிடம் விசாரித்தான். அவ்விசாரணையால் குமாரதேவர் அங்கிருப்பதும், அவருடைய மகிமையும் அவனுக்குத் தெரிந்தன. உடனே அவன், அவரிருக்கு மிடத்தை விசாரித்துத் தெரிந்துகொண்டு வந்து அவரைக் கண்டு வணங்கி நின்றான். குமாரதேவர், அவனை நோக்கி, 'நீ யார்?' என்று வினவினார். அவன் தன்னுடைய வரலாற்றைக்கூறி, 'எனக்கு நேர்ந்திருக்கும் ஆபத்தைத் தீர்த்தருள வேண்டும்' என்று அவரிடம் கேட்டுக்கொண்டான். குமார தேவர், சற்று இரக்கங்காட்டி அவனை நோக்கி, "நீ உன் தேகமுள்ளவரையில் இந்த மாந்திரீகத்தை விட்டுவிட்டிருப் பாயானால் உனக்கு ஒருகண் மாத்திரம் தெரியும்" என்று கூறி அனுக்கிரகஞ் செய்தருளினார். அவன், 'அப்படியே செய்கிறேன்' என்று அவருடைய பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்தான். அவனுக்கு ஒருகண் தெரிந்தது. பின்னர் அவன் ஒற்றைக் கண்ணுடன் தன்னுடைய ஊர்போய்ச் சேர்ந்தான்.

பிறகு, ஒரு குடும்பஸ்தன், தனக்குப் புத்திரப்பேறில்லாததால் வருந்தி அதனையடைய விரும்பித் தன் மனைவியுடன் நாள்தோறும் வந்து குமாரதேவரைத் தரிசித்து வந்தான். குமாரதேவர் ஒருநாள் மனதிரங்கி அவர்களுக்கு விபூதி யளித்தார். அவ்விருவருக்கும் இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தார்கள். அவர்கள் அப்பிள்ளைகளை வளர்த்து உரிய பருவத்தில் அவர்களுக்கு வித்தியாப்பியாசம் செய்வித்து, இலக்கணம் போதிப்பித்தற் பொருட்டு மதுரையிலிருந்து சிதம்பரம் பிள்ளை யென்பவரை வரவழைத்திருக்

தார்கள். அவர் அப்பிள்ளைகளுக்கு இலக்கணம் போதித்து வந்தார். அப்போது ஒருநாள் குமாரதேவர், பிச்சையேற்கும் பொருட்டு அவர்களிருந்த வீட்டிற்கு வந்தார். சிதம்பரம் பிள்ளை, குமாரதேவரை மதியாமல் இறுமாப்புற்றிருந்தார். அந்நிலைமையைப் பார்த்ததும் குமாரதேவர் அவரைத் தடுத்தாட்கொள்ள விரும்பி அவரிடத்தில் ஒரு வாக்கியத்தைக் கூறி அதற்குப் பொருள் கேட்டார். சிதம்பரம் பிள்ளை பொருள் கூறமுடியாமல் அஞ்சிக் குமாரதேவருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி, "சுவாமி! நான் தங்களுடைய மகிமையை உணராமல் தங்களுக்கு அபசாரம் செய்தேன்; இக்குற்றத்தை மன்னித்தருள வேண்டும்" என்று அவரை ஸ்தோத்திரம் செய்து, அதுமுதல் துறவு பூண்டு குமாரதேவருடனேயே தங்கியிருந்தார்.

அதன்மேல் குமாரதேவர், சிதம்பர சுவாமியினுடைய மெய்யன்பைக்கண்டு அவருக்கனுக்கிரகம் செய்யக் கருதித் தம்முடைய குருநாதராகிய சாந்தலிங்க சுவாமிகளிருக்கும் பேரூருக்கு அவரை ஒருநாள் கூட்டிக்கொண்டுபோய் விடியற்கால நேரத்தில் மடத்தின் சமீபத்தை யடைந்தார். அப்போது தம்பிரான்கள் எழுந்து வெளியில் வந்தார்கள். குமாரதேவர் அவர்களைக் கண்டு வணங்கி, "இப்போது சுவாமிகளின் சமயமெப்படி?" என்று வினவினார். அவர்கள், "சுவாமி பரநிஷ்டையில் எழுந்தருளியிருக்கின்றார்கள்" என்று கூறினார்கள். உடனே குமாரதேவர், "நாம் மடத் திருப்பணியைச் செய்யவேண்டும்" என்று சாணச்சட்டியை எடுத்துக்கொண்டு திருமெழுக்கிட்டார். சிதம்பர சுவாமி, திருவலகெடுத்துப் பெருக்கினார்.

இருவரும் இத்திருப்பணிகளை முடித்துவிட்டுச் சாந்தலிங்க சுவாமிகள் யோகநிலைவிட்டு விழித்தருளிய சமயத்தைத் தெரிந்து மடத்திற்குட்சென்று அவர்களைக்கண்டு வணங்கி நின்றார்கள். சாந்தலிங்க சுவாமி, அடுத்துநிற்கும் சிதம்பர சுவாமியைப் பார்த்துவிட்டு அவரைத் தெரிந்து கொள்ளும்பொருட்டுக் குமாரதேவரை நோக்கி, "குமார தேவ! உன்னை யடுத்து நிற்கின்றவன் யார்?" என்று வினவினார். அதற்குக் குமாரதேவர், "இவன் தென்னாட்டுச் சைவன்" என்று சொன்னார். சாந்தலிங்க சுவாமிகள், "இவனை இங்கே நீ ஏன் அழைத்து வந்தாய்" என்று கேட்டார். அதற்குக் குமாரதேவர் விடைகூறாமல் மௌனமாயிருந்துவிட்டார். இரண்டு தினங்கள் சென்றபிறகு, சிதம்பர சுவாமியின் நன்னடக்கையைக் கையேட்டுத் தம்பிரான் அறிந்து, சாந்தலிங்க சுவாமிகளிடத்தில், "சுவாமி! இந்தச் சைவன், மிக்க ஒழுக்கமுடையவனாயிருக்கின்றான்; ஆதலின், இவனைத் திருவடிக் காளாக்கிக் கொள்ளுதல் வேண்டும்" என்று கூறினர். அதற்குச் சாந்தலிங்க சுவாமி, "நமக்கு இருக்கிற சந்ததி போதும்; நமது சந்ததிக்குச் சந்ததி நெடுங்காலமாக இல்லாதிருந்து இப்போது கிடைத்திருக்கிறது; ஆதலின், இவனை நம் சந்ததிக்குச் சந்ததியாக்கிவிட வேண்டும்" என்று திருவாய் மலர்ந்தருளினார். கையேட்டுத் தம்பிரான் அதைக் கேட்டு மௌனமாயிருந்துவிட்டார்.

இரண்டு நாட்கள் சென்றபின் மூன்றாவது தினத்தில் சாந்தலிங்க சுவாமிகள், குமாரதேவரை நோக்கி, "நீ உன் இருப்பிடத்திற்குச் செல்வாயாக" என்று கட்டளையிட்டார். குமாரதேவர், சிதம்பர சுவாமிகளை அவருக்குச் சுட்டிக்

காட்டி, "இவன் இங்கே இருக்க அனுமதியளிக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். அதற்குச் சாந்தலிங்க சுவாமிகள், "இவனை நீயே அழைத்துச் செல்வாயாக" என்று கட்டளையிட்டார். குமாரதேவர், "இவனை நான் அழைத்துச் சென்று செய்வதென்ன?" என்று கேட்டார். அதற்குச் சாந்தலிங்க சுவாமிகள், "நீ இவனை அழைத்துக்கொண்டு போய் இவனுக்குச் சரியான பக்குவம் வந்தவுடன் நான் உனக்குச் சொன்னதை இவனுக்கு உபதேசம் செய்" என்று கட்டளையிட்டார். குமாரதேவர் அக்கட்டளைப்படியே சாந்தலிங்க சுவாமிகளிடம் விடைபெற்றுச் சிதம்பர சுவாமியை அழைத்துக்கொண்டு விருத்தாசலம் போய்ச்சேர்ந்து சிதம்பர சுவாமிக்குப் பக்குவம்வந்த சமயத்தில் ஞானோபதேசஞ் செய்தார். பின்னர்ச் சிதம்பர சுவாமி, திருப்போரூர்ச் சன்னிதானம் விளக்கினார்.

பிறகு, பெரிய நாயகியார், குமாரதேவரைக்கொண்டு சில சாஸ்திரங்கள் செய்விக்க வேண்டுமென்று விரும்பி, ஒருநாள் குமாரதேவருடைய நிஷ்டையில் பிரசன்னமாகி, "குமாரதேவா! நீ சில சாஸ்திரங்கள் செய்யவேண்டும்" என்று கூறினள். அதைக் கேட்டுக் குமாரதேவர், "தாயே! அடியேனால் சாஸ்திரங்கள் கூறுதல் எவ்வாறு முடியும்? எனக்கந்த வல்லமை யேது?" என்று சொன்னார். பெரிய நாயகியார், "நானே உனது நாவில்நின்று அந்தச் சாஸ்திரங்களைச் செய்து முடிக்கின்றேன்; நீ தைரியமாக அவற்றைச் சொல்லத் தொடங்கு" என்று கட்டளை யிட்டனள். பின்னர்க் குமாரதேவர் அக்கட்டளைப்படியே அவற்றைச் செய்யத் தொடங்கி, இந்த மகாராஜா துறவையும், சுத்தசாதகம்,

விஞ்ஞானசாரம், அத்துவித உண்மை, பிரமானுபூதி விளக்கம், ஞான அம்மானை, வேதாந்த தசாவத்தைக் கட்டளை, வேதாந்த தச்காரியக் கட்டளை, சகசநிட்டை, உபதேச சித்தாந்தக் கட்டளை, பிரமசித்தி அகவல், சிவதரிசன அகவல், ஆகமநெறி அகவல், வேதநெறி அகவல், பிரமானுபவ அகவல், சிவசமரசவாத அகவல் ஆகியவற்றையும் செய்து, இந்தப் பதினாறு சாஸ்திரங்களையும் முடித்து, முடிவில் பெரியநாயகி அம்மன் பதிகத்தையும் செய்தருளினர்.

இவ்வாறு குமாரதேவர், பற்பல மகிமைகளைச் செய்து முடிவில் சொரூப சாக்ஷாத்கார பரிபூரண நிலையை அடையும் சமயம் எய்தினர். அவருக்கு இரண்டாவது அடியாராகிய் ரெட்டிச் சிதம்பர சுவாமிகள், ஸ்ரீ குமாரதேவரை நோக்கி, "சுவாமி! தாங்கள் பரிபூரணமடைந்தபின், அடியார்கள் தரிசித்துய்யும் பொருட்டுத் தங்களுக்குரிய ஒரு திருப்பணியைச் செய்யுமாறு அடியேனுக்குக் கட்டளையிட்டருள வேண்டும்" என்று கூறினர். அதைக் கேட்டுக் குமாரதேவர், "நாம் மறைந்த பிறகும் நமது பெயர் உலகத்தில் நிலைத்திருக்க வேண்டுமா?" என்று ஒரு திருப்பணியும் அவருக்குத் தெரிவிக்காமல், அகண்ட பரிபூரண சாக்ஷாத்கார சொரூபத்திற் கலந்தருளினர். அப்பால், ரெட்டி சிதம்பர சுவாமிகள் பெரியநாயகியின் கட்டளைப்படி, குமாரதேவரின் திருநாமத்தால் கோயில், மடம் முதலிய திருப்பணிகளைச் செய்து முடித்துப் பின்னர் தாமும் பரிபூரண சாக்ஷாத்கார சொரூபத்தில் ஐக்கியமாகி யருளினர். குமாரதேவர் உபதேசம் பெற்ற ஆதீனத்தில் வரிசையா யிருந்த பெரியோர்கள்:- துறையூர்ச் சிவப்பிரகாச சுவாமிகள், பேறை

யூர்ச் சாந்தலிங்க சுவாமிகள்; ஸ்ரீ குமார தேவர், சிதம்பர சுவாமிகள், ரெட்டிச் சிதம்பர சுவாமிகள், பழனி சுவாமிகள், கூவாலைத்துச் சுவாமிகள், புலியூர்ச் சுவாமிகள், குழந்தை வேல் சுவாமிகள், முத்தைய சுவாமிகள் என்னும் பதின்மராவர்.

இங்ஙனம் குமாரதேவர் செய்த பதினாறு சாஸ்திரங்களுள் முதன்மை பெற்றதாகிய இந்த மகாராஜா துறவு என்னும் நூலானது நூற்றுப் பதினேழு செய்யுட்களையுடையது; துறவறத்தை வற்புறுத்திக் கூறி அத்துவித வுண்மையை நன்கு விளக்குவது; ஜீவாத்ம பரமாத்ம ஐக்கியத்தைத் தெளிவாகக் கூறுவது. வேதாந்த சாஸ்திரங்களின் உண்மைகளை யெல்லாம் திரட்டிச் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பது. கருநாட தேசத்தை யரசாண்ட மகாராஜன் என்னும் அரசன் இராஜ்ஜியத்தையும், மனைவி தாய், தந்தை, சுற்றத்தார் முதலியவர்களையும் வெறுத்துத் துறவடைந்து வெளியேறித் தன்னைச் சார்ந்தோராகிய பலரும்வந்து தடுத்தும் கேளாமல், உலகவாழ்வு நிலையற்றதென்பதை எடுத்துக் கூறி அவர்களை யனுப்பிவிட்டு யோகநிஷ்டை கூடி முத்தி யடைந்தானென்பதே இந்நூலில்வரும் விஷயமாம். இஃதோர் சரித்திரம் போன்றிருந்தாலும் தத்துவ ஞானத்தை விளக்கிக் காட்டும் அத்துவித சாஸ்திரமாகும். இது தமிழ் நாட்டினர்க்குப் பெரிதும் பயன்படக்கூடியது. எனினும், இவ்வரிய நூலுக்கு இதுவரை தெளிவான உரையொன்றும் வெளிவரவில்லை. அது தமிழ் நாட்டினர்க்கு ஓர் பெருங் குறையாயிருந்து வந்தது. ஆதலின், இந்நூலுக்கு உரையொன்றிருந்தால் தமிழ் நாட்டினர்க்குப் பெரிதும் பயன்படு

மென்று, மதுரை புத்தக வர்த்தகம், திருவாளர் எம். முத்திருளாண்டி பிள்ளை அவர்கள் கருதித் தங்கள் விருப்பத்தை என்னிடம் தெரிவித்தார்கள். இத்தகைய தத்துவ ஞான சாஸ்திரத்திற்கு உரையெழுதும் ஆற்றலும், அனுபவமும் எனக்கில்லை யெனினும், சில பெரியோர்களுடைய அனுக்கிரகத்தைக் கொண்டு எழுதி முடித்துவிடலாம் என்னும் துணிபு கொண்டு அவ்வாறே சிற்சில பெரியோர்களிடம் சந்தேகமான பொருள்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டும், சில அத்துவித நூல்களின் உதவியைக் கொண்டும் இவ்வுரையை என் புத்திக்கியன்ற வரையில் எழுதி முடித்தேன்.

இவ்வுரையில் பதப்பொருளும், செய்யுட் கருத்துக்களும் கூடியவரை விளக்கமாக எழுதப்பட்டிருக்கின்றன. முக்கியமான இலக்கணக் குறிப்புகள் மட்டும் காட்டப்பட்டிருக்கின்றன. பொருள் முடிபு நேராகக் காணமுடியாதிருந்த சில செய்யுட்களில், பற்பல விடங்களில் முடிக்கும் சொற்கள் கூட்டிப் பொருள்கள் முடித்துக் காட்டப்பட்டிருக்கின்றன. வேதாந்த பரிபாஷைச் சொற்களெல்லாம் ஆங்காங்கே தமிழில் நன்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன.

இவ்வுரையை எழுதி முடித்தற்கு ஸ்ரீபாலபோதம், உண்மைப் பொருள் விளக்கம், கைவல்ய நவநீதம், ஞான வாசிட்டம், ஸ்ரீதத்துவபோதம், உபதேச வுண்மைக் கட்டளை, பிரமோபதேசக் கட்டளை, சொரூபசாரம், ஞான ரகசிய சிந்தாமணி, திருவாளர், கோ. வடிவேலு செட்டியார் அவர்கள் இயற்றிய மகாராஜா துறவு வசனம் முதலிய நூல்கள் மிகத் துணைபுரிந்தன; இவற்றுள் முழுதும் பேருதவி

புரிந்தது, திருவாளர் செட்டியாரவர்கள் செய்த மகாராஜா துறவு வசனமே யாம். ஆதலின் இந்நூற்களின் ஆசிரியர் களுக்கு என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

இவ்வாறு, இந்நூலுரை பெரியோர்களுடையவும், பேராசிரியர்களின் நூல்களுடையவும் உதவிகொண் டெழு தப்பட்ட தாதலின், தத்துவ ஞானத்தைச் சாமானியர்க்கும் தெளிவாக உணர்த்தக் கூடுமென்றே நினைக்கின்றேன். எனி னும் என்னுடைய அறிவின் இயற்கையாலோ, பிற கார ணங்களாலோ இதிற் சிற்சில குறைகளும் காணப்படுதல் கூடும். அங்ஙனம் காணப்படின் அறிஞர்கள் அவற்றைத் திருத்தி யமைத்துக் கொள்ளுமாறு மிகத் தாழ்மையோடு வணங்கி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வுரை வெளிவருவதற்கு ஏவுதற் கருத்தாவாயிருந் தவரும், இதனை அச்சிட்டு வெளிப்படுத்தியவருமாகிய திரு வாளர், எம். முத்திருளாண்டி பிள்ளை அவர்களுக்கு நான் என்னுடைய மனப்பூர்வமான வந்தனத்தைச் சமர்ப்பிக் கின்றேன்.

இங்ஙனம்,

**வீ. ஆறுமுகன்.**

உ

ஸ்ரீ குமாரதேவர் திருவாய் மலர்ந்தருளிய

# மகாராஜா துறவு

## மூலமும்-உரையும்.

### கடவுள் வாழ்த்து.

கணபதி முதலிய ஐவர் துதி.

அமரர்கள் பரவுந் திருமுது குன்றி
லாழத்துப் பிள்ளையைச் சிகரிக்
குமரசற் குருவை யிமகிரி ராஜ
குமாரியாம் பெரியநா யகியை
மும்மலமு மொருங்கே யகற்றிடு முக்கண்
முதல்வனைச் சாந்தநா யகனை
நமதெணப் படியே முடிந்திடத் தினமு
நாடிநின் றிறைஞ்சிவாழ்த் திடுவாம்.

இதன்பொருள்: நமது-நம்முடைய, எண்ணப்படியே-நினைவின் பிரகாரமே, முடிந்திட-(இந்நூல் இனிதாக) முடிவுபெறும் பொருட்டு, அமரர்கள்-தேவர்கள், பரவும்-(வந்து) வணங்குகின்ற, திரு-அழகிய, முதுகுன்றில்-விருத்தாசலமென்னும் பதியில், (எழுந்தருளியிருக்கின்ற), ஆழத்துப் பிள்ளையை-ஆழத்துப் பிள்ளையாரையும், சிகரி-(அத்தலத்தின்) கோபுரத்தடியில், (இருக்கும்) குமாரசற் குருவை-குமாரக்கடவுளாகிய நல்ல குருவையும், இமகிரி-மேருமலையாகிய, இராஜ-அரசனது, குமாரியாம்-புத்திரியாகிய, பெரிய நாயகியை-பெரியநாயகி யென்னும் பெயரையுடைய விருத்தாம்

பிகையையும், மும்மலமும்-(ஆணவம், காமியம், மாயை என்னும்) மூன்று மலங்களையும், ஒருங்கே-ஒருமிக்க, அகற்றிடும்-(அடியார்களுக்கு) நீக்கி யருளுகின்ற, முக்கண்-மூன்று திருநேத்திரங்களை யுடைய, முதல்வனை-தலைவனாகிய பழமலை நாதனையும், சாந்தநாயகனை-சாந்தலிங்க சுவாமிகளையும், நாடிநின்று-சிந்தித்துநின்று, இறைஞ்சி-வணங்கி, வாழ்த்திடுவோம்-(நாம்) துதிப்போம். என்றவாறு.

ஆசிரியர், தாம் இயற்றத் துணிந்த இந்நூல் இனிது முடிதற்பொருட்டு ஆழத்துப் பிள்ளையார் முதலிய ஐவர் வணக்கமும் இதிற் கூறினார். ஆழத்துப் பிள்ளையார்-விருத்தாசலத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகர் பெயர். சிகரிக் குமாசற்குரு-கோபுரத்தடியிலிருக்கும் சுப்பிரமணியர்; இதற்கு, 'மலைகளில் வாசஞ் செய்யும் குமாரக்கடவுள்' எனப் பொதுவாகப் பொருள் கூறினும் அமையும். பெரியநாயகி-விருத்தாசலத்தில் கோயில் கொண்டிருக்கும் உமை. சாந்தநாயகர்-இந்நூலாசிரியருக்குக் குருவாகிய பேறையூர்ச் சாந்தலிங்க சுவாமிகள். ஆணவம்-உடம்பை யானென்றிருக்கும் குணம்; காமியம்-உலகப் பொருள்களில் உள்ள ஆசை; மாயை-உண்மைப் பொருளை மறைப்பது. (1)

## மூன்று குருமூர்த்திகள் வணக்கம்.

மறைமுடி வதனில் விளங்கிடு மொளியே
மனிதரைப் போலவந் தெனது
சிறைதவிர்த் தாண்ட சிவப்பிர காச
தேசிகன் றன்னைமற் றவன்றன்
நறைமல ரடியைப் போற்றிடுஞ் சாந்த
நாயகன் றன்னைமற் றவன்றன்
நிறையருள் பெற்ற பழனிமா முனியை
நெஞ்சினு ளிருத்தியே பணிவாம்.

இ-ள்: மறை-வேதத்தின், முடிவதனில்-அந்தத்தில், விளங்கிடும்-பிரகாசிக்கின்ற, ஒளியே-ஜோதிமயமாகிய கடவுளே, மனிதரைப்போல-மானிடரைப்போல (தமது வடிவாக), வந்து-(உலகத்தில்) அவதரித்து, எனது-என்னுடைய, சிறை-பாசபந்தத்தை, தவிர்த்து-நீக்கி, ஆண்ட-(என்னை) ஆட்கொண்டருளிய, சிவப்பிரகாச தேசிகன் தன்னை-சிவப்பிரகாசனென்னும் குருவையும், அவன் தன்-அவனுடைய, நறை-வாசனை பொருந்திய, மலர்-(தாமரை) மலர்போன்ற, அடியை-பாதங்களை, போற்றிடும்-வணங்குகின்ற, சாந்தநாயகன் தன்னை-சாந்தநாயகன் என்னும் சாந்தலிங்க சுவாமியையும், மற்று-பின்னும், அவன்தன்-அவனுடைய, நிறை-பூரணமான, அருள்-கிருபையை, பெற்ற-அடைந்த, பழனிமாமுனியை-பழனிமாமுனி என்னும் பழனி சுவாமியையும், நெஞ்சினுள்-மனத்தில், இருத்தி-நிலைபெறச் செய்து, பணிவாம்-வணங்குவோமாக. எ-று.

ஆசிரியர், முதற் செய்யுளில் ஆழத்துப் பிள்ளையார் முதலிய நால்வரோடு தம் குருவாகிய சாந்தலிங்க சுவாமியைச் சேர்த்து வணங்கி, இச்செய்யுளில் மீண்டும் அவரையும், அவர்க்கு ஆசிரியராகிய சிவப்பிரகாச சுவாமிகளையும், சாந்தலிங்க சுவாமிகளின் சீடராகிய பழனிச் சுவாமியையும் வணங்கினர். ஆசிரிய பரம்பரையிலுள்ளவர்களையும் குருமார்களாகக் கொண்டு வணங்கவேண்டியது முறைமை யாதலின், தம்முடைய ஆசிரியராகிய சாந்தலிங்க சுவாமிகளுக்கு முன்னும் பின்னும் இருந்த முக்கியஸ்தர்களை வணங்கத் துணிந்து, அவர்களோடு தம்முடைய ஞானாசாரியரையும் சேர்த்து மூன்று குருமாராகக் கொண்டு இதில் முக்குரு வணக்கங் கூறினர் ஆசிரியர். மற்று-அசையுமாம். 'இருத்தியே' என்பதிலுள்ள ஏகாரம் தேற்றப் பொருள் தரும். அசையெனினும் பொருந்தும். (2)

## ஆழத்துப்பிள்ளையார் துதி.

தொய்யின் முலைக்கோ டிரண்டுகவான்
துதிக்கை மூன்று விழிதுரிசில்
தூய்ய சைவ முதன்மதமுந்
துலங்க வருமொண் பிடியுலகம்
உய்ய வுதவு மொருகளிற்றை
யுலவா விருத்த சைலத்தில்
வையம் பரவு மாழத்து
வாணழுங் கரனை மனநினைவாம்.

இ-ள்: தொய்யில்-சந்தனக் குழம்பினால் கோலம் எழுதப்பெற்ற, இரண்டுமுலை - இருதனங்களும், கோடும் - தந்தங்களும், இரண்டுகவான்-இருதுடைகளும், இரண்டு துதிக்கை-இருதுதிக்கை (துதிபொருந்திய கை)களும், மூன்றுவிழி - மூன்று கண்களும், துரிசுஇல்-குற்றமில்லாத, தூய்ய - பரிசுத்தமாகிய, சைவம்-சைவமென்னும், முதல்-முதன்மையாகிய, மதமும்-(சமயமும்), துலங்க-பிரகாசிக்க, வரும்-வருகின்ற, ஒண்-ஒள்ளிய (அழகிய), பிடி-(உமையென்னும்) பெண் யானையானது, உலகம்-உலகத்திலுள்ள ஜீவராசிகள், உய்ய-பிழைக்கும் பொருட்டு, உதவு-பெற்ற, ஒரு-ஒப்பற்ற, களிற்றை-யானையை (யானைமுகமுள்ள விநாயகக் கடவுளை), உலவா-கெடாத, விருத்தசைலத்தில்-விருத்தாசலத்திலுள்ள கோயிலில், வையம் பரவும் - பூவுலகத்தாரெல்லோரும் வணங்குகின்ற, ஆழத்துவாழ்-ஆழத்திலே வாழ்கின்ற, ஐங்கரனை-ஐந்து கரங்களையுடைய விநாயக மூர்த்தியை, மனம் நினைவாம்-(நாம்) மனத்திற் சிந்திப்போமாக; எ- று.

இதில் ஆழத்துப் பிள்ளையாருக்குத் தனி வணக்கங் கூறினார் ஆசிரியர். விநாயகரை,'களிறு' என்றதற்கேற்ப, உமாதேவியாரை,

'ஒண்பிடி' என்றார். 'பிடி' என்பதற்கேற்ப, தனங்களைத் தந்தங்களாகவும், கைகளைத் துதிக்கைகளாகவும், சைவத்தை மதமாகவும் உருவகம் செய்தார். உமையை, 'பிடி' என்றதும், விநாயகரை, 'களிறு' என்றதும் உருவகம். இஃதணிவகைகளுள் ஒன்று; உருவகமாவது, உவமையைப் பொருளாகவும், பொருளை உவமையாகவும் கூறுவது. 'இரண்டு' என்பது, மூலை, கவான், துதிக்கை என்னும் மூன்றிடங்களிலும் முன்னும் பின்னுங் கூட்டப்பட்டது. இவ்வாறு கூட்டியது, தாப்பிசைப் பொருள் கோளின் பாற்படும். வடநூலார் இதனை, 'மத்திம தீபம்' என்று கூறுவர். துதிக்கை, மதம் என்பன சிலேடையணிகள். துதிக்கை-பிரிமொழிச்சிலேடை; மதம்-செம்மொழிச் சிலேடை. பிரிமொழிச் சிலேடையாவது பதத்தைப் பிரித்துப் பொருள் கொள்வது; செம்மொழிச் சிலேடையாவது பிரிக்காமற் பொருள் கொள்வது. (3)

## விருத்தாம்பிகை துதி.

இருட்கலி வலியின் ஞானநன் னெறிக
ளிறந்துயிர் கொடுநெறி மேவி
மருட்கொடு கலங்கா வகைகலி யென்றும்
வந்தணு காப்பதி தன்னில்
தெருட்சத்தி கருணை யுருவதாய் நின்று
தெளிவிக்கு மிறைவியெங் குருவோர்
அருட்கடல் பெரிய நாயகி யுலகுக்
கனைமுதல் வியைப்பணிந் திடுவாம்.

இ-ள்: இருள்-(அஞ்ஞான) மயக்கம் பொருந்திய, கலி-கலி காலத்தின், வலியின்-வல்லமையினாலே, நல்-நல்ல, ஞானநெறிகள்-ஞானமார்க்கங்கள், இறந்து-கெட்டு, உயிர்-ஆன்மாக்கள், கொடும்-தீய, நெறி-வழிகளில், மேவி-சென்று, மருள்-மயக்கத்தை, கொடு-

கொண்டு, கலங்காவகை-கலங்காதபடி, கலி-கேடானது, என்றும்-எக்காலத்திலும், வந்து அணுகா-வந்து சேராத, பதிதன்னில்-(விருத்தாசலமென்னும்) தலத்தில், தெருள்சத்தி-ஞானசத்தியாயும், கருணை உருவதாய்-அருள்வடிவமாகியும், நின்று-நிலைபெற்று, தெளிவிக்கும்-(அவ்வுயிர்களை மயக்கத்தினின்றும் நீக்கித்) தெளியும்படி செய்யும், இறைவி-(உலகங்களுக்கெல்லாம்) அரசியும், எம்குரு-எம்முடைய ஞானாசிரியர், ஓர்-(தரிசித்து) அறிந்த, அருட்கடல்-கிருபாசமுத்திரமும், உலகுக்கு அன்னை-உலகத்திற்கு மாதாவும், முதல்வி-(எவர்க்கும்) முதன்மையானவளும், (ஆகிய) பெரிய நாயகியை-பெரியநாயகி யென்னும் திருப்பெயரையுடைய தேவியை, பணிந்திடுவாம்-(யாம்) வணங்குவாம்; எ-று.

விருத்தாசலத்தில் கோயில்கொண் டருளியிருக்கும் பெரிய நாயகியாரை, இச்செய்யுளில் தனித்து வணங்கினர் ஆசிரியர். இத்தேவி சகலர்க்கும் அறிவை விளக்கும் ஞானசத்தி வடிவமானவளாதலின், இவளை 'தெருட்சத்தி' என்றார். உயிர்-சாதியொருமை. 'பணிந்திடுவாம்' என்பதில், இடு-துணைவினை. (4)

## சபாநாயகர் துதி.

திங்களார் சடையிற் கங்கைநீர் துளிப்பத்
திருந்திழை யுமையுளங் களிப்பப்
பொங்கரா வொடுநற் புலிமுனி வர்கண்மால்
போதய னமரர்கள் போற்றத்
துங்கநான் மறைக டுதித்திட வைந்து
தொழில்விரிந் திடப்பொது வதனிற்
செங்கழ லெதிர நடஞ்செயும் பொருளைத்
தினம்பணிந் திடரொழித் திடுவாம்.

இ-ள்: திங்கள்ஆர்-சந்திரன் பொருந்திய, சடையில்-சடிலத்திலே, (உள்ள) கங்கைநீர்-கங்கையின் நீரானது, துளிப்ப-(ததும்பித்) துளிக்க, திருந்து-செய்யப்பட்ட, இழை-ஆபரணங்களையணிந்த, உமை-உமாதேவி, உளம்களிப்ப-மனங்களிக்க, பொங்கு-உயர்ச்சிபெற்ற, அராவொடு-(சேடன் அம்சமாகிய) பதஞ்சலியோடு, நல்-நல்ல, புலி-(புலியின் பாதத்தைப் பெற்ற) வியாக்கிரபாதரும், (ஆகிய) முனிவர்கள்-இருடியரும், மால்-திருமாலும், போது-(தாமரை) மலரில் உதித்த, அயன்-பிரமனும், அமரர்கள்-தேவர்களும், போற்ற-துதித்துவணங்க, துங்கம்-உயர்வாகிய, நான் மறைகள்-நான்கு வேதங்கள், துதித்திட-தோத்திரம் செய்ய, ஐந்து தொழில்-பஞ்சகிருத்தியங்கள், விரிந்திட-(உண்டாய்ப்) பரவ, செங்கழல்-சிவந்த பாதங்கள், அதிர-(வீரகண்டை அணியப்பட்டிருப்பதால்) ஒலிசெய்ய, பொதுஅதனில்-பொன்னம்பலத்தில், நடம்செய்யும்-நிருத்தனம் புரிகின்ற, பொருளை-(பெரிய) பொருளாகிய சபாபதியை, தினம்-நாள்தோறும், பணிந்து-வணங்கி, இடர்-துன்பத்தை, ஒழித்திடுவாம்-(நாம்) நீக்குவாம்; எ-று.

பதஞ்சலி, வியாக்கிரபாதர் முதலிய இருடியர் பொருட்டு உமை கண்டுகளிக்க, விண்டு முதலிய தேவர்கள் போற்ற, நான் மறைகள் துதிக்கச் சிதம்பரத்தில் பொற்சபையில், சபாநாயகராய்த் திருநடனஞ் செய்த சிவபெருமான் துதி இதில் கூறப்பட்டது. பதஞ்சலி ஆதிசேடன் அம்சமாய்த் தோன்றியவராதலின், இவரைப் 'பொங்கரா' என்றும், வியாக்கிரபாதர், புலிக்கால் பெற்றவராதலின், இவரைப் 'புலி' என்றும் ஆசிரியர் கூறினார். இவர்களின் விருப்பத்திற் கிசைந்தே சிவபெருமான் தில்லையில் திருநடனஞ் செய்தருளினர். சிவபெருமானுக்குரிய ஐந்து தொழில்களாவன:- அனைத்துயிருந்தல், காத்தல், அழித்தல், விளக்கல், தோற்றுவித்தல் என்பனவாம்; ஈசுரன், ஈசானம், தற்புருடம், அகோரம், வாமம், சத்தியோசாதம் என்னும் ஐந்து முகங்களைக்கொண்டு முறையே இவ்வைந்து

தொழில்களைச் செய்வர். இன்னும் இவர், பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்னும் பஞ்சமூர்த்திகளின் வடிவமாயிருந்து சிருஷ்டி, திதி, சம்மாரம், திரோபவம், அனுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்தியங்களையும் செய்வர் என்பதுமொன்று. (5)

## சிவகாமியம்மை துதி.

அருளுருவா யுயிர்கடமக் கன்னை யாகி
யஞ்ஞானந் தனையகற்றி யமல மாகி
மருளிலதாய் மெய்ஞ்ஞான மாகு முத்தி
வாய்த்திடவே காத்தருளி வானோ ரேத்த
இருள்கெடவே மிளிருமிருங் கழல்க ளார்ப்ப
விறைபுரியுந் திருநடத்தாற் களித்து வாழுந்
தெருண்மருவு மறைநான்கும் பரவுந் தில்லைச்
சிவகாம சுந்தரியைச் சிந்தை செய்வாம்.

இ-ள்: அருள்உருவாய்-கருணை வடிவமாய், உயிர்கள்தமக்கு-ஆத்துமாக்களுக்கு, அன்னையாகி - தாயாகி, அஞ்ஞானம்தனை-தெய்வ அறிவின்மையை, அகற்றி - நீக்கி, அமலம்ஆகி-மலமற்ற பரிசுத்தப் பொருளாகி, மருள்இலதாய்-மயக்கமில்லாத காட்சியாகி, மெய்ஞ்ஞானம்ஆகும்-உண்மையுணர்ச்சியாகிய,முத்தி-பேரின்பவீடு; வாய்த்திட - கிடைக்க, காத்துஅருளி - அடியார்களைக் காப்பாற்றி அவர்க்குக் கிருபைசெய்து, வானோர்-தேவர்கள், ஏத்த-துதிக்க, இருள்கெட-அஞ்ஞான இருளானது நீங்க, மிளிரும்-பிரகாசிக்கின்ற, இரும்-பெரிய, கழல்கள்-வீரகண்டைகள், ஆர்ப்ப-ஒலிக்க, இறை-எப்பொருட்கு மிறைவனாகிய சிவபெருமான், புரியும்-செய்கின்ற, திரு-அழகிய, நடத்தால்-நடனத்தால், களித்து-மகிழ்ந்து, வாழும்-வாழ்கின்ற, தெருள்மருவு-தெளிவு பொருந்திய, மறைநான்கும்-நான்கு வேதங்களும், பரவும்-துதிக்கின்ற, தில்லை-சிதம்பரத்தில்

எழுந்தருளிய, சிவகாமசுந்தரியை-அழகிய சிவகாமி அம்மையாரைச், சிந்தை செய்வாம்-(நாம்) நினைத்தல் செய்வாம், (அதாவது, மனத்தில் சிந்தித்து வணங்குவாம்); எ-று.

இதற்குமுன் சபாநாயகர் துதி கூறப்பட்டதற்கேற்ப இச்செய்யுளில், தில்லையம்பலவாணரின் திருத்தேவியாராகிய சிவகாமி யம்மையின் துதி கூறினார் ஆசிரியர். 'அருளுருவாய்' என்பதிலிருந்து 'காத்தருளி' என்பதுவரையி லுள்ளவை, சிவகாமிக்குரிய அடைமொழிகள். 'வானோரேத்த' என்பதிலிருந்து,'ஆர்ப்ப' என்பதுவரையுள்ளவை சிவபெருமானுக் கடைமொழிகள். 'அருளுருவாய்...... காத்தருளி,......திருநடத்தாற் களித்துவாழும்-மறைநான்கும் பரவும் தில்லைச் சிவகாம சுந்தரியை' என முடிபுகொள்க. மெய்ஞ்ஞானமாவது கடவுளை உணர்தலாம்; உண்மையுணர்ச்சி யென்பதுமதுவே; கடவுளாகிய நித்தியப்பொருளை யுணர்ந்தொடுங்குதலே முத்தியாம்; ஆதலின், 'மெய்ஞ்ஞானமாகும் முத்தி' என்றார் தேவர். 'காத்தருளி' என்பதற்கேற்ப, 'அடியார்களை' என்றசொல் இசையெச்சமாக வருவித்துரைக்கப்பட்டது. 'அவர்க்கு' என்பதும் அவ்வாறே வருவிக்கப்பட்டது. 'வாய்த்திடவே' 'இருள்கெடவே'என்பவற்றின் ஈற்றேகாரங்கள் தேற்றப் பொருளன. 'இறைநம்' என்னும் தொழிற் பண்புப் பெயர்மை யீறுகெட்டு, 'இறை' எனநின்று இறைமைத் தன்மையுடைய சிவபெருமானுக்காயிற்று; இது பண்பாகு பெயர். சிந்தை-குறிப்பு, அதாவது நினைத்தல். (6)

## விநாயகர் துதி.

செக்கர் போன்றொளிர் முக்கட் சிலம்பினை
மிக்க பேரருள் வேலையை யோர்கொம்பால்
தக்க வன்பர்க் குதவுந் தருவினை
இக்க தைநிறை வேற விறைஞ்சுவாம்.

இ-ள்: இக்கதை நிறைவேற-இச்சரிதை பூர்த்திபெற, செக்கர் போன்று-செவ்வானம் போன்று, ஒளிர்-பிரகாசிக்கின்ற, முக்கண் - மூன்று கண்களையுடைய, சிலம்பினை - மலையினை, மிக்க-மிகுந்த, பேர்அருள்-பெரிய கருணை நிறைந்த, வேலையை-சமுத்திரத்தை, ஓர் கொம்பால்-ஒற்றைக் கொம்பினால், (ஒப்பற்ற கிளையினால்) தக்க-(உதவி செய்தற்குத்) தகுதியாகிய, தருவினை-தேவதருவை, (விநாயகக் கடவுளை), இறைஞ்சுவாம்-(யாம்) வணங்குவாம்; எ-று.

மேல் கூறப்பட்ட ஆழத்துப்பிள்ளையார் துதிகள் விருத்தாசலத்தில் எழுந்தருளிய விநாயகர் துதிகள். இதிற் கூறப்பட்ட துதி பொதுவான விநாயகர் துதி. விநாயகக் கடவுளை மலையாகவும், சமுத்திரமாகவும், தருவாகவும் உருவகப்படுத்திக் கூறினார் ஆசிரியர். வேண்டுவோர்க்கு வேண்டிய பொருளை உதவக்கூடியது தேவதருவாதலின், 'தக்கதரு' என்பதற்கு, 'உதவிசெய்தற்குத் தகுதியாகிய தேவதரு' என்று பொருள் கூறப்பட்டது. கொம்பு-செம்மொழிச் சிலேடை; விநாயகக் கடவுளுக்கேற்ப தந்தமென்றும், தருவிற்கேற்பக் கிளையென்றும் பொருள்படும்; விநாயகக் கடவுள் ஒற்றைக் கொம்பால் கயமுகனைக்கொன்று உலகினுக்குதவி செய்தவர்; தேவதரு கிளையினால் பொருள்களை உதவக்கூடியது. 'யாம்' என்னும் தோன்றா எழுவாய் வருவித்துரைக்கப்பட்டது. (7)

## சுப்பிரமணியர் துதி.

கடிகமழ் கரிய கூந்தற் கனிமொழித் துவர்வாய்த் தெய்வப்
பிடிதனக் கோட்டால் வள்ளிப் பெண்கொடி படருஞ் செய்ய
படிபுகழ் புயமாங் குன்றிற் பாயவண் கழுநீர் நீப
மடலவிழ்செழுந்தார்ச்செவ்வேண் மலரடிவணக்கஞ்செய்வாம்

இ-ள்: வள்ளிப்பெண்-வள்ளி மாதாகிய, கொடி-பூங்கொடியானது, படரும்-படருகின்ற, செய்ய-சிவந்த, படிபுகழ்-உலகத்தார்

கொண்டாடுகின்ற, புயமாம்-தோள்களாகிய, குன்றில்-மலைகளில், கடி-வாசனை, கமழ்-பரிமளிக்கின்ற, கரிய-கருமையாகிய, கூந்தல்-குழலையும், கனி-தீங்கனிபோன்ற, மொழி-சொல்லையும், துவர்-பவளம்போன்ற, வாய் - வாயையுமுடைய, தெய்வப்பிடி-தெய்வப் பெண் யானையானது, தனக்கோட்டால்-தனங்களாகிய தந்தங்களால், பாய-மோதுதல் செய்ய, (அதனாலே) மடல்அவிழ்-இதழ்கள் விரிந்த, கழுநீர்-செங்கழுநீர், நீபம்-கடம்பு, (ஆகிய மலர்களால் தொடுக்கப்பட்ட) செழும்-செழித்த, தார்-மாலையை அணிந்த, செவ்வேள்-முருகக்கடவுளின், மலர்அடி-தாமரை மலர்போன்ற பாதங்களை, வணக்கம் செய்வாம்-(யாம்) வணங்குவாம்; எ-று.

தெய்வயானையைப் பெண்யானையாகவும், அவள் தனங்களைத் தந்தங்களாகவும், வள்ளியைக் கொடியாகவும், முருகக்கடவுள் புயங்களைக் குன்றாகவும் உருவகஞ் செய்தார் ஆசிரியர். இயற்கையாக மலரும் கழுநீர் மலரும், கடப்பமலரும் தெய்வயானையின் தனக்கோடு பாய்தலினாலே மலர்ந்தனவாகக் கூறியது தற்குறிப்பேற்ற வணியின் பாற்படும். 'படிபுகழ் செய்ய புயம்' என மொழிமாற்றிப் பொருள் கொள்க. முதற் செய்யுளிற் கூறிய குமாரக்கடவுள் துதி விருத்தாசலத்தில் கோயில்கொண் டருளிய முருகர் துதி; இங்கு கூறியது பொதுவான சுப்பிரமணியர் துதி. (8)

## அடியார் துதி.

வண்டுழா யலங்கல் மாயவன் மலர்மேல்
வதிந்தநான் முகன்மறை யறியாத்
தொண்டைவாய்க் கெண்டை விழிக்கழை மொழியொண்
துடியிடை யுமையையோ ரிடத்தில்
கொண்டகோ னருளைப் பொருளெனக் கருதிக்
குலவிய சாதனந் தரித்து
மண்டிய வடியார் யாவர்மற் றவர்தாள்
மனத்தினுஞ் சிரத்தினும் வைப்பாம்.

இ-ள்: வண்-வளப்பம் பொருந்திய, துழாய் அலங்கல்-துளப மாலையை அணிந்த, மாயவன் - திருமாலும், மலர்மேல் - தாமரை மலரின்மீது, வதிந்த-வீற்றிருக்கின்ற, நான்முகன்-நான்கு முகங்களையுடைய பிரமனும், மறை-வேதங்களும், அறியா-தேடியறிய முடியாதவனும், தொண்டை - கொவ்வைக்கனிபோன்ற, வாய்-வாயையும், கெண்டை-சேல்மீனை நிகர்த்த, விழி-கண்களையும், கழை-கரும்பின் சுவையை நிகர்த்த, மொழி-(இனிய) வார்த்தைகளையும், ஒண்-ஒள்ளிய, (பிரகாசம் பொருந்திய) துடி-உடுக்கை போன்ற, இடை-மருங்குலையும், (உடைய) உமையை-உமாதேவியாரை, ஓர்-ஒப்பற்ற, இடத்தில், இடப்பாகத்தில், கொண்ட-சேர்த்தருளிய, கோன்-இறைவனும், (ஆகிய) சிவபெருமானது, அருளை-கிருபையையே, பொருள்என-(தாங்கள் அடையத்தக்க) பொருள் என்று, கருதி-நினைத்து, குலவிய-பிரகாசிக்கின்ற, சாதனம்-சைவ சமயாசார சாதனைகளை அல்லது சிவச்சின்னங்களை, தரித்து-தாங்கி, மண்டிய - நெருங்கிய, அடியார் - சிவபத்தர்கள், யாவர்-எவரோ, அவர்தாள்-அவர்களுடைய பாதங்களை, மனத்திலும்-உள்ளத்திலும், சிரத்திலும் - சென்னியின்மீதும், வைப்பாம் - (யாம்) சேர்த்து வணங்குவாம்; எ-று.

இதில் சிவனடியார்கள் துதி கூறப்பட்டது. மற்று-அசை. 'குலவிய' என்பதற்கு, 'பொருந்திய' என்றும் பொருளுரைக்கலாம். யாவர்-வினா. (9)

---

## அவையடக்கம்.

சகரர்தம் வலியையுந் தடந்தி ரைக்கடல்
அகலமும் பின்புளோ ரகழி லஞ்சிதான்
புகழுற விளக்கலே போல விச்செயுள்
த்கைதரு கலைஞர்நூல் தனைவி ளக்குமால்.

இ-ள்: சகரர்தம்-(கடலைத் தோண்டிய) சகரர்களுடைய, வலியையும்-வல்லமையையும், தடம்-விசாலமாகிய, திரை-அலைகளை யுடைய, கடல்-சமுத்திரத்தின், அகலமும்-அகலத்தையும், பின்பு உள்ளோர்-(அந்தச் சகரருடைய காலத்திற்குப் பின்) உள்ளவர்கள், அகழ்-தோண்டிய, இலஞ்சி-குளமானது, புகழ்உற-(அந்தச் சகரரின்) கீர்த்தியானது (உலகில்) பொருந்த, விளக்கலேபோல-தெளிவுறக் காட்டுதல்போல, இச்செய்யுள்-(பிற்காலத்தில் தோன்றிய என்னால் செய்யப்பட்ட) இந்தச் செய்யுட்களாலாகிய சிறுநூல், தகைதரு-மேன்மையைத் தருகின்ற, கலைஞர்-(முற்காலத்துதித்த) கலாவல்லவர்களால் செய்யப்பட்ட, நூல்நலை-(பெரிய) நூலின் உயர்ந்த தன்மையை, விளக்கும்-பிரகாசிக்கச்செய்யும்; எ-று.

நூல் செய்வோர், தெய்வ வணக்கமும், அவையடக்கமும் கூறுதல் முறைமை யாகலின், முதலில் தெய்வ வணக்கமும், அடியார் வணக்கமும் கூறி இதில் அவையடக்கம் கூறினார் ஆசிரியர். அவைஅடக்கம்:-சபைக்கு அடங்குதல்; அதாவது, புலவர்கள் கூட்டத்திற்கடங்கி வணக்கங் கூறுதலாம். சகரர்-சகரனுடைய இரண்டாவது மனைவியாகிய சுமதியிடம் பிறந்தவர்; அறுபதினாயிரம் பேர்; சகரன் அசுவமேத யாகத்தில் பூவலம் வரவிடுத்த குதிரையை இந்திரன் பிடித்துப் பாதாளத்தில் தவஞ் செய்துகொண்டிருந்த கபில முனிவருக்குப் பின்புறத்தில் மறைத்துச் செல்ல, சகரர் அக்குதிரையைத் தேடிப் பூமியைத் தோண்டி பாதாளத்திற்குப்போய்க் கபிலருக்குப் பின்புறத்தில் நின்ற குதிரையைக்கண்டு அவரே அதனை மறைத்தாரென்று கருதி அவரைத் துன்புறுத்தி அவர் கோபத்தீயால் மாய்ந்தனரென்பதும், அவர்களால் தோண்டப்பட்ட பள்ளம் கடலாயிற்றென்பதும் புராண கதை; சகரரால் தோண்டப்பட்ட காரணத்தைக் கொண்டே கடலுக்கு, 'சாகரம்' என்னும் பெயர் உண்டாயிற்று. உலகத்தில் சிறிய பொருளொன்றிருந்தால் மாத்திரமே பெரிய பொருளின் உயர்வு விளங்கும். ஆதலின், பிற

காலத்தவர் தோண்டிய குளம் சகரர் வல்லமையையும், கடலின் உயர்வையும் விளக்கிக் கொண்டிருக்கின்றது; அதேபோல தாம் செய்த நூல் பெரியார் வல்லமையையும், அவர்செய்த நூலின் உயர்வையும் விளக்குமென்றார் தேவர். இதனல், என்னுடைய புலமைத் திறத்தைக் காட்ட இந்நூல் என்னல் செய்யப்படவில்லையென்றும், பெரியார் தன்மையையும், அவர் நூலின் உயர்வையும் விளக்குதற்கே செய்யப்பட்டதென்றும், அதனல் பெரியார் இதிலுள்ள குற்றங் குறைகளைப் பாராட்டமாட்டார்களென்றும் குறிப்பிட்டார். தம், தாம், தன்-சாரியைகள். 'செய்யுள்' என்பது செய்யுளால் இயற்றப்பட்ட நூலைக்குறித்து நின்றது. 'நூல்' என்பது அதன் தன்மையை விளக்கி நின்றது. ஆல்-ஈற்றசை. (10)

---

## பாயிரம்.

திங்களொண் கவிகைத் திகிரியந் திணிதோட்
டிகழ்கடற் றானைமா ராஜன்
அங்கண்மா நிலத்திற் றுறந்துவீ டடைந்த
அரியவிக் காதையைத் தமிழால்
இங்குமா தவத்தோ ரிசையுமென் றிசைப்ப
இசைத்தனன் வீடுறக் கேட்டோர்
கொங்கவிழ் பொழில்சூழ் பழமலை யுறையுங்
குமாரதே வென்னுமா முனியே.

இ-ள்: திங்கள்-பூரணச்சந்திரனை நிகர்த்த, ஒண்-பிரகாசம் பொருந்திய, கவிகை-வெற்றிக்குடையையும், திகிரி-ஆக்ஞா சக்கரத்தையும், அம்-அழகிய, திணி-பலம் பொருந்திய, தோள்-புயங்களையும், திகழ்-விளங்குகின்ற, கடல்-சமுத்திரம் போன்ற, தானை-சேனைகளையும், (உடைய) மாராஜன்-மகாராஜன் என்னும் மன்னன், அம்-அழகிய, கண்-இடமகன்ற, மா-சிறந்த, நிலத்தில்-இப்பூவுலகின் கண், துறந்து-(அரசாட்சி முதலியவற்றை விட்டு) நீங்கி, (யோக

நிஷ்டைசெய்து) வீடு அடைந்த-முத்தியை எய்திய, அரிய-அருமை யான, இக்காதையை-இந்தச் சரித்திரத்தை, தவத்தோர்-(பெரிய நாயகி யம்மையாரும்) தவத்தினையுடைய முனிவர்களும், இங்கு-இத்தமிழ் நாட்டில், தமிழால்-தமிழ்ச்செய்யுட்களினாலே, இசையும் என்று-சொல்வீராக என்று, இசைப்ப-சொல்ல, கொங்குஅவிழ்-வாசனை பரவிப் பரிமளிக்கின்ற, பொழில்சூழ்-சோலையாற் சூழப் பட்ட, பழமலை-விருத்தாசலத்தில், உறையும்-தங்கிய, குமாரதேவ னென்னும்-குமாரதேவர் என்கின்ற, மா-சிறந்த, முனி-முனிவன், கேட்டோர்-(இதனைக்) கேட்டவர், வீடுஉற-முத்தியை அடையும் படி, இசைத்தனன்-கூறினான்; எ-று.

"ஆயிர முகத்தா னகன்ற தாயினும், பாயிர மில்லது பனுவ லன்றே" என்றபடி எவ்வகைப்பட்ட நூலிற்கும் பாயிரங் கூறுதல் முறைமை யாகலின், இங்கு இப்பாயிரங் கூறப்பட்டது. இப்பாயிரம் குமாரதேவரால். இயற்றப்பட்டதன்று; "தன்னா சிரியன் றன்னொடு கற்றோன், தன்மா ணாக்கன் றகுமுரை காரனென், றின்னோர் பாயிர மியம்புதல் கடனே" என்றபடி குமாரதேவரின் ஆசிரியர், அவரொடு கற்றோர் முதலியவர்களுள் பாயிர மியம்புதற்குரிய யாரேனு மொருவரால் கூறப்பட்டதாகும். "ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை, நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே, கேட் போர் பயனோ டாயெண் பொருளும், வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே" என்ற முறைப்படி இதில், நூலாசிரியர் பெயர் முதலி யன விளக்கப்பட்டன. (11)

பாயிரங் கூறியவரால் இயற்றப்பட்ட

## வாழ்த்து.

சிவன்றிரு வுருவா மைந்து சின்மய வெழுத்தும் வாழி
நவந்தரு நீறும் வாழி நயனநன் மணியும் வாழி
தவின்றருங் குமார தேவன் கழலிணை யிரண்டும் வாழி
அவன்றிரு வடியார் தம்மோ டாருயி ரனைத்தும் வாழி.

இ-ள்: சிவன்-சிவபெருமானுடைய, திருஉருவாம் - அழகிய வடிவமானவைகளும், சின்மயம்-ஞான மயமானவைகளும், (ஆகிய) ஐந்து எழுத்தும்-பஞ்சாக்ஷரங்களும், வாழி-வாழ்க, நவம்தரு-புதுமையைத் தருகின்ற, நீறும்-திருநீறும், வாழி-வாழ்க, நல்-நல்ல, நயன மணியும் - உருத்திராக்கமும், வாழி-வாழ்க, கவின்தரும்-அழகைத் தருகின்ற, குமாரதேவன் - குமாரதேவனுடைய, இணை-சேர்ந்த, கழல்இரண்டும்-இரண்டு பாதங்களும், வாழி-வாழ்க, அவன்-அவனுடைய, திரு-அழகிய, அடியார் தம்மோடு-அடியார்களுடனே, அனைத்து உயிரும்-எல்லா ஜீவ வர்க்கங்களும், வாழி-வாழ்க; எ-று.

நயனம்-கண்; இஃதிங்கு சிவனுடைய கண்ணையுணர்த்தி நின்றது; உருத்திராக்ஷத்தைச் சிவனுடைய கண்ணென்று சொல்வது சைவ சாம்பிரதாய மாகலின், 'நயனமணி' என்பதற்கு உருத்திராக்ஷமென்று பொருள் கூறப்பட்டது; அக்கம்-கண்; உருத்திர அக்கம் - உருத்திரனுடைய கண். பஞ்சாக்ஷரங்கள் சிவசொரூபமானவை யென்பதும், ஞான வடிவமானவை யென்பதும் சைவ சமயக் கோட்பாடுகளாம். இதில் பஞ்சாக்ஷர முதலியவற்றிற்கும், குமாரதேவருக்கும், அவருடைய அடியார்க்கும் வாழ்த்துக் கூறப்பட்டது. (12)

---

## நூல்.

### இந்நூலின் முதல் வரலாறு.

1 தருக்கிளர் நைமி சாரணி யத்திற்
றங்கிய முனிவர்கள் சூதன்
வரப்பணிந் தேத்திக் கதைகள்பற் பலவா—
வகுத்துரைத் தனைமகா ராசன்
திருக்கதை யெங்கட் குரைத்திலை-யதுநீ
செப்பெனச் சுருதியிற் சொல்லும்
சுருக்கமில் காதை யிதுவெனத் தொகுத்துத்
தோமறக் கேண்மினென் றுரைக்கும்.

இ-ள்: தருகிளர்-மரங்கள் வளர்ந்திருக்கின்ற, நைமிச ஆரணியத்தில்-நைமிச வனத்தில், (ஒரு காலத்தில்) தங்கிய-தவஞ்செய்துகொண்டு தங்கியிருந்த,முனிவர்கள்-இருடியர்,சூதன்-சூதமாமுனிவர், வர-தம்முடைய ஆசிரமத்திற்கெழுந்தருள,(அவரைக்கண்டு எழுந்து) பணிந்து-வணங்கி, ஏத்தி-துதித்து, (முனிசிரேஷ்டனே!)எங்கட்கு-எங்களுக்கு, கதைகள்-(முனிவர், தேவர், அரசர் முதலாயினோருடைய) சரித்திரங்களை, பல்பலவா-பற்பல விதங்களாக, வகுத்து-விரித்து, உரைத்தனை-கூறினை, (எனினும்) மாராசன்-மகாராஜனுடைய, திருகதை-அழகிய துறவைப்பற்றிய கதையை, உரைத்திலை-கூறினாயில்லை,(ஆதலின்) நீ-, அது-அக்கதையை, செப்புஎன-கூறுவாயாக என்று கேட்டுக்கொள்ள, (அவன்) இது-இக்கதையானது, சுருதியில் சொல்லும்-வேதத்திற் சொல்லப்படும், சுருக்கமில் காதை-சுருக்கமில்லாத (அதாவது, மிக விரிவான) சரித்திரமாகும், எனினும், இதனை உங்களுக்குச் சுருக்கமாகக் கூறுகிறேன்) என-என்று, தொகுத்து-(விரிவான இக்கதையை) சங்கிரகமாகச் சுருக்கி, கேண்மின் என்று-(முனிவரே!) கேட்பீராக என்று, தோம்அற-குற்றமில்லாமல், உரைக்கும்-சொல்வானாயினான்; எ-று.

ஒரு காலத்தில் நைமிசாரணியத்திலே தவஞ்செய்துகொண்டிருந்த முனிவர்கள், அங்கே வந்த சூதமுனிவரைக்கண்டு வணங்கி, "முனிசிரேஷ்டரே! எங்களுக்குப் பற்பலவாகக் கதைகளைக் கூறினீர்; எனினும், மகாராஜன் துறவினைக் கூறவில்லை; ஆதலின், அதனைக் கூறியருளவேண்டும்" என்று கேட்டுக் கொள்ள, அவர், வேதத்திலே விரிவாகக் கூறப்பட்டிருந்த இக்கதையைச் சுருக்கி அவர்க்குக் கூறுவாராயினார் என்பது இதன் கருத்து.

நைமிசாரணியம்-இமயமலைக் கருகிலுள்ள வனம்; ஒரு காலத்தில் முனிவர்கள் பிரமதேவனிடத்தில்,"நாங்கள் தவமியற்றுதற்குத் தக்க இடம் தெரிவிக்கவேண்டும்" என்று சொல்ல, நான்முகன்,

தருப்பையொன்றை யெடுத்துச் சக்கரம் (நேமி) போல்ச்செய்து அதனை உருட்டிவிட்டு, "இந்த நேமி எவ்விடத்தில் நிற்குமோ அங்கே நீங்கள் தவஞ்செய்வீராக" என்று கூறினன். முனிவர் அதன்பின் சென்றனர்; நேமி இங்கேவந்து நின்றது; முனிவர் அதுமுதல் இங்கே தவஞ்செய்யலாயினர்; இவ்விடம் பெரிய ஆரணியமாயிற்று. நேமி வந்து தங்கியதால் இத்தவ வனம் ஏற்பட்டதாதலின், இதற்கு, 'நைமிசாரணியம்' என்னும் பெயர் வழங்கலாயிற்று. ஒரு காலத்தில் திருமால் இவ்விடத்திலிருந்து நிமைப்போதில் அசுரரைக் கொன்றாரென்றும், அக்காரணத்தால் இதற்கு, 'நைமிசம்' என்ற பெயர் ஏற்பட்டதென்றும் சிலர் கூறுவர். இச்செய்யுளுரையில் பொருண்முடிபுக் கேற்பச் சில சொற்றொடர்கள் இசையெச்சமாகக் கூட்டியுரைக்கப்பட்டன. 'கேண்மின்'என்பதில், மின்-முன்னிலைப் பன்மை விகுதி. (1)

### கருநாட தேசத்தரசன் சிறப்பு.

2 குழைத்ததண் சினைத்தே மாவினொண் கனித்தேன்
குலவிய பலவினற் பலத்தேன்
தழைத்திடு கதலிப் பழமுகுத் திடுதேன்
தாங்கிரண் டிலஞ்சியிற் றதும்பி
விழுத்தகு வயலிற் பாய்தர விளையு
மிகுசரு நாடதே சந்தான்
இழைத்தநற் றவத்தா யிலுமிரலாம் புரந்தங்
கிருந்தர சாளுமோர் குரிசில்.

இ-ள்: குழைத்த - தளிர்த்த, தண் - குளிர்ச்சி பொருந்திய, சினை - கிளைகளையுடைய, தேம் - இனிய, மாவின்-மாமரத்தினது, ஒண்-ஒள்ளிய, கனி-பழத்திலிருந்து வடிகின்ற, தேன்-தேனும், குலவிய-பிரகாசிக்கின்ற அல்லது பொருந்திய, நல்-நல்ல, பலவின் பலம் - பலாமரத்தினது பலத்திலிருந்தொழுகும், தேன் - தேனும்,

தழைத்திடு-செழித்த, கதலிப்பழம்-வாழையின் பழமானது, உகுத்திடு-வடிக்கின்ற, தேன்-தேனும், திரண்டு-கூடிப்பெருக்கெடுத்து, இலஞ்சியில் ததும்பி-குளத்திற் பாய்ந்து நிறைந்து வழிந்து, விழுத்தகு-சிறப்புப் பொருந்திய, வயலில்-நன்செய் நிலங்களிலே, பாய்தர-பாய, விளைவு-பயன்கள், மிகு - அதிகரிக்கின்ற, கருநாடதேசம்-கருநாடமென்னும் நாடானது, இழைத்த-செய்த, நல்-நல்ல, தவத்தால்-தவத்தினலே, ஓர்-ஒப்பற்ற, குரிசில்-அரசனொருவன், அங்கு-அந்நாட்டில், இருந்து-தங்கி, உயிர் எல்லாம் - உயிர்களையெல்லாம், புரந்து - காப்பாற்றி, அரசுஆளும் - அரசாட்சி செய்வானாயினன்; எ-று.

"நிலவள மிகுந்த கருநாடதேசம் செய்த தவத்தினலே ஓர் அரசன் அங்கிருந்து உயிர்களைக் காப்பாற்றி அரசாட்சி செய்து வந்தான்" என்பது இதன் கருத்து. தாம், தான் என்பன சாரியைகள். தழைத்திடு, உகுத்திடு என்பவற்றிலுள்ள, இடு - பகுதிப்பொருள் விகுதி; துணைவினை யென்றும் சொல்லப்படும். 'பாய்தர' என்பதிலுள்ள, 'தரு' என்பதும் இத்தன்மையதே. (2)

3 மஞ்சம ரிஞ்சிசூழ் மாபு ரத்திருந்
தெஞ்சலி லெண்டிசை யிறைவர் தாடொழத்
தஞ்சமென் றடைந்தவர் தம்மைக் காத்திகல்
வஞ்சகர்க் காய்மகா ராச மன்னனே.

இ-ள்: (அம்மன்னன் யாரெனின்) மஞ்சுஅமர் - மேகங்கள் தங்கியிருக்கின்ற, இஞ்சிசூழ்-கோட்டையால் சூழப்பட்ட, மாபுரத்து-மாபுரம் என்னும் நகரத்திலே, இருந்து-சிம்மாசனத்தில் தங்கி, எஞ்சல்இல்-(செல்வத்தில்) குறைதல் இல்லாத, எண்திசை-எட்டுத் திக்குகளிலுமுள்ள, இறைவர்-அரசர்கள், (வந்து பகுதி செலுத்தி), தாள்தொழ-தன்னுடைய பாதங்களை வணங்க, தஞ்சம் என்று-நீயே துணையென்று, அடைந்தவர் தம்மை-(தன்னிடத்தே அடைக்

கலமாகச்) சேர்ந்தவர்களை, காத்து-(துன்பத்தினின்று நீக்கிக்) காப்பாற்றி, இகல்-பகைமை பொருந்திய, வஞ்சகர்-வஞ்சனைக்காரர் களை, காய்-கோபித்து ஒடுக்குகின்ற, மகாராச மன்னன்-உயர்ந்த அரசர்க்கரசனுவான்; எ-று.

"அந்த மன்னன் யாரென்றால், மாபுரமென்னும் நகரத்திலே சிங்காசனத்தில் வீற்றிருந்து, அரசர்கள் கப்பங்கட்டித் தன்பாதங் களை வணங்க, தஞ்சமென்று தன்னையடைந்தவரைக் காப்பாற்றிப் பகைவரைக் கோபித் தொடுக்குகின்ற அரசர்க்கரசனுவான்" என் பது இதன்கருத்து. முன் செய்யுளும் இதுவும் குளகம். கோட் டைச் சுவர் மேகமண்டலம்வரை உயர்ந்திருக்கு மாதலின், அங்கு மேகசஞ்சாரம் கூறப்பட்டது. 'மன்னனே' என்பதில், ஏகாரம்- ஈற்றசை. (3)

4 தருநிழ லரசு வைகுஞ் சதமகன் றிருவின் மிக்கான்
உருவினின்மதனின்மிக்கா னுலத்தினிற்பலத்ததோளான்
செருவினி லரியே றன்னான் தேனொடு ஞிமிறும் பாட
முருகுடைந்தொழுகுந்தாரான் மூவுலகளிக்கும்வேலான்.

இ-ள்: (அவ்வரசன் எப்பேர்ப்பட்டவனெனில்), தருநிழல்- கற்பகத்தருவின் நிழலிலே, அரசு-அரசனாக, வைகும்-வீற்றிருக் கின்ற, சதமகன்-இந்திரனைக் காட்டிலும், திருவின்-செல்வத்தில், மிக்கான்-மிகுந்தவன், உருவினில் - வடிவத்தில், மதனின்-மன்மத னைக் காட்டிலும், மிக்கான்-உயர்ந்தவன், உலத்தினின்-திரண்ட கல்லைக்காட்டிலும், பலத்த-வலிமை பொருந்திய, தோளான்-புயங் களையுடையவன், செருவினில்-போர்க்களத்திலே, (யுத்தஞ்செய்து பகைவரை வெல்வதில்), அரிஏறு-ஆண் சிங்கத்தை, அன்னான்-நிகர்த் தவன், தேனொடு-பெண் வண்டுகளும், ஞிமிறும்-ஆண் வண்டுகளும், பாட-(மலர்களிலே நெருங்கிக்குடைந்து) பாடுதல் செய்ய, (அத னாலே) முருகு-(மலர்களில்உள்ள) கள்ளானது, உடைந்து-கசிந்து,

ஒழுகும்-வடிகின்ற, தாரான்-மலர்மாலையை அணிந்தவன், மூஉலகு-மூன்று உலகங்களையும், அளிக்கும்-காக்கின்ற, வேலான்-வேலாயுதத்தை யுடையவன்; எ-று.

"அவ்வரசன், செல்வத்தில் இந்திரனிலும் மேம்பட்டவன்; வடிவத்தில் மன்மதனைக் காட்டிலும் சிறந்தவன்; திரண்ட கல்லைக் காட்டினும் பலம்பொருந்திய தோள்களையுடையவன்; போர்க்களத்தில் யுத்தஞ்செய்வதில் ஆண்சிங்கம் போன்றவன்; தேனொழுகும் மலர் மாலையைத் தரித்தவன்; மூன்றுலகங்களையும் பாதுகாக்கக் கூடிய வேலாயுதத்தை யுடையவன்" என்பது இதன்கருத்து. பின்னே இந்திரன் கூறப்படுதலால், 'தரு' என்பதற்கு, 'கற்பகத் தரு' என்று பொருள் கூறப்பட்டது. சதமகன் மிக்கான்-ஐந்தாம் வேற்றுமைத் தொகை; மதனின் மிக்கான், உலத்தினிற் பலத்த தோள் என்பன ஐந்தாம் வேற்றுமை விரிகள்; பண்பெல்லைப் பொருளன. 'தேன்' எனப் பெண்வண்டு கூறப்பட்டமையின், 'ஞிமிறு' என்பதற்கு, 'ஆண்வண்டு' எனப்பொருள் எழுதப்பட்டது. இவ்வரசன் தன்னுடைய வேலாயுதத்தின் வல்லமையினலே சுவர்க்க, மத்திய,பாதாளமென்னும் மூவுலகங்களினும் ஆளுகையைச் செலுத்தக் கூடியவன் ஆதலினலே், 'மூவுலகளிக்கும் வேலான்' என்று இவனுடைய வேலைச் சிறப்பித்துக் கூறினர் ஆசிரியர். இதுவும் முன்செய்யுளும் குளகம். (4)

5 அரசர்வந் திடுதிறை யளக்கு முன்றிலான்
முரசுக ளனுதின முழங்கு மன்றலான்
கரைபொரு திரையெறி கடலந் தானையான்
அருவரை மார்பினன் யாளி மொய்ம்பினன்:

இ-ள்: (இன்னும்) அரசர்-வேற்றரசர்கள், வந்து-சேர்ந்து, இடு-(கணக்குப்படி) வைக்கின்ற, திறை - கப்பப் பொருள்களை,

அளக்கும்-(எப்பொழுதும்) அளந்துகொண் டிருக்கின்ற, முன்றி லான்-முற்றத்தை(வாயிலை)யுடையவன், அநுதினம்-தினந்தோறும், முரசுகள்-பேரிகைகள், முழங்கும்-சப்தித்துக் கொண்டிருக்கின்ற, மன்றலான்-திருமணம் முதலிய சுபகாரியங்களையுடையவன், கரை பொரு-கரைகளை மோதுகின்ற, திரை-அலைகளை, எறி-வீசுகின்ற, கடல்-சமுத்திரம் போன்ற, அம்-அழகிய, தானையான்-சேனைகளை யுடையவன், அரும்-(சிதைத்தற்கு) அரிதாகிய, வரை-மலையைப் போன்ற, மார்பினன் - மார்பையுடையவன், யாளி - சிங்கத்தைப் போன்ற, மொய்ம்பினன்-வலிமையையுடையவன்; எ- று.

முன் பாட்டும், இதுவும் குளகம். "இன்னும் அம்மன்னன், வேற்றரசர் திறையளக்கும் முன்றிலையும், கலியாணம் முதலிய சுபகாரியங்களையும், கடல்போன்ற சேனைகளையும், மலைபோன்ற மார்பையும், சிங்கத்தைப்போன்ற வல்லமையையுமுடையவன்" என் பது இதன்கருத்து. இவனுடைய அரண்மனையில் எப்பொழுதும் கலியாணம் முதலிய சிறப்புக்கள் குறைவின்றி நடந்துகொண் டிருக்குமாதலின், "அநுதினம் முரசுகள் முழங்கும் மன்றலான்" என்றார் தேவர். "கடலந்தானை" என்பதில், அம்-சாரியையுமாம். 'இல்முன்' என்பது, 'முன்றில்' என வந்தது; இஃதிலக்கணப் போலி. (5)

6 அரசர்த முடியுழு தவிருந் தாளினன்
எரிதவழ் திகிரியை யேந்துந் தோளினன்
மருவலர் வலியினை மாற்றும் வாளினன்
தருநிதிக் கொடையினன் றருக்கு நாளினே.

இ-ள்: அரசர்தம்-(தினந்தோறும் வந்து வணங்கும்) அரசர்க ளுடைய, முடி-கிரீடங்கள், உழுது-(படிந்து) கீறி, (தழும்பேறி அத்தழும்போடு) அவிரும்-பிரகாசிக்கின்ற, தாளினன்-பாதங்களை யுடையவன், எரிதவழ்-நெருப்பின்தன்மை பிரகாசிக்கும், திகிரியை-

சக்கரத்தை, ஏந்தும்-தாங்குகின்ற, தோளினன்-புயங்களையுடைய வன், மருவலர்-பகைவருடைய, வலியினை-வல்லமையை, மாற்றும்-நீக்குகின்ற, வாளினன்-வாளாயுதத்தையுடையவன், தரு-கற்பகத் தருவையும், நிதி-(சங்கநிதி, பதுமநிதி ஆகிய)நிதிகளையும்,(நிகர்த்த) கொடையினன் - ஈகையுடையவன்; தருக்கும் நாளினே-இத்தகைய செல்வங்களையுடையவனாய்க்) களித்திருக்கின்ற காலத்திலே; எ-று.

முன் செய்யுளும்; இச்செய்யுளும் குளகம். "வணங்கும் அரசரின் முடிபடிந்து தழும்பேறிப் பிரகாசிக்கும் பாதங்களையும், சக்கரத்தை யேந்துந் தோளினையும், பகைவர் வல்லமையைப் போக்கும் வாளையும், கற்பகத்தரு, சங்கநிதி, பதுமநிதி முதலியவைகளை நிகர்த்த கொடையையுமுடையவன்; இத்தகைய சிறப்புக்களை யுடையவனாய்க் களித்திருக்குங் காலத்திலே" என்பது இதன் கருத்து; இச்செய்யுளீறு குளகமாய் அடுத்த இரண்டு செய்யுட்க ளோடு தொடர்ந்து முடிவுறும். தவழ்தல்-நகருதல்; இஃதிங்குப் பிரகாசித்தல் பொருளில் நின்றது. கற்பகத்தரு, சங்கநிதி, பதும நிதி ஆகியவைகள், அடுத்தார்க்கு வேண்டுவனவற்றைக் கொடுக்கக் கூடியவைகள்; அவற்றைப்போலவே இம்மன்னனும், தன்னை யடுப் பார் விரும்பியவற்றை அவர்க்கில்லையென்னுமற் கொடுக்கக்கூடியவ னாதலின் அவற்றை இவனுக் குவமையாகக் கூறினார் தேவர். கற்பகத்தரு-இந்திரனுக்குரியது; சங்கநிதி, பதுமநிதி ஆகிய இரண் டும் குபேரனுக்குரியவை; குபேரன் இவ்விரண்டையும் உடைத் தானவனா யிருத்தலினாலேயே, 'இருநிதிக் கிழவன்' என்னும் பெயர் பெற்றான். (6)

7 கவரியோ டால வட்டங் காரிகை யார்கள் வீசப்
பவளவா யரம்பை யன்னார் பாகடை யுதவ முத்தத்
தவளவா ணகையார் கீதத் தனிநடஞ் செய்ய நின்று
குவலய மன்னர் போற்றக் குரைகடற் றானை சூழ.

இ-ள்: காரிகையார்கள் - அழகிய பெண்கள், கவரியோடு-சாமரைகளையும், ஆலவட்டம் - விசிறிகளையும், வீச-(பக்கங்களில் நின்று) வீசவும், பவளம்-பவளம் போன்ற, வாய்-வாயையுடைய, அரம்பை அன்னார்-அரம்பையென்னும் தெய்வப்பெண்ணை நிகர்த்த சில மாதர்கள், பாகடை-பாக்கு வெற்றிலை, உதவ-கொடுக்கவும், தவளம்-வெண்மை நிறம்பொருந்திய, முத்தம்-முத்துக்களை நிகர்த்த, வாள்-ஒளிபொருந்திய, நகையார்-பற்களையுடைய சிலமாதர், கீதம்-இசையோடு பொருந்திய, தனி-ஒப்பற்ற, நடம்செய்ய-நடனம்புரியவும், குவலயம்-பூவுலகத்திலுள்ள, (பல) மன்னர்-சிற்றரசர், நின்று-முன்னே நின்று, போற்ற-துதிசெய்யவும், குரை-சப்திக்கின்ற, கடல்-சமுத்திரம் போன்ற, தானை-சேனைகள், சூழ-சூழ்ந்து நிற்கவும்; எ-று.

"அழகிய மாதர் சாமரையும் விசிறியும் வீசவும், அரம்பை போன்ற சிலமாதர் பாக்கு வெற்றிலை கொடுக்கவும், சில பெண்கள் நடனஞ் செய்யவும், சிற்றரசர் துதிக்கவும், சேனை சூழவும்" என்பது இதன்கருத்து. இது குளகமாய் அடுத்த செய்யுளோடு முடியும். பாகு-பாக்கு; அடை-இலை(வெற்றிலை). (7)

8 இந்திர னாலை யம்போ லிலங்கிய மண்ட பத்தில்
சுந்தர மிருக ராசன் சுமந்தபூ வணையின் மீது
வந்திருந் தவனி தன்னை மனுநெறி முறையிற் காத்தே
அந்தமில் போகந் துய்த்தங் கிருந்திடு மரசர் கோமான்.

இ-ள்: அரசர் கோமான்-(முன் உரைத்த அந்த) அரசர்க்கரசன், இந்திரன்-தேவர்க்கதிபனுடைய, ஆலயம்போல்-(சுதர்மை என்னும்) சபாமண்டபம்போல, இலங்கிய-பிரகாசிக்கின்ற, மண்டபத்தில்-கொலுக்கூடத்தில், சுந்தரம்-அழகு பொருந்திய, மிருக ராசன்-மிருகங்களுக்கரசாகிய சிங்கம், சுமந்த - தாங்கிய, பூ-மலர்களால் அலங்கரிக்கப்பட்ட, அணையின்மீது - ஆதனத்தின்மேல்,

வந்து-(தினந்தோறும்) சேர்ந்து, இருந்து-தங்கி, அவனிதன்னை-இப்பூமியை, மனுநெறி முறையின்-மனுதர்ம சாஸ்திர விதியின்படி, காத்து-ஆண்டு, அந்தம்இல்-முடிவில்லாத, போகம்-இன்பங்களை, துய்த்து-அனுபவித்து, அங்கு-அந்நகரத்தில், இருந்திடும்-இருப்பானாயினான்; எ-று.

"அவ்வரசர் கோமான், சபாமண்டபத்திலே சிங்காதனத்தின் மீதமர்ந்து இவ்வுலகத்தை மனுதர்ம சாஸ்திர விதிப்படி காத்து அந்நகரத்திலே அளவற்ற இன்பத்தை அனுபவித்து இருப்பானாயினான்" என்பது இதன்கருத்து. ஆறும் செய்யுளினீற்றிலிருந்து, "களித்திருக்கின்ற காலத்திலே, பெண்கள் சாமரை விசிறி வீச, உதவ, செய்ய, போற்ற, சூழ, அரசர் கோமான் ... சிங்காதனத் தமர்ந்து ... போகந்துய்த் தங்கிருந்திடும்" என்று கூட்டி இச் செய்யுளோடு முடிக்க. (8)

## அவ்வரசன் புத்திரப் பேறின்றி வருந்தல்.

9 தூம்புடைப் பிறையெ யிற்றுத் துத்தியீ ராயி ரந்தோட்
பாம்பினாற் பரிக்க லுற்ற பாரினைப் பரிக்கப் பின்னர்
மேம்படு புதல்வர் நந்தம் வீறுடை வயிற்றில் லென்று
தேம்படு தெரியன் மார்பன் சிந்தையா குலங்க ளுற்றான்.

இ-ள்: (அங்ஙன மிருந்த) தேம்படு-வாசனை பரிமளிக்கின்ற, தெரியல்-மாலையை அணிந்த, மார்பன்-மார்பினையுடைய அவ்வரசன், தூம்புஉடை-உள்துளையையுடைய, பிறை - சந்திரப்பிறைபோலும், (வளைவான) எயிறு-விஷப்பற்களையும், துத்தி-படப்பொறிகளையும், ஈராயிரம்தோள் - இரண்டாயிரம் தோள்களையும், (உடைய) பாம்பினால்-(சேடன் என்னும்) அரவத்தால், பரிக்கல் உற்ற-தாங்குகின்ற, பாரினை-இவ்வுலகத்தை, பின்னர்-நமக்குப் பிற்காலத்தில், பரிக்க-தாங்க, (அதாவது,ஆளுதற்கு) மேம்படு-உயர்வு பொருந்திய,

புதல்வர்-புத்திரர், நம்-நம்முடைய, வயிறு-வயிற்றிலே, இல்என்று-பிறக்கவில்லையென்று, சிந்தை-மனதில், ஆகுலங்கள்-கவலைகளை, உற்றான்-அடைந்தான்; எ-று.

"அங்ஙனமிருந்த அரசன், தனக்குப் புத்திரரில்லாமையால், 'சேடனால் சுமக்கப்பட்ட இப்பூமியை நமக்குப்பின்னே ஆளுதற்கு நம்முடைய வயிற்றிலே புத்திரர் பிறக்கவில்லையே' என்று மனத்தில் வியாகுலங்களை யடைந்தான்' என்பது இதன்கருத்து. பாம்பின் விடப்பற்களில் உள்ளே துளையிருக்கு மாதலின், 'தூம்புடை எயிறு' என்றார் தேவர். எயிறு, வயிறு என்னும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களில், வேற்றுமைப் புணர்ச்சியாகலின் றவ்வொற்று இரட்டிற்று. தம்-சாரியை. (9)

### அவ்வரசன் புத்திரப்பேறு வேண்டித் தீர்த்த யாத்திரை முதலிய புண்ணிய கருமங்களைச் செய்தல்.

10 கங்கையே முதலா மிக்க கடவுண்மா நதியிற் றோய்ந்தும்
பங்கயா சனன்மால் திங்கட் பவளவார் சடையான் றன்னை
அங்கையாற் பூசை செய்து மதிதிகட் களித்துந் தீயில்
பொங்குமா குதிக ளீந்தும் பூவலம் வந்துந் தேவர்.

இ-ள்: (அங்ஙனம் கவலைகொண்ட அரசன் புண்ணிய கருமங்களைச்செய்து புத்திரப்பேற்றை அடைய முயற்சி செய்யத் தொடங்கி) கங்கைமுதலாம்-கங்காநதி முதலாகிய, மிக்க கடவுள்-மிகுந்த கடவுள் தன்மை பொருந்திய, மா-சிறந்த, நதியில்-ஆறுகளில், தோய்ந்தும்-மூழ்கியும், பங்கயஆசனன்-தாமரைமலர் ஆசனத்தையுடைய நான்முகனையும், மால்-மகாவிஷ்ணுவையும், திங்கள்-சந்திரனைத் தரித்த, பவளம்-பவளம்போன்ற சிவந்த நிறத்தினையுடைய, வார்-நீண்ட, சடையான்தன்னை, சடையையுடைய சிவனையும், அம்-அழகிய, கையால்-கரங்களினாலே, பூசைசெய்தும்-பூசனைபுரிந்தும், அதிதிகட்கு-பரதேசிகளுக்கு, அளித்தும்-(வேண்டுவன)

கொடுத்தும்; தீயில் - யாகாக்கினியில், பொங்கும்-அதிகரிக்கின்ற, ஆகுதிகள்- (நெய் முதலிய யாகப் பொருள்களாகிய) பலிகளை, ஈந்தும்-கொடுத்தும், (அதாவது சொரிந்தும்) பூவலம் வந்தும்-இப் பூவுலகத்தை வலமாகச் சுற்றிப் (புண்ணியத் தலயாத்திரைசெய்து) வந்தும், தேவர்-தேவர்கள் எழுந்தருளுதற்குரிய; எ-று.

"அங்ஙனம் கவலைகொண்ட அரசன், புண்ணிய கருமங்களைச் செய்து புத்திரப்பேற்றை அடைய முயற்சி செய்யத் தொடங்கி, கங்கை முதலான நதிகளில் மூழ்கியும், பிரமா, விஷ்ணு, சிவன் ஆகியவர்களைப் பூஜித்தும், பரதேசிகட்கு வேண்டுவன கொடுத்தும், புத்திரகாமேஷ்டியாகம் முதலிய வேள்விகளைச் செய்து யாகாக் கினியில் நெய் முதலியவற்றை ஆகுதிபண்ணியும், பூமியை வல மாகச் சுற்றிப் புண்ணியத் தலயாத்திரை செய்துவந்தும், தேவர் கள் கோயில் கொள்ளுதற்குரிய" என்பது இதன்கருத்து. 'தேவர்' என்னும் பெயர் அடுத்த செய்யுளின் முதலிலுள்ள, 'ஆலயம்' என்ற பெயர்கொண்டு முடியும். இதுவும் அடுத்த செய்யுளும் குள கம். 'கங்கையே' என்பதில், ஏ-அசை. திதி-நிலை; அதிதி-நிலை யின்மை; இஃதாகுபெயராய் நிலையில்லாமையையுடைய பரதேசி களை யுணர்த்திற்று; நிலையில்லாமை-ஓரிடமும் நிலையில்லாது திரி தல். 'தீயில் பொங்குமா குதிகளீந்து' என்றதனாலே, யாகஞ் செய்தல் தானே அமைந்தது. (10)

11 ஆலயஞ் சாலை யக்கி ராரநந் தனவ னங்கள்
கோலமா ரிலஞ்சி கூபங் குளம்பல செய்து மீரெட்
டேலுமா தானத் தோடே யிரணிய முதலீ ரைந்து
சாலநற் றான மீந்துந் தருமமெண் ணான்கு செய்தும்.

இ-ள்: ஆலயம்-கோவில்களையும், சாலை-இருமருங்கும் மரங் கள் அடர்ந்த பாதைகளையும், அக்கிராரம்-பார்ப்பனச் சேரிகளையும், நந்தனவனங்கள்-பூந்தோட்டங்களையும், கோலம்ஆர்-அழகு பொருந்

தி்ய், இலஞ்சி-மடுக்களையும், கூபம்-கிணறுகளையும், பலகுளம்-பல ஏரிகளையும், செய்தும் - உண்டாக்கியும், ஏலும் - பொருந்துகின்ற, மா-சிறந்த, ஈரெட்டு-பதினாறு, தானத்தோடு-தானங்களோடு, இரணியம்முதல்-பொற்றான முதலாகிய, நல்-நல்ல, ஈரைந்துதானம்-பத்துவகைத் தானங்களையும், ஈந்தும்-(விரும்பினவர்க்குக்) கொடுத்தும், எண்ணான்கு தருமம்செய்தும்-முப்பத்திரண்டு அறங்களைப் புரிந்தும்; எ-று.

"கோவில்கள், சாலைகள், அக்கிராரங்கள், பூந்தோட்டங்கள், மடுக்கள், கிணறுகள், குளங்கள் ஆகியவற்றை அமைத்தும், பதினெட்டுத் தானங்களோடு சுவர்ண தான முதலான பத்துத் தானங்களை விரும்பினவர்க்குக் கொடுத்தும், முப்பத்திரண்டு அறங்களைச் செய்தும்" என்பது இதன்கருத்து. 'செய்தும்' என்பது அடுத்த செய்யுளோடு சேர்ந்து முடியும். முன் செய்யுளின் ஈற்றிலுள்ள 'தேவர்' என்பதை, இச்செய்யுளோடு கூட்டி, 'தேவர் ஆலயம்' என முடிக்கவேண்டும். தேவாலயங்களாவன: விஷ்ணு, சிவன் முதலிய தெய்வங்கள் எழுந்தருளுதற்குரிய கோவில்கள். பதினாறு தானங்களாவன: சையாதானம், சத்திரதானம், கஜதானம், அசுவதானம், கன்னிகாதானம், உபநயனதானம், காலபுருஷதானம், சயனதானம், கிருகதானம், புஸ்தகதானம், பாத்திரதானம், சாளக்கிராமதானம், பாதுகாதானம், அன்னதானம், வித்தியாதானம், கிருஷ்ணாஜினதானம் என்பனவாம்; இவை, சோடச தானங்களெனவும் சொல்லப்படும். இவையன்றி, வேறுவகைச் சோடச தானங்களுமுண்டு. அவையாவன: கோதானம், கஜதானம், ஹயதானம், சாகைதானம், மகிஷீதானம், இரதத்தானம், கிருகதானம், சையாதானம், பூதானம், வித்தியாதானம், கன்னிகாதானம், தாசிதானம், சுவர்ணதானம், இரத்தினதானம், திலதானம், அக்கிராகாரதானம் என்பனவாம். இன்னும் சோடச மகாதானங்களென வேறு வகைகளுமுண்டு. அவையாவன: துலாபுருஷதானம், இரணிய

கருப்பதானம், பிரஹ்மதண்டதானம், சுவர்ணதானம், பஞ்சலாங்கல தானம், சுவர்ணதேனுதானம், பூகோளதானம், கனகபர்வததானம், காமதேனுதானம், கற்பகவிருக்ஷதானம், இராஜதபர்வததானம், சகஸ்திரதேனுதானம், சாலங்கிருதி ஹேம விருஷபதானம், சாலங்கிருதி லட்சுமி பிரதிமாதானம், சாலங்கிருதி சப்தாசலதானம், சப்த சமுத்திரதானம் என்பனவாம்.

பத்துவகைத் தானங்களாவன: கோதானம், பூதானம், தில தானம், இரணியதானம், ஆச்சியதானம், வஸ்திரதானம், தானிய தானம், குளதானம், ரௌப்பியதானம், லவணதானம் என்பன வாம். இவை, தச தானங்களெனச் சொல்லப்படும். 'தானத் தோடு' என்பதில், ஏ-அசை. (11)

அவ்வரசன் புத்திரனைப் பெற்று, அவனுக்குச்
சாதகன்ம முதலியன செய்தல்.

12 தவம்பலபுரிந்தும்வேந்தன் றனயனைப்பூத்துப்பின்னர்ப்
பவந்தனைத் துடைத்தேன் மேலாம் பாமநற் பதமு முண்டென்
றுவந்துசா தககன் மத்தோ டொழிவறு கருமமெல்லாம்
நவந்தரச் செய்து நாம நன்மகா ராஜ னென்றே.

இ-ள்: பலதவம் புரிந்தும்-பலவிதமான தவங்களைச்செய்தும், வேந்தன்-அவ்வாசன், தனயனை-புத்திரனை, பூத்து-பெற்று, பின்னர்-பிறகு, பவந்தனை - பாவத்தை, துடைத்தேன் - (நான்) நீக்கினேன், (இனி எனக்கு) மேலாம்-மேலாகிய, நல்-நல்ல, பாமபதமும்-முத்தியும், உண்டென்று-உளது என்றுகூறி, உவந்து-மகிழ்ந்து, (அப்பிள்ளைக்கு) சாதககன்மத்தோடு-பிறப்புச் சடங்குடனே, ஒழிவறு-நீங்காத, கருமம்எல்லாம்-மற்ற சடங்குகளையெல்லாம், நவம்தர-புதுமையாக, செய்து-இயற்றி, நல்-நல்ல, மகாராஜன் என்று-மகாராசன் என, நாமம்-பெயரை; எ-று.

"பல தவங்களைச் செய்தும், அவ்வரசன் புத்திரனைப்பெற்று, 'நான் பாவத்தைப் போக்கினேன், எனக்கு மேலான முத்தியுமுண்டு என்று மகிழ்ந்து அப்புத்திரனுக்குப் பிறப்புச் சடங்கினோடு மற்ற எல்லாச் சடங்குகளையும் புதுமையாகச்செய்து, 'மகாராசன்' என்று பெயரை" என்பது இதன்கருத்து. முன் செய்யுளின் ஈற்றில் உள்ள, "தருமம் எண்ணுன்கு செய்தும்" என்பதை, இச்செய்யுளின் முதலில் உள்ள, 'தவம்பல புரிந்தும்' என்பதனோடு கூட்டி முடிக்க. இச்செய்யுளின் ஈற்றிலுள்ள, 'பெயரை' என்பது, அடுத்த செய்யுளோடு சேர்ந்து முடியும். இவை குளகச் செய்யுட்களாம். ஒன்பதாவது செய்யுளில், 'தெரியல் மார்பன்' என்னும் எழுவாய் கூறப்பட்டிருப்பினும், அது மூன்று செய்யுட்களுக்குமுன் இருத்தலால், படிப்பார்க்கு மயக்கமுண்டாகா திருத்தற்பொருட்டு மீண்டும் இச்செய்யுளில், 'வேந்தன்' என்னும் எழுவாய் கூறினர் ஆசிரியர். 'என்றே' என்பதில், ஏ-ஈற்றசை. (12)

## அரசன் தன் புத்திரனாகிய மகாராஜனுக்குக் கல்வி கற்பித்தல்.

13 வேத நீதியிற் கூறி வியன்றர
ஓத வெண்ணெண் கலையு முணர்த்துவித்
தேத மற்ற குரவற் கிரணியம்
போது மென்னப் பொழிந்தனன் கொண்டல்போல்.

இ-ள்: வேதநீதியின்-வேதவிதிப்படி, கூறி-சொல்லி, (அதாவது, பெயரிட்டு அவனை வளர்த்து அவனுக்கு வித்தியாப்பியாசம் செய்யும் பருவம் வந்தபின்) வியன்தர - பெருமையுண்டாகும்படி, ஓத-(அவன்) படிக்க, எண்ணெண் கலையும்-அறுபத்துநான்கு கலைகளையும், உணர்த்துவித்து-(ஒரு நல்லாசிரியனைக்கொண்டு அவனுக்குப்) படிப்பித்து, (அவன் நன்றாக ஓதி உணர்ந்தபின்) ஏதம்அற்ற-குற்றம் நீங்கிய, குரவற்கு - அந்த ஆசிரியனுக்கு, இரணியம்-

பொன்னை, போதும்என்ன-(அவன்) போதும் என்று சொல்லும் படி, கொண்டல்போல்-(மழையைச் சொரியும்) மேகத்தைப்போல, பொழிந்தனன்-அவன் கையிற் சொரிந்தான், (அதாவது, கொடுத்தான்); எ-று.

முன் செய்யுளின் ஈற்றிலுள்ள, 'பெயரை' என்பதை இச் செய்யுளோடு சேர்த்து, "பெயரை வேதவிதிப்படி கூறி நாமகரணம் செய்து, பெருமையாக அவன் படிக்கும்படி நல்லாசிரியனைக் கொண்டு அறுபத்து நான்கு கலைகளையும் அவனுக்குணர்த்துவித்து, அவன் கல்வி கற்றுக்கொண்டபின் அவ்வாசிரியனுக்குப் பொன்னை, அவன் போதுமென்று சொல்லும்படி மேகத்தைப்போல அவனுடைய கரத்திற் சொரிந்தான்" என்று முடிக்க.

'அரசன், தன் மகனுக்கு நாமகரணஞ்செய்து, கல்வி கற்பித்து, ஆசிரியனுக்கு அளவற்ற பொன்னைக் கொடுத்தான்' என்பது இதன்கருத்து. (13)

## தந்தை, மகாராஜனுக்கு வாகனப் பயிற்சி முதலியவற்றைச் செய்வித்துத் திருமணஞ்செய்ய எண்ணுதல்.

14 கொடிநெ ருங்குங் கொடிஞ்சியந் தேர்பரி
கடம லிந்த கயமொண் சிவிகையிப்
ப்டியி லூரப் பயிற்றுவித் தாசிலா
வடிவி லங்கு மகற்கு மணஞ்செய்வான்.

இ-ள்: (அவ்வாறு செய்தபின்) கொடி - துகிற்கொடிகள், நெருங்கும் - செறிந்திருக்கின்ற, கொடிஞ்சி - மேன்மொட்டையுடைய, அம்-அழகிய, தேர் - இரதத்திலும், பரி-குதிரையிலும், கடம்மலிந்த-மதம் மிகுந்த, கயம் - யானையிலும், ஒண்-ஒள்ளிய, சிவிகை-பல்லக்கிலும், இப்படியில்-இப்பூமியில், ஊர-ஏறி அவற்றை நடத்த, பயிற்றுவித்து-(அவனை அவ்வித்தைகளில்) பழக்குவித்து,

ஆசுஇல்லா-குற்றமில்லாத, வடிவுஇலங்கு-அழகு பிரகாசிக்கின்ற, மகற்கு-அந்தப் புத்திரனுக்கு, மணம்செய்வான்-கலியாணம்செய்யும் பொருட்டு, (அதற்குரிய காரியங்களை நடத்தத் தொடங்கி); எ-று.

"முன் பாட்டிற் கூறியபடி புத்திரனுக்குக் கல்வி கற்பித்து ஆசிரியனுக்குப் பொன்னைக் கொடுத்தபின், தேர், குதிரை, யானை, பல்லக்கு முதலியவற்றில் ஏறி அவற்றை நடத்தும்படி தன் புத்திரனை அவற்றிற் பழக்குவித்து, அவனுக்குக் கலியாணம் நடத்த வேண்டி அதற்குரிய காரியங்களை நடத்தத்தொடங்கி" என்று கூட்டி முடிக்க.

"அவ்வரசன் மகனுக்கு வாகனமேறும் வித்தையைக் கற்பித்துத் திருமணம் செய்யத் தொடங்கினான்" என்பது இதன்கருத்து. மேன்மொட்டு-மேற்பாகத்தில் உட்காரும்தட்டு. ஒண்மை-பிரகாசம். இச்செய்யுள் குளகமாய் அடுத்தசெய்யுளோடு முடியும். (14)

## அரசர்களுக்கு மணவோலை போக்குதலும், பலதேயத் தரசர்வந்து கூடுதலும்.

15 மடங்க லன்ன பலமுள்ள மாமன்னன்
இடங்கொ ளெண்ணெழு தேசத் திறைவர்க்கு
முடங்கல் போக்கினன் கண்டு முடிமன்னர்
தடங்கொள் சேனைகள் சூழ்வரச் சார்ந்தனர்.

இ-ள்: மடங்கல்அன்ன-ஆண் சிங்கத்தைப் போன்ற, பலம் உள்ள-வலிமையுடைய, மா-சிறந்த, மன்னன்-அக்கருநாட தேசத்தரசன், (என் புத்திரனுடைய திருமணத்திற்கு நீங்கள் எல்லோரும் வரல்வேண்டும் என்று), இடம்கொள் - விசாலத்தைக்கொண்ட, எண்ணெழுதேசத்து-ஐம்பத்தாறு தேசத்தில் உள்ள, இறைவர்க்கு-அரசர்களுக்கு, முடங்கல்-திருமண வோலையை, போக்கினன்-அனுப்பினான், முடிமன்னர்-மகுடத்தை அணிந்த அவ்வரசர்கள்,

தடம்கொள் - பெருமையைக்கொண்ட, (அதாவது, அதிகரித்த) சேனைகள்-படைகள், சூழ்வர-சூழ்ந்துவர, சார்ந்தனர்-(மாபுரமென்னும் அப்பட்டணத்திற்குவந்து) சேர்ந்தார்கள்; எ-று.

"அக்கருநாட தேசத்தரசன், 'என் புத்திரனுடைய திருமணத்திற்கு நீங்கள் எல்லோரும் வரவேண்டும்'என்று ஐம்பத்தாறு தேசத்தரசர்களுக்கும் திருமணவோலை யனுப்பினன்; அதைக்கண்டு அம்மன்னர்கள் சேனைகள் சூழ அவ்வரசனது மாபுரமென்னும் பட்டணத்திற்கு வந்து சேர்ந்தார்கள்" என்பது இதன்கருத்து. தடம்-விசாலம்; இங்கே பெருமையை உணர்த்தி நின்றது. (15)

## நகரத்தை அலங்கரித்தல்.

16 வடிகொள்வெண் சுதையாற் பித்திகை தீற்றி
வானுற மணிக்கொடி நிரைத்துக்
கடிநறுஞ் சாந்தங் குங்குமந் தன்னாற்
கமழ்தர மறுகெலா மெழுகிப்
பொடிகொள்சிந் தூரத்தாற் கோலமே புனைந்து
பூமலர் பொரிநனி சிதறிக்
கொடிகொண்மூ தெயின்மேன் மாடமொண் சிகரி
கோதறப் புதுக்கியே குலவ.

இ-ள்: (அவ்வாறு பலதேசத் தரசர்களும் வந்து சேர்ந்தபோது) அந்த மாபுரமென்னும் நகரத்தில் வாழும் மனிதர்) வடிகொள் - வடித்தலைக்கொண்ட, (அதாவது வடிகட்டி யெடுத்துக்கொண்ட, வெண்சுதையால்-வெள்ளிய சுண்ணும்பினல், பித்திகை-(வீடுகளின்) சுவர்களை, தீற்றி-மெழுகி, (அவ்வீடுகளின்மேல்) வான்உற-ஆகாயத்தை அளாவும்படி, மணி-அழகிய, கொடி-(சித்திரப்பூம்பட்டுத் துகிற்) கொடிகளை, நிரைத்து-வரிசையாக நாட்டி, கடி-வாசனை பொருந்திய, நறும்-நல்ல, சாந்தம் தன்னால்-சந்தனத்தி

ஞாலும், குங்குமம் தன்னால்-குங்குமத்தினாலும், கமழ்தர-மணம் வீசும்படி, மறுகெல்லாம்-வீதிகளையெல்லாம், மெழுகி-மெழுக்கிட்டு, கொள்-(உயர்வாகக்) கொள்ளத்தக்க, சிந்தூரத்து-சிந்தூரத்தினது, பொடியால்-பொடியினாலே, கோலம்புனைந்து-கோலமிட்டு, பூமலர்-அழகிய மலர்களையும், பொரி - பொரிகளையும், நனி - மிகுதியாக, சிதறி-இறைத்து, கொடிகொள் - கொடிகளைக் கொண்ட, மூது-பழமையாகிய, எயில்-மதில்களையும், மேல்மாடம்-(வீடுகளின்) மேல் உப்பரிகைகளையும், ஒண் - பிரகாசம் பொருந்திய, சிகரி-கோபுரங்களையும், குலவ-நன்றாக விளங்கும்படி, கோதுஅற-குற்றம் நீங்க, புதுக்கி-புதுப்பித்து; எ-று.

"அவ்வாறு பல தேசத்தரசர்களும் வந்தபோது அந்த மாபுரமென்னும் நகரத்தில் வாழும் மனிதர் சுண்ணம்பினால் சுவர்களை மெழுகி, அவற்றின்மேல் சித்திரப் பூம்பட்டுத் துகிற்கொடிகளை வரிசையாக நாட்டி, சந்தனத்தாலும், குங்குமத்தாலும் வீதிகளையெல்லாம் மெழுகி, சிந்தூரப்பொடியினாலே கோலமிட்டு மலர்களையும் பொரிகளையும் இறைத்து, மதில்களையும் மேல் உப்பரிகைகளையும் கோபுரங்களையும் புதுப்பித்து" என்பது இதன்கருத்து. இச்செய்யுளின் ஈற்றிலுள்ள, 'புதுக்கி' என்னும் வினையெச்சம் அடுத்த செய்யுளைத் தொடர்ந்து முடியும்; இச்செய்யுளும் அடுத்த செய்யுளும் குளகம். 'தன்னால்' என்பது தீபகமாக இரண்டிடங்களினுங் கூட்டப்பட்டது. 'மனிதர்' என்னும் எழுவாய் வருவித்துரைக்கப் பட்டது. 'பொடிகொள் சிந்தூரத்தால்' என்பதை, 'கொள்சிந்தூரத்துப் பொடியால்' என மொழிமாற்றிப் பொருள் கொள்க. 'புதுக்கியே' என்பதில், ஏ-அசை. (16)

17 கதலியுங் கமுகு நட்டுக் காவண மலங்க ரித்துப்
புதியதோ ரணங்கள் கட்டிப் பொற்குடஞ் செறித்துத் தீபம்
இதமுற வெங்கும் வைத்தே யிந்திர நகரம் போல
மதுமலர்த் தாம நாற்றி மாபுரி யலங்க ரித்தார்.

இ-ள்: (தெருக்களின் இருமருங்குகளினும்)கதலியும்-வாழை மரங்களையும், கமுகும்-பாக்கு மரங்களையும், நட்டு-ஊன்றி நிறுத்தி, (இடைக்கிடையே)காவணம்-பந்தல்களை,(அமைத்து) அலங்கரித்து-அலங்காரம்செய்து, புதிய - புதியனவாகிய, தோரணங்கள்கட்டி-தோரணங்களைத் தொடுத்துக்கட்டி, பொன்குடம்-பொன்னாலாகிய பூரணகும்பங்களை, செறித்து-நெருக்கமாகவைத்து, தீபம்-விளக்குகளை, எங்கும்-எவ்விடத்திலும், இதம்உற-நன்மையாக, வைத்து-ஏற்றிவைத்து, மது - தேனையுடைய, மலர்த்தாமம் - மலர்களால் தொடுக்கப்பட்ட மாலைகளை, நாற்றி-தொங்கவிட்டு, மாபுரி-அந்த மாபுரியென்னும் நகரத்தை, இந்திர நகரம்போல - தேவேந்திரனுடைய நகரமாகிய அமராவதிப் பட்டணத்தைப்போல, அலங்கரித்தார்-அலங்காரப்படுத்தினார்கள்; எ-று.

"வீதிகளின் இரண்டு பக்கங்களிலும் வாழை மரங்களையும், பாக்கு மரங்களையும் நாட்டி, இடைக்கிடை பந்தல்களையமைத்து அலங்கரித்துத் தோரணங்களைக் கட்டிப் பொற்குடங்களை நெருக்கமாக வைத்து, எங்கும் விளக்குகளை ஏற்றிவைத்து, மாலைகளைத் தொங்கவிட்டு அந்த மாபுரியென்னும் நகரத்தை இந்திரனுடைய அமராவதிப் பட்டணம்போல அலங்கரித்தார்கள்" என்பது இதன் கருத்து.

'மாபுரி அலங்கரித்தார்' எனவே, 'கலியாணப் பந்தல் அமைத்தல் முதலிய சகல அலங்காரங்களையும் செய்து முடித்தார்கள் என்பது தானே அமையும். 'வைத்தே' என்பதில், ஏ-அசை. (17)

### பெண்ணின் சிறப்பும், திருமண முடித்தலும்.

18 வில்லி லங்குகை வேந்தர் மரபினில்
நல்ல சாமுத் திரிகநூ னன்கதாச்
சொல்லி லக்கணத் தோடு துரிசிலா
முல்லை மாலை முருகு விரியவே.

இ-ள்: (அவ்வாறு நகரத்தை அலங்கரித்த பின்பு) வில் இலங்கு-வில்லானது தங்கிப் பிரகாசிக்கின்ற, கை-கரத்தையுடைய, வேந்தர் மரபினில்-அரசர் குலத்திலே, நல்ல-நல்லதாகிய, சாமுத் திரிக நூல்-உடல் இலக்கணங் கூறும் சாமுத்திரிகா சாஸ்திரமென் னும் நூலானது, நன்கதா-நன்மையாக, சொல்-உரைக்கின்ற, இலக் கணத்தோடு-இலட்சணத்துடனே, துரிசுஇல்லா-குற்றம் இல்லாத, முல்லைமாலை-முல்லைமலர்மாலையின், முருகு-வாசனையானது,விரிய-பரவ; எ-று.

"அவ்வாறு நகரத்தை யலங்கரித்த பின்பு, அரசர் குலத்தில் சாமுத்திரிகா சாஸ்திரம் கூறும் நல்ல இலக்கணத்தோடு, முல்லை மலர்மாலையின் மணம்வீச" என்பது இதன்கருத்து. 'விரிய' என் பது அடுத்த செய்யுளோடு தொடர்ந்து முடியும். இதுவும், அடுத்த செய்யுளும் குளகம். எ-ஈற்றசை. (18)

19 மூவுல கதனி லுள்ள முகிழ்முலைக் கருங்கட் செவ்வாய்ப்
பாவையரெழிலிற்போதன் பகுத்தெடுத்துயிரோடேய
ஓவியந் தீட்டி னானென் றுலகினி லுரைக்கச் செய்ய
பூவுறை திருவி ரும்பும் பொற்புட னவதரித்தே.

இ-ள்: போதன்-பிரமன், மூவுலகதனில்-(சுவர்க்கம்,மத்தியம், பாதாளம் என்னும்) மூன்று உலகங்களிலும், உள்ள-இருக்கின்ற, முகிழ்-தாமரையரும்பை நிகர்த்த, முலை-தனங்களையும், கரும்கண்-கரிய கண்களையும், செவ்வாய்-சிவந்த வாயையும், (உடைய) பாவை யர்-பெண்களின், எழிலில்-அழகில், (வேண்டியவற்றை) பகுத்து-பாகஞ்செய்து, எடுத்து-எடுத்துக்கொண்டு, உயிரோடு-உயிருடனே, ஏய - பொருந்தும்படி, (அவற்றால்) ஓவியம் - சித்திர உருவத்தை, தீட்டினான் என்று - எழுதினான் என்று, உரைக்க - (பார்த்தவர்) சொல்ல, செய்ய-சிவந்த, பூஉறை-தாமரை மலரிலே வீற்றிருக்

கின்ற, திரு-இலக்குமியும், விரும்பும்-ஆசைகொள்ளத்தக்க, பொற்புடன்-அழகுடனே, அவதரித்து-தோன்றி; எ-று.

"பிரமதேவன் மூன்றுலகங்களிலும் உள்ள அழகி லுயர்ந்த பெண்களின் அழகில் வேண்டியவற்றை பகுந்தெடுத்து உயிருடனே பொருந்தும்படி அவற்றால் ஒரு சித்திர வடிவத்தை எழுதினனென்று, கண்டோர் அதிசயித்துரைக்கும்படி, இலக்குமியும் விரும்பத்தக்க அழகுடனே பிறந்து" என்பது இதன்கருத்து.

இச்செய்யு ளீற்றிலுள்ள எச்சம் அடுத்த செய்யுளோடு தொடர்ந்து முடியும். இதுவும் அடுத்த செய்யுளும் குளகம். போது-மலர்; இஃதிங்குத் தாமரை மலரை உணர்த்தி நின்றது; பிரமன் அத்தாமரை மலரில் உதித்தவ னாதலின், 'போதன்' எனப்பட்டான்; ஏ-ஈற்றசை. (19)

20 இலங்கிய வாலொண் டளிர்குழைத் தினிய
விருதனக் கோங்கிணை யரும்பி
நலங்கிள ராம்பல் குமிழிரு குவளை
நண்ணுசெஞ் சரோருகம் பூத்துத்
துலங்கிய புயலைச் சுமந்திரு தாளாற்
றேமிலா மின்னென நடங்கிப்
பலந்தரப் படருங் கொடியினை வேதப்
பண்பினின் மன்றல்செய் வித்தே.

இ-ள்: இலங்கிய-விளங்கிய, ஒண்-பிரகாசத்தையுடைய, ஆல்-ஆலின், தளிர்-தளிரானது, குழைத்து-(தன்னிடத்தே) தளிர்க்க, (அதாவது ஆலின் தளிர்போன்ற வயிரானது தோன்ற) இனிய-இனிமையாகிய, இருதனம்-இரண்டு தனங்களாகிய, கோங்குஇணை-இரட்டைக்கோங்கரும்புகள், அரும்பி-தோன்ற, நலம்கிளர்-அழகு விளங்காநின்ற, ஆம்பல்-செவ்வல்லி மலரும், (அதாவது, செவ்வல்லி

மலர்போன்ற இதழும்) குமிழ்-குமிழ மலரும், (அதாவது, குமிழ மலர்போன்ற நாசியும்) இருகுவளை - இரண்டு கருங்குவளை மலர் களும், (அதாவது, கருங்குவளை மலர்போன்ற இரண்டு கண்களும்) நண்ணு-பொருந்திய, செம்-சிவந்த, சரோருகம்-தாமரை மலரும், (அதாவது,தாமரை மலர்போன்றமுகமும்) பூத்து-மலர்ந்துதோன்ற, துலங்கிய-விளங்கிய, புயலை-மேகத்தை, (அதாவது, மேகம்போன்ற கூந்தலை) சுமந்து-தாங்கி, இருதாளால்-இரண்டு பாதங்களினாலே, தோம்இல்லா - குற்றமற்ற, மின்என-மின்னலைப்போல, நுடங்கி- அசைந்து, பலம்தா-பயன்உண்டாக, படரும்-படருகின்ற, (அதா வது, நடக்கின்ற) கொடியினை-ஓர் பூங்கொடியை, (அதாவது, ஓர் பூங்கொடி போன்ற பெண்ணை) வேதப் பண்பினின் - வேத்விதி யொழுங்கின்படி, (புத்திரனாகிய மகாராஜனுக்கு) மன்றல் செய் வித்து-மணம்புரிவித்து; எ-று.

"ஆலிலை போன்ற வயிற்றையும், கோங்கரும்புகள் போன்ற இரண்டு தனங்களையும், செவ்வல்லி மலர்போன்ற இதழையும்,குமிழ மலர்போன்ற நாசியையும், கருங்குவளை மலர்போன்ற கண்களையும், தாமரை மலர்போன்ற முகத்தையும், மேகத்தைப்போன்ற கூந்தலை யும் கொண்டு மின்னலைப்போல அசைந்து இரண்டு பாதங்களால் நடக்கின்ற பூங்கொடி போன்ற ஒரு மாதை, புத்திரனாகிய மகா ராஜனுக்கு வேதவிதிப்படி மணஞ்செய்வித்து" என்பது இதன் கருத்து.

இச்செய்யுளின் ஈற்றிலுள்ள எச்சம் அடுத்த செய்யுளோடு சேர்ந்து முடியும். இதுவும் அடுத்த செய்யுளும் குளகம். ஆலின் தளிர் உவமையாகு பெயராய் வயிற்றை உணர்த்தி நின்றது. தனங் கள் கோங்கரும்புகளாக உருவகம் செய்யப்பட்டன. ஆம்பல், குமிழ், குவளை, தாமரை, புயல் ஆகியவை உவமையாகு பெயர்க ளாய் முறையே இதழ், நாசி, கண்கள், முகம், கூந்தல் ஆகிய வற்றை யுணர்த்தின. கொடியும் உவமையாகுபெயராய்ப் பெண்ணை

யுணர்த்திற்று. 'படரும்' என்பது செம்மொழிச் சிலேடையாய்ப் படர்தலையும், நடத்தலையும் விளக்கி நின்றது. குழைத்து, அரும்பி, பூத்து என்பன செயவெனெச்சத் திரிபுகள். ஏ-ஈற்றசை. (20)

## மகாராஜனுக்கு மகுடஞ் சூட்டுதல்.

21 அருந்ததி கணவன் முதன்முனி வரர்க
ளருமறைக் கிழவர்க டம்மால்
பொருந்திய கங்கைப் பூம்புன லாட்டிப்
பொன்னவ மணிகளாற் குயின்ற
விரிந்திடு மடங்கன் மென்றவி சேற்றி
மிளிர்நவ மணிமுடி கவித்துப்
பருந்தடர் வேலான் பௌவமார் புவியைப்
பரியெனத் தோன்றல்பா லளித்தான்.

இ-ள்: பருந்து-பருந்துகள், அடர்-(மேலே) நெருங்கிச்சூழ்கின்ற, வேலான்-வேலாயுதத்தைத் தாங்கிய கருநாடதேசத்தரசன், (பின்னர்) அருந்ததி-வடமீனாகிய அருந்ததியினுடைய, கணவன் முதல்-நாயகனாகிய வசிஷ்டன் முதலாக, முனிவர்கள் தம்மால்-இருடியர்களாலும், அருமறைக் கிழவர்கள் தம்மால்-அரிய வேதங்களுக்குரியவர்களாகிய அந்தணர்களாலும், (அவனை) பொருந்திய-பொருத்தமாகிய, கங்கை - கங்காநதியினது, பூம்-அழகிய, புனல் ஆட்டி-நீரில் மூழ்குவித்து, பொன்-பொன்னாலும், நவமணிகளால்-ஒன்பதுவகை இரத்தினங்களாலும், குயின்ற-செய்யப்பட்ட, விரிந்திடு-விசாலமான, மெல்-மெல்லிய, மடங்கல்தவிசு ஏற்றி-சிங்காதனத்தில் ஏற்றுவித்து, மிளிர் - பிரகாசிக்கின்ற, நவமணி-ஒன்பது வகை இரத்தினங்களாற் செய்யப்பட்ட, முடி-கிரீடத்தை, கவித்து-(அவன் சிரசில்) சூட்டி, பௌவம்ஆர்-சமுத்திரம் சூழ்ந்த, புவியை-இப்பூமியை, பரிஎன-(நீ) தாங்குவாயாக என்று, தோன்றல்பால்-

பெருமையிற் சிறந்தவனாகிய அம்மகாராஜனிடத்தில், அளித்தான்-(ஆளும்படி) கொடுத்தான்; எ-று.

"அந்தக் கருநாட தேசத்தரசன், வசிஷ்டர் முதலிய முனிவர்களாலும், வேதியர்களாலும் அந்த மகாராஜனைக் கங்காஜலத்தில் மூழ்குவித்து, சிங்காதனத்தில் ஏற்றுவித்து, அவன் சிரசில் கிரீடத்தைச்சூட்டி இப்பூமியை நீ தாங்குவாயாக என்று பெருமையிற் சிறந்த அவனிடத்தே கொடுத்தான்" என்பது இதன்கருத்து. வேலாயுதத்தால் பகைவர் உடல் அறுபட்டுவிழு மாதலின் அதனைத் தின்னும் விருப்பத்தால் பருந்துகள் அந்த வேலாயுதத்தைச் சூழ்ந்து கொண்டிருக்கும். பருந்து சூழுதல் வேலுக்குக் கூறும் சிறப்புக்களுள் ஒன்று. 'தம்மால்' என்பது இரண்டிடங்களினுங் கூட்டப்பட்டது. 'பருந்தடர் வேலான்' என்னும் எழுவாயை முந்தின செய்யுட்களிலுள்ள வினையெச்சங்களோடும் கூட்டி முடிக்க. (21)

## மகாராஜன் உலகாளுதலும், நைமிசாரணிய வாசிகளாகிய முனிவர்களின் வினவும், சூதபுராணிகர் விடையும்.

22 சோகமே யின்றி யிருந்தனன் வேந்தன்
தோன்றலும் பார்பொது நீக்கி
ஏகமாச் செங்கோ லெங்கணுஞ் செல்ல
வெண்டிசை விசயமுஞ் செய்தே
மாகநா டென்னப் போகமே துய்த்து
மடந்தையோ டிருந்தன னென்றான்
வாகைவே லவன்பி னென்செய்தா னென்ன
மறையவர்க் குயர்முனி வகுக்கும்.

இ-ள்: வேந்தன்-கருநாடதேசத் தரசன், (அவ்வாறு தன் அரசாட்சியைப் புத்திரனிடத்தில் ஒப்புவித்தபிறகு) சோகம்இன்றி இருந்தனன்-வருத்தமில்லாமல் இருந்தான், தோன்றலும்-பெருமை

யிற் சிறந்தவனாகிய அவன்புத்திரன் மகாராஜனும், பார்-இப்பூமியை, பொதுநீக்கி-(தனக்கும் பிறர்க்கும்) பொதுஎன்று சொல்லும்படியான தன்மையை நீக்கி, (அதாவது பிறர்க்குச் சொந்தமில்லாமல் தனக்கு மாத்திரம் சொந்தமாகும்படிசெய்து) ஏகமா-(தான்) தனியாக, செங்கோல்-தன்னுடைய செங்கோலானது, (ஆட்சியானது) எங்கணும் செல்ல-எவ்விடத்திலும் நடக்க, எண்டிசை-எட்டுத்திக்குகளிலும், விசயமும் செய்து-வெற்றியைச் செய்து, (அதாவது, ஜெயமடைந்து) மாகநாடு என்ன-(தானிருக்கும் நாடு) விண்ணாடு என்று சொல்லும்படி, (தன் நாட்டை மிக்க வளமுடையதாகச் செய்து, அதன்மூலம்) போகம்துய்த்து-இன்பானுபவங்களை அனுபவித்து, மடந்தையோடு-(தான் கலியாணம் செய்துகொண்ட)பெண்ணோடு, இருந்தனன்-சுகமாக வாழ்ந்துகொண்டிருந்தான், என்றான்-என்று சூதமுனிவன் கூறினான், (இதைக்கேட்டு நைமிசாரணிய வாசிகளாகிய முனிவர்கள்) வாகை-வெற்றி பொருந்திய, வேலவன்-வேலாயுதத்தைத் தாங்கிய அந்த மகாராஜன், பின்-பின்னே, என் செய்தான் என்ன-என்ன செய்தான் என்று வினவ, உயர்முனி-தவத்தால் உயர்ந்த இருடியாகிய அந்தச் சூதபுராணிகன், மறையவர்க்கு-வேதங்களை ஓதியுணர்ந்தவர்களாகிய அவ்வந்தணர்களுக்கு, வகுக்கும்-(மேல்நடந்தவற்றை) வகைப்படுத்திக் கீழ்வருமாறு கூறுவானாயினான்; எ-று.

"கருநாட தேசத் தரசன், தன் புத்திரனிடத்தில் ஒப்புவித்த பிறகு வருத்தமின்றி யிருந்தான்; அவன் புத்திரனாகிய மகாராஜன், தன்னுடைய செங்கோல் எங்கும் செல்லத் திக்குவிஜயம்செய்து இப்பூமியைப் பொதுநீக்கித் தனக்கே சொந்தமாக்கி ஆண்டு, தன் நாடு விண்ணாடுபோல விளங்க அதை வளப்படுத்தித் தன் மனைவியோடு இன்ப மனுபவித்துச் சௌக்கியத்தோடு வாழ்ந்துகொண்டிருந்தான் என்று சூதபுராணிகன் சொன்னான்; இதைக் கேட்ட நைமிசாரணிய வாசிகள் அந்த மகாராஜன் பின்னர் என்ன செய்

தான்? என்று கேட்கச் சூதமுனிவன் அவர்களுக்கு மேல்நடந்த வற்றை வகுத்துரைப்பானாயினன்" என்பது இதன்கருத்து.

பதவுரையில், சிலசொற்கள் இசையெச்சமாக வருவித்துரைக் கப்பட்டன. 'சோகமே' 'செய்தே' 'போகமே' என்பவற்றிலுள்ள ஏகாரங்கள்-அசைகள். வகுத்தல் - வகைப்படுத்துதல்; இஃதிங்கு வகைப்படுத்திக் கூறுதலை விளக்கி நின்றது. (22)

## மகாராஜனும், அவன் மனைவியும் தத்துவ ஞானவிசாரணை செய்ய முயலுதல்.

23 மனைவியுந் தானு மோர்நினை வாகி
மாறுபா டின்றியோர் காலும்
தனையுணர் யோகி தந்தைதாய் கடவுள்
தங்களை யனுதின மிறைஞ்சி
அனையவ ருரைத்த நெறிதனில் நடந்தும்
அருத்தங்கள் மனத்தினிற் றரித்தும்
வினையம துடனே நூன்முறை யவரை
வினவியுஞ் சிலபகல் போக்கி.

இ-ள்: (அப்படிச் சௌக்கியமாக வாழ்ந்துவருங் காலத்தில்) தானும்-அந்த மகாராஜனும், மனைவியும்-அவனுடைய மனையாளும், ஓர்காலும்-ஒரு சமயத்திலும், மாறுபாடுஇன்றி-விகற்பமில்லாமல், ஓர்நினைவுஆகி-(தங்கள் மனத்தில்) ஒரே சிந்தனையுண்டாக, தன்னை உணர்-தன்னை அறிந்த, (அதாவது, ஆத்ம தரிசனம்செய்த) யோகி தந்தைதாய் கடவுள் தங்களை-யோகியர் தந்தை தாய் கடவுள் ஆகிய வர்களை, அனுதினம்-தினந்தோறும், இறைஞ்சி-வணங்கி, அனையவர்-அப்பேர்ப்பட்டவர்கள், உரைத்த-கூறிய, நெறிதனில்-நன்மார்க் கத்தில், நடந்தும்-ஒழுகியும், அருத்தங்கள்-உறுதிப்பொருள்களை, மனத்தினில்-உள்ளத்தில், தரித்தும்-சிந்தித்துப் பதியவைத்தும்,

வினயமுடனே-மரியாதையுடனே, நூல்முறை-ஞான சாஸ்திரங்களை ஆராயும் கிரமங்களை, அவரை-அந்த யோகியரிடத்தில், வினவியும்-கேட்டும், (இந்த விசாரணையில்) சிலபகல் - சில தினங்களை, போக்கி-கழித்து; எ-று.

"அப்படிச் சுகமாக வாழ்ந்துவருங் காலத்தில் அந்த மகாராஜனும், அவர் மனைவியும், மாறுபாடில்லாமல் ஒரே நினைவுடையவராகி, ஆத்ம தரிசனம்செய்த யோகியர்களையும், தாய் தந்தையரையும், கடவுளையும் வணங்கி அவர்கள் உரைத்த ஞான மார்க்கத்தில் நடந்தும், உண்மைப்பொருளை மனத்தில் சிந்தித்துப் பதியவைத்தும், மரியாதையுடன் அந்த யோகிகளிடத்தில் ஞான சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்யும் கிரமங்களைக் கேட்டுணர்ந்தும், இந்த விசாரணைகளில் சில தினங்களைப் போக்கி" என்பது இதன்கருத்து. 'போக்கி' என்னும் வினையெச்சம் அடுத்தசெய்யுளோடு தொடர்ந்து முடியும். இதுவும் அடுத்த செய்யுளும் குளகம். 'தான்' என்பது ஆத்மாவையுணர்த்து மாதலின், 'தனையுணர் யோகி' என்பதற்கு, 'ஆத்ம தரிசனம்செய்த யோகி' என்று பொருள் கூறப்பட்டது.(23)

24 தனியிட மதனி லிருந்திரு வர்களுந்
தங்களிற் றமுணர்ந் துசாவித்
துனிசெய்மா மாயைப் பிறப்பது நீங்கிச்
சுகமதை யடைந்தனு தினமும்
இனிமைய தாக விருக்கவோ ஞானத்
தென்றெணி ஞானிகட் சார்ந்து
நனியவர் பாத பூசனை புரிந்து
நாடொறும் வினவினர் நன்றாய்.

இ-ள்: (பின்னர் ஒருநாள்) இருவர்களும் - அவ்விருவரும், தனியிடம் அதனில் இருந்து-ஏகாந்தமான விடத்திலிருந்து, தங்

களில் தாம்-தங்களில் தாங்களே, (ஞான தத்துவ சாஸ்திரங்களை ஆராய்ந்து), உணர்ந்து-அறிந்து, உசாவி-(ஒருவரை யொருவர்) கேட்டு, ஞானத்து-(கடவுளையறியும்) தத்துவ ஞானத்தினாலே, துனிசெய்-துன்பத்தைச் செய்கின்ற, மா-பெரிய, மாயை-மாயையி னாலே, பிறப்பது-பிறக்கின்ற தன்மை, நீங்கி-நீங்கப்பெற்று, சுகம் அதை அடைந்து-சௌக்கியத்தை எய்தி, அனுதினமும்-தினந் தோறும், இனிமையதுஆக-இன்பமாக, இருக்கலாம்என்று எண்ணி-இருக்கலாமென்று நினைத்து, ஞானிகள் சார்ந்து-ஞானிகளை யடைந்து, நனி-மிகுதியாக, அவர் பாதபூசனை-அவருடைய பாத பூசையை, புரிந்து-செய்து, நாள்தொறும்-தினந்தோறும், நன்றாய்-நன்றாக, (அவர்களிடத்தே, 'தத்துவஞானம் எப்படியுண்டாகும்?' என்று) வினவினர்-கேட்டுவந்தார்கள்; எ-று.

"பின்னர் அவ்விருவரும் தனியிடத்திலிருந்து, தங்களில் தாங் களே தத்துவஞான சாஸ்திரங்களை ஆராய்ந்து, ஒருவரையொருவர் கேட்டுணர்ந்து, 'தத்துவ ஞானத்தினாலே, மாயா சம்பந்தமாகப் பிறக்கும் தன்மைநீங்கிச் சுகமடைந்து தினந்தோறும் இன்பமா யிருக்கலா'மென்று நினைத்து, ஞானிகளை அடைந்து, அவருக்குப் பாதபூசை பண்ணி நாடோறும் அவர்களிடத்தே, 'தத்துவ ஞானம் எவ்வாறுண்டாகும்?' என்று செவ்வையாகக் கேட்டு வந்தார்கள்" என்பது இதன்கருத்து. (24)

## மகாராஜன், சற்குருவின் கிருபையின்றித் தத்துவ ஞான முண்டாகாதென்று துணிதல்.

25 இருவரி லரசன் றனக்கறி வோங்க
விருவகைச் சார்வையு மகற்றிக்
கருவுடற் காவல் தனையுங்கை விடுத்துக்
கருத்தசை யாதுமெய் யுணர்வை

மருவிடி லகப்பற் றற்றுமேல் வீடு
வாய்த்திடு மதற்குமெய்ஞ் ஞானம்
குருவரு ளின்றி விளங்கிடா தெனவே
கொண்டனன் மனத்தினிற் றுணிவே.

இ-ள்: (பின்னர்) இருவரில்-(அரசன், அரசியென்னும்) அவ்விருவருள்ளும், அரசன்-மகாராஜனானவன், தனக்கு - தன்னிடத்திலே, அறிவு ஓங்க-(நித்தியா நித்திய வஸ்துக்களின்-நிலையுள்ளதும் நிலையில்லாததுமாகிய பொருள்களின்) விவேகம். அதிகரிக்க, (அதாவது, நிலைத்தபொருள் இன்னது, நிலையில்லாத பொருள் இன்னது என்னும் அறிவு மிகுதியாக ஏற்பட) இருவகைச் சார்வையும்-(புவனத்தையும், அதிலுண்டாகும் போகங்களையும் என்னுடையனவென்று அபிமானித்தலாகிய) இரண்டுவகைப் புறப்பற்றுக்களையும்; அகற்றி-நீக்கி, கரு-கருவிலே உற்பத்தியாகும், உடல்காவல்தனை-உடம்பைக் காப்பதை, (அதாவது, உடம்பை உண்டி, உடை, மருந்து முதலியவற்றால் பாதுகாப்பதை) கைவிடுத்து-கைவிட்டு, கருத்து அசையாது - சித்தங்கலங்காமல், மெய்உணர்வை-தத்துவ ஞானத்தை, மருவிடில் - அடைந்தால், அகப்பற்று - (உடம்பையும் பொறி, புலன் அந்தக்கரண முதலாகிய கரணங்களையும் யானென்று அபிமானித்தலாகிய)உள்பற்றானது, அற்று-நீங்க, மேல்வீடு-உயர்ந்த மோட்சம், வாய்த்திடும்-கிடைக்கும், அதற்கு-அந்த மோக்ஷத்திற்கு, (காரணமாகிய) மெய்ஞானம்-தத்துவ ஞானமானது, குரு-ஞான சற்குருவின், அருள்இன்றி, அனுக்கிரகமில்லாமல், விளங்கிடாது-விளங்கமாட்டாது, என-என்று, மனத்தினில்-உள்ளத்தில், துணிவு கொண்டனன்-உறுதிகொண்டான்; எ-று.

"பின்னர், அரசன், அரசியென்னும் அவ்விருவரில், மகாராஜனானவன், தன்னிடத்தில், நிலையுள்ளதும், நிலையில்லாததுமாகிய பொருள்களை அறியும் விவேகம் அதிகரிக்க, உலகவாழ்க்கையையும்,

அதிலுண்டாகும் போகங்களையும் என்னுடையனவென்று அபிமானிக்கும் இரண்டுவகைப் புறப்பற்றுக்களையும் நீக்கி, உண்டி, உடை, மருந்து முதலியவற்றால் உடம்பைப் பாதுகாப்பதை யொழித்துச் சித்தங்கலங்காமல் உண்மைப் பொருள் இன்னதென்றுணரும் தத்துவ ஞானத்தை அடைந்தால், உடம்பையும், காணங்களையும் யான் என்றபிமானித்தலாகிய அகப்பற்று நீங்க நிரதிசயானந்த வடிவமாகிய மோட்சம் கிடைக்கும்; அந்த மோட்சத்திற்குக் காரணமாகிய தத்துவ ஞானமானது ஞானசற்குருவின் அனுக்கிரகமில்லாமல் விளங்கமாட்டாது என்று மனத்தில் நிச்சயித்தான்'' என்பது இதன்கருத்து.

இருவகைச்சார்வு - இரண்டுவகைப் புறப்பற்றுக்கள்; அவை, புவனபோகங்களை என்னுடையனவென்றபிமானித்தல். அகப்பற்று - உட்பற்று; அது, தனுகாணங்களை யானென்றபிமானித்தல்; தனு- உடம்பு; காணங்கள்-பொறி புலன்களும், அந்தக் கரணங்களுமாம். தனக்கு-ஏழாம் வேற்றுமை நான்காம் வேற்றுமையாக மாறிவந்த உருபு மயக்கம். அற்று-செயவெனெச்சத் திரிபு. (25)

26 மனைதனி லாசை பொருந்தியே நின்று
மகிதனின் ஞானியா மெனவே
தனைமிக மதிப்போன் றன்னைவந் தொருவன்
தந்திடு ஞானமென் றிரந்து
வினவன்மட் டையினைப் பருகுவோன் றன்னை
வேண்டித்தென் னம்பழந் தனையே
இனம்பணித் திரிவோன் புத்திபோன் மெனவே
யியம்புவர் முற்றுணர் பெரியோர்.

இ-ள்: (அவ்வாறு நிச்சயித்தவன்) மனைதனில்-இல்வாழ்க்கையில், ஆசை பொருந்திநின்று-விருப்பமுற்று அதன்வழியிலேநின்று,

மகிதனின்-உலகத்தில், ஞானியாம்என-(நான்)ஞானியாவன்என்று, தன்னைமிக மதிப்போன்தன்னை-தன்னை மிகவும் மதித்துக்கொள்பவனிடத்து, ஒருவன் வந்து-ஞான விருப்புடைய ஒருவன்வந்தடைந்து, (அவன்) ஞானம் தந்திடும் என்று-(தனக்கு) ஞானத்தைக் கொடுப்பான்(உபதேசித்தருளுவான்) என்றெண்ணி, இரந்து-(அந்த ஞானத்தை) யாசித்து, வினவல்-கேட்பது, மட்டையினை-தென்னமட்டையின் சாற்றை, பருகுவோன் தன்னை-குடிப்பவனிடத்து, தென்னம்பழந்தனை-தென்னம்பழத்தை (தேங்காயை அல்லது இளநீரை) வேண்டி-(பெற) விரும்பி; இனம்பண்ணி-சிநேகம்செய்து, திரிவோன்-(பலகால்) திரிந்தலைபவன், புத்திபோலும் என-புத்தியை நிகர்க்குமென்று, முற்றுணர் பெரியோர்-(உலகியல்) முழுவதையுமுணர்ந்த பெரியோர், இயம்புவர்-சொல்லுவார்கள்; எ-று.

"அவ்வாறு நிச்சயித்த அரசன், இல்வாழ்க்கையில் ஆசை கொண்டு நின்று தன்னை ஞானியென்று மதித்துக் கொள்பவனிடத்து, ஞானம்பெற விரும்பிய ஒருவன்வந்து, அவன் தனக்கு ஞானத்தை உபதேசித்தருள்வானென்று நினைத்து, அதனை இரந்து கேட்பது, தென்னமட்டையின் சாற்றைக் குடிப்பவனிடத்தில், தேங்காய் அல்லது இளநீரைப் பெறவிரும்பிச் சிநேகம்பண்ணிப் பலகால் திரிந்தலைபவன் புத்தியைப்போலும் என்று உலகியல் முழுதுமுணர்ந்த பெரியோர் கூறுவர்" என்பது இதன்கருத்து.

இது, அடுத்த செய்யுளோடு தொடர்ந்து முடியும். மதிப்போன்றன்னை, பருகுவோன்றன்னை-உருபுமயக்கம். ஏகாரங்கள்-அசை. இனம்-கூட்டம். 'போலும்' என்னு உவமவுருபு, 'போன்ம்' எனத் திரிந்து நின்றது. (26)

27 வேதவா கமசாத் திரபுரா ணங்கள்
விளங்கவே கற்றுணர்ந் தவற்றைத்
தீதற வெவர்க்குந் தெளிவுற வோதிச்
செப்பிய வந்நெறி யதனிற்
சாதக மிலாத குருவினை யொருவன்
றானடைந் தானந்தம் வினவல்
ஏதமாங் கழுதை தன்னைக்குங் குமத்தி
னியல்புகேட் டிடுதல்போ லென்றே.

இ-ள்: வேதம்-நான்கு வேதங்களையும், ஆகமம்-(சிவாகமம் இருபத்தெட்டு, வைஷ்ணவாகமம் இரண்டு ஆகிய) முப்பது ஆகமங்களையும், சாஸ்திரம்-ஆறுசாஸ்திரங்களையும், புராணங்கள்-பதினெட்டுப் புராணங்களையும், விளங்க-விளக்கமாக, கற்றுஉணர்ந்து-படித்துத் தெரிந்து, அவற்றை - அவைகளை, தீதுஅற-குற்றமில்லாமல், எவர்க்கும் - எவருக்கும், தெளிவு உற-தெளிவு பொருந்த, ஓதி-சொல்லி, செப்பிய-அவ்வாறு சொல்லிய, அந்நெறி அதனில்-அந்த மார்க்கத்தில், சாதகம் இல்லாத-(நடக்கும்) பழக்கமில்லாத, குருவினை - குருவை, ஒருவன் அடைந்து - அதிகாரி யொருவன் சேர்ந்து, ஆனந்தம்-நிரதிசயானந்தத்தை (பேதமற்ற இன்பத்தை) வினவல்-கேட்பது, ஏதம்ஆம்-குற்றம் பொருந்திய, கழுதைதன்னை-(குங்குமப் பொதிசுமந்த) கழுதையை, குங்குமத்தின் இயல்பு-குங்குமத்தின் தன்மையை, கேட்டிடுதல்போலும் என்று-கேட்டல்போலாகும் என்று நினைத்து; எ-று.

"வேதாகம சாஸ்திரபுராணங்களை விளக்கமாகக் கற்றுணர்ந்து அவைகளைக் குற்றமற யாவர்க்கும் தெளிவுறக்கூறி, அவ்வாறு கூறிய நெறியில் ஒழுகப்பழகாத குருவினிடத்தில், ஞானநூல் கேட்டற்குரிய அதிகாரி யொருவன், சேர்ந்து பேதமற்ற முத்தியின்பமாகிய நிரதிசயானந்தத்தைக் கேட்பது, அறியாமையாகிய குற்றம் பொருந்திக் குங்குமத்தைச் சுமந்த கழுதையினிடத்தில், 'குங்குமத்

தின் தன்மை எப்படியிருக்கும்?' என்று கேட்பதை நிகர்க்கும் என்று கருதி'' என்பது இதன்கருத்து. இச்செய்யுள் அடுத்த செய்யுளைத் தொடர்ந்து முடியும்.

கழுதை அறிவில்லாத தாதலின், குங்குமத்தைச் சுமந்தாலும் அதன் இயற்கையை யுணரமாட்டாது; அதைப்போல சுயஅறிவில்லாதவன் சாஸ்திரங்களைப் படித்துப் பிறர்க்குரைத்தாலும் அந்தச் சாஸ்திரக் கருத்தாகிய ஞானத்தை உணரமாட்டான். அப்பேர்ப்பட்ட குருவினிடத்தில் தத்துவஞான விசாரணை செய்வதால் பயனில்லை. தீது-காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்களுமாம். தான்-அசை. ஏ-அசை. 'போலும்' என்பதில், உகரங் கெட்டு லகரமெய் னகரமெய்யாகத் திரிந்தது; ஈற்றுமகரமெய் மாத்திரையிற் குறுகிற்று. இது; மகரக்குறுக்கமென்று சொல்லப்படும். (27)

மகரராஜன் சற்குருவை யடைந்து ஞானோபதேசஞ் செய்யுமாறு வேண்டல்.

28 சீவர்க ளிடத்தி லருள்சிவ பத்தி
திருந்திய துறவுமெய்ஞ் ஞானம்
ஆவதோர் வடிவாம் வேதமா முனியை
யமலவா ரணியத்தி லடைந்தே
தேவர்க டேவே துன்பமோர் காலுஞ்
சென்றிடா முத்திதா னெய்திச்
சாவதும் பிறப்பு நீங்குமோர் நெறியைச்
சாற்றெனத் தாழ்ந்திட முனிவன்.

இ-ள்: (பற்பல விடங்களிலும் சென்று ஞானசற்குருவைத் தேடி முடிவில்) சீவர்களிடத்தில்-பிராணிகளிடத்திலே, அருள்-கிருபை, (அதாவது ஜீவகாருண்யம்) சிவபத்தி-ஈசுரபத்தி, திருந்திய-(உலகமாயையைவிட்டு நீங்கி நல்லொழுக்கத்தில்) திருத்தமாகிய, துறவு-பற்றற்றதன்மை, மெய்ஞ்ஞானம்-பிர்மஞானம், (ஆகிய நான்

கும்) ஆவது - ஒன்று கூட்டுவதாகிய, ஓர்வடிவுஆம் - ஓர்உருவமான, வேதமாமுனியை-வேதத்தை ஓதியுணர்ந்த முனிவரை, அமலஆரணி யத்தில்-பரிசுத்தமாகிய ஒரு காட்டில், அடைந்து-சேர்ந்து, தேவர்கள் தேவே-தேவர்களுக்குத் தேவனே!, ஓர்காலும் - ஒருகாலத்திலும், துன்பம் சென்றிடா-துன்பமானது வந்து சேர்தலில்லாத, முத்தி-மோக்ஷவீட்டை, எய்தி-அடைந்து, சாவதும் பிறப்பும்-இறப்பும் பிறப்பும், நீங்கும்-அகலுவதாகிய, ஓர்நெறியை-ஒருமார்க்கத்தை, சாற்றுஎன-(அடியேனுக்கு) உபதேசித்தருளுக என்று, தாழ்ந்திட-வணங்க, முனிவன்-அந்த இருடி; எ-று.

"பற்பல விடங்களிலும் சென்று ஞானசற்குருவைத் தேடி முடிவில், ஜீவகாருண்யம், ஈசுரபத்தி, பாசவைராக்கியம் (துறவு), பிர்மஞானம் என்னும் நான்கும் ஓர்வடிவாகி வந்த வைதீக முனிவர் ஒருவரைப் பரிசுத்தமான ஒருவனத்தில் அடைந்து,'தேவதேவனே! ஒரு காலத்திலும் துன்பஞ்சேராத முத்தியை அடைந்து இறப்பும், பிறப்பும் நீங்கும் ஒருமார்க்கத்தை எனக்குரைத்தருளுக' என்று வணங்க, இதைக்கேட்ட அம்முனிவன்" என்பது இதன்கருத்து. 'முனிவன்' என்னும் பெயர் அடுத்த செய்யுளோடு சேர்ந்துமுடியும். 'செல்லுதல்' என்பது, 'வருதல்' என்னும் பொருள்தந்து நின்றது. தான்-அசை. (28)

சற்குரு மகாராஜனுக்கு ஞானோபதேசம் செய்தல்.

29 இருவகைச் சார்வாம் புறப்பற்றை நீக்கி
யிச்சையின் மீட்டதி னினைவும்
ஒருவியே யுடற்கா வலையுங்கை விடுத்தே
யுட்கரணங்கள்வா தனையும்
குருவரு ணெறியே யொடுக்கிடில் வீடுங்
கூடுந்தா னுகவே பவத்தின்
கருவழிந் திடுமிந் நெறியைநீ விரைவிற்
கைக்கொண்டு செல்லென வுரைத்தான்.

இ-ள்: (மகாராஜனின் குணம், குறி, செயல்களைக்கொண்டு, 'இவன் நம் உபதேசத்தைப் பெறுதற்குரியவன்' என்று நிச்சயித்து, அவனை நோக்கி, "அரசனே!) இருவகைச் சார்வாம்-(புவனம், போகம் ஆகிய இரண்டையும் என்னுடையனவென் றபிமானித்தலாகிய) இரண்டுவிதப் பற்றுக்களென்னும், புறப்பற்றை நீக்கி-வெளிப்பற்றை அகற்றி, (அவற்றின் பழக்கத்தாலுண்டாகும்) இச்சையின்-ஆசையினின்றும், மீட்டு-(மனத்தைத்) திருப்பி, அதின் நினைவும் ஒருவி-அதன் ஞாபகமும் இல்லாமல் நீங்கி, உடல்காவலையும்-உடம்பைப் பாதுகாத்தலையும், கைவிடுத்து-கைவிட்டு, உள்காரணங்கள்-(மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும்) அந்தக் காரணங்கள் நான்கையும், வாதனையும்-(காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் உட்பகை ஆறும் உண்டாவதற்குக் காரணமாகிய அவற்றின்) வாசனைகளையும், (பழக்கங்களையும்) குரு-ஞானாசிரியர், அருள்-உபதேசித்தருளிய, நெறியே-ஒழுங்கின்படியே, (நடந்து) ஒடுக்கிடில்-அடக்கினால், வீடும்கூடும்-மோக்ஷமும் சித்திக்கும், (அதனால்) பவத்தின்கரு-பிறப்பின் காரணமாகிய அஞ்ஞானம், தானாகவே அழிந்திடும்-தானே ஒழிந்துபோகும், நீ-, விரைவில்-சீக்கிரமாக, இந்நெறியை-இந்த ஞானமார்க்கத்தை, கைக்கொண்டு-சித்தத்திற் பதியவைத்துக்கொண்டு, செல்எனா-செல்லக்கடவாய் என்று, உரைத்தான்-கூறியருளினான்; எ-று.

"முனிவர், மகாராஜனின் குணம், குறி, செயல்களைக் கொண்டு, 'இவன் நம்முடைய உபதேசத்தைப் பெறுதற்குரியவன்' என்றெண்ணி, அவனை நோக்கி, "அரசனே! புவனம், போகம் ஆகிய இரண்டையும் என்னுடையவையென் றபிமானித்தலாகிய புறப்பற்றுக்களை நீக்கி, அவற்றின் பழக்கத்தாலுண்டாகும் ஆசையினின்றும் மனத்தைத் திருப்பி, அதன் நினைவுமின்றி அதைவிட்டு நீங்கி, உடலபிமானத்தையும் கைவிட்டு அந்தக் காரணங்களையும்,

காமக்குரோதாதிகள் உண்டாவதற்குக் காரணமாகிய அவற்றின் பழக்கங்களையும் குரு சொன்ன ஒழுங்கில் நடந்து அடக்கினால் முத்தியும் சித்திக்கும்; அதனால், பிறவிக்குக் காரணமாகிய அஞ்ஞானம் தானே ஒழிந்துபோகும்; நீ இந்த மார்க்கத்தை விரைவில் மனத்திற் பதியவைத்துக்கொண்டு செல்வாயாக' என்று உரைத்தான்'' என்பது இதன்கருத்து. வாதனை-வாசனை; சகரத்துக்குத் தகரம் போலியாக வந்தது. (29)

## மகாராஜன், குரு உபதேசித்த மொழிகளைத் தனித்திருந்து சிந்தித்தல்.

30 அந்நெறி குருவா லையமுந் திரிவு
மகன்றிடத் துணிவதாக் கேட்டு
முன்னெறி யான வரசியற் கையினின்
முயன்றனன் சிறிதுநா ளொருநாள்
பின்னெறி யதனை நினைந்தனை வரையும்
பெயர்ந்திட விடைகொடுத் தரசன்
மன்னெறிக் கோல மகன்றந்தப் புரத்தில்
வதிந்தன னொருவனாய்த் தனித்தே.

இ-ள்: (பின்னர்) அரசன்-அந்த மகாராஜனானவன், அந்நெறி-அந்த ஞானமார்க்கத்தை, குருவால்-அந்த ஆசிரியரிடத்திலே, ஐயமும் திரிவும்-சந்தேகமும் விபரீதமும், அகன்றிட-நீங்கும்படி, துணிவதா-நிச்சயமாக, கேட்டு-கேட்டுணர்ந்துகொண்டு, (தனது நாட்டையடைந்து) முன்நெறியான-முன்னேதான் கைக்கொண்டிருந்த செங்கோன் முறையான, அரசு இயற்கையினில்-அரசாட்சியின் தன்மையில், சிறிதுநாள்-சிறிதுகாலம், முயன்றனன்-முயற்சிசெய்து ஆளுகை நடத்திவந்தான், (அப்படி நடத்திவந்து பின்னர்)

ஒருநாள்-ஒருதினம், பின்னெறி அதனை-பின்னால் தான் வனத்தில் முனிவர்பால் உபதேசம் பெற்றுக்கொண்ட ஞானமார்க்கத்தை, நினைந்து-சிந்தித்து, அனைவரையும்-(சபாமண்டபத்திலிருந்த மந்திரி முதலாயினோர்) யாவரையும், பெயர்ந்திட - (அவ்விடத்தினின்றும்) எழுந்து செல்லுமாறு, விடைகொடுத்து-உத்தரவு கொடுத்தனுப்பி. விட்டு, அந்தப்புரத்தில்-தன்தேவி வசிக்கும் மாளிகையில்,(சென்று) மன்னெறி - அரசாட்சி முறைக்குரிய, கோலம் - அலங்காரத்தை, அகன்று - விட்டுநீங்கி, (அதாவது, அரசகோலத்தை நீக்கி) ஒருவனாய்-ஒருவனாகி, தனித்து-தனிப்பட்டு, வதிந்தனன்-இருந்தான்; எ-று.

"பின்னர் அந்த மகாராஜனென்பவன், அந்த ஞானமார்க்கத்தை அவ்வாசிரியரிடத்திலே சந்தேக விபரீதமற நிச்சயமாகக் கேட்டுணர்ந்து கொண்டு, தனது நாட்டை யடைந்து முன்னே தான் கைக்கொண்டிருந்த அரசாட்சியைச் சிறிதுகாலம் நடத்திவந்தான்; அவ்வாறு நடத்திவந்து, ஒருநாள், தான் வனத்தில் முனிவரிடத்து உபதேசம் பெற்றுக்கொண்ட ஞானமார்க்கத்தை நினைத்து, சபா மண்டபத்திலிருந்த மந்திரி முதலாயினோர் யாவரையும் எழுந்து செல்லும்படி விடை கொடுத்தனுப்பிவிட்டு, அந்தப் புரத்திற்குட் சென்று அரசகோலத்தை நீக்கி ஒருவனாய்த் தனித்திருந்தான்" என்பது இதன்கருத்து.

அந்தப்புரத்திற்குள் அன்னிய மனிதர் வரமாட்டார்க ளாதலின், வேற்று மனிதர்வந்து தன் ஞான சிந்தனைக் கிடையூறு செய்யாதிருக்கும் பொருட்டு அங்கே அரசன் சென்று தனித்திருந்தனன். குருவால் - உருபுமயக்கம்; ஏழனுருபு மூன்றனுருபாகத் திரிந்து வந்தது. 'சிறிதுநாள்' என்பதில், நாள்-காலத்தையுணர்த்தி நின்றது. (30)

தனித்திருந்த மகாராஜன் தன்னிடம் வந்த அரசர் முதலாயினோர்க்கு, "யான், துறவை நாடியிருக்கின்றேன்; நீங்கள் வேறொருவனை அரசனாக நியமித்துக் கொள்ளுங்கள்" என்று கூறல்.

31 *அரசர்க ளமைச்சர் புரோகிதர் பெரியோ*
*ரனைவரு மவ்விடத் தேகி*
*அரசனை நோக்கி நித்திய கரும*
*மகன்றுவா ளாவிருந் திடுதல்*
*அரசிலக் கணமன் றெனவவர் வேண்ட*
*அவர்களை நோக்கியே வேந்தன்*
*அரசியற் கையினை வேண்டல னென்னை*
*யறியவே வேண்டின னன்றே.*

*இ-ள்: (மகாராஜன் அப்படியிருக்கும்போது) அரசர்-அவனைச் சார்ந்த அரசர்கள், அமைச்சர்-மந்திரிமார்கள், புரோகிதர்-(வருங்காரியஞ் சொல்வோரும், கிரியை நடத்திவைப்போருமாகிய) புரோகிதப் பிராமணர்கள், பெரியோர்-மற்ற பெரியோர்கள், (ஆகிய) அனைவரும்-எல்லோரும், (அவ்வரசன் ஆட்சிமுறையைக் கவ்னியாதிருப்பதை யுணர்ந்து) அவ்விடத்து ஏகி-அரசனிருக்கும் அந்தப் புரமாகிய அவ்விடத்திற்குச் சென்று, அரசனை நோக்கி-அந்த மகாராஜனைப் பார்த்து, (மன்னனே! நீ) நித்திய கருமம்-தினந்தோறும் நடத்தத்தக்க காரியங்களினின்றும், அகன்று-நீங்கி, வாளாஇருந்திடுதல்-சும்மா இருத்தல், அரசு இலக்கணம் அன்று-அரசாட்சிக் குரிய இலக்ஷணமாகாது, என-என்று, அவர்-அவர்கள், வேண்ட-(நித்திய கர்மானுஷ்டானங்களைச் செய்து அரசியலைக் கவனிக்கும்படி) வேண்டிக்கொள்ள, வேந்தன் - மகாராஜன், அவர்களை நோக்கி-அவர்களைப் பார்த்து, (நான்) அரசு இயற்கையினை-அரசாட்சியின் தன்மையை, வேண்டலன்-விரும்பிலேன், என்னை-(ஆத்ம சொரூப*

னுகிய) என்னை, அறியவே வேண்டினன்-அறிய விரும்பியிருக்கின்றேன்; எ-று.

"மகாராஜன் அப்படியிருக்கும்போது அரசர், மந்திரிகள், புரோகிதர், பெரியோர் ஆகிய எல்லோரும் அவன் அரசாட்சி முதலிய நித்திய கருமங்களைக் கவனியாமலிருப்பதை யுணர்ந்து, அவனிருக்கு மிடத்திற்குச் சென்று, அம்மன்னனை நோக்கி, 'அரசனே! நீ தினந்தோறும் நடத்தத்தக்க காரியங்களை விடுத்து, சும்மா விருப்பது அரசுக்குரிய இலக்கணமன்று; அரசியலைக் கவனித்தல் வேண்டும்' என்று வேண்ட, அரசன் அவர்களை நோக்கி, 'நான் அரசாட்சியை விரும்பவில்லை; ஆத்ம சொரூபனுகிய என்னை யறிய விரும்பியிருக்கின்றேன்'' என்பது இதன்கருத்து. இதுவும், அடுத்த செய்யுளும் குளகம்.

அரசர், அமைச்சர் முதலியோர், மகாராஜனுக்கு உறுதிச் சுற்றத்தா ராகலின், பிறர் செல்லத்தகாத அந்தப்புரத்திலும்சென்று அரசனைக் காணும் உரிமை பெற்றவர்கள். ஆதலால், அங்குத் தடையின்றிச் சென்று அரசனைக்கண்டு பேசினுர்கள். 'இருந்திடுதல்' என்பதில், இடு-துணைவினை; பகுதிப்பொருள் விகுதியென்றும் சொல்லப்படும். 'அறியவே' என்பதில், ஏ-தேற்றப்பொருளது; நிச்சயத்தை விளக்கி நின்றது. அன்றே-அசை. (31)

32 ஆண்டதோ ரரசு தனிலும்போ கத்து
மாசையற் றேனினி வேண்டேன்
மாண்டதோர் வனத்தி லொருவனுய்த் தனித்தே
மனத்தசை வறுத்துவீ டடைவேன்
பூண்டவென் மனமிங் கினித்திரும் பாது
போகத்தைப் பொருளென வெண்ணி
வேண்டல னீங்க ளரசனு வேறே
விதித்துக்கொ ளுங்களென் றுரைத்தான்.

இ-ள்: ஆண்டது-(நான் இதுவரை) ஆட்சி புரிந்துவந்ததாகிய, ஓர் - ஒப்பற்ற, அரசுதன்னிலும் - அரசாட்சியிலும், போகத்தும்-(உலக) இன்பத்திலும், (உள்ள) ஆசை அற்றேன்-விருப்பத்தை விட்டு நீங்கினேன், இனிவேண்டேன்-இனிமேல் (அவற்றை ஒரு போதும்) விரும்பமாட்டேன், மாண்டது-மாட்சிமைப்பட்டதாகிய, ஓர்-ஒரு, வனத்தில்-ஆரணியத்தில், ஒருவனாய்-ஒருவனாகி, தனித்து-தனியேயிருந்து, மனத்து-மனத்திலேயுள்ள, அசைவு அறுத்து-கலக்கத்தை ஒழித்து, வீடு-மோக்ஷத்தை, அடைவேன்-பெறுவேன், பூண்ட-(இவ்விதமான வைராக்கியத்தைக்) கொண்ட, என்மனம்-என்னுடைய உள்ளம், இங்கு-இவ்வுலகத்தில், இனி-இனிமேல், திரும்பாது - (உலக போகத்தில்) திரும்பமாட்டாது, போகத்தை-பெண்களால் அடையும் இன்பத்தையும், பொருள்என-ஒருபொருள் என்று, எண்ணி-மதித்து, வேண்டலன்-(நான்)விரும்பேன், நீங்கள்-நீங்களெல்லோரும், வேறே அரசனா-வேறு அரசனாக, (ஒருவனை) விதித்துக்கொள்ளுங்கள்-நியமித்துக் கொள்ளுங்கள்; என்று உரைத்தான்-என்று கூறினான்; எ-று.

"நான் இதுவரை ஆட்சிபுரிந்து வந்த அரசாட்சியிலும், உலக இன்பத்திலும் கொண்டிருந்த ஆசையை நீக்கிவிட்டேன்; இனி அவற்றை ஒருபோதும் விரும்பமாட்டேன்; சிறந்தவொரு வனத்திற் சென்று தனித்து ஒருவனாய் நிஷ்டையிலிருந்து மனோவிகாரத்தை யொழித்து, முத்தியை அடைவேன்; இவ்வாறு வைராக்கியங் கொண்ட என்மனம் இவ்வுலகத்தில் இனி மேற்கூறிய இன்பத்தில் திரும்பாது; பெண்களால் அடையும் இன்பத்தையும், நான் ஒரு சிறந்த பொருளென மதித்து விரும்பேன்; ஆதலால், நீங்கள் வேறொருவனை அரசனாக நியமித்துக்கொள்ளுங்கள் என்றுரைத்தான்" என்பது இதன்கருத்து. 'தனித்தே' என்பதில், ஏ-தேற்றப் பொருளது; அசையுமாம். இதில், பொருள் முடிபுக்கேற்பச் சில சொற்கள் இசையெச்சமாக வருவித்துரைக்கப்பட்டன. (32)

## அரசாட்சியை விடலாகாதென்று மந்திரிகள் கூற மகாராஜன் அதனாலுண்டாம் துன்பத்தைக் கூறி வனத்திற் கேகுதல்.

33 ஆதியில் நினது தாதையு நினையே
அரசினின் இளமையிற் சூட்டத்
தீதின்றி யுனது புயவலி மையினிற்
செகமதைத் தாங்கினை யினிமேல்
நீதியின் நுணிய மதியினா தரவில்
நின்னைப்போ லொருவர்மற் றுளரோ
ஈதியற் கையதன் றிவ்வுட லுடனே
யிச்செல்வ மன்றிவே றுளதோ.

இ-ள்: (இதைக் கேட்டவுடன், "மன்னனே!) ஆதியில்-முற்காலத்திலே, நினது தாதையும்-உன்னுடைய தந்தையும், நினையே-உன்னையே, இளமையில்-இளமைப் பருவத்திலேயே, அரசினின்-நாடாளுகைத் தொழிலில், சூட்ட-நியமிக்க, (நீ) உனது புயவலிமையினில்-உன்னுடைய தோள் வல்லமையினாலே, தீதுஇன்றி-தீமையில்லாமல், செகமதை-இப்பூமியை, தாங்கினை-சுமந்து பாதுகாத்து வந்தாய், (அப்பேர்ப்பட்ட நீ வனத்திற்குச் சென்றுவிட்டால்) இனிமேல்-பின்னால், நீதியின்-ஒழுங்கினாலும், நுண்ணிய-நுட்பமாகிய, மதியின்-அறிவினாலும், ஆதரவில்-அன்பினாலும், நின்னைப்போல் ஒருவர்-உன்னைப் போன்ற ஒருவர், உளரோ-(அரசு செலுத்த) இருக்கின்றாரோ, (இல்லை; ஆதலால்) ஈது-(நீ நினைக்கும்) இக்காரியம், இயற்கையது அன்று - உலகின் இயற்கையாகாது, இவ்வுடலுடன்-இவ்வுடம்பும், இச்செல்வம் - இந்தச் செல்வமும், அன்றி-அல்லாமல், (இவ்வுலகத்தில் மனிதர் அடையத்தக்கது) வேறு உளதோ-வேறே உண்டோ?, (இல்லை); எ-று.

"இதைக் கேட்டவுடனே, 'மன்னனே! முற்காலத்தில் நின் தந்தை உன்னையே இளமையில் அரசனாக்கி உனக்கு முடிசூட்ட, நீ உன்னுடைய தோள் வல்லமையினாலே தீமையில்லாமல் இவ்வுலகத்தைப் பாதுகாத்துவந்தாய்; இப்பேர்ப்பட்ட நீ வனத்திற்குச் சென்றுவிட்டால் இனிமேல் நீதியினாலும், நுட்பமான அறிவினாலும், அன்பினாலும் அரச் செலுத்திவந்த உன்னைப் போன்ற வேறொருவர் இக் கருநாட தேசத்தை ஆளுதற்கு இருக்கின்றாரோ? இல்லை. ஆதலால், நீ நினைக்கும் இக்காரியம் உலகியற்கைக்குப் பொருந்தியதாகாது; இவ்வுடம்பும், இந்தச் செல்வமுமல்லாமல் மனிதர் உலகத்தில் அடையத்தக்கது வேறே உண்டோ? இல்லை" என்பது இதன்கருத்து. இச்செய்யுள் அடுத்த செய்யுளோடு தொடர்ந்து முடியும். சூட்டுதல்-நியமித்தல். மற்று-அசை. 'உடனே' என்பது எண்ணுப் பொருளது. (33)

34 அலதுநீ யேகி னவனியுங் காப்பற்
றவத்திலே யலைந்திடு மியாமும்
சலனம துறுவே மித்தகை யெமைநீ
தவிக்கவிட் டேகுதல் கடனன்
றிலகிட வெமக்கீ தருளென வமைச்ச
ரியம்பிட வரசனும் பார்த்தே
உலகமெய் யெனவெண் ணுறுமதி யுடையோர்க்
குரைப்பினு முணர்வுதி யாதால்.

இ-ள்: அல்லது-இவை அல்லாமல், நீ ஏகின்-நீ (வனத்திற்குச்) சென்றால், (நின் குடும்பத்தாரேயல்லாமல்) அவனியும்-இவ்வுலகமும், (இவ்வுலகத்திலுள்ளவர்களும்) காப்புஅற்று - பாதுகாப்பில்லாமல், அவத்திலே-வீணிலே, அலைந்திடும்-அலையும், (அலைவார்கள்) யாமும்-நாங்களும், சலனமது உறுவேம்-சஞ்சலமடைவோம், இத்தகை-இத்தன்மையுள்ள, எமை-எங்களை, நீ-, தவிக்கவிட்டு-

பரிதபிக்கும்படிவிட்டு, ஏகுதல்-(வனத்திற்குச்) செல்லுதல், கடன் அன்று-முறைமையாகாது,(ஆதலால்) எமக்கு-எங்களுக்கு, இலகிட-விளங்க, அருள்எனா-(இதற்கு விடைகூறி) அருள்வாயாக என்று, அமைச்சர்-மந்திரிகள், இயம்பிட-சொல்ல, அரசனும்-அம்மகாராஜனும், பார்த்து-(அவர்களை) நோக்கி, உலகம்-இவ்வுலக வாழ்வானது, மெய்என-உண்மை என்று, எண்ணுறும்-நினைக்கின்ற, மதியுடையோர்க்கு-அறிவுடையவர்களுக்கு, உரைப்பினும்-(உலகம் நிலையற்றது என்று) கூறினாலும், உணர்வு உதியாது-விவேகமுண்டாகாது; எ-று.

"இவை யல்லாமல், நீ வனத்திற்குச் சென்றால் நின் குடும்பத்தாரே யல்லாமல் இவ்வுலகத்தாரும் தங்களைப் பாதுகாப்பவரில்லாமல் வீணிலே அலைவார்கள்; நாங்களும் சஞ்சலமடைவோம்; இத்தன்மையுள்ள எங்களை நீ பரிதபிக்கவிட்டு வனத்திற்குச் செல்லுதல் நீதியாகாது; ஆதலால், எங்களுக்கு விளங்க இதற்குத் தக்க விடை கூறியருள்வாயாக' என்று மந்திரிகள் சொல்ல, அரசன் அவர்களை நோக்கி, 'இவ்வுலக வாழ்வானது மெய்யென்று நினைக்கும் புத்தியுடையவர்க்கு உலகம் நிலையற்றது என்று எவ்வளவு கூறினாலும் விவேகமுண்டாகாது" என்பது இதன்கருத்து; இதுவும் அடுத்த செய்யுளும் குளகம்.

அல்லது - குறிப்பு வினையெச்சம்; நடுக்குறைந்து நின்றது. 'அவனியும்' என்பதிலுள்ள உம்மை-இறந்தது தழுவிய எச்சப்பொருளது. அவனி-இடவாகு பெயராய் உலகத்திலுள்ள மனிதரை உணர்த்தி நின்றது. 'அரசனும்' என்பதிலுள்ள உம்மையும் இறந்தது தழுவிய எச்சப் பொருளதாம். ஆல்-அசை. (34)

35 இவ்வர சியற்கை யற்பமற் றிதனு
ளெய்திடுந் துன்பினுக் களவின்
றவ்வகை யதனை யூகமின் மையினா
லறிகிலிர் நீங்களின் பென்றே

எவ்வகை நினைந்தீ ரினியெக்கா லுங்கட்
கீதின்ப மலதெனத் தோன்றும்
ஒவ்வமற் றிதனுக் கூகமே தோன்ற
தூங்களுக் குலகயூ குதிக்கும்.

இ-ள்: இவ்வரசு இயற்கை-(எனக்குரிய) இந்த அரசாட்சியின் தன்மையானது, அற்பம் - இழிவானதாம், இதனால்-இவ்வரசாட்சியினால், எய்திடும் - அடையும், துன்பினுக்கு-துன்பத்திற்கு, அளவின்று-அளவில்லை, அவ்வகை அதனை-(அரசினால் துன்பமதிகரிக்கும்) அந்த விதத்தை, நீங்கள்-, யூகம் இன்மையினால்-(தத்துவ ஞான சாஸ்திர) ஆராய்ச்சியில்லாததால், அறிகிலிர்-அறியாமலிருக்கின்றீர்கள், இன்புஎன்று - (இவ்வுலக வாழ்வு) இன்பமயமென்று, எவ்வகை நினைந்தீர்-எக்காரணத்தால் எண்ணினீர்கள்?, இனி-இனிமேல், எக்கால்-எக்காலத்தில், உங்கட்கு-உங்களுக்கு, ஈது-இவ்வுலக வாழ்வானது, இன்பம் அலதுஎன - இன்பமயமானதன்று என்று, தோன்றும் - விளங்கும், உங்களுக்கு - (தத்துவ ஞான சாஸ்திர ஆராய்ச்சியில்லாத) உங்களுக்கு, உலக யூகு-உலகம் இன்பமயமானதென்னும் யுக்தியே, உதிக்கும் - தோன்றும், இதனுக்கு - (யான் கூறிய) இதற்கு, ஒவ்வ-பொருந்த, ஊகம் தோன்றது-யுக்தி தோன்றாது; எ-று.

"எனக்குரிய இந்த அரசாட்சியின் தன்மையானது, அற்பமானதாம்; இவ்வரசாட்சியால் அடையும் துன்பத்திற்களவில்லை; அந்த விதத்தை, தத்துவ ஞான சாஸ்திர ஆராய்ச்சியில்லாததால் நீங்கள் அறியாமலிருக்கின்றீர்கள், இவ்வுலக வாழ்வு இன்பமயமானதென்று எக்காரணத்தால் நினைத்தீர்கள்? இனி எக்காலத்தில் உங்களுக்கு இவ்வுலக வாழ்வானது இன்பமயமானதல்லவென்று தோன்றும்? தத்துவ ஞான சாஸ்திர ஆராய்ச்சியில்லாத உங்களுக்கு உலக வாழ்வு இன்பமயமானதென்னும் யுக்தியே தோன்றும்; யான் கூறிய

இதற்குப் பொருந்த நல்ல யுக்தி தோன்ருது" என்பது இதன் கருத்து. மற்று இரண்டும்-அசைகள். இது அடுத்த செய்யுளோடு தொடர்ந்து முடியும். (35)

மகாராஜன் துறவு பூண்டு நகரை விட்டுச் செல்ல
நகரத்தார் அவனைத் தொடர்ந்து புலம்பல்.

36 என்றுமற் றனேக மாவிரித் தரச
னெடுத்தமைச் சர்கடமக் கியம்பி
நின்றுபின் னவரை நிலுமென நிறுத்தி
நிதிதுனும் பொன்மனை விடுத்தே
சென்றுபின் னகர வீதியி னடக்கத்
திரண்டனை வர்களும்பின் ருெடர்ந்து
வன்றுய ரடைந்து வாடியே மெலிந்து
வாரியி னோசையி னழுதார்.

இ-ள்: என்று-, அனேகமா - பலவிதமாக, விரித்து - விஸ்தரித்து, அரசன் - அம்மகாராஜன், அமைச்சர்கள் தமக்கு - மந்திரிகளுக்கு, எடுத்து இயம்பி-(உண்மை ஞான விஷயங்களை) எடுத்துக் கூறி, பின்-பின்னர், நின்று-எழுந்து நின்று, அவரை-அந்த அமைச்சர்களை, நில்லும் என-(நீங்கள்) நில்லுங்கள் என்று, நிறுத்தி-அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு, நிதி துன்னும்-திரவியம் சேர்ந்து நிறைந்திருக்கின்ற, பொன்மனை-பொன்னாலாகிய அரண்மனையை, விடுத்து-விட்டு நீங்கி, சென்று-வெளியிற்போய், பின்-பின்னர், நகர வீதியில்-அந்நகரத் தெருவிலே, நடக்க-நடந்து செல்ல, (அவ்வாறு அரச கோலத்தை நீக்கித் தனியே நடந்துசென்ற அவ்வரசனை) அனைவர்களும்-அந்நகர வாசிகள் யாவரும், (கண்டு) திரண்டு-கூடி, பின்தொடர்ந்து-பின்னே தொடர்ந்து சென்று, வன்துயர் அடைந்து-பெருந்துன்பமுற்று, வாடி-முகம்வாடி, மெலிந்து-உடல்

மெலிவுகொண்டு, வாரியின் ஓசையின் - சமுத்திர இரைச்சலைப் போல, அழுதார்-ஓவென்று கதறி அழுதார்கள்; எ-று.

"என்று பலவிதமாக அம்மகாராஜன், மந்திரிகளுக்கு உண்மை ஞான விஷயங்களை எடுத்து விரித்துக்கூறிப் பின்னர் எழுந்து நின்று, அந்த மந்திரிகளை,'நீங்கள் நில்லுங்கள்! நில்லுங்கள்!! என்று நிறுத்தி அரண்மனையைவிட்டு வெளியேறி அந்நகரவீதியில் (நடந்தான்;) அவ்வாறு நடக்கவே, அவனை அந்நகரவாசிக ளனைவரும் கண்டு திரண்டுவந்து பின்தொடர்ந்து பெருந்துன்பமுற்று, முகம் வாடி, உடல்மெலிந்து கடலோசைபோல ஓவென்று கதறி யழுதார்கள்" என்பது இதன்கருத்து. 'துன்னும்' என்பது நடுக்குறைந்து நின்றது. 'வன்' என்பது அதிகரித்தற் பொருளில் நின்றது. (36)

தன்னைத் தொடர்ந்தழுத நகரவாசிகட்கு
அரசன் சமாதானங் கூறல்.

37 அவரவர் வினையி னவரவர் வருவார்
அவரவர் வினையள வுக்கே
அவரவர் போக மென்றதே யாயி
ளுருக்கார் துணையதா குவர்கள்
அவரவர் தேக முளபொழு துடனே
யாதர வாரென நாடி
அவரவ ரடைத னெறிகன்மத் தடையு
மாதர வாதர வாமோ.

இ-ள்: (அப்படி அவர்கள் கதறியழும்போது அந்நகரவாசிகளை நோக்கி; "என்மீது அன்புள்ள குடிகளே!) அவர் அவர் வினையின்-(மனிதர்) அவரவர்கள் செய்த வினையினால், (வினையளவுக்கேற்றபடி) வருவார்-(உலகில்) பிறப்பார்கள்,-(மாறிப்பிறவார்) அவர் அவர் வினை அளவுக்கே-அவரவர்களுடைய வினையளவுக்குத் தக்க

படியே, அவர்அவர் போகம் - அவரவர்களுடைய (சுகதுக்க வடிவ) போகங்கள், (ஏற்படும்) என்றதே - என்று சாஸ்திரங் கூறுவதே, (நிச்சயமாகும்) ஆயின் - அப்படியானால், ஆருக்குஆர் - (உலகில்) யார்க்கு யார், துணையது ஆகுவர்கள்-துணையாவார்கள்? (இதனை நீங்கள் நன்றாக ஆலோசித்துப் பாருங்கள்) அவர்அவர் தேகம் உள்ள பொழுது-அவரவர்களுடைய சரீரம் நன்றாயிருக்கும்போதே, ஆதரவு ஆர்என-(நமக்குத்) துணையாயிருப்பவர் யாரென்று, நாடி-ஆராய்ந்து, உடனே-அப்படி ஆராய்ந்த அப்பொழுதே, அவர்அவர்-அவரவர்கள், அடைதல் - (அத்துணைவரைச்) சேருதல், நெறி-நியாயமாம், கன்மத்து-வினையினால், (அதாவது வினை காரணமாக) அடையும்-நம்மைச் சேரும், ஆதரவு - துணை, ஆதரவுஆமோ - துணையாகுமோ? எ-று.

"அப்படி அவர்கள் கதறி யழும்போது அந்நகர வாசிகளை நோக்கி, 'என்மீது அன்புள்ள குடிகளே! மனிதர், அவரவர்கள் செய்த வினையளவுக்கேற்றபடி உலகத்தில் பிறப்பார்கள், மாறிப் பிறக்கமாட்டார்கள்; அவரவர்களுடைய வினையளவுக்குத் தக்கபடியே அவரவர்களுடைய சுகதுக்க வடிவ போகங்கள் ஏற்படும்; என்று சாஸ்திரங் கூறுவதே நிச்சயமாகும்; அப்படியானால், உலகில் யார்க்கு யார் துணையாவார்கள்? (எவர்க்கும் எவரும் நிலைத்த துணையாகமாட்டார்கள்) ஆதலால், மனிதர், தங்கள் தங்களுடைய சரீரம் நன்றாயிருக்கும்போதே, நமக்குத் துணையாயிருப்பவர் யாரென்று ஆராய்ந்து அப்பொழுதே அத்துணைவரை அடைதல் நியாயமாம் வினை காரணமாக மனிதரிடம் சொற்பகாலம் சேர்ந்திருக்கும் துணை நிலைத்த துணையாகுமோ?" என்பது இதன்கருத்து.

இச்செய்யுள் அடுத்த பாடலோடு சேர்ந்து முடியும். இதில் பொருண்முடிபுக் கேற்பச் சில சொற்கள் இசையெச்சமாக வருவித்துரைக்கப்பட்டன. 'ஆகுவார்கள்' என்பதில், ஆகு-பகுதி. (37)

38 வினையுள வளவுங் கூடியே நிற்கும்
 வினையகன் றிடிற்பிரிந் திடுமால்
வினையினால் வருமா தரவினி னியற்கை
 மெய்யுணர் வத்தகை யலவே
வினையிலை யுங்க ளிடத்தினா னிருக்க
 மெய்யுணர் வொன்றையே நாடி
வினையறு கானம் புகுதவே வேண்டி
 விரும்பினே னீர்நிலு மிங்ஙன்.

இ-ள்: (அந்த நிலையற்ற ஆதரவானது) வினைஉள்ள அளவும்-(அது சேர்ந்திருக்கத்தக்க) வினையிருக்கும் வரையிலும், கூடிநிற்கும்-சேர்ந்து நிற்கும், வினை அகன்றிடில்-அவ்வினை (தன்காலம் தீர்ந்து) நீங்கி விட்டால், பிரிந்திடும் - அகன்றுவிடும், (இப்படிக் கூடிப் பிரிவது) வினையினால்வரும்-வினையளவாக வருகின்ற, ஆதரவினின்-துணையின், இயற்கை-தன்மையாம், மெய்உணர்வு-தத்துவ ஞான உணர்ச்சி, அத்தகை அல - அத்தன்மையுடையதன்று, (எப்பொழுதும் நிலைத்திருக்கும் ஆதரவை அளிக்கத்தக்கதாம்) உங்களிடத்தில்-(இனிமேல்) உங்களிடத்திலே, நான் இருக்க-நான் அரசனாக அமைந்திருக்க, வினை இல்லை-(ஏற்பட்ட வினை) இல்லை, (அதன் காலம் தீர்ந்துவிட்டது; ஆதலின்) மெய்உணர்வு ஒன்றையே-தத்துவ ஞான உணர்ச்சி ஒன்றை மாத்திரமே, நாடி-(நான்) விரும்பி, வினை அறு-வினைநீங்கத்தக்க, கானம்-(பரிசுத்தமான) வனத்தில், புகுத-சேர, வேண்டி விரும்பினேன்-(அதை) அவசியமாக நினைத்து விரும்பியிருக்கின்றேன், நீர்-நீங்கள், இங்ஙன்-இவ்விடத்திலேயே, நில்லும்-நில்லுங்கள்; எ-று.

"அந்த நிலையற்ற ஆதரவானது, தான் சேர்ந்திருக்கத் தக்க வினையிருக்குமளவும் சேர்ந்திருக்கும்; அவ்வினை, தன்காலம் தீர்ந்து நீங்கிவிட்டால் அகன்றுவிடும்; இவ்வாறு கூடிப் பிரிவது, வினையள

வாக வருகின்ற துணையின் இயற்கையாம்; தத்துவ ஞான உணர்ச்சி அத்தன்மையதன்று; எப்பொழுதும் நிலைத்திருக்கும் ஆதரவை அளிக்கத் தக்கதாம்; இனி நான், உங்களிடத்தில் அரசனாயிருக்கத் தக்க வினை இல்லை; அதன்காலம் தீர்ந்துவிட்டது; ஆதலின், நான் தத்துவ ஞான உணர்ச்சி ஒன்றை மாத்திரமே அடைய விரும்பி, வினை நீங்கத் தக்க பரிசுத்தமான வனத்தை அடைய இச்சை கொண்டிருக்கின்றேன்; நீங்கள் என்னைத் தொடர்ந்து வராமல் இவ்விடத்திலேயே நில்லுங்கள்" என்பது இதன்கருத்து. இதுவும் அடுத்த செய்யுளைத் தொடர்ந்து முடியும். ஆல்-அசை. 'ஒன்றையே' என்பதில், ஏகாரம் தேற்றப்பொருளது. (38)

## சுற்றத்தார் மகாராஜனைத் தடுத்தல்.

39 என்றுநல் வேந்த னேதிலார் போல
வேகின னனைவருங் கண்ணீர்
நின்றெதிர் சொரிய வாய்விட்டே யலறி
நின்றனர் தமர்கள்பின் னேகி
இன்றெமை யாவர் காத்தளித் திடுவ
ரினியைநீ யேகுத னீதி
அன்றென வுரைத்தா ரவர்களை நோக்கி
யரசனீ துரைத்தன னன்றே.

இ-ள்: என்று-என்று சொல்லி, நல்வேந்தன்-நல்ல அரசன், ஏதிலார்போல-அயலார்போன்று, ஏகினன்-சென்றான், (அவ்வாறு செல்வதைக் கண்ட) அனைவரும் - அவர்களெல்லோரும், எதிர் நின்று - அரசனுக்கெதிரில் நின்று, கண்ணீர் சொரிய - கண்ணீர் வடிய, வாய்விட்டு அலறி-வாய்திறந்தழுது கதறி, நின்றனர்-(பின் தொடராமல்) நின்றுவிட்டார்கள், பின்-பின்னர், தமர்கள்-மகாராஜனது சுற்றத்தார்கள், (அவன் துறவுபூண்டு வனத்திற்குச் செல்

வதை யுணர்ந்து) ஏகி-(அவனிடம்) சென்று, (மன்னனே! நீ இவ் வாறு வனத்திற்குச் சென்றுவிட்டால்) இன்று - இப்பொழுது, எம்மை-எங்களை, யாவர் காத்து அளித்திடுவர் - யார் காத்திரக்ஷிப்பவர்?, (எவருமிலரே! ஆதலால்) இனியை நீ-(எங்களுக்கு) இனிமை யுள்ளவனாகிய நீ, ஏகுதல்-(எங்களைவிட்டு வனத்திற்குச்) செல்லு தல், நீதி அன்று என - ஒழுங்காகாது என்று, உரைத்தார்-சொன் னார்கள், (இவற்றைக் கேட்ட) அரசன் - மகாராஜன், அவர்களை நோக்கி - அந்தச் சுற்றத்தார்களைப் பார்த்து, ஈது உரைத்தனன்- (அடியில்வரும்) இதனைக் கூறினான்; எ-று.

"என்று சொல்லி, அரசன் அயலார் போன்று சென்றனன் அவ்வாறு செல்வதைக் கண்ட அவர்களெல்லோரும் அவ்வரசனுக் கெதிரில் நின்று கண்ணீர் சொரிய வாய்விட்டழுது கதறிப் பின் தொடராமல் நின்றுவிட்டார்கள். பின்னர் மகாராஜனது சுற்றத் தார்கள், அவன் துறவு பூண்டு வனத்திற்குச் செல்வதை யுணர்ந்து, அவனிடம் சென்று, 'மன்னனே! நீ இவ்வாறு காட்டிற்குச் சென்று விட்டால் இப்பொழுது எங்களை யாவர் காத்திரக்ஷிப்பார்? எவருமிலரே; ஆதலால், எங்களுக்கு இனிமையுள்ளவனாகிய நீ எங் களைவிட்டு வனத்திற்கேகுதல் நீதியாகாது' என்று சொன்னார்கள். இவற்றைக் கேட்ட மகாராஜன், அந்தச் சுற்றத்தார்களைப் பார்த்து, அடியில்வரும் இதனைக் கூறினான்" என்பது இதன்கருத்து. 'நின் றெதிர்' என்பதை 'எதிர்நின்று' என மாற்றுக. 'ஈது' என்றது அடுத்த செய்யுளில் வருவதை. (39)

### தன்னைத்தடுத்த உறவினர்க்கு மகாராஜன் சமாதானங் கூறல்.

40 உறவாகு மெனவெனை நீர் தொடர்வதியல் பன்றாகு
முயிர்கட் கெல்லா
முறவாகு ஞானமணி பகையாகு மஞ்ஞான
முய்த்து நோக்கின்

உறவான வதையடைந்து பகையான விதைநீங்கி
யொருமை யாக
உறவாதல் தனக்குத்தா னேயெனமற் றுறவுவிடுத்
துறையு மென்றான்.

இ-ள்: நீர்-நீங்கள், என்னை-, உறவு ஆகும்என-உறவினன் ஆவான் என்று நினைத்து, தொடர்வது - தொடர்ந்து வருவது, இயல்பு அன்று-தகுதியாகாது, உய்த்துநோக்கின்-ஆராய்ந்து பார்க்குமிடத்து, ஆகும்-(உலகத்தில்) உற்பத்தியாகின்ற, உயிர்கட்கு எல்லாம்-ஜீவன்களுக்கெல்லாம், ஞானம்-ஆத்ம ஞானமே, உறவுஆகும்-உறவுள்ளதாகும், அஞ்ஞானம்-(உலக வாழ்வை நிலையென்றெண்ணும்) அஞ்ஞானமே, நனி - மிகுந்த, பகைஆகும் - விரோதமுள்ளதாகும், (ஆதலின் நீங்கள்) உறவு ஆன-உறவாயிருப்பதான, அதை-அந்த ஞானத்தை, அடைந்து-பெற்று, பகைஆன-பகையாயிருப்பதான, இதை-இந்த அஞ்ஞானத்தினின்றும், நீங்கி-விலகி, ஒருமை ஆக-(பலஇன்றி) ஒன்றாக, உறவுஆதல்-உறவாயிருப்பது, தனக்கு-ஆத்மாவுக்கு, தானே - ஆத்மாவே, என - என்றுணர்ந்து, மற்று-தனக்கு வேறாயிருக்கின்ற, உறவு - உறவினரை, விடுத்து - நீக்கி, உறையும்-(இனிமையாக) இருப்பீராக, என்றான்-என்று அரசன் கூறினான்; எ-று.

"நீங்கள் என்னை உறவினன் ஆவானென்று நினைத்துத் தொடர்ந்து வருவது தகுதியாகாது; நன்றாக ஆராய்ந்து பார்க்குமிடத்து, உலகத்தில் உற்பத்தியாகின்ற உயிர்களுக்கெல்லாம் ஆத்ம ஞானமே உறவாகும்; உலக வாழ்வை நிலையென்றெண்ணும் அஞ்ஞானமே மிகுந்த பகையாகும்; ஆதலின், நீங்கள் உறவாயிருப்பதான அந்த ஆத்ம ஞானத்தை அடைந்து, பகையாயிருப்பதான இந்த அஞ்ஞானத்தினின்றும் நீங்கிப் பன்மையின்றி ஒருமையாக உறவாயிருப்பது ஆத்மாவுக்கு ஆத்மாவே யென்றுணர்ந்து தனக்கு

அன்னியமாயிருக்கின்ற உறவினரை யொழித்து இனிமையாக இருப்பீராக என்று அரசன் கூறினன்" என்பது இதன்கருத்து. உறவு-ஆகுபெயராய் உறவினரை உணர்த்தி நின்றது. மற்று-பிறிது என்னும் பொருளது. (40)

## தாய் தந்தையர் மகாராஜனைத் தடுத்தல்.

41 தந்தைதா யிருவருந்தம் புதல்வனெனும் வாஞ்சையினற்
றாம்பின் னேகி
மைந்தவா வெங்களிரு வரையுமெவர் காப்பதற்கு
வைத்தாய் நீதான்
சிந்தைதா னுனக்கெங்கே மகனேயுன் றிருமுகத்தைத்
திரும்பிக் காட்டாய்
நொந்துதான் பெற்றவயி றெரிகின்ற தெனவுரைக்க
நோக்கி மன்னன்.

இ-ள்: (அரசன் உரைத்தவைகளைக் கேட்டு உறவினர் நின்று விட்டார்கள்; பின்னர்) தந்தை-(அரசனைப் பெற்ற) தகப்பன், தாய்-தாயார், (ஆகிய) இருவரும்-இரண்டு பேர்களும், (அரசன் துறவடைந்து வனத்திற்குச் செல்கின்றானென்பதை யுணர்ந்து மனம் பதைத்து) தம் புதல்வன் என்னும்-(அவ்வரசன்) தம்முடைய புத்திரன் என்கின்ற, வாஞ்சையினல் - பாசத்தினல், (அவனைப் பிரிதற்கு மனம் இசையாமல்) தாம்-தாங்கள், பின் ஏகி-அவ்வரசன் பின்னே தொடர்ந்து சென்று, (அவனை நோக்கி) மைந்த - புத்திரனே! நீ-, வா-இங்கே வா, எங்கள் இருவரையும்-விருத்தாப்பியரான எம்மிருவரையும், காப்பதற்கு - பாதுகாப்பதற்கு, எவர்-எவரை, வைத்தாய் - ஏற்படுத்தி வைத்திருக்கின்றாய்?, உனக்கு-(எம்மைப் பாதுகாக்கக் கடமைப்பட்டிருக்கின்ற) உனக்கு, சிந்தை-மனமானது, எங்கே-எவ்விடத்திற் சென்றிருக்கின்றது?, மகனே-புதல்வனே!, திரும்பி-(நீ எங்கள் பக்கமாகத்) திரும்பி, உன் திரு

முகத்தை - உன்னுடைய அழகிய முகத்தைக், காட்டாய் - காட்டுவாயாக, நொந்து-வருந்தி, பெற்ற - (உன்னைப்) பெற்ற, வயிறு-வயிறானது, எரிகின்றது-வேகின்றது, என உரைக்க-என்று சொல்ல, (இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன்) மன்னன் - மகாராஜன், நோக்கி-(அவர்களைப்) பார்த்து; எ-று.

"அரசன் உரைத்தவைகளைக் கேட்டு உறவினர் நின்றுவிட்டார்கள்; பின்னர், அரசனைப் பெற்ற தாய் தந்தையராகிய இருவரும், அரசன் துறவடைந்து வனத்திற்குச் செல்கின்றானென்பதை யுணர்ந்து மனம் பதைத்து, அவன் தங்களுடைய புத்திரன் என்னும் பாசத்தினால் அவனைப் பிரிதற்கு மனமிசையாமல் தாங்கள் அவ்வரசன் பின்னே தொடர்ந்து சென்று, அவனை நோக்கி, 'புத்திரனே! இங்கே வா; விருத்தாப்பியரான எங்களிருவரையும் பாதுகாப்பதற்கு எவரை நியமித்து வைத்திருக்கின்றாய்? எம்மைப் பாதுகாக்கக் கடமைப்பட்டிருக்கின்ற உனக்கு மனம் எங்கே சென்றிருக்கின்றது? மகனே! நீ எங்கள் பக்கமாகத் திரும்பி உன்னுடைய அழகிய முகத்தைக் காட்டக்கடவாய்; வருந்தி உன்னைப் பெற்ற வயிறு எரிகின்றதே!' என்று சொல்ல, இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் மகாராஜன் அவர்களைப் பார்த்து" என்பது இதன் கருத்து.

இதன் ஈற்றிலுள்ள, 'நோக்கி' என்னும் வினையெச்சம் அடுத்த செய்யுளில் உள்ள வினைகொண்டு முடியும். தான் மூன்றும்-அசைகள். ((41)

### தாய் தந்தையர்க்கு அரசன் சமாதானங் கூறுதல்.

42 அறிவைநோக் கிடிலதற்குத் தாய்தந்தை யிலையிவ்வுட
லதனை நோக்கில்
இறைபுநீ ருபாதான காரணமன் றிருமாயை
யினிலுண் டாகும்

குறியி துவிங் காயின்மண்ணி லெனைப்பெரு தவரிலையக்
கொள்கை நீரு
நிறையுமதி யிலரேநீர் நில்லுமென விருவரையு-
நீத்துப் போனான்.

இ-ள்: அறிவை நோக்கிடில் - ஆத்மாவை நோக்குமிடத்து, அதற்கு-(நித்தியமாயிருக்கின்ற) அதற்கு, தாய் தந்தை இல்லை-தாய் தந்தையர் எப்போதுமில்லை, இவ்வுடலதனை நோக்கில்-இவ்வுடம்பை நோக்குமிடத்து, (அநித்தியமா யிருக்கின்ற இதற்கு) இறையும்-சிறிதும், நீர்-நீங்கள், உபாதான காரணமன்று - முதற்காரணமல்ல, (ஆனால், இது) இருமாயையினில் உண்டாகும் - (ஆவாணம், விட்சேபம் என்னும்) இரண்டு சக்திகளையுடைய மாயையினின்றும் (சொப்பனப் பொருள்போல) தோன்றும், குறிஇது-இக்கருத்தினை, இங்குஆயின் - இங்கே ஆராயுமிடத்து, மண்ணில் - இவ்வுலகத்தில், என்னைப் பெறுதவர் இல்லை-என்னைப் புத்திரனாகப் பெறுதவர் ஒருவருமிலராவர், நீரும்-நீங்களும், அக்கொள்கை - அத்தன்மையுடையவரே யாவீர், (இவ்வாறு எம்மை மக்களாகப் பெறுதவரொருவருமில்லையென்னும்) நிறைமதி இலரே - பூரண விவேகமில்லாதவர்களே!' நீர் நில்லும் என-நீங்கள் நில்லுங்கள் என்று, இருவரையும் நீத்து-அவ்விரண்டு பேர்களையும் விடுத்து, போனான்-(அன்னியன் போலச்) சென்றான்; எ-று.

''ஆத்மாவை நோக்குமிடத்து நித்தியமாயிருக்கிற அதற்குத் தாய் தந்தையர் எப்போது மிலராவர்; இவ்வுடம்பை நோக்குமிடத்து அநித்தியமாயிருக்கின்ற இதற்குச் சிறிதும் நீங்கள் முதற்காரணமாக மாட்டீர்கள்; ஆனால், இது, ஆவரணம், விட்சேபம் என்னும் இரண்டு சக்திகளையுடைய மாயையினின்றும் சொப்பனப் பொருள்போலத் தோன்றும்; இக்கருத்தினை இங்கே ஆராயுமிடத்து, இவ்வுலகத்தில் என்னைப் புத்திரனாகப் பெறுதவர் ஒருவருமில்லை; நீங்களும்

அத்தன்மையுடையவரே யாவீர்; இவ்வாறு எம்மை மக்களாகப் பெறாதவர் ஒருவருமில்லை யென்னும் பூரண அறிவைப் பெறாதவர்களே! நீங்கள் நில்லுங்கள்! நில்லுங்கள்!! என்று இருவரையும் விடுத்து அன்னியன்போலச் சென்றான்'' என்பது இதன்கருத்து.

நித்தியம்-உற்பத்தியும், நாசமும் இல்லாதது; அநித்தியம்-நாசமாவது, உற்பத்தியும் நாசமுமாவது உள்ளது. உபாதானகாரணம்-முதற்காரணம்; உற்பத்தி (தோற்றம்), ஸ்திதி (இருப்பு), இலயம் (ஒடுக்கம்) ஆகியவைகளின் காரணமெதுவோ, அதுவே முதற்காரணமெனப்படும்; அதாவது, கடத்திற்கு மண்ணானது எப்படி உற்பத்தி, ஸ்திதி, லயங்களின் காரணமாயிருக்கின்றதோ அப்படி இருப்பது. ஆவரணம்-மறைப்பு; இந்த மறைப்புக்குக் காரணமாயிருப்பது ஆவரணசக்தி; விட்சேபம்-தோற்றம்; இந்தத் தோற்றத்திற்குக் காரணமாயிருப்பது விட்சேபசக்தி; இந்த ஆவரணம், விட்சேபம் என்னும் இரண்டு சக்திகளையுடைய அநாதி (புராதன) பாவ (பாவனை) வடிவமான அஞ்ஞானமே மாயையெனப்படும். ''ஆத்மா எப்போதும் உற்பத்தியும் நாசமுமில்லாததாய் நிலைத்திருப்பதாதலின், அதற்குத் தாய் தந்தையர் இல்லை; அதனால் ஆத்மனாகிய எனக்கு நீங்கள் தாய் தந்தையராகமாட்டீர்கள்; என்னுடைய இவ்வுடம்பை நீங்கள் புத்திரனாகக் கருதுவீர்களாயின், இதுவோ ஆவரணம், விட்சேபம் என்னும் இரண்டு சக்திகளையுடைய மாயையினின்றும் சொப்பனப் பொருள்போல நிலையற்றதாய்த் தோன்றியது; இதற்கு நீங்கள் சிறிதும் உற்பத்தி, ஸ்திதி, லயம் என்னும் மூன்றிற்கும் ஏதுவாகிய முதற்காரணமாகமாட்டீர்கள்; மாயையே காரணமாகின்றது; அவ்வாறாகவே மாயை எல்லாரிடத்திலு மிருக்கின்றதாதலின், எல்லாரும் இவ்வுடம்பைப் பெற்றவராகின்றனர்; நீங்கள்மட்டும் பெற்றோராகமாட்டீர்; நீங்களும் இத்தன்மையுடையவர்களே'' என்று அரசன் தனக்கும், அவர்களுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லையென்பதை விளக்கினான். (42)

மகாராஜன் மனைவிவந்து அவனைத் தடுத்தல்.

43 அரிவையர்க டமக்கிலக்க ணங்கூறு நூலதனி
லதனை யெல்லாம்
உரிமையதா வுடையவளா மினியமனை தொடர்ந்தேகி
யுருகி நின்று
பரிவினுட னடிகள்பணிந் தரற்றியே பதைபதைத்துப்
பனிகண் பாயத்
தரியனுமை விடுத்துலக மதனிலொரு கணமேனுஞ்
சாவே னென்றாள்.

இ-ள்: (பின்னர்) அரிவையர்கள் தமக்கு - பெண்களுக்கு, (உரிய) இலக்கணம்-இலக்ஷணத்தை, கூறும்-சொல்லுகின்ற, நூல் அதனில்-நூலில், (சொல்லப்படும்) அதனை எல்லாம்-அந்த இலக்ஷண முழுவதையும், உரிமையதா-(தனக்கு) உரிமையாக, உடையவளாம்-உடைத்தானவளாகிய, இனியமனை-(அவ்வரசனுடைய) இனிமை பொருந்திய மனைவி, (தன் கணவன் துறவடைந்து காட்டிற்குப் போகின்றானென்பதை யுணர்ந்து நடுங்கி) தொடர்ந்து ஏகி-அவனைத் தொடர்ந்து சென்று, உருகி-நெஞ்சுருகி, நின்று-எதிரில் நின்று, பரிவினுடன்-அன்புடனே, அடிகள் பணிந்து-(அவ்வரசனுடைய) பாதங்களை வணங்கி, அரற்றி - கதறியழுது, பதைபதைத்து-துடி துடித்து, பனி-நீர்த்துளி, கண்-கண்களில், பாய-ஒழுக, (அவனை நோக்கி) உமைவிடுத்து-உம்மைவிட்டு நீங்கி, உலகமதனில்-உலகத்தில், (நான்) ஒரு கணமேனும் - ஒரு கணப்போதேனும், தரியன்-இருக்கமாட்டேன், சாவேன்-இறப்பேன், என்றாள்-என்று சொன்னாள்; எ-று.

"பின்னர், பெண்களுக்குரிய இலக்ஷணத்தைக் கூறும் நூலில் சொல்லப்படும் இலக்ஷண முழுவதையும் தனக்குரிமையாக அடைந்தவளாகிய, அவ்வரசனுடைய இனிமை பொருந்திய மனையாள்,

தன் கணவன் துறவுபூண்டு வனத்திற்குச் செல்கின்றானென்பதை யுணர்ந்து, நடுங்கி, அவனைத் தொடர்ந்து சென்று நெஞ்சுருகி எதிரில் நின்று அன்புடனே அவன் பாதங்களை வணங்கிக் கதறி அழுது துடிதுடித்துக் கண்ணீரொழுக அவனை நோக்கி, நான் உம்மை விட்டுநீங்கி இவ்வுலகத்தில் ஒரு கணப்போதேனும் இருக்கமாட்டேன்; இறந்து படுவேன்' என்று கூறினாள்'' என்பது இதன் கருத்து.

'நூலதனில்' என்பதற்குப் பின், 'சொல்லப்படும்' என்ற சொல் இசை யெச்சமாக வருவித்துரைக்கப்பட்டது; இன்னும் சில சொற்றொடர்களும் இங்ஙனமே வருவிக்கப்பட்டன. மனை-ஆகுபெயராய் மனையாளை உணர்த்தி நின்றது. பனி-துளி; இங்குக் கண்ணீர்த் துளியை உணர்த்தி நின்றது. (43)

அரசன் தன் மனைவிக்குச் சமாதானங் கூறுதல்.

44 நின்னுடைய நாயகனை நினதுள்ளே யுறநோக்கி
நிற்க மாட்டா
துன்னுடைய நாயகனென் றென்றனையே கருதிநீ
யுழல்வ தென்னே
மின்னனைய விடையாய்கே ளனைவருக்கு நாயகனோர்
மேலா மீசன்
அன்னவனை யேதேடிப் போகின்றே னெனவரசற்
கரிவை சாற்றும்.

இ-ள்: (மனைவி அவ்வாறு கூறியதைக் கேட்ட அரசன், அவளை நோக்கி), மின்அனைய - மின்னலை நிகர்த்த, இடையாய்- இடையை உடையவளே, கேள் - (நான் சொல்வதைக்) கேட்பாயாக, நின்னுடைய நாயகனை - (உனக்குள்ளே யிருக்கும்) உன்னுடைய நாதனை, நினதுள்ளே - உனக்குள்ளே, உற-பொருந்த,

நோக்கி-பார்த்து, நிற்கமாட்டாது-(உண்மை நிலையில்) நிற்கமாட்டாமல், என்தனையே - (உன்னுடைய நாயகனல்லாத) என்னையே, உன்னுடைய நாயகனென்று கருதி - உன்னுடைய நாதனென்று நினைத்து, நீ உழல்வது என்னே - நீ கலங்குவது என்ன காரணம்?, (இது மதியீனமாகும்) அனைவருக்கும் - எல்லாருக்கும், நாயகன்-தலைவன், ஓர் - ஒப்பற்ற, மேலாம் - உயர்வாகிய, ஈசன்-பரமேசுரனுவான், (நான்) அன்னவனையே - அப்பேர்ப்பட்ட தலைவனையே, (அடைய) தேடிப் போகின்றேன்-தேடிக்கொண்டு செல்கின்றேன், என-என்று கூற; அரசற்கு-அவ்வரசனுக்கு, அரிவை-அந்தப் பெண்மணி, சாற்றும் - (சில வார்த்தைகளைச்) சொல்லுவாளாயினுள்; எ-று.

"மனைவி அவ்வாறு கூறியதைக் கேட்ட அரசன், அவளை நோக்கி, 'மின்னலை நிகர்த்த இடையையுடையவளே! நான் சொல்வதைக் கேட்பாயாக: ஒவ்வொருவருக்குள்ளும் பரமாத்மாவாகிய நாயகனிருக்கின்றான்; அப்படியே உனக்குள்ளும் இருக்கின்றான்; அவனே உண்மையான நாயகன்; அப்படி உனக்குள்ளிருக்கும் உண்மையான நாயகனை, உனக்குள்ளே பொருந்த நோக்கி உண்மை நிலையில் நிற்கமாட்டாமல், உனக்கு நாயகன்போல தோன்றி மறையும் - உன்னுடைய நாயகனல்லாத என்னை, உனக்குரிய நாயகனென்று நீ கருதிக்கலங்குவது என்ன காரணம்? இது மதியீனமாகும். எல்லாருக்கும் தலைவன் மேற்கூறியபடி ஒவ்வொருவருக்குள்ளுமிருக்கும் பரமாத்மாவாகிய ஈசுரனுவான்; நான் அப்பேர்ப்பட்டவனையே அடையத் தேடிச் செல்கின்றேன்' என்று கூற, அவ்வாறு கூறிய அரசனுக்கு அந்தப் பெண்மணி சில வார்த்தைகளைக் கூறுவாளாயினுள்" என்பது இதன்கருத்து.

அரசனுடைய மனைவி, அவனது மனித வடிவத்தையே நாயகனென்று கருதியிருந்தா ளாதலின், இந்த வடிவம் அநித்தியமானது; ஆத்மாவே நித்தியமானது; ஆதலின் அந்த ஆத்மாவே உனக்கு

நாயகன்; மற்ற எல்லோருக்கும் நாயகன்; நான் அவனையே தேடிச் செல்கின்றேன்; நீயும் அவனைத் தேடிக் கண்டுகொள்வாயாக என்று, அரசன், உண்மை நாயகன் இன்னவனென்பதை அவளுக்குணர்த்தினன். (44)

அரசன் மனைவி, தான் கணவனை விடுக்க
விதியில்லை யென்று கூறுதல்.

45 ஞானமா னதுபொதுவே நூலதனிற் றுறவதற்கு
நவில்வ தில்லா
ளானமா தினையலவோ விடுகவென வறையும்பதி
யான வுன்னை
ஈனமா விடுகவென வறையுமதோ துறவறமிங்
கெனக்கென் சொல்லும்
ஆனதா லுனையொழிந்து கதியிலையே யெனவெணியா
னடுத்தே னென்றாள்.

இ-ள்: (அவ்வாறு சொல்லத் தொடங்கியவள், அரசனை நோக்கி,''எல்லோருக்கும் பரமேசுரன் தலைவனென்பதும், நீ அவனை அடையத் துறவுபூண்டு செல்வதும் சரிதான்; ஆனால், எல்லோரும் நூல் விதிப்படி நடக்கக்கட்டுப்பட்டவர்கள்;) நூல்அதனில் - சாஸ்திரத்தில் (உள்ள) ஞானமானது - கல்வி யறிவானது, பொதுவே- (ஆண் பெண்களாகிய இருவகுப்பாருக்கும்) பொதுவாயிருப்பதாம், (ஆதலின், இருவரும் அதனை அங்கீகரிக்கக் கடமைப்பட்டிருக்கின்றார்கள்;) துறவுஅதற்கு - துறவினுக்கு, நவில்வது - (அத்துறவு நூலிலே) சொல்லப்படும் விதி, (அத்துறவுக்கு இடையூறாயிருக்கும்) இல்லாள்ஆன - மனைவியான, மாதினை அல்லவோ - பெண்ணையல்லவோ, விடுக என - (புருடர்) விடவேண்டும் என்று, அறையும்-

சொல்லும், (நான்) பதிஆன உன்னை-நாயகனுகிய உன்னை, ஈனமா-இழிவாக, விடுகஎன-விடவேண்டுமென்று, அது அறையுமோ-அது சொல்லுமோ?, துறவறம் - துறவற நூல், இங்கு-இவ்வுலகத்தில், என்க்கு-, என்சொல்லும்-என்னகூறும்?, (ஒன்றுமில்லை) ஆனதால்-ஆகையால், (மனைவியர்க்குப் புருடரே பதி, கதி என்று சொல்லும் நீதி சாஸ்திர விதியை நான் கைக்கொள்ளவேண்டியவளா யிருக்கின்றேன்; அந்த நியாயப்படி) உனைஒழிந்து - உன்னையன்றி, கதி இல்லை-(எனக்கு வேறு) திக்கில்லை, என-என்று, யான்எண்ணி-நான் நினைத்து, அடுத்தேன் - (உன்னிடம் வந்து) சேர்ந்தேன்'', என்ருள்-என்று கூறினுள்.

''அவ்வாறு சொல்லத் தொடங்கியவள், அரசனை நோக்கி, 'எல்லோருக்கும் பரமேசுரன் தலைவனென்பதும், நீ அவனை யடையத் துறவுபூண்டு செல்வதும் சரிதான்; ஆனுல், எல்லோரும் நூல் விதிப்படி நடக்கக் கடமைப்பட்டவர்கள்; சாஸ்திரத்தால் ஏற்படும் கல்வி யறிவானது ஆண், பெண்களாகிய இருவகுப்பாருக்கும் பொதுவாயிருப்பதாம்; ஆதலின், இருதிறத்தாரும் அதனை அங்கீகரிக்கக் கூடியவர்களாயிருக்கிருர்கள்; துறவினுக்கு, அத்துறவு நூலிலே சொல்லப்படும் விதி, அத்துறவுக்கு இடையூருயிருக்கும் மனையாளையல்லவா புருடர் விடவேண்டுமென்று சொல்லும்? எனக்கு நாயகனுகிய உன்னை நான் விடவேண்டுமென்று சொல்லுமோ? துறவறநூல் இங்கே எனக்கென்ன சொல்லும்? ஒன்றுமில்லை; ஆனதால், 'மனைவியர்க்குப் புருடரே கதி-பதி' என்று சொல்லும் நீதி சாஸ்திரவிதியை நான் கைக்கொள்ளவேண்டியவளாயிருக்கின்றேன் அந்த நியாயப்படி உன்னையன்றி எனக்கு வேறு கதியில்லை யென்று நான் நினைத்து உன்னையடுத்தேன் என்று கூறினுள்'' என்பது இதன்கருத்து. 'துறவறம்' ஆகுபெயராய் அதனைக் கூறும் நூலை யுணர்த்திற்று. (45)

அரசன், தன் மனைவி கூறியதற்குச் சமாதானங்
கூறிவிட்டுச் செல்லுதல்.

46 ஆகமத்தின் விதிதவறா தறைந்தனை நீ விவேகியே
யாவாய் யானும்
தேகமுதற் பிரபஞ்ச மதனினசை விடுத்துவனஞ்
செல்லா நின்றேன்
நாகமுலை யாயெனுரை தடுத்தலுன்றன் விரதமல
நாடு தன்னில்
போகுதியென் றவளைவிடுத் தேதிலரைப் போலகன்று
போகா நின்றான்.

இ-ள்: (மனைவி கூறியதைக் கேட்ட அரசன், அவளை நோக்கி) நீ-, ஆகமத்தின் விதி தவறாது - மனுதர்ம சாஸ்திரவிதி கடவாமல், அறைந்தனை - நியாயங் கூறினை, (ஆதலின்) விவேகி ஆவாய்-புத்திசாலியாவாய், (ஆனால், நீ கூறியவிதி, நான் இல்லறத்தி லிருந்தால் மாத்திரம் என்னிடம் உபயோகப்படுத்திக்கொள்ளத் தக்கதாயிருக்கும்) யான்-நானோ, தேகம்முதல்-உடம்பு முதலாகிய, பிரபஞ்சமதனின் - உலகத்தின், நசை - ஆசையை, விடுத்து-நீக்கி, (துறவுபூண்டு) வனம் செல்லா நின்றேன் - காட்டிற்குச் செல்கின் றேன், (ஆதலின், அந்த இல்லற சாஸ்திர விதியை என்னிடம் உப யோகித்தல் முடியாது; நீ மாத்திரமே அதனை அனுசரிக்க வேண் டிய நிலையிலிருக்கின்றாய்; அந்தச் சாஸ்திர விதிப்படி மனைவியா யிருப்பவள் புருஷன் வார்த்தையைத் தட்டுதல் கூடாது) நாகு- இளமை பொருந்திய, அம் - அழகிய, முலையாய் - தனங்களையுடை யவளே!, (நீயோ பதிவிரதை; அப்படிப் பதிவிரதையாகிய நீ) என்உரை தடுத்தல் - என் வார்த்தையை மறுப்பது, உன்றன் விரத மல-உன்னுடைய கற்புக்குரிய விரதமாகாது, (ஆதலின், என் வார்த் தைக் கிசைந்து) நாடுதன்னில்-நாட்டிற்கு, போகுதி-செல்வாயாக,

என்று - என்று கூறி, அவளைவிடுத்து - அவளைவிட்டு, ஏதிலரைப் போல்-அயலாரைப்போல, அகன்று-(அவ்விடத்தை விட்டு) நீங்கி, போகாநின்றான்-போயினான்; எ-று.

"மனைவி கூறியதைக் கேட்ட அரசன் அவளை நோக்கி, 'நீ மனுதர்ம சாஸ்திர விதிகடவாமல் நியாயங் கூறினை; ஆதலின், விவேகியாவாய்; ஆனால் நீ கூறியவிதி நான் இல்லறத்திலிருந்தால் மாத்திரம் என்னிடம் உபயோகப்படுத்திக் கொள்ளத் தக்கதாகும்; நானோ உடம்பு முதலான உலகப்பற்றை நீக்கித் துறவுபூண்டு வனத்திற்குச் செல்கின்றேன்; ஆதலின், அந்த இல்லற சாஸ்திரவிதியை இனி என்னிடம் உபயோகித்தல் முடியாது; நீ மட்டுமே அதனை அனுசரிக்கவேண்டிய நிலையிலிருக்கின்றாய்; அந்தச் சாஸ்திர விதிப் படி மனைவியாயிருப்பவள் புருஷன் வார்த்தையைத் தட்டுதல் கூடாது; நீயோ பதிவிரதை; கற்புடையவளாகிய நீ என் வார்த்தையை மறுப்பது உன்னுடைய பதிவிரதா தர்மத்திற்குரிய விரதமாகாது; ஆதலின், என் வார்த்தைக் கிணங்கி நாட்டிற்குச் செல்வாயாக' என்று கூறி அவளை விடுத்து அயலாரைப்போல அவ்விடத்தை விட்டு நீங்கிச் சென்றான்" என்பது இதன்கருத்து.

'யானும்' என்பதிலுள்ள உம்மை - அசை. 'நாடு தன்னில்' என்பது உருபு மயக்கம்; நான்காம் வேற்றுமை ஏழாம் வேற்றுமையாக மயங்கி வந்தது. 'போனான்' என்னும் இறந்தகால வினைமுற்று, 'போகா நின்றான்' என நிகழ்கால முற்றாக மாறிவந்தது; காலவழுவமைதி. (46)

### அரசன் மனைவி வருந்தி மாமன் வீடுபோய்ச் சேருதல்.

47 விரிவாய ஞானமதை யுணர்ந்தாலு மடந்தைபதி
விலங்க நிற்றல்
அரிதாய தகைமையினா லேங்கியே பதைபதைத்தங்
கவனை நோக்கித்

தரியாது கதறியே வினை தனையே நொந்து தான்
தளர்ந்து நின்று
தெரியாது மறைந்தவிடந் தனின்மிகவு முருகியே
தேம்பி வீழ்ந்து.

இ-ள்: மடந்தை - பெண்ணானவள், விரிவாய-விரிவாயுள்ள, ஞானமதை-ஞானத்தை, உணர்ந்தாலும்-அறிந்திருந்தாலும், பதி-(தன்னுடைய) கணவன், விலங்க - (தம்மைவிட்டு) விலகியிருக்க, நிற்றல் - (தனிப்பட்ட நிலைமையில்) நின்று வாழ்வது, அரிது-அருமை, ஆயதகைமையினால் - (அப்படி) ஏற்பட்ட தன்மையினால், மடந்தை-(மகாராஜன் மனைவியாகிய) அந்தப் பெண், (அன்னியன் போலத் தன்னைவிட்டுச் சென்ற தன் நாயகனது செய்கையைக் கண்டு) ஏங்கி-ஏக்கமுற்று, பதைபதைத்து-துடிதுடித்து, அங்கு-அவ்விடத்தில், அவனை நோக்கி-அவனைப் பார்த்து, தரியாது-(துயரம்) சகிக்கமுடியாமல், கதறி - (ஓவென்று) கதறியழுது, வினைதனையே-(தனது பிராரத்துவ) கர்மத்தையே, நொந்து-வெறுத்து, தளர்ந்து-சோர்வுற்று, மறைந்த இடந்தனில்-மறைவான விடத்தில், தெரியாது-(ஒருவருக்கும்) தெரியாமல், நின்று-(தனித்து) நின்று, மிகவும்-அதிகமாக, உருகி-மனமுருகி, தேம்பி-விம்மிவிம்மி யழுது, வீழ்ந்து-(கீழே) வீழ்ந்து; எ-று.

"பெண்ணாயிருப்பவள், விரிவான ஞானத்தை உணர்ந்திருந்தாலும் தன்னுடைய கணவன், தன்னைவிட்டு விலகியிருக்கத் தான் தனிப்பட்ட நிலையில் நின்று வாழுதல் அருமையாதலின், மகாராஜன் மனைவி, அன்னியன்போலத் தன்னைவிட்டுச் சென்ற அவனது செய்கையை எண்ணி, ஏக்கமுற்றுத் துடிதுடித்து, அவ்விடத்தில் அவனைப் பார்த்து, துயரம் சகிக்காமல் ஓவென்று கதறியழுது, இத்துன்பத்துக்குக் காரணமாயிருந்த தனது பிராரத்துவ கர்மத்தையே வெறுத்து, சோர்ந்து, மறைவான இடத்தில் ஒருவருக்கும்

தெரியாமல், நின்று மிகவும் மனமுருகி விம்மி விம்மி யழுது பூமியில் வீழ்ந்து," என்பது இதன்கருத்து.

'வீழ்ந்து' என்னும் வினையெச்சம் அடுத்த செய்யுளில்வரும் வினைகொண்டு முடியும். ஞானம் - மெய்ப்பொருள் இன்னது, பொய்ப்பொருள் இன்னது என்று பொருள்களின் தன்மையை யுணரும் விவேகம். 'மடந்தை' என்பது தீபகமாக இரண்டிடங் களிற் கூட்டப்பட்டது. நோதல்-வருந்துதல்; அஃதிங்கு வெறுத் தற் பொருளில் வந்தது. பிராரத்த வினையே இவ்வருத்தத்திற்குக் காரண மாதலின், மற்றொன்றையும் வெறுக்காமல் அதனையே வெறுத்தாள் அரசன் மனைவி; 'வினைதனையே' என்பதிலுள்ள ஏகாரம்-பிரிநிலைப் பொருளது. பிராரத்த கர்மம்-பழவினை; அதா வது, முன் சரீரங்களிற் செய்யப்பட்டு இப்போதேற்பட்டிருக்கும் சரீரத்திற் கேதுவாயுள்ள கருமம். (47)

48 வேந்தனே யுனைவிடுத்து முலகமதி லிருக்கவோ
விதித்தா னீசன்
தீர்ந்ததோ வுனக்கெனக்கும் வினைதானு மின்றளவிற்
சேர்ந்து நிற்கும்
போந்தவினை யெக்காலங் காண்பேனோ னினியெனவே
புலம்பி மாதும்
சார்ந்தனள்பின் றிரும்பியே நகரதனின் மாதுலன்றன்
சார்பு தன்னில்.

இ-ள்: வேந்தனே - அரசனே!, உன்னை விடுத்தும்-உன்னை விட்டு (நான்) நீங்கியும், உலகம்அதில்-இவ்வுலகத்தில், இருக்கவோ- (உயிருடன்) இருக்கவோ, ஈசன்-கடவுள், விதித்தான்-(என்னை) நியமித்தான்?, சேர்ந்துநிற்கும் - (நாமிருவரும்) கூடி (இல்லறத் திலே) நிற்கும், (அதாவது, கூடி வாழ்வதற் கேதுவா யமைந்திருந்த)

வினைதானும்-பழவினையும், இன்று அளவில்-இந்தநாள் அளவிலே, உனக்கும் எனக்கும் தீர்ந்ததோ - உனக்கும் எனக்கும் ஒழிந்துவிட்டதோ?, போந்தஉனை-(என்னோடு கூடி வாழ்ந்து பிரிந்து) சென்ற உன்னை, இனி-இனிமேல், நான்-, எக்காலம்-எந்தக் காலத்தில், காண்பேன் - காணுவேன், என - என்று, புலம்பி - பிதற்றி, மாது-அந்தப்பெண், பின்திரும்பி - பின்பக்கமாகத் திரும்பி நடந்து, நகர் அதனில் - நகரத்திலேயுள்ள, மாதுலன்தன் - தன் மாமனுடைய, சார்பு தன்னில் - இருப்பிடத்தில், சார்ந்தனள் - சேர்ந்திருந்தாள்; எ-று.

"அந்த மாது, 'அரசனே! நான் உன்னைவிட்டு நீங்கியும், உயிருடன் இவ்வுலகத்தில் இருக்கவோ ஈசன் என்னை நியமித்தான்? நாமிருவரும் கூடி இல்லறத்திலே நின்று வாழ்வதற் கேதுவாயமைந்திருந்த பழவினையும் இன்றளவிலே உனக்கும் எனக்கும் ஒழிந்துவிட்டதோ? என்னோடு கூடி வாழ்ந்து பிரிந்துசென்ற உன்னை இனி நான் எக்காலத்தில் காணுவேன்?' என்று புலம்பிப் பின்பக்கமாகத் திரும்பி நடந்து நகரத்திலேயுள்ள தன் மாமனது இருப்பிடத்தைச் சேர்ந்திருந்தனள்" என்பது இதன்கருத்து.

'விடுத்தும்' என்பதிலுள்ள உம்மை-விடுத்தால் இருக்க முடியாத நான் விடுத்தும் இருக்க என்ற இழிவை விளக்கி நின்றது. 'சேர்ந்து நிற்கும் வினைதானும் இன்றளவில் உனக்கெனக்கும் தீர்ந்ததோ' என மொழிமாற்றிச் சேர்த்துப் பொருள் கொள்க. தான், உம்-அசைகள். ஏ-அசை. 'மாதும்' என்பதிலுள்ள உம்மை-அசை. (48)

## வனத்திற்குச் சென்ற அரசன் நிலைமை.

49 அரசனந்த நகர்விடுத்துத் தேசநா டுகளுமகன்
றடவி சென்றே
இரவுபக லகநிலையே நிலையாக விருந்தவர்க
ளிடமே சேர்ந்து

பரகுருவி னுபதேசத் தரியபொருள் வினவியவர்
பகரக் கேட்டுத்
திரமனமா யொருவராற் கலங்காத ஞானியாய்த்
தீர னாகி.

இ-ள்: அரசன்-(யாவரையும் விட்டுச் சென்ற) மகாராஜன், அந்தநகர் விடுத்து-அந்த நகரத்தைவிட்டு, தேசம்-நாட்டையும், நாடுகளும் - நாட்டைச் சார்ந்த ஊர்களையும், அகன்று - விட்டுநீங்கி, அடவிசென்று - வனத்திற்குப்போய், இரவுபகல்-இரவும் பகலும், அகநிலையே-ஆத்துமாவை நோக்கிநிற்கும் நிலையே, நிலையாக-தமக்குரிய நிலையாக, இருந்தவர்களிடம் - நிஷ்டை கூடியிருந்த ஆத்மஞானிகளிடத்தில், சேர்ந்து-அடைந்து, பரகுருவின் - (முன்னே தனக்கு உபதேசஞ் செய்தருளிய) உயர்ந்த ஆசிரியருடைய, உபதேசத்து - மகாவாக்கிய உபதேசத்தின், அரியபொருள் - அரிய கருத்தை, வினவி-(ஐயந்திரிபு நீங்க) வினவி, அவர் பகர-அவர்கள் சொல்ல, கேட்டு-கேட்டுத்தெளிந்து, (அதனால்) திரமனமாய்-ஸ்திரமனமுற்று, ஒருவரால்-ஒருவராலும், கலங்காத-கலக்கமுறாத, ஞானியாய்-ஆத்ம ஞானமுடையவனாய், தீரனாய் - (மாயையை வெல்லும்) தீரமுடையவனாகி; எ-று.

"யாவரையும் விட்டுச் சென்ற மகாராஜன் அந்த நகரத்தை விட்டு, நாட்டையும், அந்நாட்டைச் சார்ந்த ஊர்களையும் விட்டு நீங்கிக் காட்டிற்குச்சென்று, இரவும் பகலும் ஆத்துமாவை நோக்கி நிற்கும் நிலையே தங்கட்குரிய நிலையாகக்கொண்டு நிஷ்டை கூடியிருந்த ஆத்ம ஞானிகளிடத்தில் சேர்ந்து, முன்னே தனக்கு உபதேசஞ் செய்தருளிய உயர்ந்த ஞானாசாரியருடைய மகாவாக்கிய உபதேசத்தின் அரிய பொருளை ஐயந்திரிபு நீங்க வினவி, அவர் சொல்லக் கேட்டுத் தெளிந்து, அதனால் மனோதிடம் பெற்று, ஒருவராலும் கலக்கமுறாத ஆத்மஞான முடையவனாய், மாயையை

வெல்லும் தைரியமுடையவனுகி" என்பது இதன்கருத்து. இதுவும் அடுத்த செய்யுளும் குளகம். 'நாடுகளும்' என்பது நாட்டைச் சார்ந்த ஊர்களை உணர்த்தி நின்றது. அகம்-ஆத்துமா. (49)

50 நகர்தனி லேகிப் பிச்சை நண்ணியே மனைக டோறும்
அகமகிழ்ந் தங்கை யேற்றே யவ்விடத் தருந்தி யாங்கே
செகமுளோர் பேயென் றெண்ணிச் சிரித்திட நாண மின்றி
இகபரத் திச்சை யற்றே யேகனு யுலாவ லுற்ருன்.

இ-ள்: (தனக்குப் பசிவந்தபோது) நகர்தனில் ஏகி-ஊருக்குள்சென்று, (பொறுமையோடு) மனைகள்தோறும் - வீடுகள் தோறும், நண்ணி-அடைந்து, (நெருங்கி) பிச்சை-பிச்சையுணவை, (கேட்டு வீடுகளிலுள்ளவர் கொடுக்கும்போது) அங்கை-அழகிய கைகளில், ஏற்று - வாங்கி, அகம்மகிழ்ந்து - மனங்களித்து, அவ் விடத்து -(வாங்கிய) அவ்விடத்திலேயே நின்று, அருந்தி-உண்டு, ஆங்கே-அங்கோ, செகம்உள்ளோர்-உலகப்பற்றுடைய மனிதர்கள், (தான்திரியும் கோலத்தைப் பார்த்து) பேய்என்று எண்ணி - (தன்னைப்) பேயென்று நினைத்து, சிரித்திட - நகைக்க, (அதற்காக) நாணம்இன்றி - வெட்கப்படுதலில்லாமல், இகபரத்து-இவ்வுலகத்திலும் மேலுலகத்திலும், (ஏற்படும்) இச்சைஅற்று-ஆசையொழிந்து, ஏகனுய்-தனிப்பட்டவனுய், உலாவல் உற்ருன்-உலாவித்திரிபவனுயினுன்; எ-று.

"தனக்குப் பசிவந்தபோது ஊருக்குள் சென்று பொறுமையோடு வீடுகள்தோறும் நெருங்கி, பிச்சைகேட்டு அவ்வீடுகளில் உள்ளார்கொடுக்கும் பிச்சை உணவைக் கைகளிலே வாங்கி மனமகிழ்ந்து அவ்விடத்தில் நின்றபடியே உண்டு, அங்கேயிருக்கும் உலகப்பற்றுடைய மனிதர், தான்திரியும் கோலத்தைப் பார்த்துத் தன்னைப் பேயென்று நினைத்துச் சிரிக்க, அதற்காக வெட்கப்படாமல், இவ்வுலகத்திலும் மேலுலகத்திலும் ஏற்படும் அனுபவ ஆசை

யை யொழித்துத் தனிப்பட்டவனாய் உலாவித் திரிந்தான்'' என்பது இதன்கருத்து. (50)

51 பொருந்திவாழிடமொன்றாகிற் பொருந்திடும்பற்றென்றெண்ணி
இருந்திலனோரிடத்து மெங்கெங்கு மொருவனாகித்
திருந்திய சமாதி விட்டுத் திரும்பிடா துறைக்க வுன்னி
இருந்திருந் திடங்க ளெங்கு மேகமே நோக்கி நின்றான்.

இ-ள்: (மேலும் அந்தத் தவராஜன்) பொருந்தி-தங்கி, வாழ் இடம்-வாழ்கின்ற இடம், ஒன்றாகில்-ஒன்றாயிருக்குமானால், (அதாவது, ஒரே இடமாயிருக்குமானால்) பற்று-(யான், எனது என்னும்) அபிமானம், பொருந்திடும் என்று எண்ணி-(மனத்தில்) உண்டாகும் என்று நினைத்து, ஓர் இடத்தும்-ஓரிடத்திலும், இருந்திலன்-வசித்திலனாயினான், எங்கெங்கும் - எவ்வெவ்விடத்திலும், ஒருவனாகி-ஏகனாகியே திரிந்து, திருந்திய-திருத்தமாகிய, (அதாவது, விகற்பமில்லாது ஒரே நிலையில் நிற்பதாகிய) சமாதிவிட்டு - நிர்விகற்ப சமாதி செய்வதைவிட்டு, திரும்பிடாது-(உலகத்தின் பக்கம்) திரும்பாமல், உறைக்க-(அச்சமாதியிலேயே) அழுந்தியிருக்க, உன்னி-நினைத்து, இருந்திருந்திடங்கள் எங்கும் - (தான்) இருந்த இருந்த இடங்களிலெல்லாம், ஏகமே-ஏகமாகிய தன்னையே (ஆத்மாவையே) நோக்கி நின்றான் - பார்த்து அந்த ஆத்ம தரிசன நிலையிலேயே நின்றான்; எ-று.

''மேலும் அந்தத் தவராஜன், தான் தங்க வாழ்கின்ற இடம் ஒன்றாயிருக்குமே யானால், யான், எனது என்னும் பற்று மனத்தில் உண்டாகுமென்று நினைத்து, ஓரிடத்திலும் தங்காதவனாயினான்; எவ்வெவ்விடத்திலும் ஏகனாகியே திரிந்து நிர்விகற்ப சமாதியை விட்டு உலகத்தின்பக்கம் திரும்பாமல் அச்சமாதியிலேயே அழுந்தியிருக்கத் தீர்மானித்து, தான் இருந்த இருந்த இடங்களிலெல்லாம்

ஏகமாகிய தன்னையே (ஆத்மாவையே) நோக்கி அந்த ஆத்ம தரிசன நிலையிலேயே நின்றான்'' என்பது இதன்கருத்து.

யான், எனது என்னும் பற்றாவது, உடம்பை யான் என்றும், உலகப்பொருளை என்னுடையது என்றும் கருதி அவற்றில் விருப்பம் வைத்தலாம். நிர்விகற்ப சமாதி - மனோவாசனை நீங்கிப் பரப்பிரம சொரூபம் தானெனக்கண்டு அதை நோக்கியிருக்கும் நிலை. 'இருந்த இருந்த' என்பவற்றின் ஈற்றகரம் தொகுத்தலாய், 'இருந் திருந் திடங்கள்' என்ற சொற்றொடர் அமைந்தது. (51)

52 தோன்றிடு முலக மெங்கே
தோன்றிடு மென்ன நோக்கித்
தோன்றிடு நினைவி லென்றே
தோன்றிய நினைவு தானும்
தோன்றிடு மிடத்தைப் பார்த்துத்
தோன்றிடுஞ் சொரூபத் தென்றே
தோன்றிடும் பொருள்க ளெல்லாஞ்
சொரூபமே யென்று கண்டான்.

இ-ள்: (ஏகமாகிய தன்னையே நோக்கியிருத்தலாகிய நிர்விகற்ப சமாதியிலிருந்த அத்துறவியாகிய மகாராஜன் அது பூரணமான நிலையை அடைந்த சமயம்) தோன்றிடும் உலகம் - தோன்றுகின்ற இவ்வுலகமானது, எங்கே தோன்றிடும்-எவ்விடத்தினின்றும் தோன்றுகிறது, என்ன நோக்கி-என்று ஆராய்ந்து பார்த்து, நினைவில் தோன்றிடும் என்று - (அது) நினைவிலே தோன்றுகின்றதென்றுணர்ந்து, (பின்னர்) தோன்றிய நினைவுதானும் - தோன்றுகின்ற அந்த நினைவும், தோன்றிடும் இடத்தைப் பார்த்து - தோன்றுகிற இடத்தை ஆராய்ந்து நோக்கி, சொரூபத்து-(தன் ஆத்ம) சொரூபத்திலே, தோன்றிடும் என்று - (அது) தோன்றும் என்றுணர்ந்து, (உலகம் நினைவில் தோன்றுவதாலும், நினைவு ஆத்ம சொரூபத்தில்

தோன்றுவதாலும், சொரூபமின்றி நினைவில்லை; நினைவின்றி உலகில்லை; ஆதலின்,) தோன்றிடும் பொருள்களெல்லாம் - தோன்றுகின்ற பொருள்களியாவும், சொரூபமே என்று கண்டான்-(தனது நிஜவடிவமான ஆத்ம) சொரூபமே யாமென்று இவ்விவரங்களைத் தெரிந்துகொண்டான்; எ-று.

"ஏகமாகிய தன்னையே நோக்கியிருத்தலாகிய நிர்விகற்ப சமாதியிலிருந்த அத்துறவியாகிய மகாராஜன், அது பூரணமான நிலையை அடைந்த சமயத்தில், 'தோன்றுகின்ற இவ்வுலகமானது எவ்விடத்தினின்றும் தோன்றுகிறது?' என்று ஆராய்ந்து பார்த்து, 'அது நினைவிலே தோன்றுகிறது' என்றுணர்ந்து, பின்னர் தோன்றுகின்ற அந்த நினைவும் தோன்றுகிற இடத்தை ஆராய்ந்து பார்த்து, 'அது ஆத்ம சொரூபத்தில் தோன்றும்' என்றுணர்ந்து, உலகம் நினைவில் தோன்றுவதாலும், நினைவு ஆத்ம சொரூபத்தில் தோன்றுவதாலும், சொரூபமின்றி நினைவில்லை, நினைவின்றி உலகில்லை; ஆதலின், தோன்றுகின்ற பொருள்களெல்லாம் தனது நிஜவடிவமான ஆத்ம சொரூபமே யாம் என்று இவ்விவரங்களைத் தெரிந்து கொண்டான்" என்பது இதன்கருத்து. (52)

53 தோன்றிடும் பொருள்க ளுண்டாய்த்
தோன்றியே யின்ப மாகித்
தோன்றிடு மதனு லந்தச்
சொரூபமே யென்று கண்டு
தோன்றிடுஞ் சொரூபந் தன்னிற்
றோன்றுமீ தசத்தே யென்று
தோன்றிடுஞ் சொரூபந் தானாய்த்
துளக்கமற் றிருந்தான் வேந்தன்.

இ-ள்: (பின்னர்) வேந்தன் - அவ்வரசன், தோன்றிடும் பொருள்கள்-(அவ்வாறு) தோன்றும் பொருள்கள், (நாமரூபங்களை

நீக்கியவிட்டத்து) உண்டாய்-நிலைபெற்று, தோன்றி-விளங்கி, இன்பம் ஆகி-ஆனந்தம் ஆகி, (அஸ்தி பாதிப் பிரியம்-சத்து சித்து ஆனந்தம் ஆகி) தோன்றிடும்-(ஆத்ம சொரூபமாய்) விளங்கும், அதனால்-அவ்வியற்கையாலே, (அந்தப் பொருள்கள்) அந்தச் சொரூபமே என்று கண்டு-அந்த ஆத்ம சொரூபமேயா மென்றுணர்ந்து, தோன்றிடும் - (சச்சிதானந்த வடிவமாக) விளங்குகின்ற, சொரூபந்தன்னில் - ஆத்ம சொரூபத்தில், தோன்றும் - (கயிற்றரவு போலத்) தோன்றுகிற, ஈது-இந்த உலகமானது, அசத்தே என்று-சத்தில்லாத (நிலையில்லாத) பொருளே என்று தெளிந்து, தோன்றிடும்-(எக்காலத்தும் ஒரே தன்மையான சத்துப்பொருளாய்) விளங்கும், சொரூபம் தானாய் - பரமாத்மா வடிவம் தானாக, (தீர்மானித்து) துளக்கம்அற்று இருந்தான்-அசைவில்லாமல் இருந்தான்; எ-று.

"பின்னர் அவ்வரசன், அவ்வாறு தோன்றும் பொருள்கள், நாம ரூபங்களை நீக்கியவிட்டத்து, நிலைபெற்று, விளங்கி, ஆனந்தமாகி (சச்சிதானந்தமாகி) ஆத்ம சொரூபமாய் விளங்கும்; அதனால் அந்தப் பொருள்கள் அந்த ஆத்ம சொரூபமேயா மென்றுணர்ந்து, சச்சிதானந்த வடிவமாக விளங்குகின்ற ஆத்ம சொரூபத்தில், கயிற்றரவுபோலத் தோன்றும் இந்த உலகமானது அசத்துப்பொருளே (நிலையற்ற பொருளே) என்று தெளிந்து, எக்காலத்தும் ஒரே தன்மையான சத்துப்பொருளாய் விளங்கும் பரமாத்ம வடிவம் தானாகவே தீர்மானித்து (தானே என்றுறுதி கொண்டு) அசைவில்லாமல் இருந்தான்" என்பது இதன்கருத்து.

சத்து-எதனாலும் கெடுக்கப்படாது முக்காலத்தும் ஏகரூபமாய் நிலைபெற்றிருப்பது; சித்து-சுயம்பிரகாசமுள்ளதாய்த் தான் வேறு பிரகாசத்தை விரும்பாது யாவற்றையும் பிரகாசிக்கச்செய்து விளங்குவது; ஆனந்தம்-எக்காலத்தும் துக்கமற்றிருக்கும் நிலை. இம்மூன்றும் பரமாத்மாவினிடமுள்ளவை. ஆதலின், அந்த ஆத்மா சச்சிதானந்த சொரூபி எனப்படும். நிலைபெற்று, விளங்கி, ஆனந்த

மாகித் தோன்றும் சச்சிதானந்த வியல்புகள், 'அஸ்தி பாதிப் பிரியம்' என்று சொல்லப்படும்; அஸ்தி-சத்து; பாதி-சித்து, பிரியம்-ஆனந்தம். இந்தச் சச்சிதானந்த இயற்கைகள் ஆன்மாவின் வடிவமானும், உலக வடிவமான விருத்தியின் பேதத்தால் வேறுபட்டிருக்கும்; எப்படியெனில், கல், மண் முதலிய மூடவிருத்தியான தமோகுணத்தில் சத்து விளங்கும்; காமம் முதலிய கோரவிருத்தியான ரஜோகுணத்தில் சத்தும், சித்தும் விளங்கும்; ஒழிவு முதலிய சாந்த விருத்தியான சத்துவகுணத்தில் ஆனந்தம் விளங்கும். ஒரு மலரில் வடிவம், சுவை, பரிசம் முதலியன அதன் அம்சமாகவே ஒன்றுயிருந்தபோதிலும் இந்திரியங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொன்றைத் தான் அததற்கேற்றபடி யுணரும்; இப்படி ஒரே மலரின் இயற்கைகள் இந்திரியங்களுக்குத் தக்கபடி வெவ்வேறாகித் தோன்றுவதுபோல, ஆத்ம சொரூபமாகிய சச்சிதானந்த வியற்கைகளும் உலக வடிவமான விருத்தி பேதத்தால் இந்திரியங்களுக்குத் தக்கபடி வெவ்வேறு வடிவங்களாகத் தோன்றும்; இவ்வாறு தோற்றும் பிரபஞ்ச வடிவங்கள், பழுதையிற் பாம்புபோல கற்பிதமாய்த் தோற்றுவனவாம்; அறிவினல் ஆராய்ந்து இவை கற்பிதமாய் மனோ விருத்தியால் உண்டானவை யென்றுணர்ந்து இவற்றின் நாம ரூபங்களை நீக்கிப் பார்க்குமிடத்து சச்சிதானந்தமாகிய ஆத்ம சொரூப மாத்திரமே நிலைத்திருப்பதாய் விளங்கும். அங்ஙனம் விளங்குமிடத்து அந்த ஆத்மா தானே யென்பது தெளிவாம். இந்த விவரங்களை அரசன் உணர்ந்து அசைவற்ற நிலையிலிருந்தான். கயிற்றரவு அல்லது பழுதையிற் பாம்பு என்பது, இருளில் ஒரு கயிற்றைக் கண்டு பாம்பென மயங்குதலாம். (53)

54 கடிநகர் தோறுஞ் சென்றுங் கானகந் தோறுஞ் சென்றும்
படிவுல மாக வந்தும் பார்வைமா றுட்ட மின்றி
மடிவிலா மனத்த னுகி மாசிலா நிலைமை பெற்று
முடியுடை வேந்தர் வேந்தன் முத்தியே வடிவ மானன்.

இ-ள்: (அப்பால்), முடிஉடை-(தலையில் தரித்த) கிரீடத்தையுடைய, வேந்தர் வேந்தன் - அரசர்களுக்கெல்லாம் தலைமையான மகாராஜன், கடி-காவலையுடைய, நகர்தோறும் சென்றும்-நகரங்கள்தோறும் போயும், கானகந்தோறும் சென்றும் - காடுகள்தோறும் போயும், படி-பூமியை, வலமாக வந்தும் - வலமாகச் சுற்றிவந்தும், பார்வை - (தான் மேற்கூறியபடி உண்மைகண்டு தீர்மானித்துக் கொண்டவாறு எதிர்ப்படும் பொருள்களை யெல்லாம் பரமாத்மா சொரூபமாகவே பார்க்கும்) பார்வையானது, மாறுபட்டம் இன்றி-மாறுபடுதல் இல்லாமல், (எல்லாவற்றையும் சிவசொரூபமாகவே பார்த்து) மடிவுஇல்லா-(பசி, பிணி முதலியவற்றால்) தளர்வதில்லாத, மனத்தன் ஆகி-மனத்தினையுடையவனாகி, மாசு இல்லா நிலைமை-(என் அறிவுந் தேகமும் ஆத்மாவையே பற்றி நிற்கின்றன; அதனால் யான் ஆத்ம சொரூபனாயிருக்கின்றேன் என்னும்) பரிசுத்தமான நிலைமையை, பெற்று - அடைந்து, முத்தி வடிவமானான் - மோக்ஷ சொரூபனாயினான் (ஒருபற்றுமில்லாதவனாயினான்); எ-று.

"அப்பால், கிரீடத்தையுடைய அரசர்களுக்கெல்லாம் மேலான அரசனாகிய மகாராஜன், காவலையுடைய நகரங்கள்தோறும், காடுகள் தோறும் சென்றும், பூமியை வலமாகச் சுற்றிவந்தும் (பூப்பிரதக்ஷிணம் செய்தும்) தான் மேற்கூறியபடி தீர்மானித்துக் கொண்டவாறு, எதிர்ப்படும் பொருள்களை யெல்லாம் பரமாத்ம சொரூபமாகவே பார்க்கும் பார்வை மாறுபடுதலில்லாமல் எல்லாவற்றையும் சிவசொரூபமாகவே பார்த்து, பசி, பிணி முதலியவற்றால் தளராத மனத்தினையுடையவனாகி, 'என் அறிவுந் தேகமும் ஆத்மாவையே பற்றி நிற்கின்றன; அதனால் யான் ஆத்ம சொரூபனாயிருக்கின்றேன்' என்னும் பரிசுத்தமான நிலைமையைப் பெற்று, ஒருபற்றுமில்லாத மோக்ஷரூபனாய் விளங்கினான்" என்பது இதன்கருத்து.

அரசன், தான் உண்மை கண்டபடியே தன் பார்வையானது ஆத்ம தரிசனத்தையே பற்றி நிற்கின்றதா என்பதைப் பரிசோதிக்

கும் பொருட்டே மனத்தைக் கலங்கச்செய்யும் பற்பல விடயங்களும், பொருள்களும் காணப்படும் பற்பல விடங்கட்கும் சென்று அப்பார்வை மாறுபடாத நிலை கண்டான். எல்லாவற்றையும் விடுதலே வீடு-மோக்ஷமாம். ஆதலின், 'முத்தி வடிவமானான்' என்பதற்கு, 'ஒருபற்றுமில்லாதவனாயினான்' என்று பொருள் எழுதப் பட்டது. (54).

55 முத்தியே வடிவ மான முடியுடை வேந்தர் வேந்தன்
எத்திசை தனக்கு மிராச னென்னைவிட வேறில் லென்று
சத்திய மாக வெண்ணித் தன்னிட மதனிற் றன்னைச்
சுத்திசெய் தனைத்து மாகிச் சுயஞ்சோதி யாகி நின்றான்.

இ-ள்: (அவ்வாறு) முத்தியே வடிவமான-மோக்ஷவடிவான, முடிஉடை-கிரீடத்தைத் தரித்த, வேந்தர் வேந்தன் - அரசர்க்கரசனான துறவரசன், எத்திசை தனக்கும்-எந்தத்திக்கிற்கும், என்னைவிட-என்னைக்காட்டிலும் (மேம்பட்ட) வேறு இராசன்இல் என்று-வேறே அரசன் இல்லையென்று, (எங்கும் வியாபகமாயிருக்கும் பரமாத்மா சொரூபனாகிய தன்னை உணர்ந்துகொண்ட தன்மையால்) சத்தியமாக-உண்மையாக, எண்ணி-நினைத்து, தன்இடம் அதனில்-(நிஜவடிவமாகிய) தன்னிடத்தில், (அதாவது, சிவசொரூபமாகிய ஆத்மாவில்) தன்னை - (கற்பிதவடிவமாயிருந்த ஜீவன் என்னும்) தனது வடிவத்தை, சுத்திசெய்து - (தத்துவமசி யென்னும் மகாவாக்கியார்த்த விசாரணைசெய்து, கற்பிதமாய்த் தோன்றிய தேகம் முதலிய உபாதிகளை நீக்கிச்) சுத்தமாக்கி ஐக்கியப்படுத்தி, அனைத்தும் ஆகி-(அஸ்தி பாதிப் பிரியத்தால் - சச்சிதானந்தத்தால் தோன்றிடும்) எல்லாப் பொருள்களும் தானேயாகி, சுயம்சோதி ஆகி நின்றான்-சுயம்பிரகாச வடிவமாய் நிலைபெற்றிருந்தான்; எ-று.

"அவ்வாறு மோக்ஷவடிவான, கிரீடத்தைத் தரித்த அரசர்க்கரசனான துறவரசன், எங்கும் வியாபகமாயிருக்கும் பரமாத்ம

சொரூபனாகிய தன்னை உணர்ந்துகொண்ட தன்மையால், எந்தத் திக்கிற்கும் என்னைக் காட்டிலும் மேம்பட்ட வேறு அரசன் இல்லையென்று உண்மையாக நினைத்து, நிஜவடிவமாகிய தன்னிடத்தில்-(சிவசொரூபமாகிய ஆத்மாவில்) கற்பிதவடிவமாயிருந்த ஜீவன் என்னும் தனது வடிவத்தை, தத்துவமசி யென்னும் மகாவாக்கியார்த்த விசாரணைசெய்து, கற்பிதமாய்த் தோன்றிய தேகம் முதலிய உபாதிகளை நீக்கிச் சுத்தமாக்கி ஐக்கியப்படுத்தி, சச்சிதானந்த வியல்பினால் தோன்றிடும் எல்லாப் பொருள்களும் தானேயாகிச் சுயம்பிரகாச வடிவமாய் நிலைபெற்றிருந்தான்'' என்பது இதன்கருத்து.

பரமாத்மாவின் பிரகாசமே ஜீவன் என்று சொல்லப்படும்; இது, பிரமத்தினின்றும் பிரதிபிம்பமாய்த் தோன்றி ஸ்தூல தேக அபிமானியாய்த் தேகம், இந்திரியம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம், பிராணன் என்னும் முக்கியமான ஏழு பாதிகளையுடையதாயிருக்கும். இது, மாயையால் பரமாத்மாவைத் தன்னின் வேறாக நினைக்கின்றது. தத்துவ ஞானத்தால் இந்த அவித்தையை-அஞ்ஞானத்தை நீக்கினால், கற்பிதவடிவமாகிய தேகம் முதலிய உபாதிகள் பொய்யாய் ஜீவன் பரிசுத்தமடையும்; அப்போது பரமாத்மாவும் தானும் ஒன்றென்றுணர்ந்து அதில் ஐக்கியமாம். இது, 'ஜீவபர ஐக்கிய' மென்று சொல்லப்படும். இதனை, 'தத்துவமசி' என்னும் மகாவாக்கியம் உணர்த்தும். இந்த மகாவாக்கியம், சாமவேதம், சாந்தோக்கிய உபநிஷத்திற் கூறப்படுவது. இது, தத்பதம், துவம்பதம், அசிபதம் என்னும் மூன்று பதங்களைக் கொண்டதாகும். தத்பதம்-பரமாத்மா, துவம்பதம் - ஜீவாத்மா, அசிபதம் - ஐக்கியம். இந்த வாக்கியார்த்தத்தை விசாரணை செய்தால் ஜீவாத்ம பரமாத்ம ஐக்கியமேற்படும். ஆதலின், மகாராஜன் இதனை விசாரஞ்செய்து தன் கற்பிதவடிவமாகிய ஜீவனை உபாதிகளினின்றும் நீக்கிச் சுத்தமாக்கிப் பரமாத்மாவில் ஒடுக்கினான். உபாதி-மாயாகாரியம். சுயம்பிரகாசம்-இயற்கையொளி; கலப்பற்ற ஜோதி. (55)

56 தன்னையே யன்றி யொன்றுந் தானுதி யாவி டத்தின்
மின்னையே யொத்த வைய மித்தைகற் பிதம தென்று
பொன்னையே யன்றி வேறு பூடண மிலது போல
என்னையே யன்றி யொன்று மில்லெனத் தேர்ந்தான் வேந்தன்.

இ-ள்: (பிறகு) வேந்தன் - அரசன், தன்னையே அன்றி- (ஸ்தூலம், சூக்ஷமம், காரணம் என்னும் மூன்று சரீரங்கட்கும் விலட்சணமாய்-வேறாய், சாக்கிரம், சொப்பனம், சுழுத்தியென்னும் மூன்று அவஸ்தைகட்கும் சாட்சியாய்-அறிகின்ற பொருளாய், சச்சி தானந்த வியாபக-நிறைவான ஈசுர வடிவமாயுள்ள பரமாத்மாவாகிய) தன்னையல்லாமல், ஒன்றும்-வேறொன்றும், உதியா-உண்மையாகத் தோன்றுவதில்லாத, இடத்தில் - (மேலான) வஸ்துவினிடத்தில், (உண்டாகி விரைந்தழியும்) மின்னையே ஒத்த-மின்னலையே நிகர்த்த, வையம்-இவ்வுலகமானது, மித்தை-பொய், கற்பிதம்-(மாயையால்) பாவனையாக ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது; என்று-என்று தீர்மானித்து, பொன்னை அன்றி - பொன்னைத் தவிர, வேறு பூடணம் இலதுபோல-வேறே ஆபரணம் இல்லாததுபோல, என்னை அன்றி- (பரமாத்ம சொரூபனாகிய) என்னை அல்லாமல், ஒன்றும்இல்என- வேறொரு பொருளும் இல்லை என்று, தேர்ந்தான் - தெளிந்தான்; எ-று.

"பிறகு அரசன், ஸ்தூலம், சூக்ஷமம், காரணம் என்னும் மூன்று சரீரங்கட்கும் விலட்சணமாய் - வேறாய், சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்னும் மூன்றவஸ்தைகட்கும் சாக்ஷியாய் - அறிகின்ற பொருளாய்ச் சச்சிதானந்த நிறைவான ஈசுர வடிவமாயுள்ள பரமாத்மாவாகிய தன்னையல்லாமல் வேறொன்றும் உண்மையில் தோன்றுவதில்லாத மேலான வஸ்துவினிடத்தில், தோன்றி விரைந் தழியும் மின்னலை நிகர்த்த இவ்வுலகமானது பொய்; மாயையால் பாவனையாக ஏற்படுத்திக் கொள்ளப்படுவது என்று தீர்மானித்து,

பொன்னைத் தவிர வேறு ஆபரணம் இல்லாததுபோல பரமாத்ம சொரூபனாகிய என்னையல்லாமல் வேறொரு பொருளும் இல்லை யென்று தெளிந்தான்'' என்பது இதன்கருத்து.

ஆத்மா, மூன்று சரீரங்களின் அபிமானியாய் உபாதிக்குட்பட்டிருப்பினும் அவற்றிற்கு அன்னியமாயிருக்கும். மூன்றவஸ்தைகளையும் அறிந்துகொண்டிருப்பதாதலின் ஆத்மா அவற்றிற்குச் சாக்ஷியெனப்பட்டது. ஆத்மாவில் அதனையன்றி வேறொன்றும் உண்மையாக உதிக்காது. அதில், மாயையின் உபாதியால் உலகம் தோன்றுகின்றது; ஆதலின், அது பொய்த்தோற்றமாம். ஆத்மாவொன்றே நிலையானது; அஃது வேறொன்றும் நிலத்திருப்பதில்லை. (56)

57 உலகினை வேற தாக வுணர்ந்திடிற் பந்த மாகும்
உலகினைத் தானே யாக வுணர்ந்திடின் முத்தி யாகும்
இலகிடத் தோன்ற லெல்லா மென்னினை வேயென் றெண்ணி
இலகிடக் கண்டு வேறற் றிருந்தன னிளமை வேந்தன்.

இ-ள்: (பின்னர்) இளமை-(எப்பொழுதும் நிலைபெற்றிருக்கும்) இளமையையுடைய, வேந்தன் - அத்துறவரசன், உலகினை- இவ்வுலகத்தை, வேறது ஆக - தனக்கன்னியமாக, உணர்ந்திடில்- உணர்ந்தால், (அது) பந்தம்ஆகும் - பந்தத்திற்குக் காரணமாகும், உலகினை - அவ்வுலகத்தை, தானே ஆக - தானாகவே, உணர்ந்திடில்- அறிந்தால், (அது) முத்திஆகும்-முத்திக்குக்காரணமாகும், இலகிட- விளங்க, தோன்றல் எல்லாம் - தோன்றுதலாகிய எல்லாப் பொருள்களும், என்நினைவே-(எனது நினைவில் தோன்றுகின்றனவே யாம்; ஆதலின், அவை) என் நினைவே, (அல்லாமல் வேறில்லை) என்று எண்ணி-என்று சிந்தித்து, இலகிட-(இவையெல்லாம் தன் உள்ளத்தில்) தோன்ற, கண்டு-உணர்ந்து, வேறுஅற்று-வேற்றுமையில்லாமல், (ஒரே தன்மையனாய்) இருந்தனன்-(அசைவற்று) இருந்தான்; எ-று.

"பிறகு, எப்பொழுதும் நிலைபெற்றிருக்கும் இளமையையுடைய அத்துறவரசன், இவ்வுலகத்தைத் தனக்கன்னியமாக உணர்ந்தால், அது பந்தத்திற்குக் காரணமாகும்; அதனைத் தானாகவே உணர்ந்தால், அது முத்திக்குக் காரணமாகும்; விளக்கமாகத் தோன்றுகின்ற எல்லாப் பொருள்களும் எனது நினைவில் தோன்றுகின்றனவே யாதலின், அவை என் நினைவைத் தவிர வேறில்லை என்று சிந்தித்து, இவ்வெண்ணங்களெல்லாம் தன் உள்ளத்தில் தோன்றக் கண்டு தெளிந்து, வேற்றுமையில்லாமல் ஒரே தன்மையனாய் அசைவற்றிருந்தனன்" என்பது இதன்கருத்து.

உலகமும், அதிலுள்ள பொருள்களும் ஆத்மாவின் நினைவில் தோன்றுவன; அவற்றை வேறாகப் பாவித்தால், 'இவை எனக்குரியன' என்ற பற்று ஏற்படும்; அவைகளை நினைவில் தோன்றுவன என்றும், நினைவே அவை என்றும், என் நினைவில் தோன்றுவதால் நானே அவை என்றும் அறிந்திடில் பற்றுண்டாகமாட்டாது; அங்ஙனம் பற்றற்ற நிலையே முத்தியாம்; ஆதலின், அரசன் எல்லாவற்றையும் தானாகப் பாவித்து பேதசிந்தனையற்று ஒரே தன்மையனாய் விளங்கினான். (57)

58 ஏகசக் கரம தாக விருந்தர சாள்வோன் செல்வப்
போகமுந் திரண மாமப் போதநாட் டரசி யற்கை
யூகபுந் தியினா லாசா னுபதேசத் தாள வந்தச்
சோகமற் றிடுநா டெய்தித் தொழிலெலா முடித்தான் மன்னன்.

இ-ள்: (பின்னர்) மன்னன்-அவ்வரசன், ஏகசக்கரமது-(தன்னுடைய) ஒரே ஆக்ஞா சக்கரமானது, ஆக-(எங்கும்) செல்வதாக, (தன் ஆக்ஞை எங்கும் செல்ல) இருந்து-(சிம்மாதனத்தில்) தங்கி, அரசு-இராஜ்ஜியத்தை, ஆள்வோன்-ஆளுகின்ற ஒரு அரசனது, செல்வப்போகமும்-செல்வமும் அதனாலாகிய போகமும், திரணமாம்-துரும்புபோலத் தோன்றுதற்குரிய, அப்போதநாட்டு-அந்தத்

தத்துவ ஞான உலகின், அரசு இயற்கை - அரசின் தன்மையை, யூக புந்தியினல்-யூகமதியினுலும், ஆசான் உபதேசத்து - சற்குருவின் உபதேசத்தாலும், ஆள - ஆட்சிசெய்ய, அந்தச்சோகம் அற்றிடு-அந்தச் சர்வதுக்கமும் நிவிர்த்தியாகும், நாடுஎய்தி - (ஜீவன்முத்தி) உலகத்தை அடைந்து, தொழில் எல்லாம் - (அங்கே தான்) செய்ய வேண்டிய செயல்களை யெல்லாம், முடித்தான் - முடித்துக் கிருத கிருத்தியனுனன்; . எ-று.

"பின்னர், அவ்வரசன், தன்னுடைய ஒரே ஆக்ஞா சக்கரமானது எங்கும் செல்வதாக (தன்னுடைய ஆக்ஞை எங்கும்செல்ல) சிம்மாதனத்தில் தங்கி அரசாட்சி செய்கின்ற ஒரு அரசனது செல்வமும், அதனுலாகிய போகமும் துரும்புபோலத் தோன்றுதற்குரிய அந்தத் தத்துவ ஞான உலகத்தின் அரசாட்சியை, யூகமதியாலும், சற்குருவின் உபதேசத்தாலும் ஆட்சிசெய்ய நாடி, அந்தச் சர்வ துக்கமும் நிவிர்த்தியாகும் ஜீவன்முத்தி உலகத்தை அடைந்து அங்கே தான் செய்யவேண்டிய தொழில்களையெல்லாம் செய்து முடித்துக் கிருதகிருத்தியனுனன்" என்பது இதன்கருத்து.

தத்துவ ஞானத்தால் இவ்வுலக அரசாட்சியும், செல்வமும், போகமும் ஒரு துரும்புபோல அற்பமாகத் தெரியும். ஆதலின், "ஏகச்க் கரமதாக இருந்தா சாள்வோன் செல்வப் போகமும் திரணமாம் போதம்" என்றார் ஆசிரியர். தத்துவ ஞானம் - உண்மைப் பொருளாகிய ஆத்மநிலையை உணர்தல்; இதனை ஓர் உலகமாகவும், இதை அடைவதை ஆட்சியாகவும் குறித்தார் தேவர். ஜீவன்முத்தி-மாயாவாதைகளினுலுண்டான பிறவித் தொந்தங்கள் நீங்க, விவேக ஞானந் தோன்றி, பிரமத்துக்குண்டான மறைப்புகளினின்றும், பொய்யாகிய பிரபஞ்சத்தினின்றும், தத்துவங்களினின்றும், உபாதிகளினின்றும் நீங்கித் தன்னைத் தானே தரிசித்து, தன்னிடத் துண்டான இன்பத்தைத் தானே அனுபவித்து, மகாவாக்கியமாகிய

தத்துவமசி என்னும் பதவிலக்கணங்களையு மறிந்து தெளிவுற்று, அந்தப் பிரமம் தானென்கிற ஞானத்தை உறுதியாகப் பெற்றிருப்ப தாம்; இங்கிலையினை ஒரு உலகமாகக் குறித்தார் ஆசிரியர். இதி லிருந்து செய்யத் தக்கவைகளைச் செய்தால் தத்துவ ஞான முடி வாகிய முத்தியுலக ஆட்சி கிடைக்கும். ஆதலின், மகாராஜன் இதை யடைந்து செய்யத்தக்கவைகளைச் செய்தான். அவை பின்வரும் செய்யுட்களால் விளங்கும். கிருதகிருத்தியன் - செய்யத்தக்கவை களைச் செய்துமுடித்தவன். (58)

59 பந்தம்வீ டென்று மில்லை பரம்பொரு ளொன்றே யென்றும்
தந்தஞ்சங் கற்பத் தாலே சாலமோ கிப்பர் தீயோர்
அந்தமா திகளு மில்லா வரும்பொரு ணாமே யென்று
சந்தத நோக்கி யந்தத் தற்பரந் தானே யானான்.

இ-ள்: (செய்யத் தக்கவைகளை எவ்வாறு செய்தானெனில்) பந்தம்-பந்தமென்பதும், வீடு-மோட்சமென்பதும், என்றும் இல்லை-எக்காலத்திலும் உண்மையாக இல்லை, என்றும் - எக்காலத்திலும், (இருப்பது) பரம்பொருள் ஒன்றே - உயர்ந்த பொருளாகிய பரப் பிரஹ்மம் ஒன்றே யாம், தீயோர் - தீவினையுடையோர், (இவற்றை உணராமல்) தம்தம்-தங்கள் தங்களுடைய, சங்கற்பத்தாலே-மனோ நிச்சயத்தால், (பந்தமென்றும், மோட்சமென்றும் பலவிதமாகக் கற்பனை செய்துகொண்டு) சால-மிகுதியாக, மோகிப்பர்-மயங்கு வார்கள், அந்தம் ஆதிகள்-அந்தமும் ஆதியும் (நாசமும் உற்பத்தியும்) இல்லா-இல்லாத, அரும்பொருள் - அரிய பொருளாகிய பரப்பிரஹ்மம், நாமே என்று-நாமே என்று தீர்மானித்து, (அதனை) சந்ததம்-எப்போதும், நோக்கி-(சுருதி, யுக்தி, அநுபவங்களால்) பார்த்து, அந்தத் தற்பரம்-அந்தப் பரப்பிரஹ்மம், தானேயானான்-தானாகவே விளங்கினான்; எ-று.

"செய்யத் தக்கவைகளை எவ்வாறு செய்தானெனில், 'பந்தமென்பதும், மோட்சமென்பதும் எக்காலத்திலும் உண்மையாக இல்லை; எக்காலத்திலும் நிலைபெற்றிருப்பது உயர்ந்த பொருளாகிய பரப்பிரஹ்மம் ஒன்றே யாம்; தீவினையுடையோர் இவற்றை யுணராமல் தங்கள் தங்களுடைய மனோநிச்சயத்தால் பந்தமென்றும், மோட்சமென்றும் பலவாறு கற்பித்துக்கொண்டு மிகுதியாக மயங்குவார்கள்; அந்தமும் ஆதியும் (நாசமும் உற்பத்தியும்) இல்லாத அரிய பொருளாகிய பரப்பிரஹ்மம் நாமே' என்று தீர்மானித்து, அதனை எப்போதும் சுருதி, யுக்தி, அனுபவங்களால் நோக்கி, தானே அந்தப் பரப்பிரஹ்மமாக விளங்கினான்" என்பது இதன்கருத்து.

பந்தம்-உலகப்பற்று. வீடு-பற்றை விடுதல்; இவ்வாறு விடுதலே மோட்சமென்று சொல்லப்படும்; இவ்வாறு பற்று நீங்குதல் பரப்பிரஹ்மத்தை யடைதற்காம். ஜீவன் பரப்பிரஹ்மத்தை யடைந்தபோது அதுவே தானாகி விடுவான்; அந்த நிலையில் அப்பொருளைத் தவிர வேறெதுவுமிராது; இந்நிலையடையாதவர்க்குப் பந்தம், மோட்சம் என்பன விவகாரத்தில் இருந்து கொண்டிருக்கும். மகாராஜன் வஸ்து நிச்சயம்செய்து தானே பரப்பிரஹ்மமாகிவிட்டதால், பந்தம், மோட்சம் என்பன உண்மையாக எப்போது மில்லையென்றும், எப்போதுமிருப்பது பரப்பிரஹ்மமே யென்றும், இவற்றை உணராதவரே பந்த மோட்சமென்பவற்றைக் கற்பித்துக்கொண்டு மயங்குவார்களென்றும் கூறினான். (59)

60 குறைவிலா நிறைவ தாகிக் குளிர்ந்திளைப் பாறி வேந்தன்
இறையள் வேனுந் துன்ப மின்றியே யின்ப மாகி
உறைவிட மின்ன தென்ன வோரிட மின்றி யெங்கும்
நிறைவதே யிடமாய் நின்று னிகரின்மா ராஜன் றனே.

இ-ள்: (அவ்வாறு பரப்பிரஹ்ம சொரூபனாகிய) நிகரில்-ஒப்பற்ற, மாராஜன்-மகாராஜன் என்னும், வேந்தன்-அரசன், (பின்னர்)

குறைவுஇல்லா - குறைவென்பது சிறிதுமில்லாத, நிறைவது ஆகி- பூரண வடிவமாகி, குளிர்ந்து-உள்ளங்குளிர்ச்சியடைந்து, இளைப்பு ஆறி-சோகந்தீர்ந்து, இறைஅளவேனும்-சிறிதளவாகவேனும், துன்பம் இன்றி - துன்பம் இல்லாமல், இன்பம் ஆகி - இன்ப வடிவமாகி, உறைவிடம்-வசிப்பதற்குரிய இடம், இன்னது என்ன-இன்ன இடமென்று, ஓர் இடம் இன்றி - ஓர் இடமுமில்லாமல், எங்கும் நிறைவதே-எவ்விடத்திலும் நிறைந்து சர்வ பரிபூரணமாக விளங்குவதே, இடம்ஆய் நின்றான்-இடமாகக் கொண்டு நின்றான்; எ-று.

"அவ்வாறு பரப்பிரஹ்ம சொரூபனாகிய ஒப்பற்ற மகாராஜன் என்னும் அரசன், பின்னர்க் குறைவென்பது சிறிதுமில்லாத பூரண வடிவமாகி உள்ளங்குளிர்ந்து, சோகந்தீர்ந்து, சிறிதளவும் துன்பமில்லாமல், இன்ப வடிவமாகி, வசிப்பதற்குரிய இடம் இன்னதென ஓரிடமுமில்லாமல் எவ்விடத்திலும் சர்வ பரிபூரணமாக விளங்குவதே இடமாகக்கொண்டு நின்றான்" என்பது இதன்கருத்து.

ஜீவாத்மா, பரமாத்மாவாகிய பரப்பிரஹ்ம சொரூபமாய் விட்டால் பூரணப் பொருளாய்க் குளிர்ந்து சோகந்தீர்ந்து இன்பவடிவாய் எங்கும் வியாபகமாய் விளங்கும்; ஆதலின், பரப்பிரஹ்ம சொரூபனாகிய மகாராஜன் இந்நிலைமைகளை அடைந்தான். 'வேந்தன்' என்பதை, 'மகாராஜன்' என்பதனோடு கூட்டுக. (60)

61 எங்குமாய் நிறைந்து நின்ற வேகராச் சியம் தாள்வோன்
தங்குத லின்றி யெங்குந் தானெனக் கண்ட தூயோன்
இங்குறைந் தகன்ற பாண்டத் தியல்பினெஞ் சருவம் பற்றி
அங்குரு வகற்றி நின்றா னைந்தி யாகி வேந்தன்.

இ-ள்: எங்கும்ஆய் - (அவ்வாறு) எவ்விடத்திலும் தானாகி, நிறைந்து-பரிபூரணமாகி; நின்ற-நிலைபெற்ற, ஏக-ஒரே பரப்பிரஹ்மமாக விளங்கும், ராச்சியம்-இராஜ்ஜியத்தை, ஆள்வோன்-ஆளுகின்றவனும், தங்குதல்இன்றி - தடையில்லாமல், எங்கும்-எவ்விடமும்,

(எப்பொருளும்) தான்என - தானே என்று, கண்டதூயோன்-உணர்ந்த பரிசுத்தனுமாகிய, வேந்தன்-அவ்வரசன், இங்கு-பெருங்காயம், உறைந்து-இருந்து, அகன்ற-நீங்கிய, பாண்டத்து இயல்பின்-பாத்திரத்தின் தன்மையைப்போல, அருவநெஞ்சம்பற்றி - அருவ மனத்தைப்பற்றி, உருஅகற்றி-உருவமனத்தை நீக்கி, ஆனந்தியாகி-ஆனந்த வடிவனாகி, நின்றான்-(அந்நிலையிலே) நின்றான்; எ-று.

"அவ்வாறு எவ்விடத்திலும் தானாகி நிறைந்து நின்ற ஒரே பரப்பிரஹ்மமாக விளங்கும் இராஜ்ஜியத்தை ஆளுகின்றவனும், தடையில்லாமல் எவ்விடமும் எப்பொருளும் தானேயென் றுணர்ந்த பரிசுத்தனுமாகிய அவ்வரசன், பெருங்காயம் இருந்து நீங்கிய பாண்டத்தின் தன்மையைப்போல அருவமனத்தைப்பற்றி, உருவ மனத்தை நீக்கி ஆனந்தவடிவனாகி அந்நிலையிலே நின்றான்" என்பது இதன்கருத்து.

ஒரு நாட்டு அரசாட்சியின் தன்மையானது அந்நாடெங்கும் பரவியிருத்தல்போல, பரப்பிரஹ்ம சொரூபமும் எங்கும் வியாபித்திருப்ப தாதலின், அது இராஜ்ஜியமெனக் குறிக்கப்பட்டது. அத்தன்மையை மகாராஜன் அடைந்திருந்தா னாதலின் அந்த இராஜ்ஜியத்தை ஆளுவோனாகக் கூறப்பட்டான். உருவமனம் - சத்துவம், ரசசு, தமசு என்னும் மூன்று குணங்களோடு கூடியிருப்பதாம்; அருவமனம் - சத்துவகுண மாத்திரமுள்ள மனம். பெருங்காயம் இருந்து நீங்கிய பாண்டத்தில் பெருங்காய வடிவமில்லாமல் வாசனை மாத்திரமிருக்கும்; அதைப்போல மூன்று குணங்களுமிருந்த மனத்தில் ரசசு, தமசு என்னும் இரண்டும் நீங்கச் சத்துவகுண மாத்திரமிருக்கும்; சத்துவகுணம், சாந்தவிருத்தியுடையது; இதில், செய்கை வெளிக்குத் தோன்றாத அடக்கமே குடிகொண்டிருக்கும்; ஆதலின், இதையுடைய மனம் அருவமனம் என்று சொல்லப்பட்டது. தாமத குணத்தில் மூடவிருத்தியும், இராசத குணத்தில் கோரவிருத்தியுமுண்டாகும்; இவற்றோடு சத்துவகுண விருத்தியும்

சேர்ந்திருக்கும்போது மனத்தின் செயல்கள் வெளிப்படையாகத் தெரியும்; ஆதலின், மூன்றுஞ் சேர்ந்தமனம் உருவமனம் என்று சொல்லப்படும். தாமத, இராசதகுண விருத்திகளாகிய மூட, கோர விருத்திகளில் சுகானுபவமுண்டாகாது; சத்துவகுண விருத்தியாகிய சாந்த விருத்தியில் சுகானுபவமுண்டாகும். ஆதலின், அரசன் சத்துவகுண விருத்தியாகிய சாந்தத்தைக்கொண்ட அருவ மனத்தைப்பற்றி, தாமச, இராசதகுண விருத்திகளாகிய மூட கோரங்களை நீக்கி அவற்றைக்கொண்ட உருவமனத்தை ஒழித்தான். மூடகோரங்களை நீக்கிச் சாந்தத்தைக் கொண்டிருந்தான் என்பது இதன் தாத்பரியம். 'நெஞ்சருவம்' என்பதை, 'அருவநெஞ்சம்' என மாற்றிப் பொருள்கொள்க. அங்கு-அசை. (61)

62 சீவன்முத் தர்கள்பா னிற்கும் செப்பிய மனத்த ரூபம்
மேவரும் பரம முத்தி மேவிடி னாச மாகும்
தாவரு நிலைமை நன்றாச் சற்குரு வருளாற் பெற்றுக்
கேவல மாகி நின்றான் கேடிலா ஞான வேந்தன்.

இ-ள்: (உருவமனம், அருவமனம் என்னும் இரண்டனுள்) செப்பிய-சொல்லிய, மனத்துஅரூபம்-அருவமனம், சீவன்முத்தர் கள்பால் நிற்கும் - சீவன் முத்தர்களிடத்திலே நிலைபெற்றிருக்கும், (அது) மேவுஅரும்-அடைதற்கரிய, பரமமுத்தி - உயர்ந்த விதேக முத்தி, மேவிடின் - (அவர்கள்) அடைந்தால், (அப்போது) நாசம் ஆகும்-ஒழியும், கேடுஇல்லா-(எப்போதும்) கெடுதல்இல்லாத, ஞான வேந்தன் - அந்தத் தத்துவ ஞானத்தையுடைய அரசன், (சீவன் முத்தனானபடியால் அவ்வருவ மனத்தோடுகூடி) தாவுஅரும்-(தனது பரமாத்ம சொரூபத்தினின்றும்) பிறழாதிருக்கும், நிலைமை-நிலையினை, நன்றா-செவ்வையாக, சற்குரு அருளால்-நல்லாசிரியனுடைய கிருபையால், பெற்று - அடைந்து, கேவலம்ஆகி - ஏகவடிவமாக விளங்கி, நின்றான்-(அந்நிலையிலே) நிலைபெற்றிருந்தான்; எ-று.

"உருவமனம், அருவமனம் என்னும் இரண்டனுள், இங்குக் கூறப்பட்ட அருவமனம் சீவன் முத்தர்களிடத்திலே நிலைபெற்றிருக்கும்; அப்படியிருக்கும் அஃது, அவர்கள் விதேக முத்தியை அடைந்தால், அப்போது நாசமாகும்; எப்போதும் கெடுதல்இல்லாத அந்தத் தத்துவ ஞானத்தையுடைய அரசன், சீவன் முத்தனான படியால் அந்த அருவமனத்தோடு கூடித் தனது பரமாத்ம சொரூபத்தினின்றும் பிறழாதிருக்கும் நிலையினைச் செவ்வையாகச் சற்குருவின் கிருபையால் அடைந்து, ஏகவடிவமாக விளங்கி அந்நிலையிலே நிலைபெற்றிருந்தான்" என்பது இதன்கருத்து.

மனநாசமானது, சொரூபமன நாசமென்றும், அரூபமன நாசமென்றும் இருவகைப்படும். இவற்றுள் சொரூபமன நாசம் மேற்கூறியபடி சீவன் முத்தர்களிடத்திலேற்பட்டு அரூபமன மாத்திரமிருக்கும்; அரூபமன நாசம் விதேக முத்தரிடத்திலேற்படும். மனத்தில் சத்துவகுண மாத்திரம் மிஞ்சித் தமசு, ரசசு என்னும் இரண்டு குணங்களு மொழிவதே சொரூபநாசம்; அந்தச் சத்துவ குணம் இலிங்க தேக மடங்கும்போ தடங்குதலே அரூபநாசம். மகாராஜன் சீவன் முத்தனாயிருந்தமையின் சொரூபமன நாசத்தைப் பெற்று அரூபமனத்தோடு கூடியிருந்தான். இவன் விதேக முத்தியடையும்போது அரூபமன நாசமேற்படும். விதேக முத்தி - தேகமில்லாத மோட்சம்; மாயையால் உண்டான சரீரம் அம்மாயை நீங்கும்போது நசிக்கும்; அவ்வாறு தேகம் நசித்த நிலையை அடைதலே விதேக முத்தியாம். 'மனத்தரூபம்' என்பதில், அத்து-சாரியை. (62)

### இப்படியிருந்த மகாராஜனுடைய மந்திரி யொருவன் அவனிடம் சென்று அவனடைந்திருந்த நிலைமையைக் கண்டு பேசுதல்.

63 இத்தகை ஞானம் பெற்றே யெழின்முனி யாகி யெங்கும்
சித்தனாய்த் திரித றன்னைச் செப்புமுன் னமைச்சர் தம்முள்
வித்தக னொருவன் கேட்டு வினவிட வேண்டு மென்றே
கத்தனா மரசைத் தேடிக் கண்டடி பணிந்து நின்றான்.

இ-ள்: (மகாராஜன்) இத்தகை-இத்தன்மையான, ஞானம் பெற்று-ஆத்ம ஞானத்தை அடைந்து, எழில் - (உத்தம) லக்ஷணம் பெற்ற, முனிஆகி-முனிவனாய், எங்கும்-எவ்விடத்திலும், சித்தனாய்-(சீவன்முத்தி) சித்திக்கப்பெற்றவனாய், திரிதல்தன்னை - உலாவி வருவதை, முன்-முன்னே, செப்பும்-கூறிய, அமைச்சர் தம்முள்-மந்திரிமார்களுக்குள்ளே, வித்தகன் ஒருவன் - அறிவுள்ளவனாகிய ஒரு மந்திரி, கேட்டு - (பிறர் சொல்லக்) கேட்டு, (அவ்வரசனைக் கண்டு அவனிடத்தில்) வினவிடவேண்டும் என்று - (சில கேள்விகளைக்) கேட்கவேண்டும் என்று கருதி, கத்தனும் - (தனக்குத்) தலைவனாகிய, அரசை-அவ்வரசனை, தேடிக்கண்டு-தேடிப் பார்த்து, அடிபணிந்து - (அந்த ராஜயோகியின்) பாதங்களை வணங்கி, நின்றான்-(அவனெதிரில்) நின்றான்; எ-று.

"மகாராஜன், இத்தன்மையான ஆத்ம ஞானத்தை அடைந்து, உத்தம லக்ஷணம் அமைந்த முனிவனாகிச் சீவன்முத்தி சித்திக்கப் பெற்றவனாய் எங்கும் உலாவி வருவதை, முன்னே கூறிய அவனுடைய மந்திரிமார்களுள்ளே அறிவுள்ள ஒரு மந்திரி, பிறர் சொல்லக் கேட்டு, அவ்வரசனைக் கண்டு அவனிடத்தில் சில கேள்விகளைக் கேட்க வேண்டுமென்று நினைத்துத் தனக்குத் தலைவனாகிய அவ்வரசனைத் தேடிக்கண்டு அவனுடைய திருவடிகளை வணங்கி, அவனெதிரில் நின்றான்" என்பது இதன்கருத்து. (63)

64 பூவணை யாகி வானம் பொருந்துமேற் கட்டி யாகித்
தீவம தாகி யிந்து செங்கதிர் வீசுங் காற்று
மேவுசா மரம தாகி விடுதலை மனைவி யாகிக்
கேவல மின்ப மாகிக் கிளர்ச்சியாய் நின்றான் வேந்தன்.

இ-ள்: (அவ்வாறு நின்றுபார்க்கும்போது) வேந்தன்-அரசன், பூ-பூமி, அணை ஆகி-பூ மெத்தையாகவும், வானம்-ஆகாயத்தை, மேற்கட்டிஆகி - படுக்கையின் மேற்கட்டி (விதானம்) ஆகவும், இந்து-

சந்திரனையும், செம்கதிர்-சிவந்த சூரியனையும், தீவம்அதுஆகி-விளக்காகவும், வீசும்-(இயற்கையாக) வீசுகின்ற, காற்று-காற்றை, மேவு சாமரம்அதுஆகி - பொருந்திய சாமரை (கவரி) ஆகவும், விடுதலை-(எல்லாப் பற்றுக்களையும்) விடுவதை, (அதாவது, சர்வ சங்க பரித்தியாகத்தை) மனைவிஆகி - மனைவியாகவும், கேவலம் - ஏகவடிவமாயிருத்தலை, இன்பம்ஆகி - இன்பமாகவும், (கொண்டு) கிளர்ச்சிஆய்-பிரகாசமாகி, நின்றான்-நிலைபெற்றிருந்தான்; எ-று.

"மந்திரி அவ்வாறு நின்றுபார்க்கும்போது, அரசன் பூமியை மலரணையாகவும், ஆகாயத்தை மேற்கட்டியாகவும், சந்திர சூரியர்களை விளக்காகவும், இயற்கையாக வீசுங் காற்றைச் சாமரையாகவும், சகல பற்றுக்களையும் விடுதல் என்னும் சர்வ சங்க பரித்தியாகத்தை மனைவியாகவும், ஏகனுயிருத்தலை இன்பமாகவும் கொண்டு பிரகாசித்தான்" என்பது இதன்கருத்து.

அரசன் முன் உலக ஆட்சியைப் பெற்றிருந்தபோது அதற்குத் தகமேற்கட்டியுள்ள கட்டிலில் மலர்பரப்பிய மெத்தையில், விளக்குகள் பிரகாசிக்க, பணிப்பெண்கள் சாமரைவீச, அழகிய மனைவியுடன் சயனித்து நிலையற்ற, சிற்றின்பத்தை அனுபவித்தான்; இப்போது பரப்பிரஹ்ம வடிவமாய் எங்கும் வியாபித்த பேரரசைப் பெற்றபடியால் அதற்குத்தகப் பெரிய பூமியை அணையாகவும், பரந்த ஆகாயத்தை மேற்கட்டியாகவும், இயற்கையான சந்திர சூரியர்களை விளக்காகவும், காற்றைச் சாமரையாகவும், விடுதலையை மனைவியாகவும், ஏகனுயிருத்தலை ஆனந்தமாகவும் கொண்டு பேரின்பத்தை அனுபவித்து விளங்கினான். பூமி முதலியவற்றை அணை முதலியனவாகக் கூறியது-உருவகவணி. ஆக என்னும் செயவெனெச்சம் ஆகியெனச் செய்தெனெச்சமாகத் திரிந்து வந்தது; "சொற்றிரியினும் பொருள் திரியா வினைக்குறை" என்ற நன்னூற் சூத்திர விதிப்படி இத்திரிபு கொள்ளப்படும். 'தீவமது, சாமரமது' என்பவற்றிலுள்ள அது - சாரியை யாகவேனும், எழுவா யுருபாக

வேனும் கொள்ளப்படும். சர்வசங்க பரித்தியாகம் - சகல கூட்டங்களையும் விடுதல். (64)

65 ரதமுதற் சேனை சூழ ரத்நசிங் காச னத்தில்
விதவலங் கார த்தோடு வீற்றிருந் தமரும் வேந்தன்
உதவுகோ வணனாய் மேனி யுருத்தெரி யாத நீறாய்
முதன்முடி விரித்து நின்றான் முனிவனா யொருவ னாகி.

இ-ள்: இரதம்முதல் - தேர் முதலாக, சேனை சூழ - (தேர், யானை, குதிரை, காலாள் என்னும் நால்வகைச்) சேனைகள் (தன் நகரத்தைச்) சூழ்ந்திருக்க, இரத்ந சிங்காசனத்தில் - (பலவகை) இரத்தினங்களாற் செய்யப்பட்ட சிம்மாதனத்திலே, விதம் - பல விதங்களாகிய, அலங்காரத்தோடு- அலங்கரிப்புடனே, வீற்றிருந்து - தங்கியிருந்து, அமரும் - (அரசாட்சியில்) பொருந்தியிருக்கின்ற, வேந்தன்-அரசன், (முன்னே சகல சிறப்புக்களோடும் இருந்தோமென்பதைச் சிறிதும் எண்ணாமல்) உதவு - (தனக்கு உடையாக) உபயோகப்படுகின்ற, கோவணனாய் - ஒற்றைக் கோவணத்தைக் கட்டியவனாய், மேனி - உடம்பு முழுதும், உருதெரியாத - (இவர் இன்னாரென்று) அடையாளம் தெரிந்துகொள்ளாதபடி, (பூசிக் கொண்ட) நீறாய்-திருநீறாக, (விளங்க) (உடம்பு முழுதும் விபூதியைப் பூசிக்கொண்டு) முதல்முடி-தலைமயிரை, விரித்து-விரித்துப் போட்டுக்கொண்டு, முனிவனாய் ஒருவனாகி நின்றான் - முனியாய்த் தனிப்பட்டவனாகி நின்றான்; எ-று.

"இரத கஜ துரக பதாதி யென்னும் நால்வகைப் படைகளும் தன் நகரத்தைச் சூழ்ந்திருக்க, இரத்தின சிங்காதனத்தில் பலவித அலங்காரங்களோடு வீற்றிருந்து அரசு செலுத்திய, அரசன்; 'முன்னே சகல சிறப்புக்களோடும் இருந்தோம்' என்பதைச் சிறிதும் எண்ணாமல், கோவண மொன்றைக் கட்டிக்கொண்டு, உருத் தெரியாதபடி உடம்பு முழுதும் விபூதியைப் பூசித் தலைமயிரை

விரித்துப் போட்டுக்கொண்டு முனிவனுய்த் தனிப்பட்டு நின்றான்'' என்பது இதன்கருத்து.

தமிழ் இலக்கணப்படி மொழிக்கு முதலில் வாராத ரகாரத்தை முதலாகவுடைய ரதம், ரத்நம் என்ற சொற்கள், ''ரவ்விற்கம் முதலா முக்குறிலும்...'' என்ற நன்னூற் சூத்திர விதிப்படி இகாரத்தை முதலிற் கொண்டுவாரத் தக்கனவாயிருப்பினும் வடமொழிகளாதலின் அவ்விதி பெருது அப்படியே இருக்குமாறு அவற்றை உபயோகித்திருக்கின்றார் ஆசிரியர். புலவர்கள் வடமொழிகளைச் சந்தர்ப்ப நோக்கி இவ்வாறு தமிழ் இலக்கண விதியை அனுசரியாமல் பிரயோகிப்பது சிறுபான்மை உண்டு. முதல்-தலை, முடி-மயிர். (65)

66 கரிரத மிவர்த லின்றிக் கானடை யாகி யெங்கும்
உரியதோர் மனையூ ணின்றி யூரெங்கு முண்பா ணுகி
அரியரா சாங்கக் கோல மகற்றியே தவாங்க மாகித்
திரியுமவ் வரசை நோக்கிச் செப்பின னமைச்சன் ருனே.

இ-ள்: (அவ்வாறு தன்னுடைய முந்தின நிலைமை மாறுபட்டு) கரி-யானை, இரதம்-தேர், (ஆகிய இவற்றில்) இவர்தல்இன்றி-ஏறுதல் இல்லாமல், எங்கும்-எவ்விடத்திற்கும், கால்நடைஆகி-கால்நடையாகவே சென்று, உரியஊன் - தனக்குரிய உணவு, ஓர்மனை இன்றி-ஒரே வீட்டில் இல்லாமல், ஊர்எங்கும் - ஊர் முழுவதிலும், (பல வீடுகளிலும் சென்று) உண்பான்ஆகி - (பிச்சையாக வாங்கி) உண்பவனுகி, அரிய-அரிதாகிய, ராசாங்கக்கோலம் - இராஜாங்கத்துக்குரிய அலங்காரங்களை, அகற்றி-நீக்கி, தவஅங்கம்ஆகி-தவவடிவம் தனக்குஆக, (கொண்டு) திரியும்-திரிகின்ற, அவ்வரசை-அந்த அரசனை, அமைச்சன்-அந்த மந்திரி, நோக்கி-பார்த்து, செப்பினன்-(சில வார்த்தைகளைச்) சொன்னுன்; எ-று.

''அவ்வாறு தன்னுடைய முந்தின நிலைமை மாறுபட்டு யானை, தேர் ஆகியவற்றில் ஏறுதல் இல்லாமல் எவ்விடத்திற்கும் கால்நடை

யாகவே சென்று ஒரே வீட்டில் உணவு வாங்கி 'யுண்பதில்லாமல் ஊர் முழுவதும் பலவீடுகளிலும் சென்று பிச்சையாக வாங்கி உண்பவனுகி இராஜாங்கத்துக்குரிய அலங்காரங்களை நீக்கி, தவவடிவம் தாங்கித் திரிகின்ற அரசனை அந்த மந்திரி நோக்கிச் சில வார்த்தைகளைச் சொன்னுன்'' என்பது இதன்கருத்து. அவன் சொன்ன வார்த்தைகள் அடியில்வரும் செய்யுட்களில்வரும். (66)

67 அவனியி னினக்கு மேலோர் அரசனு மில்லை யிந்தத்
தவவடி வாகி யெங்குஞ் சரித்திட லெற்றி னுக்கோ
நவமதா யுடலி தோடே நண்ணுவ தெனையீ தன்றி
இவணெனக் கருள வேண்டு மெனக்கறி வோங்கு மாறே.

இ-ள்: (எவ்வாறு சொன்னுனெனில், 'அரசர்க் கரசனே!) அவனியில்-உலகத்தில், நினக்குமேல் - உனக்கு மேலாக, ஓர் அரசனும் இல்லை - அரசன் ஒருவனுமிலன், (அப்படியிருக்க, நீ அவ்வராசாட்சியைவிட்டு) இந்தத் தவவடிவுஆகி-இந்தத் தவவேடமுடையவனுகி, எங்கும்-எவ்விடத்திலும், சரித்திடல்-சென்றுலாவி வருவது, எற்றினுக்கோ-எதைப்பெறுவதற்காகவோ?, உடல்இதோடே-இத் தவவேடங்கொண்ட உடம்பால், ஈதுஅன்றி-இவ்வரச போகத்தையன்றி, நவமதா - புதிதாக, நண்ணுவது - நீ அடைவது, என்னையாது?, எனக்கு அறிவு ஓங்குமாறு - எனக்கு நற்புத்தி அதிகரிக்கும்படி, இவண் - இவ்விடத்திலே, எனக்கு அருளவேண்டும் - எனக்கதனைக் கூறியருள வேண்டும்; எ-று.

''எவ்வாறு சொன்னுனெனில், அரசர்க்கரசனே! உலகத்தில் உனக்கு மேலாக அரசன் ஒருவனுமிலன்; நீ பெரிய அரசனுய்ச் சகல சிறப்புக்களையும் அடைந்திருந்தாய்; அப்படியிருக்க அவ்வராசாட்சியைவிட்டு இத்தவவேடத்தைத் தாங்கி எங்கும் சென்றுலாவி வருவது 'எதைப் பெறுவதற்கோ? அரசாட்சியைக் காட்டினும் சிறந்த பொருள் வேறென்றுமில்லையே! இந்தத் தவவேடங்

கொண்ட உடம்பால் இவ்வரசபோகத்தைத் தவிரப் புதிதாக அடைவது யாது? எனக்கு நல்லறிவு அதிகரிக்கும்படி இவ்விடத்தில் எனக்கிதனைக் கூறியருளவேண்டும்'' என்பது இதன்கருத்து.

மந்திரி தத்துவ ஞான வுணர்ச்சியில்லாதவனாதலின், அவனுக்கு அரசாட்சியைத் தவிர உலகத்தில் வேறு சிறந்த பொருள் இல்லையென்னும் எண்ணமுண்டாயிற்று. இதுவும் அடுத்த செய்யுளும் குளகம். 'எற்றினுக்கோ' என்பதிலுள்ள ஓ-அசை; முதலில் உள்ள எகரம் வினாப் பொருளது. மூன்றனுருபாகிய ஓடு-கருத்தாப் பொருளில் வந்தது. (67)

68. பதத்தினை வேண்டின் முன்னம் பற்றிநின் றில்ல றத்தைப்
பதப்பட நிறுத்தி யேகல் பண்பதா மேலா முத்திப்
பதத்தைவேண் டிடிலோ ஞானப் பார்வையிற் கூடு நீயெப்
பதத்தினை வேண்டி யிந்தப் பரதேசி யான தென்றான்.

இ-ள்: பதத்தினை - (சுவர்க்கம் முதலிய) பதவிகளை, வேண்டின் - (அடைய) விரும்பினால், முன்னம்-முன்னே, இல்லறத்தை-இல்லற வாழ்க்கையை, பற்றிநின்று-மேற்கொண்டொழுகி (அவ்வழியிலே) நின்று, (அறத்தை) பதப்பட-அழகாக, நிறுத்தி-நிலைபெறச் செய்து, ஏகல்-செல்லுதல், பண்பதாம்-முறைமையாம், மேலாம்-(எல்லாப் பதவிகளினும்) மேலாகிய, முத்திப்பதத்தை-(சர்வ துக்க நிவிர்த்தி பரமாநந்தப் பிராப்தி என்னும்) மோட்ச பதவியை, வேண்டிடில் - (அடைய) விரும்பினால், ஞானப்பார்வையில் - தத்துவ ஞானத்தால் (ஏற்படும்) ஆத்மப்பார்வையினாலே, (தத்துவ ஞான வுணர்ச்சியைக் கொண்டு ஆத்ம தரிசனம் செய்வதனாலே) கூடும்-(அது) கைகூடும், (இவ்வி[illegible]டிற்கும் இப்பரதேசிக்கோலம் தேவையில்லை; அப்படியிருக்க) நீ-, எப்பதத்தினை வேண்டி-எந்தப்பதவியை விரும்பி, இந்தப் பரதேசி ஆனது-இந்தப் பரதேசிக்கோலம் கொண்டது?, என்றான்-என்று வினவினான்; எ-று.

"சுவர்க்கம் முதலிய பதவிகளை அடைய விரும்பினால் முன்னே இல்லறத்தை மேற்கொண்டொழுகி அதன்வழியிலே நின்று, அறத்தை அழகாக நிலைபெறச்செய்து, செல்லுதல் முறைமை யாம்; எல்லாப் பதவிகளினும் மேலாகிய, சர்வதுக்க நிவிர்த்தி பரமானந்தப் பிராப்தி என்னும் மோக்ஷபதவியை அடைய விரும்பினால் தத்துவ ஞானவுணர்ச்சியால் ஆத்ம தரிசனம் செய்யவேண்டும்; அவ்வாறு செய்வதனால் அது கைகூடும்; இவ்விரண்டிற்கும் இப்பாதேசிக் கோலம் தேவையில்லை, அப்படியிருக்க, நீ இவ்விரண்டினுள் எந்தப் பதவியை விரும்பி இந்தப் பாதேசிக் கோலத்தைக் கொண்டிருக்கின்றாய்? என்று வினவினான்" என்பது இதன்கருத்து.

அரசன், "சுவர்க்கம் முதலிய பதவிகளும் பிறவிக்கேதுவாம்; ஆதலின் பிறப்பிறப்பற்ற நித்தியானந்த பதவியாகிய முத்தியை அடையவேண்டும்; அம்முத்தியும் துறவினாலல்லது சித்தியாகாது" என்று துணிந்து துறவுபூண்டு சீவன்முத்தி நிலையை அடைந்திருக்கின்றான்; மந்திரி இவ்வுண்மைகளை உணராதவனாதலின், சுவர்க்கம் முதலிய பதவிகளைச் சிறப்பித்தும், மோட்சத்தை அடைதற்கும் பாதேசிக்கோலம் தேவையில்லை யென்றும் கூறினான். (68)

## மந்திரி இவ்வாறு வினவியதற்கு மகாராஜன் விடை கூறுதல்.

69 அமைவுடையமைச்சின்மிக்கோ யடைவுடன்வினவிக்கேட்பாய்
இமையவ ரேனுஞ் சித்த மிதுவது வெனவோ டாது
சமைவுடன் கேணீ சொன்ன சங்கைக்குத் தாங்க ணன்றாய்
நமைவிட வேறோர் வேந்து நாட்டிலை யென்ப தொக்கும்.

இ-ள்: (மேற்கூறியபடி கேட்ட மந்திரிக்கு அரசன் விடை கூறத் தொடங்கி) அமைவுஉடை - (நற்செயல்கள்) பொருந்துதலை

யுடைய, (நற்செயல்கள் பொருந்திய) அமைச்சின்-மந்திரித் தொழிலில், மிக்கோய் - (மற்ற மந்திரிகளினும்) மேம்பட்டவனே!, (நீ) அடைவுடன்-கிரமத்தோடு, வினவி - (என்னிடம் தெரிந்துகொள்ள வேண்டியவைகளை) வினவி, கேட்டாய் - (அவற்றைச் சொல்லுமாறு) கேட்டுக்கொண்டாய், சொன்ன - நீ வினவிய, சங்கைக்கு-சந்தேக வினவிற்கு, உத்தரங்கள்-விடைகளை, நன்ருய்-நன்ருக, (நான் சொல்லுகிறேன்) சித்தம்-மனமானது, இமைஅளவேனும்-இமைகொட்டுமளவு காலமாயினும், இதுஅதுஎன - இதுவேண்டும் அதுவேண்டும் என்று, ஓடாது-(உலக விஷயங்களில்) செல்லாமல், (அதனை ஒரே நிலையில் நிறுத்தி) சமைவுடன் - பொறுமையுடன், (இருந்து) நீ கேள்-நீ கேட்பாயாக, நம்மைவிட - நம்மைக் காட்டிலும், வேறு ஓர் வேந்து - வேறே ஒரு அரசன், நாட்டு - இந்த நாட்டிலே, இல்லையென்பது - நீ இல்லையென்று கூறுவது, ஒக்கும்-பொருந்தும்; எ-று.

"மேற்கூறியபடி கேட்ட மந்திரிக்கு அரசன் விடைகூறத் தொடங்கி, 'நற்செயல்கள் பொருந்திய மந்திரித் தொழிலில் மேம்பட்டவனே! நீ முறையாக வினவி என்னிடம் தெரிந்துகொள்ள வேண்டியவைகளைக் கேட்டாய்; அந்தச் சந்தேக வினவிற்கு நான் நன்ருக விடைகளைக் கூறுகிறேன்; நீ மனத்தை இமைப்பொழுதாயினும் அதுவேண்டும், இதுவேண்டும் என்று வேறு விஷயங்களிற் செலுத்தாமல் ஒரே நிலையில் நிறுத்திப் பொறுமையுடன் கேட்பீராக; நம்மைக் காட்டினும் வேறே அரசன் இந்த நாட்டில் இல்லையென்று நீ சொல்லுவது பொருந்தும்" என்பது இதன் கருத்து.

இச்செய்யுள் அடுத்த செய்யுளோடு தொடர்ந்து முடியும்; "நான் சொல்லுகிறேன்" என்பது இசையெச்சமாக வருவித்துரைக்கப்பட்டது. (69)

70 பதமதை வேண்டி னில்லைப் பதப்பட நிறுத்தி யேகல்
இதமென்ற லொக்கு முத்தி யெய்துதல் ஞானப் பார்வை
விதமதிற் றோன்று மென்றாய் விருப்பமாய்க் குடும்ப பாரத்
திதமதா யழுந்து வோருக் கெங்ஙனம் பார்வை தோன்றும்.

இ-ள்: பதமதை - (சுவர்க்கம் முதலிய) பதவிகளை, வேண்டின் -(அடைய) விரும்பினால், இல்லை - இல்லறத்தை, பதப்பட- கிரமமாக, (மேற்கொண்டொழுகி) நிறுத்தி-(அதனை) நிலைபெறச் செய்து, ஏகல் - (நன்மார்க்கத்தில்) செல்லுதல், இதம்என்றல்- நன்மையாகும் என்று நீ சொல்லுதல், ஒக்கும் - பொருந்தும், (பொருத்தமானதாய் அங்கீகரிக்கத்தக்கதாகும்) ஞானப்பார்வை விதம்அதில்-தெளிவான (ஆத்ம) தரிசனத்தின் இயற்கையினாலே, முத்தி எய்துதல்-மோட்சம் அடைதல், தோன்றும் என்றாய்-உண் டாகும் என்று நீ கூறினாய், குடும்ப பாரத்து - குடும்பச்சுமையாகிய (சேற்றில்) விருப்பமாய்-பிரியமாக, இதமதாய்-ஆனந்தமாக, அழுந்து வோருக்கு-முழுகிக்கிடப்பவர்க்கு, பார்வை-(அந்த) ஆத்ம தரிசனம், எங்ஙனம் தோன்றும்-எவ்வாறு உண்டாகும்? எ-று.

"சுவர்க்கம் முதலிய பதவிகளை அடையவிரும்பினால் இல்லறத் தைக் கிரமமாக மேற்கொண்டொழுகி அதனை நிலைபெறச்செய்து நன்மார்க்கத்திற் செல்லுதல் நன்மையாகும் என்று நீ சொல்லுதல் அங்கீகரிக்கத்தக்கதாகும்; ஆத்ம தரிசனத்தாலே மோட்சமடைதல் உண்டாகும் என்று நீ கூறினை; அஃதுண்மையே; ஆனால், நீ சொல் கிறபடி இல்லறத்திலிருந்து குடும்பபாரச் சேற்றில் அழுந்திக் கிடப் பவர்க்கு அந்த ஆத்ம தரிசனம் எவ்வாறுண்டாகும்? (ஒருபோதும் உண்டாகமாட்டாதே)" என்பது இதன்கருத்து.

இல்-வீடு; இங்கு அதில் நடக்கும் அறத்தை உணர்த்தி நின் றது. இதுவும் அடுத்த செய்யுளும் குளகம். (70)

71 மனமிரு பொருளைப் பற்ற மாட்டாதட் டாவ தான
இனமவை புறநோக் கான வேதினாற் கூடும் வீடு
கனவுண்ணோக் காகு மில்லங் கருதிய புறநோக் காகும்
அனகவிவ் வூகந் தோன்ற வறைகுவ நாமே கேளாய்.

இ-ள்: மனம்-மனமானது, (ஒரே காலத்தில் சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் ஐந்து விஷயங்களுள் ஒன்றில் மாத்திரம் செல்லுமேயன்றி இரண்டனிடத்தில் செல்லாது; அவ்வாறே அஃது ஒரு காலத்தில் ஒன்றை மாத்திரம் நினைக்குமே யல்லாமல்) இருபொருளை - இரண்டு பொருள்களை, பற்றமாட்டாது-பற்றி நிற்க மாட்டாது, (எனினும், எட்டுக் காரியங்களை ஒரே சமயத்தில் தொடர்பாக மனம் கவனித்தலாகிய அஷ்டாவதான மென்னும் தொழிலொன்று புலவர்களால் உலகத்தில் நடைபெறுவதைக் கொண்டு நீ, 'இப்படி எட்டுக்காரியங்கள் ஒரே காலத்தில் மனத்தால் நினைக்கப்படுகின்றனவே' என்று சந்தேகித்தல் கூடும்) அட்டாவதான இனம் அவை - எட்டு நினைப்புக்களின் கூட்டமாகிய அவைகள், புறநோக்குஆன - (மனம்விரைந்து விரைந்து ஒவ்வொன்றிலும் செல்லும்) வெளிநோக்கமாகிய, ஏதினால் - காரணத்தினால், (ஒரு காலத்தில் நடைபெறுவனபோல) கூடும்-சம்பவிக்கும், (நன்றாக மனத்தின் தன்மையை ஆராய்ந்து பார்த்தால் அவை ஒரே காலத்தில் நடைபெறுவனவல்ல, பலகாலத்தில் விரைவாக நடைபெறுகின்றன என்பது தோன்றும்) வீடு - மோட்சமானது, கனம்-திடமாகிய, உள்நோக்கு - உள்நோக்கத்தால், ஆகும் - விளங்குவதாம், இல்லம் - (பந்தவடிவமான) சம்சாரம், புறநோக்கு - வெளிநோக்கத்தால், ஆகும்-விளங்குவதாம், இவ்-இவ்விரண்டு நோக்கங்களுக்கும், தோன்ற-விளக்கமாக, அனகம்-பரிசுத்தமாகிய, ஊகம்-யுக்தியை, நாம்-, அறைகுவம்-கூறுவோம், கேளாய்-கேட்பாயாக; எ-று.

"மனமானது, ஒரே காலத்தில் சப்த, பரிச, ரூப, ரச, கந்த மென்னும் ஐந்து விஷயங்களுள் ஒன்றில் மாத்திரம் செல்லுமே

யன்றி இரண்டினிடத்திற் செல்லாது; அவ்வாறே அஃது ஒரு காலத்தில் ஒன்றை மாத்திரம் நினைக்குமே யல்லாமல் இரண்டு பொருள்களை நினைக்கமாட்டாது; எனினும் எட்டுக் காரியங்களை ஒரே காலத்தில் தொடர்பாக மனம் கவனித்தலாகிய அட்டாவதான மென்னும் தொழிலொன்று புலவர்களால் உலகத்தில் நடைபெறு வதைக் கொண்டு நீ, 'இப்படி எட்டுக்காரியங்கள் ஒரே காலத்தில் மனத்தால் நினைக்கப்படுகின்றனவே' என்று சந்தேகித்தல் கூடும்; ஆனால் எட்டு நினைப்புக்களின் கூட்டமாகிய அவை, மனம் விரைந்து விரைந்து ஒவ்வொன்றிலும் செல்லும் வெளிநோக்கமாகிய காரணத் தினால் ஒருகாலத்தில் நடப்பனபோல தோன்றும்; நன்றாக மனத் தின் தன்மையை ஆராய்ந்து பார்த்தால், 'அவை ஒரே காலத்தில் நடைபெறுவனவல்ல, பலகாலத்தில் விரைவாக நடைபெறுகின்றன' என்பது தோன்றும்; மோட்சமானது நிலைபெற்ற உள்நோக்கத் தால் விளங்குவதாகும்; பந்த வடிவமான சம்சாரம் வெளி நோக் கத்தால் விளங்குவதாம்; இவ்விரண்டு நோக்கங்களுக்கும் விளக்க மாகப் பரிசுத்தமாகிய யுக்தியை நாம் கூறுவோம் கேட்பாயாக" என்பது இதன்கருத்து.

இதில் பொருண்முடிபுக் கேற்பப் பல வாக்கியத் தொடர்கள் இசையெச்சமாக வருவித்துரைக்கப்பட்டன. உண்ணோக்காகும், புறநோக்காகும் என்பன மூன்றும் வேற்றுமைத் தொகைகள். உள் நோக்கம் - மனம் புறத்திற் செல்லாது அடங்கி ஒரு நிலைப்பட்டு ஆத்மாவையே நோக்கி நிற்பது. அனகம்-மாசின்மை. இது அடுத்த செய்யுளோடு தொடர்ந்து முடியும். (71)

72 தென்றிசைநடப்போர்கங்கை சென்றுதோய்ந்திடுவரோதான்
அன்றியு மவனி வாழ்க்கைக் கமைச்சர்களுடனே காந்தம்
ஒன்றியே யூகஞ் செய்வோ ருலகவேந் தாயி னோர்கள்
நின்றிதை நோக்கா யில்லி னிற்பவர் முத்தி சேரார்.

இ-ள்: தென்திசை நடப்போர்-(கங்கையாற்றிற்குத் தென்றிசையி லிருந்துகொண்டு, அக்கங்கையிற் சென்று மூழ்குவதற்கு வடதிசையை நோக்கிச் செல்லாமல்) தென்திசையை நோக்கி நடந்து செல்பவர், கங்கை - அக்கங்கா நதியினிடத்தில், சென்று-போய், தோய்ந்திடுவரோ - மூழ்குவாரோ?, (மூழ்கமாட்டார்கள் இதைப்போல் முத்தியடைவதற்கு உள்நோக்கமாகிய ஞானமார்க்கத்தைவிட்டுப் புறநோக்காகிய மயக்கமார்க்கத்திற் சென்றால் மோட்சம் கிடைப்பது அரிதாகும்). அன்றியும்-அல்லாமலும், உலக வேந்து ஆயினோர்கள் - உலகத்தை யாளும் மன்னராயிருப்பவர்கள், (புறநோக்குடையவர்களாய் இல்வாழ்க்கையிலிருப்பதோடு) அவனி வாழ்க்கைக்கு - (தங்கள் ஆளுகைக்குட்பட்ட) உலகத்தார் பகை பிணி முதலிய இடர்களின்றி வாழும் வாழ்க்கையின் பொருட்டு, (அதாவது, உலகத்தார் இடரின்றி வாழ்வதற்கு) அமைச்சர்களுடன்-மந்திரிகளுடனே, ஏகாந்தம் ஒன்றி - தனித்தவிடத்திற் பொருந்தியிருந்து, யூகம் செய்வோர் - ஆலோசனை செய்யக்கூடியவர்களாயிருக்கின்றனர், (இப்படி அரசாட்சியைப்பற்றிய பெரிய ஆலோசனையோடு) இல்லில் நிற்பவர் - (புறநோக்குடையவராய்) இல்லற வாழ்க்கையிலே யிருப்பவர், முத்தி சேரார் - மோட்ச மடையமாட்டார்கள், நின்று - (நன்மார்க்கத்தில் நீ) நிலைபெற்று, இதைநோக்காய்-இவ்வுண்மையை நன்று ஊகித்துப் பார்க்கக்கடவாய்; எ-று.

"கங்கையாற்றிற்குத் தென்றிசையிலிருந்து கொண்டு அக்கங்கையிற் சென்று மூழ்குவதற்கு வடதிசையை நோக்கிச் செல்லாமல் தென்திசையை நோக்கி நடந்துசெல்பவர் அந்தக் கங்கையிற்போய் மூழ்குவாரோ? மூழ்கமாட்டார்கள்; இதைப்போல முத்தியடைவதற்கு உள்நோக்கமாகிய ஞானமார்க்கத்தைவிட்டுப் புறநோக்காகிய மயக்கமார்க்கத்தில் சென்றால் மோட்சம் கிடைப்பது அரிதாகும்; அன்றியும் உலகத்தையாளும் மன்னராயிருப்பவர்கள், புறநோக்குடையவர்களாய் இல்வாழ்க்கையிலிருப்பதோடு, தங்

களின் ஆளுகைக்குட்பட்ட உலகத்தார் இடரின்றி வாழ்வதற்கு மந்திரிகளுடனே ஏகாந்தமான விடத்திலிருந்து ஆலோசனை செய்யக் கூடியவர்களாயிருக்கின்றனர்; இப்படி அரசாட்சியைப் பற்றிய பெரிய ஆலோசனையோடு புறநோக்குடையவராய் இல்லற வாழ்க்கையிலிருப்பவர் மோட்சமடையமாட்டார்கள்; நீ நன்னெறியைக் கடைப்பிடித்து நின்று இதை நன்றாக ஊகித்துப்பார்க்கக்கடவாய்" என்பது இதன்கருத்து. தான்-அசை. (72)

73 பாசந்தான் பகைய தாகப் பார்வைபெற் றிடிற்பா சத்தில்
பாசந்தான் வைத்துப் பின்னும் பற்றவுங் கூடு மோதான்
பாசந்தான் பகைய தென்றே பகருநூன் மட்டே கற்றோர்
பாசந்தான் விடவு மாட்டார் பரமெலா மெனவாய்ப் போக்கும்.

இ-ள்: பாசம் - (ஒருவன், தனக்குப்) பலபந்த வடிவமாகிய குடும்பம், பகையதாக-வெறுப்பாகத்தோன்ற, பார்வை பெற்றிடில்-ஞான தெரிசனத்தை அடைந்துவிட்டால், பின்னும் - மறுபடியும், பாசத்தில் - அந்தப் பலபந்த வடிவமாகிய குடும்பத்தில், பாசம் வைத்து-அன்புவைத்து, (அதனை) பற்றவும் கூடுமோ-மேற்கொண்டொழுதல் கூடுமோ, பாசம் - அந்தக் குடும்பமானது, பகையது என்று-பகையுடையது என்று, பகரும்-சொல்லுகின்ற, நூல்மட்டே கற்றோர் - நூலைமாத்திரம் படித்து அந்த நூலாராய்ச்சியளவாக இருப்பவர், பாசம் - பந்த வடிவமாகிய குடும்பத்தை, விடவும்மாட்டார்-விட்டு நீங்கவேமாட்டார்கள், எல்லாம் பரம்என - யாவும் சிவமயமென்று, (பேசி) வாய்ப்போக்கும் - வாயைப் போக்கிக்கொண்டு வாசக ஞானிகளாயிருந் தொழிவர்; எ-று.

"ஒருவன், தனக்குப் பலபந்த வடிவமாகிய குடும்பம் பகையாகத்தோன்ற ஞான தரிசனத்தை யடைந்துவிட்டால், மறுபடியும் அந்தக் குடும்பத்தில் பற்றுவைத்து அதனை மேற்கொண்டொழுகுதல் அவனால் கூடுமோ? ஒருபோதும் முடியாது; குடும்பம் பகை

யானதென்று நூலளவாகமட்டும் உணர்ந்தவர் எக்காலத்திலும் பற்று நீங்கமாட்டார்; எல்லாம் சிவமென்று வாசாஞானம் பேசி வாயைப் போக்கி முத்தியென்பதை உணராமலே ஒழிவார்கள்" என்பது இதன்கருத்து. தான் ஐந்தும் அசைகள். இதுவும் அடுத்த செய்யுளைத் தொடர்ந்து முடியும். (73)

74 அந்தமா தியுமி லாவீ டடைந்துடற் பிறப்ப றுக்கச்
சுந்தர ஞானம் போதுந் துறவற மேதுக் கென்றே
மந்ததி காரி யோரை மதித்துநூ லுரைக்குஞ் செய்தி
அந்தம தான பேருக் கத்தகை விளம்பா தென்றும்.

இ-ள்: அந்தம்-முடிவும், ஆதியும்-முதலும், இல்லா-இல்லாத, வீடு - மோட்சத்தை, அடைந்து - பெற்று, உடல் - உடம்பினது, பிறப்பு - உற்பத்தியை, அறுக்க - ஒழிப்பதற்கு, சுந்தரம் - அழகிய, ஞானம்போதும் - தத்துவ ஞானமொன்றே போதுமானதாம், துறவறம்-துறவறத்தை மேற்கொண்டொழுகுதல், ஏதுக்கு-எதற்கு? என்று-, நூல்-ஞானசாஸ்திரங்கள், உரைக்கும் செய்தி-கூறுகின்ற காரியம், மந்த அதிகாரியோரை மதித்து - மந்தமான அதிகாரிகளை நோக்கியாம், அந்த மதானபேருக்கு-(பற்றுக்களை யெல்லாம்விட்டு) உண்மை ஞானத்தின் முடிவைப் பெற்ற அதிதீவிர அதிகாரிகட்கு, என்றும்-எப்பொழுதும், நூல்-சாஸ்திரம்,அத்தகை-அத்தன்மையை, விளம்பாது-கூறமாட்டாது; எ-று.

"நாசோற்பத்தியில்லாத மோட்சத்தையடைந்து பிறப்பினை யொழிப்பதற்குத் தத்துவ ஞானமொன்றே போதுமானது; துறவறத்தை மேற்கொண்டொழுகுதல் எதற்காக? (அது வேண்டியதில்லை) என்று ஞான சாஸ்திரங்கள் உரைப்பது மந்தாதிகளை உத்தேசித்தாம்; அதிதீவிர அதிகாரிகளுக்கில்லை" என்பது இதன் கருத்து. அதிகாரி - ஞானங்கேட்டற்குரியவன்; மந்த அதிகாரி-விரைவின்றி ஞானவிசாரணை செய்யும் ஆரம்பக்காரன்; அதிதீவிர

அதிகாரி - மோட்சத்தை யடைய மிகவிரைந்து ஞானோபதேசம் பெறுவோன். (74)

## மகாராஜன் தன் மந்திரிக்குத் தத்துவோபதேசஞ் செய்தல்.

75 தோன்று கின்ற பொருளியல்புந்
தோற்று விக்கும் பொருளியல்பும்
தோன்ற வுனக்கி யாமுரைக்கச்
சோக மறவே கேட்டிடுவாய்
தோன்று பொருள்க ளநித்தமுமாய்
தூய்மை யின்றித் துக்கமுமாய்த்
தோன்றுந் தோற்று விக்கும்பொருள்
சுகமாய்ச் சுத்த நித்தமுமாம்.

இ-ள்: தோன்றுகின்ற-உண்டாகிக் காணப்படுகின்ற, பொருள் இயல்பும்-பொருள்களின் இயற்கையையும், தோற்றுவிக்கும்-(முதற் காரணமாயும் நிமித்தகாரணமாயுமிருந்து அவற்றைத்) தோன்றச் செய்கின்ற, பொருள் இயல்பும் - வஸ்துவின் இயற்கையையும், உனக்கு-, தோன்ற-விளக்கமாக, யாம்-, (சொல்வோம்) உரைக்க-(அவ்வாறு) சொல்ல, (நீ) சோகமற-(பிறவித்) துன்பமொழிய, கேட்டிடுவாய் - (அவற்றைக்) கேட்பாய், தோன்றுகின்ற பொருள்கள்-உண்டாகிக் காணப்படுகின்ற பொருள்கள், அநித்தமும்-அநித்தியமும், ஆய்-ஆகி, தூய்மையின்றி-பரிசுத்தமில்லாமல், துக்கமும் ஆய் - துக்கமும் ஆகி, தோன்றும் - காணப்படும், தோற்றுவிக்கும் பொருள் - (அவற்றைத்) தோன்றச் செய்கின்ற-பொருள், (சிவம்) சுகமாய்-சௌக்கியமாய், சுத்தம்-பரிசுத்தமும், நித்தம்-நித்தியமும், (நிலையானதும்) ஆம்-ஆகும்; எ-று.

''உண்டாகிக் காணப்படுகின்ற பொருள்களின் இயற்கையையும், முதற்காரணமாயும் நிமித்த காரணமாயுமிருந்து அவற்றைத்

தோன்றச் செய்கின்ற வஸ்துவின் இயற்கையையும் உனக்கு விளக்கமாக யாம் கூறுவோம்; அவ்வாறு சொல்ல நீ பிறவித் துன்ப மொழியுமாறு கேட்பாயாக; உண்டாகிக் காணப்படுகின்ற பொருள் கள் அநித்தியமும், அசுத்தமும், துக்கமும் ஆகித் தோன்றும்; அவற் றைத் தோன்றச் செய்கின்ற பொருள் (சிவம்) சுகமும், சுத்தமும், நித்தியமும் ஆகும்'' என்பது இதன்கருத்து. முதற்காரணம்-கார ணத்திற் காதியாய்நிற்பது; நிமித்தகாரணம்-கத்துருத்துவ வேதுவா யிருப்பது; கத்துருத்துவம்-ஆஞ்ஞையை நடத்துதல். (75)

தேக நிலையாமை கூறல்.

76 பால ஞன பருவம்போம்
 பன்னு குமாரப் பருவம்போம்
 கோல மான தருணம்போம்
 கோலை யூன்றிக் குனிந்தெழுந்து
 காலன் மாய்க்க வனைவர்களும்
 கல்லென் றழுது பேர்மாற்றி
 ஏலப் பிணமென் றொருபெயரிட்
 டிடுகாட் டிடுத லொருதலையே.

இ-ள்: பாலன்ஆன - (நமக்கு முதலில் ஏற்படும்) பாலனாகிய, பருவம் - பருவமும், போம் - (சீக்கிரம்) போய்விடும், பன்னு- சொல்லுகின்ற, குமாரப்பருவம்போம்-குமாரப்பருவமும் அவ்வாறே போய்விடும், கோலம்ஆன-அழகான, தருணம்-பருவமும், (அதாவது யௌவனப் பருவமும்) போம் - அவ்வாறே போய்விடும், (பின்னர் விருத்தாப்பிய பருவம் வரும்; அவ்வாறு வந்தவுடன் நாம்) கோலை ஊன்றி - தடியைப் பிடித்துப் பூமியில் ஊன்றி, குனிந்து எழுந்து- குனிந்து எழுந்து நடக்க, (அத்தருணத்தில் நம்முயிரைக் கொண்டு போக யமன் வருவான்; அவ்வாறு வந்து நம்மை) காலன் - அந்த யமன், மாய்க்க - மடிக்க, அனைவர்களும் - நமக்குரியாராயுள்ள

எல்லோரும், கல்என்று அழுது-கல் என்று இரைச்சலிட்டுக் கதறி யழுது, பேர்மாற்றி-நமக்கேற்பட்டிருந்த பெயரை நீக்கி, (நம் உடம்பிற்கு) ஏல-பொருத்தமாக, பிணம் என்று-பிரேதம் என்று, ஒரு பெயரிட்டு-ஒருபேரைச் சூட்டி, இடுகாட்டு - சுடுகாட்டில், இடுதல்-வைத்தெரித்தல், ஒருதலை-நிச்சயம்; எ-று.

"நமக்கு முதலில் ஏற்படும் பாலப்பருவமும் சீக்கிரம் போய் விடும்; அதற்குப் பின்வரும் குமாரப் பருவமும், யௌவனப் பருவமும் அவ்வாறே தொலையும்; பின்னர் வயோதிகப் பருவம் வரும்; அப்பருவத்தில் நாம் கோலூன்றி யெழுந்து குனிந்து நடப்போம்; அப்பருவத்தில் நம்முயிரைக் கொண்டுசெல்ல யமன் வருவான்; அவ்வாறு வந்து நம்மைக் கொல்ல நமக்குரியாரெல்லோரும் கல்லென்றிரைந்தழுது நமக்கிருந்த பெயரைமாற்றி நம் உடலுக்குப் பிணமென்றொரு பெயரிட்டுச் சுடுகாட்டில் வைத்தெரிப்பது நிச்சயம்" என்பது இதன்கருத்து. "எழ' என்னும் செயவெனெச்சம், 'எழுந்து' என்னும் செய்தெனெச்சமாகத் திரிந்து வந்தது. இவ்வுரை யிடையில் பொருண்முடிபுக் கேற்பச் சில சொற்றொடர்கள் வருவித்துரைக்கப்பட்டன. (76)

77 கருவி னின்று மழிந்துபோங்
கண்ட குழந்தை யினுங்குமரப்
பருவந் தனிலும் போந்தருணப்
பருவந் தனிலு மழிந்துபோம்
உருவ நடுங்கு மூப்பதினு
மொடுங்கு மெந்தக் காலையினும்
ஒருவி யழித லியல்பாகு
முலகத் துடலின் வாழ்க்கையுமே.

இ-ள்: (இன்னும் நாம் உடம்பைப்பற்றி ஆராயுமிடத்து அவ்வுடம்பு) கருவில் நின்றும் - கருவாயிருக்கும்போது அதிலிருந்தும்,

அழிந்துபோம் - அழிந்து போவதாம், (கருப்பையிலிருந்து பிறந்து) கண்ட-உருவத்தைப் பலரும் பார்த்த, குழந்தையினும் - பாலப் பருவத்திலும், குமர்ப்பருவந்தனிலும் - குமாரப்பருவத்திலும், போம்- அழிந்துபோகும், தருணப் பருவந்தனிலும் - யௌவனப் பருவத்திலும், அழிந்துபோம் - அழிந்துபோகும், உருவம்-ஒவ்வொரு அவயவமும், நடுங்கும்-நடுங்குகின்ற, மூப்பதினும் - கிழப்பருவத்திலும், ஒடுங்கும் - அழிந்துபோகும், உலகத்து - இவ்வுலகத்திலே, (பாலகுமார யௌவன வயோதிக மென்னும் நால்வகைப் பருவமும் ஏற்படுவதற்குரிய) உடலின் வாழ்க்கை - உடம்பின் வாழ்க்கையானது, எந்தக் காலையினும்-(அந்த நால்வகைப் பருவத்துள்) எந்தப் பருவத்திலாவது, ஒருவி-(உயிர்) நீங்கி, அழிதல்-அழிந்துபோவது, இயல்பாகும்-இயற்கை யாகும்; எ-று.

"இன்னும் உடம்பு கருப்பையி லிருக்கும்போதும் அழிந்துபோம்; பாலப்பருவத்திலும் அழியும்; குமாரப்பருவத்திலும் அழியும்; யௌவனப்பருவத்திலும் அழியும்; கிழப்பருவத்திலும் அழியும்; உடம்பின் வாழ்க்கையானது இவ்வாறு எந்தப் பருவத்திலாவது உயிர்நீங்கி அழிந்துபோகும் இயற்கையுடையதாகும்" என்பது இதன்கருத்து. (77)

உலக நிலையாமை கூறல்.

78 பஞ்ச பூத மழிந்துபோம்
பானுத் திங்க ளுடுக்கள்போம்
வஞ்ச வசுரர் மடிந்திடுவர்
மாகர் பதம்போம் வல்லரக்கர்
துஞ்சு வார்கள் போகிபதம்
துஞ்சும் பிரமன் பதந்தானும்
துஞ்சுந் திருமால் பதந்துஞ்சும்
துஞ்சா தொன்றே பரமபதம்.

இ-ள்: பஞ்சபூதம் - (பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்). என்னும் பஞ்ச பூதங்களும், அழிந்துபோம்-அழிந்துபோகும், பானு-சூரியனும், திங்கள் - சந்திரனும், உடுக்கள் - நட்சத்திரங்களும், போம்-அழிந்துபோகும், வஞ்சம் - வஞ்சனையையுடைய, அசுரர்-அசுரர்களும், மடிந்திடுவர்-இறந்துபோவார்கள், மாகர்பதம்-தேவர்களுடைய பதவியாகிய பொன்னுலகமும், போம்-அழிந்துபோகும், வல்-வல்லமையுடைய, அரக்கர்-அரக்கர்களும், துஞ்சுவார்கள்-இறந்து போவார்கள், போகிபதம்-இந்திரனது பதவியும், துஞ்சும்-அழியும், பிர்மன் பதந்தானும் - நான்முகனது பதவியும், துஞ்சும் - அழியும், திருமால்பதம் - விஷ்ணு பதவியும், துஞ்சும் - அழியும், பரமபதம் ஒன்றே - உயர்ந்த முத்திப் பதவியொன்றே, துஞ்சாது-அழியாது; எ-று.

"பஞ்ச பூதங்களும், சூரியம், சந்திரனும், நக்ஷத்திரங்களும் அழிந்துபோம்; அசுரர்களும் மடிந்துபோவார்கள்; தேவருலகமும் அழியும்; அரக்கர்களும் இறப்பார்கள்; இந்திரன் பதவியும், பிரமன் பதவியும், திருமால் பதவியும் அழியும்; பரமபதமொன்றே அழியாது" என்பது இதன்கருத்து. 'ஒன்றே பரமபதம்' என்பதை, 'பரமபத மொன்றே' என மாற்றுக. (78)

உடம்பின் அழிவு கூறல்.

79 தோலி ரத்த மெலும்பிறைச்சி
சுக்ல மேதை மச்சையொன்றாய்த்
தூலி கரித்த வுடம்பாகுந்
தொட்ட வெவையுந் தன்வடிவாய்க்
கோலி யடக்கிக் கொளுமிதனைக்
கூறு கூறு நோக்காது
போலி யுணர்வோன் மகிழ்வெய்தும்
புனித மென்றும் பரமபதம்.

இ-ள்: (இன்னும் நம்முடம்பானது) தோல்-சர்மம், இரத்தம்-உதிரம், எலும்பு - என்பு, இறைச்சி - தசை, சுக்கிலம் - இந்திரியம், மேதை-நிணம், மச்சை-மூளை, (ஆகிய சப்ததாதுக்களும்) ஒன்றாய்-ஒன்றாகக்கூடி, தூலிகரித்த - பருத்துத் தோன்றுகின்ற, உடம்பாகும்-தேகமாகும், தொட்ட-தான்தொட்டெடுத்து உட்கொண்ட, எவையும்-எந்தப் பதார்த்தங்களையும், தன்வடிவாய்-தன் உருவமாக, கோலி - சேர்த்து, அடக்கிக்கொள்ளும் - அடக்கிக்கொள்ளுகின்ற, இதனை-இவ்வுடம்பை, கூறுகூறா-(இஃது தோல், இஃது இரத்தம், இஃது எலும்பு, இது மாமிசம், இது சுக்கிலம், இது மேதை, இது மச்சை என்று) வேறு வேறாக, நோக்காது-பிரித்துப் பார்க்காமல், போலி உணர்வோன் - போலித்தனமான (நுட்பமில்லாத) அறிவுள்ளவன், (உடம்பின் வாழ்க்கையைச்சதமென்றெண்ணி) மகிழ்வுஎய்தும் - மகிழ்ச்சியடைவான், பரமபதம்-பரமபதமே, என்றும் - என்றைக்கும், புனிதம்-பரிசுத்தமாயிருப்பதாம்; எ-று.

"இன்னும் நம்முடம்பானது தோல் இரத்தம் முதலாகிய சப்த தாதுக்களும் ஒன்றாய்க் கூடிப் பருத்துத் தோன்றுகின்றதாகும்; தான் உட்கொண்ட எந்தப் பதார்த்தங்களையும் தன் வடிவாகச் சேர்த்து அடக்கிக்கொள்ளும்; நுட்பமான அறிவில்லாதவன், இப்பேர்ப்பட்ட இதனை, வேறு வேறாகப் பிரித்துச் சப்த தாதுக்களின் கூட்டமென்று பார்க்காமல், இதன் வாழ்க்கையை நிலையென்றெண்ணி மகிழ்ச்சியடைவான்; பரமபதமே என்றும் புனிதமாயிருப்பதாம்" என்பது இதன்கருத்து. (79)

### உடம்பால்வருந் துன்பமுரைத்தல்.

80 அரந்தை யதனை யொழுங்காக
வறையக் கேணீ யவனியெல்லாம்
பரந்த சிருட்டி திதியொடுக்கம்
பண்பாய் நிகழுஞ் சிருட்டிதனில்

பொருந்து பெரிய துன்பைந்து
போய்மாண் டுறில தெண்மடங்கே
இருந்த திதியு மிரண்டாகு
மிளமை யென்றும் மூப்பென்றும்.

இ-ள்: (மந்திரி! இனி) அரந்தைஅதனை-(தேகத்தால்வரும்) துன்பத்தை, ஒழுங்காக - கிரமமாக, அறைய - (நான்) சொல்ல, நீ கேள்-நீ கேட்பாயாக, அவனிஎல்லாம்-உலகமுழுவதும், பரந்த-பரவிய, சிருட்டி-ஆக்கல், திதி-காத்தல், ஒடுக்கம்-சங்காரம், (என்கின்ற முத்தொழில்களும்) பண்பாய்-கிரமமாய், நிகழும்-நடைபெற்று வருவனவாம், சிருட்டிதனில் - ஜனன காலத்தில், (நமக்கு) பொருந்து-வந்துசேர்கின்ற, பெரியதுன்பு ஐந்து-ஐவகைப் பெரிய துன்பங்கள் உள்ளன, போய் - அவைபோய், மாண்டு - இறந்து, உறில்-மரணதுன்பம் வந்துசேர்ந்தால், அது-அத்துன்பம், (சிருஷ்டி காலத்திலுண்டான துன்பங்களைக் காட்டினும்) எண்மடங்கு-எட்டுப் பங்கதிகமாம், இருந்த - எஞ்சியிருந்த, திதியும் - ஸ்திதி (காத்தல்) காலத்திலும், இளமை என்றும்-இளமைத் துன்பமென்றும், மூப்பு என்றும்-மூப்புத்துன்பமென்றும், இரண்டுஆகும்-இருவகைத் துன்பங்களுண்டாம்; எ-று.

"மந்திரி! இனித் தேகத்தால்வருந் துன்பத்தை நான் சொல்லுகிறேன் கேட்பாயாக; உலக முழுவதிலும் சிருட்டி, திதி, சங்காரம் என்னும் முத்தொழில்களும் கிரமமாக நடைபெறுவனவாம்; சிருட்டி காலத்தில் நமக்குவந்து சேர்கின்ற ஐவகைப் பெரிய துன்பங்களுண்டு; மரணகாலத்திலுண்டாகுந் துன்பமோ, சிருட்டி கால துன்பங்களைக் காட்டினும் எண்மடங்கதிகமாம்; ஸ்திதி காலத்திலும் (அதாவது காப்புக் காலத்திலும்) இளமைத் துன்பம், மூப்புத் துன்பம் என இரண்டுவகைத் துன்பங்களுண்டாம்" என்பது இதன் கருத்து.

சிருஷ்டி காலத்திலுண்டாகும் ஐவகைத் துன்பங்களாவன:- கருப்பாசயப்பை உறுத்தல், அதில் ஜலம்பூரித்தல், உதராக்கினியால் வேதல், பிரசூதவாயுமுரித்துத் தள்ளுதல், யோனித்துவாரத்தில் நெருக்குறல் என்பனவாம். 'திதியும்' என்பதில் இல்லுருபு தொக்கது. (80)

81 விருத்த பருவ மிகத்துன்பம்
விளங்கு மிளமை யிரண்டவையின்
வருத்து பிணியின் மிகத்துன்பம்
வளமை யிளமை மூன்றாகும்
கருத்த தறியாக் குழந்தையென்றுங்
குமார மென்றுங் காளையென்றும்
அருத்த மறியா ததிற்றுன்ப
மடையும் பாலப் பருவத்தில்.

இ-ள்: விருத்த பருவம் - கிழப்பருவத்தில், மிகத்துன்பம்- பெருந்துன்பமுண்டாம், விளங்கும் - தோன்றுகின்ற, இளமை- இளமைப் பருவத்தில், அவையின் - அந்தக் கிழப்பருவத்திலுண்டா குந் துன்பங்களைக் காட்டினும், இரண்டு-இரண்டுபங்கு அதிகமாம், (இந்த இளமைப் பருவத்தில்வரும் துன்பங்களில்) வருத்து-வருத் தப்படுத்துகின்ற, பிணியின்-நோயினால், மிகத்துன்பம்-அதிகத்துன்ப மாம், மைவளை-மயக்கம் சேர்ந்த, இளமை-இளமையானது, கருத் தது அறியா - புத்தியறியாத, குழந்தை என்றும் - பாலப்பருவமென் றும், குமாரம் என்றும் - குமாரப்பருவமென்றும், காளை என்றும்- யௌவனப் பருவமென்றும், மூன்றுஆகும்-மூன்றுவகையது ஆகும், பாலப்பருவத்தில் - குழந்தைப் பருவத்தில், அருத்தம் அறியாததில்- (இப்பொருள் கிடைக்கும், இப்பொருள் கிடைக்காது என்னும்) புத்தியை அறியாததால், துன்பம் அடையும்-துன்பஞ்சேரும்; எ-று.

“கிழப்பருவத்தில் பெருந்துன்பமுண்டாம்; இளமைப் பருவத்தில் அதைக்காட்டினும் இரண்டுபங்கதிகமாம்; அந்த இளமைப் பருவத் துன்பங்களில் நோயினால்வருந்துன்பம் அதிகமாம்; இளமையானது பால, குமார, யௌவனம் என மூன்று வகைகளையுடையதாகும்; பாலப்பருவத்தில் இப்பொருள் கிடைக்கும், இது கிடைக்காது என்னும் புத்தியறியாத் தன்மையால் துன்பம் வந்துசேரும்” என்பது இதன்கருத்து. (81)

82 தந்தை தாயா ராசியர்
தாங்கள் முனிதல் தனக்கஞ்சிச்
சிந்தை கலங்குங் கவுமாரஞ்
சிறந்த காளைப் பருவத்தின்
முந்து பசிநோய் காமநோய்
முடுகித் தணிக்கப் பொருள்தேட
இந்தப் புவனத் திரவுபக
லிடைய றாத தொழிற்றுன்பம்.

இ-ள்: கவுமாரம் - குமாரப்பருவத்தில், தந்தை - தகப்பன், தாயார்-அன்னையார், ஆசிரியர் - உவாத்தியாயர், தாங்கள்-(ஆகிய) இவர்கள், முனிதல் தனக்கு அஞ்சி - கோபித்துப் பேசுவதற்கும் அடிப்பதற்கும் பயந்து, சிந்தை கலங்கும்-மனங்கலங்கும், சிறந்த-சிறப்பாகிய, காளைப்பருவத்தில் - யௌவனப் பருவத்தில், முந்து-முதன்மையாக வருகின்ற, பசிநோய் - பசிநோயையும், காமநோய்-காமநோயையும், முடுகி-விரைந்து, தணிக்க - தணித்துக்கொள்ளுதற் பொருட்டு, பொருள்தேட - பொருளைத்தேட, (முயன்று அது காரணமாக) இந்தப் புவனத்து-இந்த உலகத்தில், இரவுபகல்-இரவும் பகலும், (செய்யப்படுவதாகிய) இடையறாத - நீங்காத, தொழில் துன்பம்-தொழிலால்வருந் துன்பமாம்; எ-று.

"குமாரப்பருவத்தில் தந்தை, தாயார், உவாத்தியாயர் ஆகிய இவர்கள் கோபித்துப் பேசுவதாலும் அடிப்பதாலும் பயந்து சிந்தை கலங்குவதால் துன்பமுண்டாகும்; யௌவனப் பருவத்தில் பசி நோயையும், காம நோயையும் தணித்துக்கொள்ளும் பொருட்டுப் பொருளைத் தேடமுயன்று அதுகாரணமாக இரவும் பகலும் ஓயாமல் செய்யப்படும் தொழிலால் மிக்க துன்பமுண்டாகும்" என்பது இதன் கருத்து. (82)

பொருளால்வருந் துன்பங் கூறல்.

83 பொருளுண் டாகிற் காப்பதனாற்
பொருந்துந் துன்ப மரசாகின்
ஒருதன் மிகுத்த வரசரா
லுதவுந் துன்ப மொருகுடைக்கீழ்
நிருப னாகில் நோய்மரண
நேரு மென்னும் பயத்தாலும்
வருவ தெனையோ மறுமையினி
லென்றும் வாடித் துன்புறமே.

இ-ள்: பொருள் உண்டாகில் - (நமக்குப் புண்ணிய வசத்தால்) பொருள் உண்டாகுமானால், காப்பதனால் - (கள்வர், தாயாதிகள் முதலாயினோர் அதனை அபகரித்துக் கொள்ளாதபடி) காப்பாற்றுவதால், துன்பம் பொருந்தும் - துன்பம் வந்து சேரும், அரசு ஆகின் - (ஒருவன்) அரசனானால், ஒரு - ஒப்பற்ற, தன்மிகுத்த - தன்னைக்காட்டினும் மேற்பட்ட, அரசால் - அரசனால், துன்பம் உதவும் - (அவனுக்குத்) துன்பம் வந்து சேரும், (ஒருவன்) ஒரு குடைக்கீழ் - ஒப்பற்ற வெண்கொற்றக் குடையின் கீழிருந்து உலக முழுவதையும் ஆளுகின்ற, நிருபன் ஆகில் - சக்கரவர்த்தியாயிருப்பானாகில், நோய் - பிணியும், மரணம் - சாவும், நேரும் என்றும்.-

சம்பவிக்குமே என்கின்ற, பயத்தானும் - அச்சத்தாலும், மறுமையினில் - மறுபிறப்பில், வருவது என்னையோ - உண்டாவது யாதோ, என்றும் - என்று நினைக்கும் பயத்தாலும், வாடி - வாட்டமுற்று, துன்புறும் - துன்பத்தையடைவான்; எ-று.

"நமக்குப் புண்ணியவசத்தால் பொருளுண்டானால் அதனைக் கள்வர், தாயாதிகள் முதலியோர் கைப்பற்றிக்கொள்ளாமல் காப்பாற்றுவதால் துன்பம் வந்துசேரும்; ஒருவன் அரசனாயிருந்தால் அவனுக்கு மேற்பட்ட அரசனால் துன்பமுண்டாகும்; ஒருவன் உலகமுழுவதையும் ஒரு குடைக்கீழிருந்து ஆளத்தக்க சக்கரவர்த்தியாயிருந்தாலும் பிணியும், மரணமும் சம்பவிக்குமே யென்னும் பயத்தாலும், மறுபிறப்பில் என்னவருமோ என்னும் பயத்தாலும் துன்பத்தை அடைவான்" என்பது இதன்கருத்து. 'ஒருவன்' என்னும் எழுவாய்கள் வருவித்துரைக்கப்பட்டன். (83)

## சுவர்க்க இன்பமும் இல்லையென் றுரைத்தல்.

84 மாகர்க் கசுரர் பகையுளது
மகிழ்ச்சி வாட்ட மிகவுமுள
ஆகத் தகலா நோயுமுள
தனங்க னுளது நகையுளது
போகத் தழுந்தல் மிகவுளது
பொன்ற லுளது கற்பத்தே
சோகத் திறங்க ளிவையுடைய
துறக்கத் தென்னை சுகமுளதே.

இ-ள்: (சுவர்க்கத்திலாவது இன்பமிருக்கிறதாவென்று பார்த்தால்) மாகர்க்கு - தேவர்களுக்கு, அசுரர்பகை உளது - அசுரர்களுடைய பகை உண்டு, மகிழ்ச்சி - சந்தோஷமும், வாட்டம் - வாட்டமும், மிகவும் - மிகுதியும், உள - இருக்கின்றன, ஆகத்து -

உடம்பில், அகலா - நீங்காத, நோயும் உளது - நோயும் இருக்கின்றது, அனங்கன் - மன்மதவாதனை, உளது - இருக்கின்றது, நசை உளது - (இதுவேண்டும், அது வேண்டும் என்னும்) ஆசையுமிருக்கின்றது, போகத்து - (சுகதுக்கவடிவமான) போகத்தில், அழுந்தல் - அழுந்தியிருத்தலும், மிக உளது - மிகவும் இருக்கின்றது, கற்பத்து - உலகமழியுங்காலத்தில், பொன்றல் உளது - இறத்தலுமிருக்கின்றது, சோகத்திறங்கள் - பற்பல துன்பவகைகளாகிய, இவை உடைய - இவைகளையுடைய, துறக்கத்து - சுவர்க்கலோகத்தில், சுகம் என்னை உளது-என்ன சுகமிருக்கின்றது?, (ஒன்றுமில்லை); எ-று.

"சுவர்க்கத்திலாவது இன்பமிருக்கின்றதாவென்று பார்த்தால், தேவர்களுக்கோ அசுரர்களது பகையுண்டு; மகிழ்ச்சியும் வாட்டமும் இருக்கின்றன; உடம்பில் நீங்காத நோயுமுண்டு; மன்மதவாதனையிருக்கின்றது; அதுவேண்டும், இதுவேண்டும் என்னும் ஆசையுமிருக்கின்றது; சுகதுக்க வடிவமான போகத்தில் அழுந்தியிருத்தலுமுண்டு; உலகமழியுங்காலத்தில் இறத்தலுமிருக்கின்றது, இவ்வாறு பல திறப்பட்ட துன்பங்களாகிய இவற்றையுடைய சுவர்க்கலோகத்திலே என்ன சுகமிருக்கின்றது? ஒன்றுமில்லை" என்பது இதன் கருத்து.

'அனங்கன்' என்பது ஆகுபெயராய் அனங்கனுடைய செயலையுணர்த்தி நின்றது. (84)

### எந்தப் பிறப்பிலும் இன்ப மில்லையெனக் கூறல்.

85 தேவர் மனிதர் துன்பத்தின்
திறங்க ளிவ்வா றாகியிடில்
ஆவ கீழா மிருகமுத
லசர மீறா மைவகையில்

ஓவ வில்லாத் துன்புக்கோ
　　ருவமை யில்லை நிரயத்தில்
நோவத் துன்பஞ் சொல்வதெனை
　　நோயே பவத்திற் சுகம்வீடே.

இ-ள்: தேவர்மனிதர்-தேவர்களுடையவும் மனிதர்களுடை யவும், துன்பத்தின் திறங்கள்-துன்பப்பகுதிகள், இவ்வாறு ஆகி யிடில்-இப்படியிருக்குமாயின், கீழாஆவ-தாழ்ந்தவைகளாய்ப் பிறப் பனவாகிய, மிருகம்முதல் அசாம் ஈறும்-மிருகங்கள் முதலாகத் தாவரங்கள் ஈறாகும், ஐவகையில்-ஐந்துவகைப் பிராணிகளிடத்தில், (ஏற்படும்), ஓவல்இல்லா-நீங்குதல் இல்லாத, துன்புக்கு-துன்பங் களுக்கு, ஓர் உவமைஇல்லை-ஓர் உபமானமும் இல்லை, (ஆகவே சீவர்கள்), நிரயத்தில்-நரகத்தில், (அடையும்) நோ-வருத்தத்தைச் செய்கின்ற, அதுன்பம்-அந்தத் துன்பத்தை, சொல்வது என்னை - வரையறுத்துக் கூறுவது எவ்வாறு?, (இவற்றையெல்லாம் நன்றாக ஆராயுமிடத்து) பவத்தில்-பிறப்பில், நோயே-துன்பமேயுண்டாம், வீடே சுகம்-மோட்சமே சுகவடிவமாகவிருப்பதாம்; எ-று.

"தேவர் மனிதர்களுடைய துன்பப்பகுதிகள் இப்படியிருக்கு மாயின், தாழ்ந்த பிராணிகளாகிய மிருகம் முதலாகத் தாவரம் ஈறாக வுள்ள ஐவகைப் பிராணிகளிடத்தில் ஏற்படும் துன்பங்களுக்கு ஓர் உபமானமேயில்லை; ஆகவே சீவர்கள் நரகத்தில் அடையும் துன் பத்தை எவ்வாறு வரையறுத்துக் கூறுவது? இவற்றையெல்லாம் நன்றாக ஆராயுமிடத்து பிறப்பில் துன்பமேயுண்டாம்; மோட்சமே சுகவடிவாம்" என்பது இதன் கருத்து.

மிருகம்முதல் தாவரமீறாகவுள்ள ஐவகைப் பிராணிகளாவன:- மிருகங்கள், பறவைகள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன வாம். (85)

கொள்ளத்தக்கதையும், தள்ளத்தக்கதையும் கூறல்.

86 இந்த விழிவை யுடைய விந்த மாயை யசத்தே
அந்த வுயர்வை யுடைய வந்தப் பிரமஞ் சத்தே
தந்த மனதிற் றேர்ந்தோர் தள்ளி யெஃதை நிற்பர்
உன்றன் மனதி னன்றாய் யூகித் தமைச்ச பாராய்.

இ-ள்: அமைச்ச-மந்திரியே!, இந்த இழிவையுடைய - இத் தாழ்ந்த தன்மையையுடைய, இந்தமாயை-இந்த மாயாவடிவமான பிரபஞ்சம்,(எக்காலத்தும் தனக்கென்று ஒருபொருளுமில்லாததால்) அசத்தே-அசத்தேயாகும், அந்த உயர்வையுடைய-அந்த உயர்ந்த தன்மையையுடைய, அந்தப்பிரமம்-அந்தப்பிரமமானது, (எப்பொழுதும் உள்ள பொருளாயிருப்பதால்) சத்தே-சத்தேயாகும், (இவற்றைக்கூரிய புத்தியினாலும், சாஸ்திரவுணர்ச்சியினாலும்), தம்தம்-தங்கள் தங்களுடைய,மனதில்-உள்ளத்தில், தேர்ந்தோர்-(ஆராய்ச்சி செய்து) தெளிந்துணர்ந்தவர்கள், எஃதைத்தள்ளி நிற்பர்-எதனைத் தள்ளி எதனைக் கைக்கொண்டு நிற்பார்கள், இந்த மாயாப் பிரபஞ்சத்தைத் தள்ளி அந்தப் பிரமத்தையல்லவா பற்றி நிற்பார்கள், உன்றன் மனதில்-உன்னுடைய மனதிலே (இவற்றை) நன்றாய் யூகித்து பாராய்-நன்றாக யூகித்தறிந்து பார்க்கக்கடவாய்; எ-று.

"மந்திரியே! இந்த இழிவு பொருந்திய மாயாவடிவ பிரபஞ்சமானது எக்காலத்தும் தனக்கென ஒரு பொருளில்லாததால் அசத்தேயாகும்; அந்த உயர்வுள்ள பிரமமானது எப்பொழுதும் உள்ள மெய்ப்பொருளாயிருப்பதால் சத்தேயாகும்; இவற்றை நுண்ணிய அறிவாலும் நூலுணர்ச்சியாலும் தங்கள் தங்களுடைய மனதில் ஆராய்ச்சி செய்து தெளிந்துணர்ந்தவர்கள் எதனைத்தள்ளி எதனைக் கொள்ளுவர்? இந்த மாயாப் பிரபஞ்சத்தைத் தள்ளி அந்தப் பிரமத்தையல்லவா பற்றி நிற்பார்கள்; உன்னுடைய மனத்திலே

இவற்றை நன்ருக யூகித்தறிந்து பார்க்கக் கடவாய்" என்பது இதன் கருத்து.

மாயாப் பிரபஞ்சத்தைத் தள்ளுதலாவது:- தேகம் முதலியவற்றில் யான் எனது என்னும் பற்றின்றியிருத்தலாம். பிரமத்தைப் பற்றுதலாவது:- ஆத்மாவே பிரமம்; பிரமமே ஆத்மா என்றறிந்து உணர்ந்தபடியே அந்நிலையில் நிற்பதாம். இதில் இசை யெச்சமாகச் சில சொற்ருெடர்கள் பொருண்முடிபுக்கேற்ப வருவித்துரைக்கப் பட்டன. (86)

87 பொய்யென் றிதனை யறிந்தோர் பொருந்தி நிற்ப துளதோ
மெய்யென் றதனை யறிந்தோர் மேவா திருப்ப துளதோ
ஐய முளதோ விதனி லமைச்ச பாராய் நன்ருய்
உய்ய வறிவி லாதோ ருழல்வர் நீக்க மாட்டார்.

இ-ள்: இதனை-இந்த மாயாப்பிரபஞ்சத்தை, பொய் என்று அறிந்தோர்-பொய்யானது என்று தெரிந்து கொண்டவர்கள், (இதனிடத்து), பொருந்தி நிற்பது- (யான் எனது என்னும் பற்ருேடு) பொருந்தி வாழ்ந்து நிற்பது, உளதோ-உண்டோ?, அதனை-அந்தப் பிரமத்தை, மெய் என்று அறிந்தோர்-உண்மையான பொருளென்றுணர்ந்தவர்கள், மேவாது இருப்பது-(முயன்று அதனை) அடையாதிருப்பது, உளதோ-உண்டோ?, அமைச்ச-மந்திரியே!, இதனில்-இவ்விஷயத்தில், ஐயம் உளதோ-சந்தேகமுண்டோ?, (அப்படியிருக்குமாளுல் அதனை), நன்ருய் பாராய்-நன்ருக (ஆராய்ந்து) நோக்கக்கடவாய்,உய்ய-(மோட்ச சாதனமாகிய தத்துவஞானத்தை அடைந்து சம்சார துன்பத்தினின்றும்) தப்பிப் பிழைத்தற்குத் தக்க, அறிவு இல்லாதோர் - உணர்ச்சியில்லாதவர்கள், உழல்வர்-(இந்த மாயா பிரபஞ்சத்திலேயே சிக்கி) வருந்துவார்கள், நீக்க மாட்டார்-(இதனிடத்துள்ளயான் எனதுஎன்கின்ற அபிமானத்தை) ஒழிக்க மாட்டார்கள்; எ-று.

"மந்திரி! இந்த மாயாப்பிரபஞ்சத்தைப் பொய்யெனத் தெரிந்துகொண்டவர்கள், இதனிடத்து யான் எனதென்னும் பற்றோடு பொருந்தி வாழ்வதுண்டாமோ? அந்தப் பிரமத்தை மெய்யென்றுணர்ந்தவர்கள், முயன்று அதனையடையாதிருப்பது உண்டாமோ? இவ்விஷயத்தில் சந்தேகமுண்டோ? அப்படிச் சந்தேகமிருக்குமானால் அதனை நன்றாக ஆராய்ந்து நோக்கக்கடவாய்; மோட்ச சாதனமாகிய தத்துவ ஞானத்தை அடைந்து சம்சார துன்பத்தினின்றும் தப்பிப் பிழைத்தற்குத்தக்க உணர்ச்சியில்லாதவர்கள் இந்த மாயாப் பிரபஞ்சத்திலேயே சிக்கி வருந்துவார்கள்; இதனிடத்துள்ள யான் எனதென்னும் அபிமானத்தை ஒழிக்கமாட்டார்கள்" என்பது இதன் கருத்து. (87)

88 பொய்யை மெய்யென் றறிந்து போத மின்மை யாலே
மெய்யைப் பொய்யென் றெண்ணி மெலிந்தே யுழல்வ ருலகர்
பொய்யைப் பொய்யென் றறிந்து போத குருவி னருளின்
மெய்யை மெய்யென் றறிந்தே மெலிவு தீர்வ ருயர்ந்தோர்.

இ-ள்: உலகர்-உலகத்தார், போதம் இன்மையாலே-தத்துவ ஞானம் இல்லாமையினாலே, பொய்யை-பொய்ப்பொருளாகிய இந்த மாயாப் பிரபஞ்சத்தை, மெய் என்று அறிந்து-உண்மைப் பொருளென்றுணர்ந்து, மெய்யை - உண்மைப் பொருளாகிய அந்தப் பிரமத்தை, பொய் என்று எண்ணி - பொய்யான பொருளென்று நினைத்து, (சுகதுக்கங்களால் மோதுண்டு), மெலிந்து-மெலிவுற்று, உழல்வர் - வருந்தியலைவார்கள், உயர்ந்தோர் - (உலகம் துயர்வடிவமானதென்றுணர்ந்து அதனிடத்துப் பற்றுவைக்காததால்) உயர்ச்சியுற்ற மேலோர், போதகுருவின்-ஞானசற்குருவினுடைய, அருளின்-கிருபையால், பொய்யை-பொய்ப்பொருளாகிய இந்த மாயாப் பிரபஞ்சத்தை, பொய் என்று அறிந்து - பொய்யான பொருளென்

றுணர்ந்து, மெய்ம்மை-மெய்ப்பொருளாகிய அந்தப் பிரமத்தை, மெய் என்று அறிந்து - உண்மைப் பொருளென்றுணர்ந்து, மெலிவு - (சுகதுக்கங்களால் மோதப்பட்டு வருந்தும்) வருத்தம், தீர்வர்-நீங்கப் பெறுவார்கள்; எ-று.

"உலகத்தார் தத்துவ ஞான மில்லாமையாலே பொய்ப்பொருளாகிய இந்த மாயாப் பிரபஞ்சத்தை மெய்ப்பொருளென்றுணர்ந்து உண்மைப் பொருளாகிய அந்தப் பிரமத்தைப் பொய்ப்பொருளென்றெண்ணிச் சுகதுக்கங்களால் மொத்துண்டு வருந்தியலைவார்கள்; உலகம் துக்க வடிவமானதென்றுணர்ந்து அதனிடத்து அபிமானம் வைக்காமையால் மேம்பட்டவர்கள் ஞானசற்குருவினுடைய கிருபையால் பொய்ப்பொருளாகிய இந்த மாயாப் பிரபஞ்சத்தை பொய்யான பொருளென்றுணர்ந்து மெய்ப்பொருளாகிய அந்தப் பிரமத்தை உண்மைப் பொருளென்றுணர்ந்து, அவ்வுணர்ச்சியினாலே, சுகதுக்கங்களால் மொத்துண்டு வருந்தும் வருத்தமொழிவர்" என்பது இதன் கருத்து. (88)

89 துன்பந் தோன்றி லெவருந் துறந்தே கராய்த்த னித்தே
இன்பந் தேட லியற்கை யின்ப மென்றே தோன்றில்
அன்ப தாக நீங்கா ரவர்கட் கெங்ஙன் கூடும்
நன்பரம ஞான நாட்ட மமைச்ச சொல்லாய்.

இ-ள்: அமைச்ச - மந்திரியே!, (எவர்க்கேனும்), துன்பம் தோன்றில் - (குடும்ப பாரத்தாலேற்படும்) துன்பந்தெரியுமானால், எவரும்-எப்பேர்ப்பட்டவர்களும், துறந்து - (அக்குடும்ப பாரத்தை விட்டு) நீங்கி, ஏகராய்-ஒருவராய், தனித்து-தனித்திருந்து, (இன்பந்தருவது யாதுஎன ஆராய்ந்து) இன்பம் தேடல்-அந்த இன்பத்தை தேட முயற்சி செய்வது, இயற்கை-இயல்பாகும், (எவர்க்காவது அக்குடும்ப பாரம்), இன்பம் என்றே தோன்றில் - இன்பமானதென்றே தோன்றுமாயின், (அதனிடத்துப் பிரியம் அதிகமாகும்;

அவ்வாறு), அன்பது ஆக-அன்பானது உண்டாகவே, (அவர்) நீங்கார்-(அதை விட்டும்) நீங்கவே மாட்டார்கள், அவர்கட்கு-அப்போப்பட்டவர்களுக்கு, நன் - நல்ல, பரமஞான நாட்டம் - பிரமஞான நினைவு, எங்ஙன்கூடும்-எவ்வாறு கைகூடும்?, சொல்வாய்-(இதனை ஆலோசித்துக் கூறக்கடவாய்; எ-று.

மந்திரியே! எவரும் குடும்பபாரத்தாலேற்படும் துன்பம் தங்களுக்குத் தோன்றுமாயின் அதனை விட்டு நீங்கித் தனித்திருந்து இன்பந் தருவதியாது என்று ஆலோசித்து அவ்வின்பத்தையடைய முயற்சி செய்வது இயல்பாகும்; எவர்க்காவது அக்குடும்பபாரம் இன்பமானதென்றே தோன்றுமாயின் அதனிடத்து விருப்பம் அதிகமாகும்; அவ்வாறு அன்புண்டாகவே அவர் அதைவிட்டு நீங்கவேமாட்டார்கள்; அப்போப்பட்டவர்களுக்குப் பிரமஞானத்தை அடையவேண்டுமென்னும் நினைவு எவ்வாறுண்டாகும்; இதனை ஆலோசித்துக்கூறக் கடவாய்'' என்பது இதன் கருத்து. (89)

90 இழிவை யுணர்ந்தா லுயர்வை யெவனுந் தேடி நோக்கும்
இழிவை யுணரா ருயர்வை யெய்த நோக்கா ரென்றும்
இழிவை யிழிவென் றுணர வெந்தக் காலம் வாய்க்கும்
இழிவை யுடையோர்க் கமைச்ச விதனை யூகித் துணராய்.

இ-ள்: அமைச்ச - மந்திரியே!, எவனும்-எவனாயினுமொருவன், இழிவை உணர்ந்தால் - (மாயாப் பிரயஞ்சத்தின்) இழிந்த தன்மையை உணர்வானாயின், (அவன் திருசியமனைத்திற்கும் அதிட்டானமாயிருப்பதால்) உயர்வை-உயர்வான பிரமத்தை, (அடைய), தேடி-(சற்குருமூலம்) தேடி, நோக்கும் - சிந்திப்பான், இழிவை உணரார்-(மாயாப் பிரபஞ்சத்தின்) இழிவை அறியாதவர், உயர்வை எய்த-உயர்ந்த பிரமத்தையடைய, என்றும் - எந்தக்காலத்திலும், நோக்கார்-எண்ணமாட்டார்கள், இழிவை உடையோர்க்கு-(ஆசை,

கோபம், அகங்காரம் முதலிய) இழிந்த குணங்களையுடையவர்க்கு, (அக்கினியை அக்கினியென்றறிவதுபோல), இழிவை - (மாயாப் பிரபஞ்சத்தின்) இழிந்த தன்மையை, இழிவென்று உணர-இழி வென்றறிதற்கு, எந்தக்காலம் வாய்க்கும் - எந்தக்காலம் வாய்க் குமோ?, இதனை-இவ்விஷயத்தை, யூகித்து உணராய்-யூகித்தறியக் கடவாய்; எ-று.

"மந்திரியே! ஒருவன் இந்த மாயாப் பிரபஞ்சத்தின் இழிவை உணர்வானாயின், திருசியமனைத்திற்கும் அதிட்டானமாயிருப்பதால் உயர்வாயுள்ள பிரமத்தையடையச் சற்குருமூலம் தேடிச்சிந்திப் பான்; மாயாப் பிரபஞ்சத்தின் இழிவையுணராதவர் உயர்ந்த பிர மத்தையடைய எந்தக்காலத்திலும் சிந்திக்க மாட்டார்கள்; ஆசை, கோபம், அகங்காரம் முதலிய இழிந்த குணங்களையுடையவர்க்கு, அக்கினியை அக்கினியென்றறிவதுபோல, மாயாப் பிரபஞ்சத்தின் இழிவை இழிவென்றுணர எந்தக்காலம் வாய்க்குமோ? இதனை நீ யூகித்துணரக் கடவாய் என்பது இதன் கருத்து.

திரிசியம்-காணப்படும் பொருள். அதிட்டானம்-இடம். (90)

91 பேத வாதி களைப்போற் பிரபஞ் சம்வே றெனவே
ஈத கன்ற தலவே யெமையன் றியதில் லென்றே
போத விழியிற் றுறந்த புனிதத் துறவே கண்டாய்
சீத மதிபோற் குளிர்ந்து செனன வெப்பந் தீரும்.

இ-ள்: (ஜகஜீவ பரம் அல்லது சித்து, அசித்து, ஈசுரன் அல்லது பதிபசுபாசம் என்பன அநாதி நித்தியப் பொருள்கள் என்று பேத வாதிகள் கூறுகின்றனர்; அந்தப்) பேதவாதிகளைப்போல், துவிதி களைப்போல, பிரபஞ்சம்-மாயாப்பிரபஞ்சம், (வேறொன்றுகொள் ளின்) வேறுஎன-பிரமத்தினின்றும் வேறும் என்று கொள்ளவே, ஈது-இந்த மாயாப் பிரபஞ்சம், அகன்றதுஅல - (நம்மினின்றும்) நீங்கியதன்றாம், (அதனால் நமக்கு எப்போதும் துன்பமே விளையும்),

அது - அந்த மாயாப்பிரபஞ்சம், (எம்மிடத்துக்கயிற்றாவுபோலக் கற்பிதமாய்த் தோன்றுதலால்), எம்மை அன்றி-எம்மை (ஆத்மாவை) அல்லாமல், இல் என்று-இல்லையென்று, (உணர்ந்த), போதவிழியில் - ஞானப்பார்வையால், துறந்த - (அம்மாயாப் பிரபஞ்சத்தை) விட்ட, புனிதத்துறவே-பரிசுத்தமான துறவே, (சிறந்ததாம், அதனால் உள்ளம்), சீதமதிபோல்-குளிர்ச்சியான பூரணச்சந்திரனைப் போல, குளிர்ந்து-குளிர்ச்சியடைந்து, செனன வெப்பம்-ஜனன வெப்பமனைத்தும், தீரும்-ஒழியும்; எ-று.

"ஜகஜீவபரம் அல்லது சித்து அசித்து ஈசுரன் அல்லது பதி பசு பாசம் என்பன அநாதி நித்தியப் பொருள்கள் என்று பேதவாதிகள் கூறுகின்றனர்; அந்தப் பேதவாதிகளாகிய துவிதிகளைப்போல் மாயாப்பிரபஞ்சம் வேறென்றுகொள்ளின், இந்த மாயாப்பிரபஞ்சம் நம்மினின்றும் நீங்கியதன்றாம்; அதனால் நமக்கு எப்போதும் துன்பமே விளையும்; அந்த மாயாப்பிரபஞ்சம் எம்மிடத்துப் பழுதையிற் பாம்புபோலக் கற்பிதமாய்த் தோன்றுதலால் எம்மை (ஆத்மாவை) அல்லாமல் இல்லையென்றுணர்ந்த ஞானப்பார்வையால் அப்பிரபஞ்சத்தை விடவேண்டும்; அவ்வாறுவிட்ட பரிசுத்தமான துறவே சிறந்ததாம்; அத்துறவினால் உள்ளம் பூரணச்சந்திரனைப்போல குளிர்ந்து ஜனனவெப்ப மனைத்தும் ஒழியும்" என்பது இதன் கருத்து.

அநாதி நித்தியப்பொருள்கள்-புராதனமாய் நிலைபெற்றிருக்கும் பொருள்கள்; பேதவாதிகள்-பிரிவுகூறும் வாதிகள்; துவிதிகள்-ஒன்றை இரண்டென்னும் கொள்கைக்காரர்; ஈசுரனும் சீவனும் வேறெனக்கூறும் சமயிகள். 'சிறந்ததாம்; அதனால் உள்ளம்' என்னும் சொற்கள் பொருண்முடிபுக்கேற்ப இசையெச்சமாக வருவித்துரைக்கப்பட்டன. கண்டாய்-அசை. ஜனனவெப்பம்-மூன்று தாபமாம்; அவை; தன்னைப்பற்றி (உடம்பைப்பற்றி) வருந்துன்பமும்,

பிறவுயிர்களைப்பற்றி வருந்துன்பமும், தெய்வத்தைப்பற்றிவருந்துன்பமுமாம்; இவையே தாபத்திரயமென்று சொல்லப்படுவன. (91)

92 இருந்த விடத்தி லிருந்தே யெய்த லாமென் றுரைக்கில்
திருந்து நிமல மனத்தோர் தீர ரெனினு மொழிந்தே
பொருந்தி யேகாந் தத்திற் போத மடக்க வேண்டும்
வருந்து மனத்தோர்க் கென்னை வாய்க்கு மமைச்ச சொல்லாய்.

இ-ள்: அமைச்ச - மந்திரியே!, (நீ), இருந்த இடத்தில் இருந்தே-(தாங்கள் முன்) இருந்த இடமாகிய கிரகஸ்தாசிரமத்திலிருந்தே, எய்தலாம் என்று - மோட்சத்தை அடையலாமென்று, உரைக்கில்-கூறுவையாயின், (அந்தக் கிரகஸ்தாசிரமத்திலிருப்பவர்) திருந்து-திருந்திய, நிமலமனத்தோர்-நிர்மல சித்தமுடையவர், தீரர்-தீரமுடையவர், எனினும் - என்றாலும், (அவர்) ஒழிந்து- (குடும்பத்தை விட்டு) நீங்கி, ஏகாந்தத்தில் பொருந்தி-ஏகாந்தமானவிடத்தில் தங்கியிருந்து, (சமாதி செய்து யான் எனது என்னும் அபிமான வடிவமாய் உண்டாகின்ற) போதம்-ஜீவபோதத்தை, அடக்கவேண்டும் - அடக்குதல் வேண்டும், வருந்தும் மனத்தோர்க்கு - (குடும்ப பாரத்தால் வருந்துகின்ற மனத்தினையுடையவர்க்கு, என்னைவாய்க்கும் - (மோட்ச சாதனங்களில்) எது வாய்ப்பதாம்?, சொல்லாய்- (இதற்கு விடை) கூறக்கடவாய்; எ-று.

"மந்திரியே! நீ, தாங்கள் முன்னிருந்த கிரகஸ்தாசிரமத்திலிருந்தே மோட்சத்தையடையலாமென்று கூறுவாயானால், அந்தக் கிரகஸ்தாசிரமத்திலிருப்பவர் திருந்திய-நிர்மல சித்தமுடைய தீரராயிருந்த போதிலும், அதனை யடையதற்குக் குடும்பத்தைவிட்டு நீங்கி ஏகாந்தமானவிடத்திலிருந்து சமாதிசெய்து, யான் எனதென்னும் அபிமான வடிவமாயெழுகின்ற ஜீவபோதத்தை அடக்கவேண்டும்; அவ்வாறு செய்தால் மாத்திரமே மோட்சத்தை அடையலாம்;

அவ்வாறின்றிக் குடும்பபாரத்தால் வருந்துகின்ற மனத்தினையுடைய வர்க்கு மோட்ச சாதனங்களில் எதுவாய்க்கும்? இதற்கு விடை சொல்லக்கடவாய்'' என்பது இதன் கருத்து. ஜீவபோதம்-ஜீவனைப் பற்றிய அறிவு. (92)

93 முனமே யனைத்து முடித்து முழுது முணர்ந்தோ ரில்லின்
இனமே சென்று நின்று மேக நீங்கா ரென்னில்
தினமே யகமாய் நிற்போர் செகத்தி னியல்பை யுணரார்
கனமாம் யாழ்ப்பா ணத்தின் கப்ப லோட்டம் போல.

இ-ள்: முன்னமே - முந்தின பிறப்பிலேயே, அனைத்தும் முடித்து-(தத்துவ ஞானசாதனங்கள்) எல்லாவற்றையும் செய்து முடித்து, (இப்பிறப்பில் குருவின் உபதேசமில்லாமலே) முழுதும் உணர்ந்தோர்-(எல்லாப்பொருளுமாய் விளங்கும் பரப்பிரம சொரூபம்) முழுவதையும் (தமது நிஜவடிவமாக) அறிந்த பெரியோர், இனம்-தமக்குறவாயுள்ள, இல்லின்-இல்லறத்திலே, (உள்ளாரோடு கூடி) சென்று (அவ்வில்லறத்தின் வழியிலே) சென்று, நின்றும்-நிலைபெற்றிருந்தாலும், ஏகம்நீங்கார்-(சர்வமும் சிவமயமென்னும்) ஏகபாவனையினின்றும் நீங்கமாட்டார்கள், (இதனைச் சாஸ்திரங் கூறுகின்றது), என்னில்-இவ்வாறு கூறுமென்றால், தினம்-எப்போதும், அகமாய் நிற்போர் - (பரிசுத்த) ஆன்மாவாய்த் (தன்னை யுணர்ந்து, நானே பிரமம் என்னும் பாவனையுடையராய் அந்நிலையிலே) நிற்பவர், (அதாவது, அகம் பிரஹ்மாஸ்மி-நான் பிரமமாயிருக்கிறேன் என்னும் பாவனையுடையவராயிருப்பவர்), (உலக நோக்கமுடையவராவாரோ?), யாழ்ப்பாணத்தின் - (தமிழ் நாட்டிலிருந்து) யாழ்ப்பாணத்திற்குச்செல்லும், கனமாம்-பாரமாகிய, கப்பல்ஓட்டம் போல-கப்பலின் ஓட்டத்தினது தன்மைபோல, (அதாவது, தமிழ் நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் கப்பல் ஓட்டத்தில் அதிலிருப்பவர் கடலின் மத்தியிற் செல்லும்போது தாம் கப்ப

லேறிய துறைமுகத்தை அறியாதிருப்பது போல), செகத்தின் இயல்பை-உலக இயற்கையை, உணரார்-அறியாதிருப்பர்; எ-று.

"முற்பிறப்பிலேயே தத்துவஞான சாதனங்களெல்லாவற்றையும் செய்துமுடித்து இப்பிறப்பில் குருவின் உபதேசமில்லாமலே, எல்லாப் பொருளுமாய் விளங்கும் பரப்பிரம சொரூப முழுவதையும் தமது நிஜவடிவமாக உணர்ந்த பெரியோர், தமக்குறவாயுள்ள இல்லறத்திலே உள்ளாரோடுகூடி, அவ்வில்லறத்தின் வழியிலேசென்று நிலைபெற்றிருந்தாலும், 'சர்வமும் சிவமயம்' என்னும் ஏகபாவனையினின்றும் நீங்கமாட்டார்கள்; இதனைச் சாஸ்திரங்கூறுகின்றது; இவ்வாறு சாஸ்திரங்கூறுமாயின், எப்போதும் பரிசுத்த ஆன்மாவாய்த் தன்னையுணர்ந்து, 'நானே பிரமம்' என்னும் பாவனையுடையாராய் அந்நிலையிலே நிற்பவர், (அதாவது, அகம்பிரஹ்மாஸ்மி-நான் பிரமமாயிருக்கிறேன் என்னும் பாவனையுடையவராயிருப்பவர்) உலக நோக்கமுடையவராவாரோ? அவர், தமிழ் நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் கப்பலோட்டத்தின் தன்மைபோல, (அதாவது, தமிழ் நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச்செல்லும் கப்பலோட்டத்தில் அதிலிருப்பவர் கடலின் மத்தியிற்சென்று யாழ்ப்பாணந் தெரியும்போது, தாம் கப்பலேறிய துறைமுகத்தை அறியாதிருப்பது போல) உலக இயற்கையை உணராதிருப்பர்" என்பது இதன் கருத்து.

அகம்-ஆன்மா. பொருளை ஒழுங்கோடு முடித்துக்காட்டி விளக்கும்பொருட்டு இதில் இடைக்கிடையே சிற்சில சொற்றொடர்கள் இசையெச்சமாக வருவித்துரைக்கப்பட்டன. (93)

94 ஒருத்த னொருத்தனை யொருவேந் தாக்கின் முன்னம்
இருக்கு மிடத்தை நீக்கி யேக ராச தானி
இருக்கு மன்றி முன்க ணிருக்கு மோதான் சொல்லாய்
திருக்கு ஞான முடையோர் செகத்தை மெய்யென் றுழலார்.

இ-ள்: ஒருத்தன்-பெரிய அரசனொருவன், ஓர் ஊர் உளனை-ஓர் ஊரிலே வசிக்குமொருவனை, (அவன்மேல் தான் வைத்திருக்கும் அபிமானத்தால்), ஒருவேந்து ஆக்கின்-ஒரு நாட்டிற்கு அரசனாக்கினால், (அவன்), முன்னம் இருக்கும் இடத்தை-முன்னே தான் இருந்த ஊரை, நீக்கி-விலக்கிவிட்டு, ஏகாசதானி-(எல்லாவற்றிற்கும் பிரதானமாய் அமைந்த) ஒரே இராஜதானி நகரத்தில், இருக்கும் அன்றி-இருப்பானேயல்லாமல், முன்கண்-முன்இருந்த இடமாகிய ஊரில், இருக்குமோ-இருப்பானோ?, (இருக்கமாட்டானல்லவா? இவ்வாறே இல்லறத்தினின்றும் நீங்கித் துறவறத்தை மேற்கொண்டவர் திரும்பவும் இல்லறத்தை மேற்கொள்ளார்), சொல்லாய்-(மந்திரி! இதற்கு) விடைகூறக்கடவாய், திருக்குஞானமுடையோர் - பிரம ஞானமுடையவர், செகத்தை - உலகத்தை, மெய்யென்று-மெய்ப்பொருளென்று கருதி, உழலார்-(உலகபோகத்தை அடைதற் பொருட்டு) அலையமாட்டார்கள்; எ-று.

"பெரிய அரசனொருவன், ஓர் ஊரிலே வசிக்கும் ஒருவனை, தனக்கு அவன்மீதிருக்கும் அபிமானத்தால் ஒரு நாட்டிற்கு அரசனாக்கிவிட்டால், அவன் முன்னிருந்த ஊரை நீக்கிவிட்டு எல்லாவற்றிற்கும் பிரதானமாய் அமைந்த ஒரே இராஜதானி நகரத்தில் இருப்பானேயல்லாமல் முன் இருந்த ஊரிலிருப்பானோ? இருக்கமாட்டானல்லவா? இவ்வாறே இல்லறத்தினின்றும் நீங்கித் துறவறத்தை மேற்கொண்டவர் திரும்பவும் இல்லறத்தை மேற்கொண்டொழுகமாட்டார்; மந்திரி! இதற்கு நீ விடை கூறக்கடவாய்; பிரமஞானமுடையவர் உலகத்தை மெய்ப்பொருளென்று கருதி உலகபோகத்தை அடையும்பொருட்டு வருந்தி அலையமாட்டார்கள்" என்பது இதன் கருத்து. திருக்கு-காண்பது; அதாவது அறிவு; இங்குப் பிரமத்தை யுணர்த்தி நின்றது. (94)

95 மனையினின் றாலும் பொருளுயிர்ச் சார்வின்
வருத்தனங் கெடுதலின் மகிழ்ச்சி
இனிமையில் வாட்டம் விடயவின் பதனி
லெட்டுணை யாயினு மாசை
பினையதிற் றமது பிரவிர்த்தி தானும்
பேசுமிந் நான்குமில் லெனினும்
தனையுணர் வதற்குச் சாதகஞ் செயுங்காற்
றள்ளியில் நிற்றலே தகுதி.

இ-ள்: (சிலர்) மனையில் நின்றாலும்-இல்லறத்திலிருந்தாலும், பொருள் உயிர்ச்சார்வின் - பொருட் சார்பினாலும் உயிர்ச்சார்பினாலும், வருத்தனம் - (துன்பம்) பெருகுதல், கெடுதலின்-கெடுவதனாலே, (அதாவது, துன்ப விருத்தியில்லாதிருப்பதனாலே), மகிழ்ச்சி-மகிழ்ச்சியும், இனிமைஇல் - இனிமையில்லாத (காரணத்தால்), (அதாவது, தாம் பலவகையாக முயன்றும் தமக்கின்பந்தரும் பொருள்கள் கிடைக்காததால்), வாட்டம் - (அவை கிடைக்கவில்லையே என்ற) வாட்டமும், விடய இன்பதனில்-விஷய போகத்தில், எள் துணையாயினும் - எள்ளளவாயினும், ஆசை-விருப்பமும், பின்னை-பின்னர், அதில்-அந்த விஷயபோகத்தைப் பெறுவதில், (செய்யப்படும்), தமது பிரவிர்த்திதானும்-தம்முடைய முயற்சியும், (ஆகிய), பேசும்-சொல்லப்படுகின்ற, இந்நான்கும்-இந்த நான்கும், இல் எனினும்-(அவர்க்கு) இல்லையென்றாலும், (அவர்), தன்னை உணர்வதற்கு-ஆத்மாவாகிய தன்னை அறிவதற்காக, சாதகம் செய்யுங்கால்-(சிரவணம், மனனம், நிதித்தியாசனம் ஆகிய) சாதனங்களைச் செய்யுங்காலத்தில், இல்தள்ளி-இல்லறத்தைத் தள்ளி, நிற்றலே-(துறவறத்தில்) நிற்பதே, தகுதி-தக்கதாம்; எ-று.

"சிலர் இல்லறத்திலிருந்தாலும், பொருட் சார்பினாலும், உயிர்ச் சார்பினாலும் துன்பமதிகரித்தல் இல்லாதிருப்பதனாலே

மகிழ்ச்சியும், தாம் பலவகையாக் முயன்றும் தமக்கின்பந்தரும் பொருள்கள் கிடைக்காததால் அவை கிடைக்கவில்லையே என்ற வாட்டமும், விஷயபோகத்தில் சிறிதும் விருப்பமும், அதைப்பெறு வதற்குச் செய்யும் முயற்சியும் ஆகிய இந்நான்கும் அவர்க்கு இல்லா திருந்தாலும், அவர், ஆத்மாவை உணர்தற்கு, சிரவணம், மனனம், நிதித்தியாசனம் ஆகிய சாதனங்களைச் செய்யுங்காலத்தில் இல் லறத்தைத் தள்ளித் துறவறத்தில் நிற்பதே தக்கதாம்'' என்பது இதன் கருத்து.

பொருட் சார்பாவது - பொருளில் வைக்கும் பற்றும்; அதா வது; தன்னோடு தொடர்பில்லாத காணி,மனை முதலியவற்றை என தென்று கருதி அவற்றினிடத்து அபிமானஞ் செலுத்துதலாம். உயிர்ச்சார்பாவது-உயிர்களில் வைக்கும் பற்றும்; அதாவது, தன் னோடு தொடர்பில்லாத மனைவிமக்கள் முதலியவர்களை எனக்குரியவ ரென்று கருதி அவரிடத்தபிமானஞ் செலுத்துதலாம்.

பற்று-அகப்பற்று, புறப்பற்று என இருவகைப்படும். அகப்பற் றுவது-தானல்லாத வுடம்பை யானென்று கருதி அதனிடத்தபி மானங் கொண்டிருத்தலாம். புறப்பற்றுவது - தன்னோடு தொடர் பில்லாத பொருளை எனதென்று கருதி அதனிடத்தபிமானங்கொண் டிருத்தலாம். இவ்விரண்டில் ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு வகை யுண்டு. எப்படியெனில், அகப்பற்றில், உடற்பற்று, உட்பற்று என இருவகையுண்டு; உடற்பற்றுவது, தானல்லாத ஸ்தூலவுடம்பை யானென்று கருதி அதனிடத்தபிமானம் வைத்தலாம்; (ஸ்தூல வுடம்பாவது, தோல், இரத்தம், எலும்பு, மாமிசம் முதலியவற்றால் ஏற்பட்ட உடம்பு) உட்பற்றுவது, தானல்லாத சூக்கும வுடம்பை யானெனக்கருதி அதனிடத்தபிமானம் வைத்தலாம்; (சூக்கும உடம்பாவது, பிராணாதி ஐந்து, கர்மேந்திரியம் ஐந்து, ஞானேந்திரி யம் ஐந்து, அந்தக்கரணம் நான்கு ஆகியவற்றின் கூட்டமாம்.)

புறப்பற்றில், உயிர்ச்சார்பு, பொருட் சார்பு என இருவகை யுண்டு; இவை தாம் இச்செய்யுளில் மேலே கூறப்பட்டவை.

சிரவணம் - கேட்டல், மனம் - சிந்தித்தல், நிதித்தியாசனம்- தெளிதல். (95)

96 தீதுறு மனையின் பினையிகழ்ந் தந்தச்
செம்பொரு ளின்பமே வேண்டிச்
சாதக மதனிற் றொடங்குகால் விடயந்
தடையதாஞ் சாத்திய மான
போதினி லவையுந் தோன்றிடா வந்தப்
பொருவிலா னந்தமே விடவே
ஆதலிற் றுறவின் ஞானமஞ் ஞான
மாகுமென் றறைகுவர் பெரியோர்.

இ-ள்: தீது உறு-தீமை பொருந்திய, மனை இன்பினை-இல்லற வாழ்க்கையின் இன்பத்தை, இகழ்ந்து - வெறுத்து, அந்தச் செம் பொருள் இன்பமே-அந்தச் செவ்விய பொருளாகிய பிரமானந் தத்தை, வேண்டி-விரும்பி, சாதகம் அதனில்-(சிரவணம், மனனம், நிதித்தியாசனம் ஆகிய) சாதனங்களில், (பிரவேசித்து), தொடங்கு கால்-)அவற்றைச் செய்யத்) தொடங்குங் காலத்தில், விடயம்-(சப்தாதி) விஷயங்கள், தடையதுஆம்-தடையாகும், அந்தப்பொரு வில்.ஆனந்தம்-அந்த ஒப்பில்லாத பிரமானந்தம், மேலிட-மேம்பட்டு விளங்க, சாத்தியமான போதினில்-சித்தித்த காலத்தில், அவையும்-(தடையான) அவ்விடயங்களும், தோன்றிடா-தோன்றமாட்டா, ஆதலின்-ஆகையால், (துறவறத்திலுண்டாகும் ஞானமே சிறந்த ஞானமாம்), துறவுஇல்-துறவில்லாத, (இல்லறத்திலிருந்து அடை யப்படும்), ஞானம்-ஞானமானது, அஞ்ஞானமாகும் என்று-அஞ்

ஞானமே யாம் என்று, பெரியோர் அறைகுவர்-பெரியோர் சொல்லு வார்கள்; எ- று.

"தீமை பொருந்திய இல்லற வாழ்க்கையை வெறுத்துப்பிர மானந்தத்தை விரும்பிச் சிரவணம் முதலிய சாதனங்களைச் செய்யத் தொடங்கும் காலத்தில் சப்தாதி விஷயங்கள் தடை செய்வனவாம்; அந்த ஒப்பில்லாத பிரமானந்தம் மேம்பட்டு விளங்கிச் சித்தித்த காலத்தில் தடையான அவ்விடயங்கள் தோன்றமாட்டா; ஆதலால், துறவறத்திலிருந்து அடையும் ஞானமே சிறந்ததாம்; இல்லறத்தி லிருந்து அடையும் ஞானம் அஞ்ஞானமாம் என்று பெரியோர் கூறுவர்" என்பது இதன் கருத்து.

சப்தாதி விஷயங்களாவன:- சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் பஞ்சேந்திரிய காரியங்கள். செம்பொருள்-உண் மைப்பொருள்; அஃதிங்குப் பிரமத்தையுணர்த்தி நின்றது. (96)

துறவறத்திலேயே ஞானம் சிறந்து விளங்கும்
இல்லறத்திற் சிறந்து விளங்காதெனக் கூறல்.

97 இல்லற மதனி னுறைந்துளோ ரிடத்தி
விருப்பினு ஞானங்கீ ழிரும்பிற்
புல்லிய மாரத் தின்மென விளங்கும்
போக்கியில் வினைத்துற வென்னும்
நல்லற மடைந்தோ ரிடத்துறை ஞான
நற்றங்க மிசையிரத் தினம்போல்
எல்லையி லொளியாய் விளங்கிடு மாயி
னில்சிறப் பன்றுஞா னிகட்கே.

இ-ள்: இல்லறம் அதனில் உறைந்துளோரிடத்தில் - இல் லறத்தி லிருப்பவர்களிடத்தில், ஞானம் - தத்துவ ஞானமானது, (இராது), இருப்பினும்-(ஒருசமயம்) இருந்தாலும், புல்லிய-தாழ்ந்த,

இரும்பின்கீழ்-இரும்பாபரணத்தின்கண்,(பதிக்கப்பட்ட)மா-சிறந்த, இரத்தினம் என-இரத்தினத்தைப்போல, (அதாவது, அந்த இரத்தினம் ஒளியும் சிறப்பும் இழந்து விளங்குவதுபோல), விளங்கும்-(சிறப்பின்றித்) தோன்றும், இல்லினைப்போக்கி-இல்லற வாழ்க்கையை ஒழித்து, துறவு என்னும் - துறவு என்கின்ற, நல்அறம் அடைந்தோர் இடத்து-நல்ல அறத்தின் வாழ்க்கையை அடைந்தவர்களிடத்தில், உறை-தங்குகின்ற, ஞானம்-தத்துவ ஞானமானது, நல்தங்கமிசை-நல்ல பொன்னுபரணத்தின்மேல், (வைத்திழைக்கப்பட்ட), இரத்தினம்போல்-இரத்தினத்தைப்போல, எல்லையில்-அளவில்லாத, ஒளியாய்-பிரகாசமுடையதாய், விளங்கிடும்-தோன்றும், ஆயின்-இப்படியாகுமானல், ஞானிகட்கு-ஞானிகளுக்கு, (என்ன ஆகுமெனில்), இல்சிறப்பு அன்று-இல்லற வாழ்க்கை சிறப்புடையதாக மாட்டாது; எ-று.

"இல்லறத்திலிருப்பவர்களிடத்தில் தத்துவஞானம் இராது; ஒருசமயம் இருந்தாலும் அது, தாழ்ந்த இரும்பாபரணத்தில் இழைக்கப்பட்ட இரத்தினத்தைப்போல ஒளியும் சிறப்புமின்றித் தோன்றும்; துறவற வாழ்க்கை யுடையவர்களிடத்தில் உள்ள தத்துவ ஞானமானது பொன்னுபரணத்தில் பதிக்கப்பட்ட இரத்தினத்தைப்போல மிக்க பிரகாசமுடையதாய் விளங்கும்; ஆகவே உண்மை ஞானிகட்கு இல்லறவாழ்க்கை சிறப்புடையதாக மாட்டாது" என்பது இதன் கருத்து. இதிற் சில சொற்கள் முன் பின்னுக மாற்றிப்பொருள் கொள்ளப்பட்டன. (97)

இல்லறம் துறவறத்துக் கேதுவாமென்று கூறல்.

98 முனமனை வர்களு முறைவது மில்லை
முத்தியை யுணர்ந்தறி ஞர்களும்
பினமதி னின்ற படியினுற் சங்கை
பேசுவர் துறவுடை யோரை

இனமதை விடுத்து மில்லற மதுவே
தலையென வியம்புவ துண்டோ
மனமதி னிதனை யூகிநீ யமைச்ச
மகிமையன் றில்லஞா னிகட்கே.

இ-ள்: (இல்லறத்திலிருந்து நீதி தவறாமல் நடந்து அறிவுடையவர்களாய்ப் பிறவித்துன்பத்திற்குப் பயந்து அதனை நீக்க முயல்வோரே துறவறத்தை மேற்கொள்பவரா யிருக்கின்றனர்; அதனால் இல்லறம் துறவறத்திற்கேதுவாயிருக்கின்றது. ஆதலின்,) முன்னம்-துறவற வாழ்க்கையைப் பெறுவதற்கு முந்தி, அனைவர்களும்-எல்லோரும், இல்லம் உறைவதும்- இல்லறத்திலிருப்பதும், இயற்கையாய் ஏற்பட்டிருக்கின்றது; அப்படியிருப்பினும் பிரமானந்தத்தை யடையவதற்குப் பின்னர் துறவினையே மேற்கொள்வர்; ஆனால், முன்செய்த நற்றவத்தால் மனமாசு தீரப்பெற்று), முத்தியை-(சர்வதுக்க நிவர்த்தி பரமானந்தப் பிராப்தி வடிவமான) மோட்சத்தை, (சிலர் இல்லற வாழ்க்கையிலிருந்தே அறிந்தடைந்து விடுகின்றார்கள்; எனினும், இல்லறவாழ்க்கைப் பற்றுச் சிறிதுமில்லாதிருப்பர்; இவ்வாறு), அறிஞர்களும்- சில விவேகிகளும், உணர்ந்து-மோட்சத்தை அறிந்து, பின்னம்-பின்னும், அதில் நின்றபடியினால்-அந்த இல்லற வாழ்க்கையிலேயே இருந்தபடியால், (இல்லற வாழ்க்கையிலிருப்பவர்களிற் பலர், 'இல்லற வாழ்க்கையிலிருந்தபடியே மோட்சத்தை யறிந்தடைதல் கூடாதோ'? என்று) துறவுடையோரை - துறவற வாழ்க்கையுடையவர்களை, (நோக்கி), சங்கை பேசுவர்-சந்தேக ஆக்ஷேபனைகளைப் பேசுவார்கள், (அகப்பற்று புறப்பற்று என்னும் இரண்டையும் விட்டவர் இல்லறத்திலிருப்பினும் அதனையொரு பொருளாக மதிக்கவே மாட்டார்கள்; அப்படியிருக்க அவர்) இனமதை விடுத்தும்-பற்றினைப் பூரணமாக ஒழித்தும், (இல்லறம், துறவறம் என்னும் இரண்டில்), இல்லறம்

அதுவே-இல்லற வாழ்க்கையே, தலைஎன-சிறந்தது என்று, இயம்பு வது உண்டோ - கூறுவதுண்டாமோ? (இல்லை), அமைச்ச-மந்திரியே! நீ-, இதனை-இவ்விஷயத்தை, மனமதின்-மனத்தில், யூகி-ஆலோசித்துப் பார்க்கக்கடவாய், ஞானிகட்கு-தத்துவஞானி களுக்கு, இல்லம்-இல்லற வாழ்க்கையானது, மகிமை அன்று-(எவ் வகையாலும்) சிறப்புடையதாக மாட்டாது; எ-று.

"இல்லறத்திலிருந்து அறிவுள்ளவர்களாய்ப் பிறவித் துன்பத் திற்குப் பயந்து அதனை நீக்க முயல்வோரே பின்னர்த் துறவறத்தை மேற்கொள்பவரா யிருக்கின்றனர்; அதனால் இல்லறமானது துற வறத்திற்கேதுவா யிருக்கின்றது; ஆதலின், துறவற வாழ்க்கையைப் பெறுவதற்கு முந்தி எல்லோரும் இல்லறத்திலிருப்பதும் இயற்கை யாய் ஏற்பட்டிருக்கின்றது; அப்படியிருப்பினும் பிரமானந்தத்தை அடைவதற்குப் பின்னர்த் துறவினையே மேற்கொள்வர்; ஆனால் முன்செய்த நற்றவத்தால் மனமாசு தீரப்பெற்று, சர்வதுக்க நிவர்த்தி பரமானந்தப் பிராப்தி வடிவமான மோட்சத்தைச் சிலர் இல்லற வாழ்க்கையிலிருந்தே அறிந்தடைந்து விடுகின்றார்கள்; எனினும், இல்லறத்தில் பற்றுச் சிறிதுமில்லாதிருப்பர்; இவ்வாறு சில அறிஞர் களும் மோட்சத்தை அறிந்து பின்னும் அதில் நின்றபடியால், அந்த இல்லற வாழ்க்கையிலிருப்பவர்களிற் பலர், 'இல்வாழ்க்கையிலிருந்த படியே மோட்சத்தை யறிந்தடைதல் கூடாதோ?' என்று, துறவற வாழ்க்கையுடையோரை நோக்கிச் சந்தேக ஆக்ஷேபனைகளைப் பேசுவார்கள்; இது மிகப்பேதைமையான கேள்வியாம்; அகப்பற்று புறப்பற்று, என்னும் இரண்டையும் விட்டவர் இல்லறத்திலிருப்பி னும் அதனை யொருபொருளாக மதிக்கவே மாட்டார்கள்; அப்படி யிருக்க அவர், பற்றினைப் பூரணமாக ஒழித்தும், இல்லறம், துற வறம் என்னும் இரண்டில் இல்லற வாழ்க்கையே சிறந்ததென்று கூறுவாரோ? இல்லை; மந்திரியே! நீ இதனை மனத்தில் ஆலோ சித்துப் பார்க்கக் கடவாய்; தத்துவ ஞானிகளுக்கு இல்வாழ்க்கை

யானது எவ்வகையாலும் சிறப்புடையதாக மாட்டாது'' என்பது இதன் கருத்து. இதில் பல சொற்றொடர்கள் இசையெச்சமாக வருவித்துரைக்கப்பட்டன. (98)

ஞானிகளின் இயற்கை கூறல்.

99 ஆடிய சகல மடங்குகே வலமு
மகற்றியே யொளிப்படை கொண்டு
மூடிய விருளை முழுதையும் வீசி
முடிவில்வீ டதனையே யுணர்ந்தோர்
நீடிய ஞால மிசையினிற் பால
னிசமரு ளுடையன்பேய் பிடித்தோன்
கூடிய குணத்தி னூரிற்போய்க் குடியின்
கூலியா ளனினியல் படைவார்.

இ-ள்: ஆடிய-நடைபெற்ற, சகலம் - சகலாவஸ்தையையும், அடங்கு-அஃதொடங்குகின்ற, கேவலமும்-கேவலாவஸ்தையையும், (முழுப்பிரயத்தனஞ் செய்து சமம் முதலிய அப்பியாசங்களால்) அகற்றி-ஒழித்து, ஒளிப்படை கொண்டு-(தத்துவஞான மென்னும்) பிரகாச வடிவாளைக்கொண்டு, மூடிய-(தமது உண்மை வடிவமாகிய ஆத்மாவை விளங்காதபடி) மறைத்துள்ள, இருளை - இருள்வடிவ மாயுள்ள அஞ்ஞானமென்னும் மரத்தை, முழுதையும்-முழுவதை யும், (அதாவது சிறிதும் விடாதபடி), வீசி-வெட்டியழித்து, (அதா வது,ஆத்ம தரிசனத்தால் சொரூபாவரணத்தை நன்றாகக்கெடுத்து), முடிவுஇல்-அழிவில்லாத, (அதாவது, நித்தியமான), வீடு அதனையே உணர்ந்தோர்-மோட்சத்தை அறிந்தடைந்தவர்கள், நீடிய-நீண்ட, ஞாலமிசையினில்-உலகத்தில், பாலன்-பாலகன், நிசம் - உண்மை யாகிய, மருள் உடையன்-பயித்தியமுள்ளவன், பேய் பிடித்தோன்-

பேய் பிடித்தவன், (ஆகியவர்களிடம்), கூடிய-சேர்ந்த, குணத்தின்-குணத்திேனுடு, (அதாவது, பாலனைப் போலவும், பித்தனைப்போலவும், பேயனைப் போலவும் ஆகி), ஊரில் போய் - ஊர்களுக்குள் சென்று, குடியின் - குடும்பங்களில், (உள்ள), கூலி ஆளனின்-கூலியாளின், இயல்பு அடைவார்-இயற்கையை அடைந்திருப்பர், (அதாவது, வீடுகளில் வேலை செய்யும் கூலிக்காரனாகவு மிருப்பார்கள்) எ-று.

"நடைபெற்ற சகலாவஸ்தையையும், அதைதொடுங்குதலாகிய கேவலாவஸ்தையையும் முழுப்பிரயத்தனம் செய்து, சமம் முதலிய அப்பியாசங்களால் ஒழித்து, தத்துவஞானமென்னும் பிரகாச வடிவாளைக்கொண்டு, தமது உண்மை வடிவமாகிய ஆத்மாவை விளங்காதபடி மறைத்துள்ள இருள்வடிவமான அஞ்ஞான மென்னும் மாத்தைச் சிறிதும் விடாதபடி வெட்டியழித்து, (அதாவது, ஆத்ம தரிசனத்தால் சொரூபாவாணத்தைச் செவ்வையாகக் கெடுத்து, நித்தியமான மோட்சத்தை அறிந்தடைந்தோர், இவ்வுலகத்தில் பாலன் போலவும், பித்தன் போலவும், பேயன் போலவும் ஆகி ஊர்களுக்குள் சென்று, வீடுகளில் வேலைசெய்யும் கூலிக்காரனாகவுமிருப்பர்" என்பது இதன் கருத்து.

சகலாவஸ்தை-சித்தவிருத்தி விரிவது; கேவலாவஸ்தை-அந்தச் சித்தவிருத்தி ஒடுங்குவது. இன்னும், சகலாவஸ்தை - சாக்கிரம், சொப்பனம் ஆகிய இரண்டுமென்றும், கேவலாவஸ்தை - சுழுப்தியென்றும், ஒன்றை நினைப்பது சகலாவஸ்தை யென்றும், அதனை மறப்பது கேவலாவஸ்தை யென்றும் கூறுவதுமுண்டு. சமம் முதலியன-சமம், தமம், உபாதி, திதிக்ஷை, சிரத்தை, சமாதானம் என்னும் சமாதிசாதன சம்பத்திகள் ஆறுமாம்; இவை, சமாதி சட்கசம்பத்தி யென்றும் சொல்லப்படும். இவற்றுள் சமம்-மனத்தை யடக்குதல், தமம்-கண் முதலிய புறஇந்திரியங்களை அடக்குதல், உபாதி-

சுவதர்ம அனுஷ்டானம்: அதாவது, 'மாகிய தர்மங்களினின்றும் நிவர்த்தியாதல்; பாகியம்-வெளி; திதிக்ஷை-சீதம், உஷ்ணம், சுகம், துக்கம் முதலியவற்றைச் சகித்தல், சிரத்தை - குருவாக்கியம், வேதாந்த வாக்கியம் முதலியவற்றில் உண்டாகும் விசுவாசம், சமாதானம்-சித்த ஏகாக்கிரத்தன்மை; அதாவது, மனவொருமை. செள்ரூபாவரணம்-ஆத்ம வடிவத்தை மறைப்பது. ஞானிகள், உணவை நினையாதிருத்தலால் பாலனைப்போல்வர்; விருப்பு வெறுப்பில்லாதிருத்தலால் பித்தனைப்போல்வர்; தம்முடைய உருவத்தை மறைத்தலினால் பேய்போல்வர். (99)

## ஞானிகள் இல்லறத்தை விரும்புவதில்லையெனல்.

100 வினைகளோ ரிரண்டுஞ் சமமதாய் ஞான
மேலிடு காலையி னிந்த
மனையின்பங் கான்ற சோற்றிற்கண் டுவர்த்து
மாற்றியே கைவிட வருமேல்
தனையுள படியே யனுபவ மதனிற்
றானுணர்ந் தானந்த மடைந்தோர்
பினையுமவ் விடயம் பூண்பர்க ளெனவே
பேசுதல் வழங்குமோ சொல்லாய்.

இ-ள்: (ஒருவர்க்கு நல்வினை தீவினைப்பயன்களாகிய சுகதுக்கங்களிரண்டும் சமமாகத் தோன்றிச் சிறிது ஞானமுண்டாகும் போது, அவர் இல்லறவின்பத்தை வாந்தியெடுத்த சோற்றைப் போல வெறுத்துக் கைவிடுவர்; அவ்வாறு) ஓர்-ஒப்பற்ற, வினைகள் இரண்டும்-நல்வினை தீவினைப் பயன்களாகிய சுகதுக்கங்களிரண்டும் (ஒருவர்க்கு) சம்மதாய்-(தராசின் இரண்டு தட்டுக்களிலும் வைத்த பொருள்கள் சமமாகத் தோன்றுதல் போல) சமமமாகத்தோன்ற, ஞானம் மேலிடு காலையில் - (சிறிது) தத்துவ ஞானமுண்டாகுங்

காலத்திலேயே, (அவர்) இந்த மனைஇன்பம்-இந்த இல்லற வாழ்க்கையின் சுகத்தை, கான்ற-கக்கிய, (அதாவது, வாந்தியெடுத்த; சோற்றிற்கண்டு-சோற்றைப்போல பார்த்து, உவர்த்து-வெறுத்து, மாற்றி-(இல்லறம் நல்லது என்னுங்கருத்தை) ஒழித்து, கைவிட-விட்டுவிடுதற்கு, வருமேல்-(அவர்க்கு மனம்) வருமானால், தன்னை-(ஆத்மாவாகிய) தன்னை, உள்ளபடியே-உள்ளவாறே, அனுபவமதனில்-(சமாதி சாதனங்களின்) பழக்கத்தால், உணர்ந்து-(பிரத்தியட்சமாக) அறிந்து, ஆனந்தம் - நிரதிசயானந்தத்தை, அடைந்தோர்-அடைந்தவர்கள், பின்னையும்-பிறகும், அவ்விடயம் - அந்த இல்லற வாழ்க்கையின்பமாகிய விஷயத்தை, பூண்பர்கள் என - விரும்பி மேற்கொள்வார்கள் என்று, பேசுதல் வழங்குமோ-சொல்லுதல் கூடுமோ?, (அவ்வாறு பேசுதற்கிடமே யிராது; அவர்கள் ஒருபோதும் இல்லற வாழ்க்கை யின்பத்தை விரும்பவே மாட்டார்கள்), சொல்லாய்-(மந்திரி! நீ இதனை ஆலோசித்துச்) சொல்லக் கடவாய்; எ-று.

“ஒருவர்க்குச் சுகதுக்கங்களிரண்டும் சமமாகத் தோன்றிச் சிறிது தத்துவஞான முண்டாகும்போது, அவர் இல்லற வாழ்க்கையின் இன்பத்தை, வாந்தியெடுத்த சோற்றைப்போல வெறுத்துக் கைவிடுவர்; அங்ஙனம் சிறிது தத்துவஞான முண்டாகுங் காலத்திலேயே அதனைக் கைவிடுவாரானால், ஆத்மாவை உள்ளபடியே அனுபவத்தில் உணர்ந்து பேதமற்ற ஆனந்தத்தை யடைந்தவர்கள், பின்னரும் அவ்வில்லற வாழ்க்கையின்பத்தை விரும்புவார்களோ? ஒருபோதும் விரும்பமாட்டார்கள்; மந்திரி! நீ இதனை ஆலோசித்துக் கூறக்கடவாய்” என்பது இதன் கருத்து.

நல்வினையால் தனம் முதலியவற்றையும், அழகிய மங்கையரையும் அடையும்போது சுகம் என்னும் புத்தியும், தீவினையால் சுரம் முதலியவற்றை அடையும்போது துக்கம் என்னும் புத்தியும் இல்லா

திருப்பதே சுகதுக்க சமத்துவமென்று சொல்லப்படும். நல்வினையால் ஏற்படும் சுகத்தால் மனங்கலங்காதிருத்தலும், தீவினையால் சம்பவிக்கும் துக்கத்தால் மனங்கலங்குதலும் உள்ளவர்கள் சுக துக்கங்களைச் சமமாகக் காணமாட்டார்கள். சுகம் வந்தபோது மகிழ்வதும், துக்கம் வந்தபோது வருந்துதலும் இல்லாதவரே சுக துக்கங்களைச் சமமாகக் காண்பவராவர். நிரதிசயானந்தம் - பேதமற்ற ஆனந்தம். 'ஆக' என்னும் செயவெனெச்சம், 'ஆய்' எனத் திரிந்து வந்தது. பொருண்முடிபுக்கேற்ப முதலிலும், இடையிலும், சில சொற்றொடர்கள் வருவித்துரைக்கப்பட்டன. (100)

101 விடயவின் பதனில் நசையுளோர் தமக்கும்
விரிவதாம் பேரின்பச் சுவையின்
அடைவினைச் செவியிற் கேட்டவக் கணமே
யவற்றினை யகற்றிட வருமேல்
இடைமுத லீறின் ஞானவா னந்த
மெய்தினோர் களும்பினு மிந்தக்
கண்டமனை வாழ்வை நினைவரோ கனன்முற்
கண்டனர் நகையரோ சொல்லாய்.

இ-ள்: (உலக இன்பங்களில் ஆசையுடையவரும் பேரின்பத்தை அனுபவிக்கும் சாதனத்தைக் கேட்டபொழுதே, அவ்வுலக வின்பங்களை வெறுத்துவிட எண்ணுவர்; அவ்வாறு) விடய இன்பதனில்-சப்தாதி இந்திரிய விஷயங்களின் மூலமாகவரும் இன்பங்களில், நசை உள்ளோர் தமக்கும் - விருப்பமுள்ளவர்க்கும், விரிவதாம்-அகண்டமான, பேரின்பச் சுவையின்-நிரதிசயானந்த அனுபவத்தின், அடைவினை-விதத்தை, (அதாவது, பேதமற்ற ஆனந்தத்தை அனுபவிக்கும் சாதனத்தை), செவியில் கேட்ட அக்கணமே-(அவர்) காதாற்கேட்ட அப்பொழுதே, அவற்றினை-அந்தச்

சப்தாதி இந்திரிய விஷயங்களின் மூலமாகவரும் இன்பங்களை, அகற்றிட-ஒழித்துவிட, வருமேல்-மனம் வருமானுல், இடைமுதல் ஈறுஇல்-மத்திமுதல் கண்டஇல்லாத, (அதாவது ஆதிமத்தியாந்த ரகிதமான), ஞான ஆனந்தம்-அறிவானந்தத்தை, எய்திஞேர்களும்-அடைந்தவர்களும், (இழிவான இல்லற வாழ்க்கையை நினைப்பார் களோ? ஒருபோதும் நினைக்கவே மாட்டார்கள்), பின்னும்-(இவ் வாறு அறிவானந்தத்தை அடைந்த பின்னரும்), இந்தக்கடை மனை வாழ்வை-இந்த இழிவான இல்லற வாழ்க்கையை, நினைவர்கள் என் ருல் - (அடைய) எண்ணுவர்களெனில், (அவ்வாறு கூறுகின்ற அவர்களை) கண்டனர்-பார்த்தவர்கள், நகையரோ-சிரிக்கமாட்டார் களா?, சொல்லாய் - (மந்திரியே! நீ இதனை ஆலோசனை செய்து) கூறக்கடவாய்; எ-று.

"உலக இன்பங்களில் ஆசையுடையவரும் பேரின்பத்தை அனு பவிக்கும் சாதனத்தைக் கேட்டபொழுதே அவ்வுலகவின்பங்களை வெறுத்துவிட எண்ணுவர்; அவ்வாறு சப்தாதி இந்திரிய விஷயங் களின் மூலமாகவரும் இன்பங்களில் விருப்பமுள்ளவர்க்கும், அகண்டமான நிரதிசயானந்த அனுபவத்தின் சாதனத்தை அவர் காதாற் கேட்டபொழுதே அந்த விஷய இன்பங்களை ஒழித்துவிட மனம் வருமானுல், ஆதிமத்தியாந்த ரகிதமான ஞானனந்தத்தை அடைந்தவர்கள் இழிவான இல்லறவாழ்க்கையை நினைப்பார்களோ? ஒருபோதும் நினைக்கவே மாட்டார்கள்; அப்படியிருக்க, பின்னும் அதனை நினைப்பார்கள் என்ருல், அவ்வாறு கூறுகின்றவர்களைக் கண்டவர் நகைக்கமாட்டார்களா? மந்திரியே! நீ இதனை ஆலோ சித்துக் கூறக்கடவாய்" என்பது இதன் கருத்து. (101)

102 பற்றிலை யாயி னவையினி விருப்பேன்
பழையவூழ் வினையெனி லாசை
சற்றெனு முதிப்பித் தல்லவோ வூட்டுஞ்
சகவின்பி லிறையெனு மிச்சை

முற்றுணர் ஞானத் தோர்கள்பூண் பர்களோ
முடிவிலா னந்தமே பருகி
நிற்றலே மீட்டும் விழிப்பினுங் கானல்
நீரிற்கண் டுண்முக மடைவார்.

இ-ள்: (நீ, இல்லறத்திருப்போரை ஞானிகளென்று நினைத்து, "இவர்கள் இல்லற ஞானிகள்; இவர்களுக்கு மண் மனை முதலியவற்றில் பற்றில்லை" என்று கூறுதல்கூடும்; அவ்வாறு அவர்களுக்கு), பற்று இல்லையாயின்-பற்று இல்லாதிருக்குமானால், அவையினில்-அவற்றில், இருப்பு என் - அவர் (விருப்பமுடையவராய்) இருப்பதேனோ?, (அப்படியிருப்பதற்குக் காரணம் ஊழ்வினை யென்று நீ சொல்லக்கூடும்; அப்படி) பழைய-பழமையாகிய, ஊழ்வினை எனில்-பிராரத்த கருமம் என்று சொன்னால், (ஆசையில்லாமல் அவற்றை அவர் கொள்ளுதல் கூடுமோ? அந்தக் கருமம்), ஆசை-ஆசையை, சற்றேனும்-சிறிதளவாகவேனும், உதிப்பித்தல்லவோ - உண்டாக்கியல்லவா, ஊட்டும் - (அப்பொருள்களை) அனுபவிக்கச் செய்யும், முற்று - பரிபூரணமான தன்னை (ஆத்மாவை), உணர்-உணர்ந்த; ஞானத்தோர்கள்-தத்துவ ஞானிகள், சகஇன்பில்-உலகபோகத்தில், (அவ்வாறு), இறையெனும்-சிறிதளவாகவேனும், இச்சை பூண்பர்களோ-விருப்பங் கொள்வார்களோ?, (கொள்ளமாட்டாரன்றோ?), முடிவில்-முடிவில்லாத, (அதாவது, நித்தியமான), ஆனந்தமே பருகி-ஆனந்தத்தையே (சமாதிகூடி) அனுபவித்து, நிற்றலே-அந்நிலையில் நிற்பதே, (அவர்க்குறியதாம்), மீட்டும்-திரும்பவும், விழிப்பினும்-(அவர்) சமாதி யொடுக்கத்தினின்றும் விழித்தாலும், (இவ்வுலகத்தை), கானல் நீரில்கண்டு-கானல் நீரைப்போல பொய்யெனப் பார்த்து, உள்முகம் அடைவர்-(மறுபடியும் சித்தத்தை) உள்முகமாகத் திருப்பிச் சமாதிநிலையை அடைவார்கள்; எ-று.

"மந்திரியே! நீ இல்லறத்திருப்போரை ஞானிகளென்று கருதி, 'இவர்கள் இல்லற ஞானிகள்; இவர்களுக்கு உலகப் பொருள்களிற்

பற்றில்லை' என்று கூறுதல்கூடும். அவ்வாறு அவர்களுக்குப் பற்றில்லையானால் அவற்றில் அவர் விருப்பமுடையவராயிருப்பதேனோ? அப்படி யிருப்பதற்குக் காரணம் ஊழ்வினையென்று நீ சொல்லக்கூடும்; அப்படிப் பிராரத்த கருமம் என்று சொன்னால், ஆசையில்லாமல் அவற்றை அவர் கொள்ளுதல்கூடுமோ? அந்தக்கருமம் ஆசையைச் சிறிதளவாகவேனும் உண்டாக்கியல்லவா அப்பொருள்களை அவர் அனுபவிக்கச் செய்யும்? பரிபூரணமான ஆத்மாவை உணர்ந்த தத்துவ ஞானிகள் உலக இன்பத்தில் அவ்வாறு சிறிதளவாக வேனும் இச்சை கொள்வார்களோ? கொள்ளமாட்டார்களல்லவா? முடிவில்லாத ஆனந்தத்தையே சமாதிகூடி யனுபவித்திருக்கும் நிலையே அவர்க்குரியதாம், அவர், சமாதியினின்றும் திரும்ப விழித்தாலும் இவ்வுலகத்தைக் கானல்நீரைப்போல பொய்யெனக் கண்டு மறுபடியும் சித்தத்தை உள்முகமாகத் திருப்பிச் சமாதி நிலையை அடைவார்கள்'' என்பது இதன் கருத்து. ஊழ்வினை-பிராரத்த கருமம்; அது, முன் சரீரங்களிற் செய்யப்பட்டு நிகழ்கால சரீரத்திற் கேதுவானதாம். (102)

103 பவமதை யினிமை யெனவெண்ணி விடயம்
பற்றிநின் றுழன்றவர் தாமே
பவமதை யினிமை யலவெனின் விடயப்
பற்றறுத் தருட்குரு வடைந்து
பவமதை யறுக்கு நெறியுணர்ந் தருளிற்
பரவின்ப மடைந்தவர் தாமும்
பவமதை யினிமை யெனவெணி னலவோ
பற்றுவர் விடயவின் புரையாய்.

இ-ள்: பவம் அதை-இவ்வுலக வாழ்க்கையை, இனிமை என எண்ணி-இன்பந் தருவதென்று நினைத்து, விடயம்- (காணி, மனை

முதலிய) உலகப் பொருள்களை, பற்றிநின்று உழன்றவர்தாமே-(எம்முடையனவாமென்று) பற்றுவைத்து இல்லற வாழ்க்கையிலே நிலைபெற்றுச் சுழன்று வருந்தியவர்களே, (ஒரு காலத்தில் அறிவு வந்தபோது உலகவாழ்க்கை இனிமையானதல்லவென் றுணர்ந்து, காணி மனை முதலிய உலகப் பொருள்களில் தாம் வைத்திருந்த அபிமானத்தை யொழித்துக் குருவையடைந்து பிறவியை நீக்கும் மார்க்கத்தை அவர் வாயிலாக உணர முயலுவார்கள்; அவர்களே அவ்வாறு), பவம் அதை-உலக வாழ்க்கையை, இனிமை அல்ல எனின்-இன்பத்தைத் தருவதல்லவென்று நினைத்து உலகப்பொருள்களின் பற்றினை யொழித்துப் பிறப்பினை நீக்கும் உபாயத்தையுணர முயலுவார்களாயின், விடயப்பற்று அறுத்து-உலகப்பொருள்களின் விருப்பத்தை உள்ளபடி நீக்கி, அருள்குரு அடைந்து-அருள்வடிவமான குருவைத் தஞ்சமாக அடைந்து, பவம் அதை அறுக்கும்-பிறப்பை நீக்கும், நெறி உணர்ந்து-சாதனத்தை அறிந்து, அருளின்-அந்தச் சற்குருவின் கிருபையினாலே, பரஇன்பம்-பரமானந்தத்தை, அடைந்தவர் தாமும்-அடைந்தவர்களும், (உலகவாழ்க்கை இனிமையைத் தருவதென் றெண்ணுவார்களோ? ஒருபோதும் எண்ணவே மாட்டார்கள்; அப்படி), பவம் அதை-உலகப்பொருள்களை, இனிமைஎன எண்ணின் அல்லவோ - இனிமையானவையென்க்கருதினாலன்றோ, விடயஇன்பு-(காணி, மனை முதலிய) விடயங்களின் இன்பத்தை, பற்றுவர் - விரும்புவார்கள்; உரையாய்-(மந்திரி! நீ இதனை ஆலோசித்து சொல்லக்கடவாய்; எ-று.

"உலகவாழ்க்கை இன்பந் தருவதென்று நினைத்து உலகப் பொருள்களை விரும்பிச் சுழன்றலைந்தவர்களே ஒரு காலத்தில் நல்லறிவுண்டாய், அவ்வாழ்க்கை இன்பந் தருவதன்றென வுணர்ந்து உலகப்பொருள்களின் ஆசையை ஒழித்துக் குருவின் வாயிலாகப் பிறப்பொழிக்குஞ் சாதனத்தைத்தேட முயலுவார்கள்; அவர்களே

அப்படி முயலுவார்களானால், உலகப் பொருள்களின் விருப்பத்தை உள்ளபடி அகற்றி, குருவையடைந்து அவர் அருளினால் பிறப்பை நீக்கும் சாதனத்தை உணர்ந்து பரமானந்தத்தை யடைந்தவர்கள் உலக வாழ்க்கை இனிமையைத் தருவதென்றெண்ணுவார்களோ? ஒருபோதும் எண்ணவே மாட்டார்கள்; அப்படி நினைத்தாலன்றோ அவர்களும் காணி, மனை முதலிய விடயங்களின் இன்பத்தை விரும்புவார்கள்; மந்திரி! நீ இதனை ஆலோசித்துச் சொல்லக் கடவாய்'' என்பது இதன் கருத்து.

பவம்-உலகம்; அஃதிங்கு உலகப்பொருள்களை உணர்த்தி நின்றது. விடயம்-உலகப் பொருள்கள். இச்செய்யுளில் முடிக்கும் சொற்கள் எஞ்சி நின்றமையால், அவற்றை இசையெச்சமாக வருவித்துப் பொருள் முடிவு கூறப்பட்டது. இசையெச்சமாவது-வாக்கியங்களில் அவ்வவ்விடத்திற்கேற்ப ஒரு சொல்லும் பலசொல்லும் வருவித்து உரைக்கப் படுவது. 'அடைந்தவர் தாமும்' என்பதிலுள்ள உம்மை-உயர்வு சிறப்பு பொருளது. (103)

104 கொடிமுதல் வாடும் வேர்முழு தினையும்
கோதறக் களைந்திடிற் களைந்தும்
படிமிசை கொடிபூ காய்பழ மோங்கல்
பகர்தி சுயமஃ தினைப்போல்
அடிநடு வீறில் பிரமந்தா னாகி
யகப்பற்றை யறுத்தவ ரிடத்தும்
மடிவுறு மனையில் விரும்பியே நெஞ்சம்
வருந்தன மாதலென் றறைவார்.

இ-ள்: (ஒரு பூங்கொடியின்) வேர் முழுதினையும்-வேர் முழுவதையும், கோது அற-(சிறிது எஞ்சியிருப்பதாகிய) குறைவு இல்லாமல், (அதாவது, செவ்வையாக), களைந்திடில்-பறித்தெடுத்து விட்

டால், கொடிமுதல் வாடும்-அக்கொடி முதலாக இலை பூ காய் முதல் எல்லாம், வாடும்-வாடிவிடும், களைந்தும் - (அவ்வாறு வேரைத்) தோண்டியெடுத்தும், கொடி-அக்கொடியில், படிமிசை-பூமியில், பூ-மலரும், காய்-காயும், பழம்-கனியும், ஓங்கல்-உண்டாகி விருத்தியடைவது, பகர்-சொல்லக்கூடிய, அதிசயம்-ஆச்சரியமான சம்பவமாம், (எப்பொழுதும் அவ்வாறு உண்டாவதே யில்லையாம்), அஃதினைப்போல்-அதைப்போலவே, அடிநடு ஈறுஇல்-ஆதியும் மத்தியும் அந்தமும் இல்லாத, பிரமம்தான் ஆகி-தானே பிரமமாகி, (அதாவது பிரமசொரூபமாக விளங்கி அதனால்), அகப்பற்றை-உள்பற்றினை, அறுத்தவரிடத்தும்-ஒழித்தவரிடத்திலும், நெஞ்சம்-(அவருடைய) உள்ளம், மடிஉற-அழிந்து போகத்தக்க, மனையில்-இல்வாழ்க்கையில், விரும்பி-விருப்பமுற்று, வருத்தனம் ஆதல்-விருத்தியடைதல், (அதிசயமாம்; அவ்வாறு அவர் மனம் குடும்பவாழ்க்கை இனிமையைத் தருவதென விரும்பி அதில் பிரவேசிப்பதேயில்லை) என்று அறைவர்-என்று பெரியோர் கூறுவர்; எ-று.

"ஒரு பூங்கொடியின் வேர் முழுவதையும் தோண்டி யெடுத்துவிட்டால் அக்கொடி முற்றும் காய்ந்துவிடும்; அவ்வாறு வேரைப் பறித்தெடுத்தும் அந்தக் கொடியில் இலை, பூ, காய் முதலியன உண்டாகி அது செழித்து வளர்வது அதிசயமான செய்கையாம்; (அவ்வாறு எப்போதும் உண்டாவதேயில்லை) அதைப்போலவே பிரமசொரூபமாக விளங்கி அதனால் அகப்பற்றை ஒழித்தவர்மனம் இல்வாழ்க்கையை விரும்பி அதில் பிரவேசிப்பதும் அதிசயமான சம்பவமாம்; ஒருபோதும் அவ்வாறு பிரவேசிப்பதேயில்லை என்று பெரியோர் கூறுவர்" என்பது இதன் கருத்து. (104)

105 ஆணவ மதனைத் தோய்ந்துட லினைநா
ஞமெனத் தினம்வெரு வவையைப்
பேணலைச் சுகமென் றுண்மகிழ்ந் திடுவோன்
பேரின்பத் தாசைய தாகிப்

பூணவந் ஞான மிலையதின் ஞானம்
பொருந்தியச் சொரூபந்தா னாகி
ஏணவா னந்தத் தழுந்துவோன் விடய
மெய்திடின் ஞானமே யிலையால்.

இ-ள்: ஆணவம் அதனை-அஞ்ஞான இருளாகிய கிணற்றில், தோய்ந்து-(வீழ்ந்து) மூழ்கி, (அதனால்), உடலினை-உடம்பை, நான் ஆம் என - நான் ஆவன் என்று கருதி, தினம் - தினந்தோறும், வெருவு - அஞ்சத்தக்க, அவையை - அந்த உடலைப் பேணுவதற் குரியனவாகிய காணி மனை முதலியவற்றை, பேணலே-பாதுகாத் தலையே, சுகம் என்று-சுகமானதென்று, (துணிந்து), உள்மகிழ்ந் திடுவோன்-மனங்களித்திருப்பவன், பேரின்பத்து - பேரின்பவடிவ மாகிய மோட்சத்தில், ஆசையது ஆகி-(தனக்கு) விருப்பமுண்டாக், (அதாவது, பேரின்பத்தை விரும்பி), பூண-(அதற்குரிய சாதன மாகிய துறவறத்தை) மேற்கொள்ள, அஞ்ஞானம் இல்லை-(அவ் விடத்து) அஞ்ஞான இருளை இல்லையாம், (அதாவது, அவன் அந்த அஞ்ஞானவிருள் வடிவமான கிணற்றினின்றும் கரையேறு வான்), அதின்-அந்தத் துறவறத்தினால், ஞானம் பொருந்தி-தத் துவ ஞானத்தைச் (சற்குரு மூலம்) அடைந்து, தான் அச்சொரூப மாகி-தானே அந்தப்பிரம சொரூபமாகி, ஏண - நிலைபெற்ற, ஆனந் தத்து - பரிபூரண ஆனந்தத்தில், அழுந்துவோன் - மூழ்குவோன், (அதாவது அவ்வானந்த சொரூபமாக விளங்குவோன்) (எக்காலத் தும் இல்லற வாழ்க்கையின்பத்தை விரும்பவே மாட்டான்; அப்படிப் பட்டவன்), விடயம்-உலகப் பொருள்களின் விருப்பத்தை, எய் திடில்-அடைந்தால், (அதாவது, இல்லறவாழ்க்கை இன்பந்தருவதா மென்று கருதி அதனைப்பெற்று அனுபவிப்பானாயின் அவனிடத்து), ஞானமே இல்லை-தத்துவஞானமே இல்லையாம்; எ-று.

"அஞ்ஞான இருள்மயமாகிய கிணற்றில் வீழ்ந்து மூழ்கி அத னால் உடம்பை நானென்று கருதித் தினந்தோறும் அஞ்சத்தக்க

அந்த உடலைப் பேணுவதற்குரியனவாகிய காணி மனை முதலியவற்றைப் பாதுகாத்தலையே சுகமானதென்று நினைத்து மனங்களித்திருப்பவன், மோட்சத்தை விரும்பித் துறவறத்தை மேற்கொள்ள, அவன், அந்த அஞ்ஞான இருள்வடிவமான கிணற்றினின்றும் கரையேறுவான்; அத்துறவறத்தால், சற்குருவாயிலாகத் தத்துவஞானத்தைப் பெற்று அந்தப் பிரம சொரூபமாகி நிலைபெற்ற பரிபூரண ஆனந்தத்தில் மூழ்குவோன், எக்காலத்தும் இல்லாழ்க்கையின்பத்தை விரும்பவே மாட்டான்; அப்படிப் பட்டவன் இல்வாழ்க்கை இன்பந் தருவதாமென்று கருதி அதனைப் பெற்றனுபவிப்பானாயின் அவனிடத்துத் தத்துவஞானமே இல்லையாம்'' என்பது இதன் கருத்து. ஆணவமதனை-ஏழனுருபு இரண்டனுருபாக மாறிவந்த உருபுமயக்கம். ஆல்-ஈற்றசை. (105)

106 கனவதனி லுணர்விலது காணுந்தனு வாதிகளைக்
கருதி யேநின்
றுன்னுமவரி னிதுகனவென் றுணர்ந்தவர்க ளசையிலதி
னுலகு தன்னில்
தனதுசய வுருவதனை யனுபவத்திற் றானுணர்ந்திச்
சகம தெல்லாம்
மனமதனிற் சாலமென வுணர்ந்தவனிவ் வுலகின்பின்
மையல் நீங்கும்.

இ-ள்: கனவதனில்-சொப்பனத்தில், உணர்வு-அறிவின்கண், (கயிற்றினிடத்தே கற்பிதமாய் அரவந் தோன்றுதல் போல), இல்லது-(உண்மையில்) இல்லாத பொருளாய், காணும்-காணப்படும், தனு ஆதிகளை-உடம்பு முதலிய பொருள்களை, (அதாவது, தனுகரண புவன போகங்களை), கருதி-நினைத்து, நின்று-நிலைத்து, உன்னும் அவரின்-ஆராய்ச்சி செய்து நோக்கி (இவை சொப்பனப் பொருள்களாம்; பொய்யாம் என்று) அறிபவர்களைப் போல, (உல

கத்தை) இது-இந்த உலகமானது, கனவு-சொப்பனத்தில் தோன்றும் பொருள்போல பொய்யாம், என்று உணர்ந்தவர்கள் - என அறிந்தவர்களின், நசை-விருப்பமானது, உலகு தன்னில்-இவ்வுலகத்தில், இல்லது-இல்லையாம், (அதாவது, அவ்வாறுணர்ந்தவர்கள் இவ்வுலகத்தை விரும்புவதில்லையாம்), தனது-(சச்சிதானந்த வடிவமாக விளங்குகின்ற) தன்னுடைய, சய உருவதனை-(மாயையை ஒழித்ததால்) வெற்றிபெற்ற உண்மை வடிவத்தைத், அனுபவத்தில்- (நிர்விகற்ப சமாதியின்) அப்பியாசத்தால், உணர்ந்து-(சந்தேக விபரீதமில்லாமல்) அறிந்து, இச்சகமது எல்லாம்-இந்த உலக முழுவதும், மனமதனில்-மனத்தில், சாலம்-(தோன்றும்) மாயாவிகற்பமாம், என உணர்ந்தவன்-என்று (மேற்கூறியபடி) தெரிந்துகொண்டவன், இவ்வுலகின்பின் மையல்-இவ்வுலக இன்பத்தின் மயக்கத்தினின்றும், நீங்கும்-நீங்குவான், (அதாவது, இவ்வுலகம் இன்பவடிவமானதென்னும் மயக்கம் நீங்கியிருப்பான்); எ-று.

"சொப்பனத்தில், கயிற்றரவுபோல உண்மையில்லாத பொருளாய் அறிவினிடத்தே காணப்படும் உடம்பு முதலிய பொருள்களை ஆராய்ச்சி செய்து நோக்கி, 'இவை சொப்பனப் பொருள்களாம்; பொய்யாம்' என்று உணர்பவர்களைப்போல, உலகத்தை நோக்கி, 'இந்த உலகமானது சொப்பனத்தில் தோன்றும் பொருள்போல பொய்யாம்' என்றுணர்ந்தவர்கள் இவ்வுலகத்தை விரும்புவதில்லை; சச்சிதானந்த வடிவமாக விளங்குகின்ற தன்னுடைய யதார்த்த வடிவத்தை நிர்விகற்ப சமாதியனுபவத்தால் அறிந்து இவ்வுலக முழுதும் மனத்தின் விகற்பம் என்று மேற்கூறியபடி தெரிந்துகொண்டவன், இவ்வுலகம் இன்பவடிவமானதென்னும் மயக்கம் நீங்கியிருப்பான்" என்பது இதன் கருத்து. (106)

107 கதிரவன்முன் னிருளிருக்கு நயனமுடை யொருவன்குழிக்
கண்ணே வீழும்
அதிகவலிச் சூரனமர்க் களத்துவெரு வ... ..ருத
நறையக் காரம்

இதமுளபா யசமுநிரம் பருந்தினன்கூழ் தனிற்செய்வ
னிச்சை யென்றால்
விதமிவைநான் கினுக்குங்குறை யதின்ஞானிக் கிழுக்காகும்
விடயஞ் சென்றால்.

இ-ள்: கதிரவன்முன்-சூரியனுக்கு முன்னே, இருள் இருக்கும் என்றால்-இருள் இருக்குமாயின், நயனமுடை ஒருவன்-நல்ல கண்ணுள்ள ஒருவன், குழிக்கண்ணே வீழும் என்றால்-குழியில் வீழ்வானாயின், அதிக வலிச்சூரன்-அதிக வல்லமையுள்ள வீரனொருவன், அமர்க்களத்து-போர்க்களத்திலே, வெருவுவன் என்றால்-அஞ்சுவானாயின், கிருதம்-நெய், நறை-வாசனையுள்ள, அக்காரம்-சர்க்கரை, (ஆகியவை சேர்த்து) இதம் உள-பக்குவமாகச் சமைக்கப்பட்டுள்ள, யாயசம் - பாயசத்தை, நிரம்ப அருந்தினன்-நிரம்புஉண்ட ஒருவன், கூழ்தனில்-கூழில், இச்சை செய்வன் என்றால்-விருப்பங்கொள்ளுவானாயின், விதம்-இம்மாதிரியாகிய, இவை நான்கினுக்கும்-இச்செயல்கள் நான்கிற்கும், குறை-குறைவாம், அதின்-அதைப்போல, ஞானிக்கு-தத்துவ ஞானிக்கு, விடயம் சென்றால்-(அவன் மனம்) உலகப்பொருளிற் செல்லுமானால், இழுக்கு ஆகும் - குறைவாம்; எ-று.

“சூரியனுக்கு முன் இருளிருக்குமாயின், நல்ல கண்ணுள்ளவன் குழியில் வீழ்வானாயின், மிக்க வல்லமையுள்ள வீரன் யுத்தகளத்தில் அஞ்சுவானாயின், பாயசத்தை நிரம்ப உண்டவன் கூழில் விருப்பங் கொள்ளுவானாயின் இச்செயல்களைச் செய்தார்க்கு மிகக்குறைவாம்; அதைப்போல தத்துவஞானியின் மனம் உலகப் பொருள்களிற் செல்லுமானால் அவனுக்குக் குறைவாம்” என்பது இதன் கருத்து.

‘சூரியன்முன் இருள் இராது; நல்ல கண்ணுள்ளவன் குழியில் விழமாட்டான்; மிகுந்த வல்லமையுள்ள சூரன் போரில் அஞ்சமாட்

டான்; பாயசத்தை நிரம்ப உண்டவன் கூழையுண்ண விரும்பமாட்டான்; இவர்களைப்போல ஞானியும் உலகப்பொருள்களில் இன்பமிருக்கிறதென்று நினைத்து அதனையடைய முயற்சி செய்யமாட்டான்; சூரியன்முன் இருளிருத்தல் முதலிய நான்கும் ஏற்படுமாயின், சூரியன் முதலிய நால்வர்க்கும் குறைவாம்; அதுபோல ஞானி உலகபொருள்களில் இன்பமிருக்கிறதென்று கருதி அவற்றை அடைய முயலுவானாயின் அவனுக்குக் குறைவாம்' என விரித்துப் பொருளை விளக்குக. 'என்றால்' என்பது தீபகமாக நான்கிடங்களினும் கூட்டப்பட்டது, 'பாயசமும்' என்பதில், உம்மை-அசை.

(107)

108 இங்குறைந்த பாண்டமதின் வாதனையில் வாதனைக
ளிருக்கு மென்றல்
துங்கவறி வுடையோர்கட் கின்றியமை யாததொழில்
தொடங்கி நிற்றல்
அங்கியைத்தம் பனவல்லார்க் கனல்சுடா ததின்வினைக
ளடுக்கா வென்றல்
தங்கும்வினைக் கேதுவாம் விடயமதில் விருப்பாதி
சாரா வென்றல்.

இ-ள்: (ஆத்ம ஞானிகளிடத்தில் எவ்வித லோக வாசனையுமிராது; ஆதலின்), துங்கம்-உயர்ந்த, அறிவுடையோர்கட்கு-அறிவுடையவர்களாகிய அந்த ஞானிகட்கு (முன்னே வாசனைகளிருந்த பழக்கத்தால்), இங்கு உறைந்த-பெருங்காய மிருந்த, பாண்டம் அதின்-பாண்டத்திலே, (உள்ள) வாதனையில்-வாசனையைப்போல; (அதாவது, பெருங்காயமிருந்த பாண்டத்தில் அஃதில்லாதபோதும் அப்பெருங்காயத்தின் வாசனை யிருத்தல்போல), வாதனைகள்-(லோகவாசனை, தேக வாசனை, சாஸ்திர வாசனை என்னும்) வாசனைகள், இருக்கும் என்றல்-இருக்குமென்று நீ கூறுதிருக்க,

(அதாவது) நீ கூறுதல் கூடாது), (அவர்கள் அந்த வாசனைகள் இல்லாமலே-பற்றில்லாமலே மணிமந்திர ஔஷதங்களுள் எதனுலா, வது லோகோபகாரமான காரியங்களைச் செய்யத் தொடங்குவார் கள்; அவ்வாறு), தொடங்கி நிற்றல்-தொடங்கிச் செய்து அந்நிலை யில் நிற்பது, இன்றியமையாத தொழில்-அவசியமான காரியமாம்; (அவ்வாறு செய்தாலும் அவர்கள் பற்றில்லாதவர்களாயிருப்பார் களாகையினுலே) அங்கியைத் தம்பனவல்லார்க்கு - அக்கினியை ஸ்தம்பனம் செய்யும் வல்லவர்களுக்கு, அனல்-அந்த அக்கினியா னது, சுடாததின்-சுடாதிருப்பதுபோல, வினைகள் அடுக்கா என்றல்- அந்தக் காரியங்கள் (அவர்களைப்) பந்திக்கமாட்டா என்க, (அதா வது, பந்திக்கமாட்டா என்று கருதுவாயாக), (ஆனல் அஞ்ஞானி கள் செய்யும் காரியங்களோ பந்தத்தோடுகூடி வினை விளைவிற் கேதுவாயிருப்பனவாம்; ஆதலின்), தங்கும்-பந்திக்கின்ற, வினைக்கு ஏதுவாம்-வினை விளைவிற்கேதுவாகிய, விடயம் அதில்-அந்த உலகப் பொருள்களில், விருப்புஆதி-காமம் வெகுளி முதலிய பற்றுக்கள், சாரா என்றல்-(அந்த அஞ்ஞானிகளிடத்தில்) சேரா என்று நீ கூறு திருக்க, (அதாவது, சொல்லாதிருக்கக் கடவாய்); எ-று.

"ஆத்ம ஞானிகளிடத்தில் எவ்வித வாசனையுமிராது; ஆத லின், அந்த ஞானிகட்கு முன்னே வாசனைகளிருந்த பழக்கத்தால், பெருங்காய மிருந்த பாண்டத்தில், அஃதில்லாதபோதும் அப் பெருங்காயத்தின் வாசனை யிருத்தல்போல வாசனைகள் இருக்கு மென்று நீ கூறுதிருக்கக் கடவாய்; அந்த ஞானிகள் அவ்வாசனை கள் இல்லாமலே மணி மந்திர ஔஷதங்களில் எதனுலாவது லோகோபகாரமான காரியங்களைச் செய்வார்கள்; அவ்வாறு செய் வது அவர்க்கவசியமான காரியமாம்; அவ்வாறு செய்தாலும் அவர் கள் பற்றில்லாதவர்களாயிருப்பார்களாதலின், அக்கினி ஸ்தம்பனம் செய்வோர்க்கு அந்த அனல் சுடாதிருப்பதுபோல அந்தக் காரியங்

கள் அவர்களைப் பற்றிக்கமாட்டா என்று கருதுவாயாக: ஆனால், அஞ்ஞானிகள் செய்யும் காரியங்களோ பந்தத்தோடுகூடி வினைவிளைவிற் கேதுவாயிருப்பனவாம்; ஆதலின், வினைவிளைவிற்கேதுவாகிய அந்த உலகப் பொருள்களில் காமம் வெகுளி முதலிய பற்றுக்கள் அந்த அஞ்ஞானிகளிடத்தில் சேரா என்று நீ கூறுவது கூடாது'' என்பது இதன் கருத்து.

'வாசனை' என்பது, சகரத்துக்குத் தகரம் போலியாய், 'வாதனை' என வந்தது; வாசனை - பற்று, பழக்கம், நம்பிக்கை. லோக வாசனையாவது-எவரும் என்னை நிந்தித்தல் கூடாது; புகழ்தல் வேண்டும் என்னும் திடசிந்தனையாம்; தேக வாசனையாவது-தூலவுடம்பிலுள்ள நோய் முதலியவற்றை ஔடதம் முதலியவற்றாலும், சூக்கும தேகத்திலுள்ள பாபரூப மலங்களைத் தீர்த்த யாத்திரை செய்தல் முதலியவற்றாலும் ஒழிப்பேன்; தூலவுடம்பில் வலிமை, அழகு முதலியவற்றையும், சூக்கும தேகத்தில் புண்ணிய ரூப குணத்தையும் சம்பாதிப்பேன் என்னும் திடஎண்ணமாம்; சாஸ்திர வாசனையாவது-எல்லாச் சாத்திரங்களையும் படித்தல்வேண்டும்; அவற்றின் பொருள்களை அறிந்து கொள்ளுதல் வேண்டும்; அவை சொல்லிய வழியில் தவறாமல் நடத்தல் வேண்டும் என்னும் திடநினைவாம். அக்கினிஸ்தம்பனம் - நெருப்பின் குணத்தை அடக்கி அது சுடாதிருக்குமாறு செய்வதாம். இச்செய்யுளின் முதலடியின் ஈற்றிலுள்ள, 'என்றல்' என்பதும், கடைசியடியின் ஈற்றிலுள்ள, 'என்றல்' என்பதும், 'எனல்' என்பதுபோல எதிர்மறையில் வந்த அல்லீற்றுவியங்கோள்களாம்; திருக்குறளில், 'மகனெனல்' என்பதில், 'எனல்' என்னும் எதிர்மறை அல்லீற்றுவியங்கோள், 'என்று சொல்லாதிருக்க' என்று பொருள்படுவது போல, இங்குப்பொருள் பட்டு நின்றன. மூன்றாமடியின் ஈற்றிலுள்ள, 'என்றல்' என்பது, 'எனல்' என்பதுபோல உடன்பாட்டில் வந்த அல்லீற்றுவியங்கோள்; திருக்குறளில், 'மக்கட்பதடி யெனல்' என்பதில், 'எனல்' என்னும்

உடன்பாட்டு அல்லீற்றுவியங்கோள், 'என்று சொல்லுக' என்று பொருள்வதுபோல இங்குப் பொருள்பட்டு நின்றது. இச்செய்யுளின் முன்னும் பின்னும் இடையிலும் பல சொற்றொடர்கள் இசையெச்சமாக வருவித்துப் பொருள்முடிபு கூறப்பட்டிருக்கின்றன. (108)

109 உணர்வுடைய ஞானியெவை புரிந்திடினு மிழிவிலிழி
வுரைத்த தாகின்
இணையிலிரு தீயனென்பர் யூகமில வதனான்மற்
றெவைகள் செய்தும்
அணைவதிற்றாழ் வெனுமவனே தீயன்மிக ஞானமதற்
காகுந் தாழ்வால்
நணுகினன்றோ ஞானமொரு வனை ஞானி யெனப்பெயரு
நண்ணி நிற்றல்.

இ-ள்: உணர்வுடைய - (தத்துவஞான) உணர்ச்சியுடைய, ஞானி-ஞானியானவன், எவை புரிந்திடினும் - எக்காரியங்களைச் செய்தாலும், (அவை லோகோபகாரமாகச் செய்யப்படுவன வாதலால் அவற்றால் அவனுக்கு) இழிவு இல்-இழிவில்லையாம், இழிவு உரைத்ததாகின்-(ஒருவன் செய்யும் காரியங்கள் கெட்டவையென்று உலகம் கருதி அவன் மீது) இழிவு கூறுமாயின், (அதாவது ஒருவன் பற்றுடையவனாய் உலகம் பழிக்கத்தக்க கெட்ட காரியங்களைச் செய்வானாயின்), இணையில்-ஒப்பில்லாத, இரு-பெரிய, தீயன் என்பர்-துஷ்டன் என்று (அவனை அறிஞர்) கூறுவார்கள், யூகம் இல அதனால்-அறிவில்லாமையால், எவைகள் செய்தும்-எந்தக் காரியங்களையும் செய்து, அணைவு அதில்-(அவற்றின் பயனை) அடைகிற காலத்தில், தாழ்வு என்னும் அவனே-தாழ்வு நேர்ந்தது என்று சொல்லுதற் குரியவனே, (அதாவது, தாழ்வடைபவனே), மிகத் தீயன்-மிகக்கொடியவன், ஞானம் அதற்குத் தாழ்வு ஆகும்-ஞானத்

திற்குத் தாழ்வுண்டாகுமோ? (இல்லை), ஒருவனை-ஒருவனிடத்து, ஞானம் நணுகின்அன்றோ - ஞானம் அடைந்தாலல்லவா?, (அவனுக்கு), ஞானி என-ஞானி என்று, பெயரும் நண்ணி நிற்றல்-பெயரும் பொருந்தி நிற்பது, (ஆகும்); எ-று.

"தத்துவஞான வுணர்ச்சியுடைய ஞானி எந்தக் காரியங்களைச் செய்தாலும் அவை லோகோபகாரமாகச் செய்யப் படுவனவாதலால் அவற்றால் அவனுக்கு இழிவில்லை; ஒருவன் செய்யும் காரியங்கள் கெட்டவையென்று உலகம் கருதி அவனை இழிவாகக் கூறுமாயின், அவன் பெருந்துஷ்டன் அறிஞர் கூறுவார்கள்; அறிவில்லர்மையால் எந்தக் காரியங்களையும் செய்து அவற்றின் பயனை அடையும்போது தாழ்படைபவனே மிகக்கொடியவன்; ஞானத்திற்குத் தாழ்வுண்டோ? இல்லை; ஒருவனிடத்து ஞானம் சேர்ந்தாலன்றோ அவனுக்கு ஞானி யென்னும் பெயர் பொருந்தும்" என்பது இதன் கருத்து. (109)

110 கருவயிற்றை யுடையதுவுங் கனவயிற்றை யுடையதுவுங்
கருதிப் பெண்ணின்
உருவதனைக் குறிப்பதினோக் கிடிற்றோன்று முளபடியே
யுலகு தன்னில்
குருவையடைந் தவனருளிற் சொரூபத்தை யனுபவமாக்
குறித்து ளோரும்
இருவையத் திடம்பமாய்த் தமைஞானி யென்போரு
மேதிற் றோன்றும்.

இ-ள்: கருவயிற்றை உடையதுவும் - கருப்பங்கொண்ட வயிற்றையுடைய உடம்பும், கனவயிற்றை உடையதுவும்-(மகோதரம் என்னும்) கனத்தைக்கொண்ட வயிற்றையுடைய உடம்பும், கருதி-ஆராய்ந்து, பெண்ணின்-(வயிறு கனத்திருக்கும்) பெண்ணி

னுடைய, உருவதனை-(அவயவங்களின்) வடிவத்தை, குறிப்பதின்-குறிப்பினாலே, நோக்கிடில் - பார்த்தால், தோன்றும் - விளங்கும், (அதுபோல), உள்ளபடியே-உள்ளவாறே, உலகுதன்னில்-இவ்வுலகத்தில், (நான் யார்? இப்பிறப்பு எனக்கேன் வந்தது? இப்பிறவி யாருடைய உபதேசத்தால் நீங்கும்? என்று ஆராய்ந்து), குருவை அடைந்து-ஞானசற்குருவை அடைந்து, அவன் அருளின்-அவனுடைய அனுக்கிரகத்தினாலே, சொரூபத்தை - தமது உண்மைச் சொரூபத்தை, அனுபவமா - (சமாதி கூடி) அனுபவமாக, குறித்துள்ளோரும்-குறிப்பிட்டுப் பிரத்தியக்ஷத்தில் பார்த்தவரும், இரு-பெரிய, வையத்து-உலகத்தில், (பிறர் மதிக்கும்படி), இடம்பமாய்-இடம்பமாக, தம்மை ஞானி என்போரும்-தம்மை ஞானியென்று கூறுகின்றவர்களும், (ஆவர்), எதில் தோன்றும்-(இவர்களுடைய தன்மை) எதனால் விளங்கும்? (நிராசையினாலும், ஆசையினாலும் விளங்கும்; எப்படியெனில், ஆசையற்றவனை ஞானி யென்றும், ஆசையுள்ளவனை அஞ்ஞானி யென்றும் உணரலாம்); எ-று.

"கருப்பங்கொண்ட வயிற்றையுடைய உடம்பும், மகோதரத்தையுடைய உடம்பும் பெண்ணினுடைய அவயவங்களின் குறிப்பினாலே விளங்கும்; அதுபோலத் தமது ஆத்மாவை ஆராய்ந்து சற்குருவின் அருளாலே தம்முடைய நிஜசொரூபத்தைப் பிரத்தியக்ஷமாகப் பார்த்தவரும், பிறர் மதிக்கும்படி இடம்பமாகத் தம்மை ஞானியென்று சொல்லிக்கொள்பவர்களும் குறிப்பினால் தெரிந்து கொள்ளக் கூடியவராவர், இவர் தன்மை எதனால் விளங்கும்? 'நிராசையினாலும், ஆசையினாலும் விளங்கும்; எப்படியெனில்' ஆசையற்றவனை ஞானியென்றும், ஆசையுள்ளவனை அஞ்ஞானியென்றும் தெரிந்து கொள்ளலாம்" என்பது இதன் கருத்து.

இச்செய்யுள் எடுத்துக் காட்டுவமையணியாக அமைந்தது, ஈற்றடியில் 'என்போரும்' என்பதற்குப்பின் வரவேண்டிய, 'ஆவர்'

என்னும் முடிக்குஞ் சொல் எஞ்சிநின்றபடியால், வருவித்துரைக்கப் பட்டது. 'எதிற்றேரென்றும்' என்னும் அஃறிணை முடிபிற்குத்தக, 'இவர்களுடைய தன்மை' என்பது வருவிக்கப்பட்டது. ஈற்றில் இன்னும்பல சொற்களும் கூட்டி முடிக்கப்பட்டன. இவை, இசை யெச்சத்தின் பாற்படும்; செய்யுட்களில் சிலசொற்கள் குறைந்து பொருள்முடிபு நேரில் அமையாதிருக்குமிடத்து இங்ஙனம்கூட்டிப் பொருள்முடித்துக் காட்டுதல் இலக்கண நூல்களின் துணிபாம். (110)

111 அருச்சுனற்கு மிராமருக்கு மதிகார மவைபார்த்தே
யறைந்த நூலின்
கருத்தறியாய் ஞானமொன்றே பிரமாணஞ் சரிதையது
கணக்கன் றாகும்
விருத்தமறி வாசார முடையோனே ஞானியில்லோன்
விருத்த னாகும்
திருத்தமுட னமைச்சவிது துணிவென்றே யுட்கொள்வாய்
தீர னாகி.

இ-ள்: அருச்சுனற்கும் - அருச்சுனனுக்கும், இராமருக்கும்- இராமபிரானுக்கும், அதிகாரம் அவை-(அவர்களுடைய) பக்குவங் களை, பார்த்து-நோக்கி, அறைந்த - (முறையே கண்ணபிரானும், வசிஷ்டரும்) கூறிய, நூலின்-(பகவத் கீதை, ஞான வாசிஷ்டம் ஆகிய) நூல்களின், கருத்து-கருத்தையும், அமைச்ச-மந்திரியே!, அறியாய்-நீ அறியாதிருக்கின்றாய், ஞானம் ஒன்றே- (மாயையும், அதன் காரியமாகிய உலகமும் ஞானரூபமாகிய ஆத்மாவினலல்லா மல் வேறெதனுலும் பிரகாசிக்கா வாதலின், அந்த ஞானரூப ஆத் மாவை உணர்வதற்குச் சாதனமாகிய) ஞானநூல் ஒன்றே, பிரமா ணம்-உண்மையாம், சரிதை அது - (சரியை, கிரியை முதலிய வற்றைக் கூறும்) வரலாற்று நூல், கணக்கன்று ஆகும்-(உண்மை

யென) எண்ணுவதன்றாம், (அதாவது, உண்மையாகாது), விருத்தம்-(பொருளைச் சம்பாதித்தல், அதனால் போகத்தை அனுபவித்தல் என்னும் உலகாசாரத்துக்கு) மாறாயுள்ள, அறிவாசாரமுடையோனே-ஞானயோக வொழுக்கமுள்ளவனா யிருப்பவனே, ஞானி-ஆத்ம ஞானியாவான், இல்லோன்-இல்லற வாழ்க்கையுடையவனோ, விருத்தன் ஆகும்-(ஞான யோக வொழுக்கத்திற்கு) மாறானவனா யிருப்பன், இது - இவ்விஷயம், துணிவு என்றே - நிச்சயமானதென்றே, திருத்தமுடன்-ஒழுங்கோடு, தீரன் ஆகி - நீ தைரியமுடையவனாகி, உட்கொள்வாய் - மனத்திற் கொள்ளக் கடவாய்; எ-று.

"மந்திரி! அருச்சுனனுக்கும், இராமபிரானுக்கும் முறையே கண்ணபிரானும், வசிஷ்டரும் கூறிய பகவத்கீதை, ஞான வாசிஷ்டம் ஆகிய நூல்களின் கருத்தை நீ உணராதிருக்கின்றாய்; மாயையும், அதன் காரியமாகிய உலகமும் ஞான ரூபமாகிய ஆத்மாவினாலல்லாமல் வேறெதனாலும் பிரகாசியா வாதலின் அந்த ஞானரூப ஆத்மாவை உணர்வதற்குச் சாதனமாகிய ஞானநூல் ஒன்றே உண்மையானதாம்; சரியை, கிரியை முதலியவற்றைக்கூறும் வரலாற்று நூல் உண்மையாகாது; பொருளைச் சம்பாதித்தல், அதனால் போகத்தை அனுபவித்தல் என்னும் உலகாசாரத்துக்கு மாறாயுள்ள ஞானயோக வொழுக்கமுடையவனே ஆத்ம ஞானியாவான்; இல்லற வாழ்க்கையுடையவனோ ஞானயோக வொழுக்கத்திற்கு மாறானவனாயிருப்பன்; நீ தைரியமுடையவனாகி இவ்விஷயம் நிச்சயமானதென்று செவ்வையாக மனத்திற்கொள்ளக் கடவாய்" என்பது இதன் கருத்து.

கண்ணபிரான் பகவத்கீதையை அருச்சுனனுக்குச் சொன்னார்; வசிஷ்டர், ஞானவாசிட்டத்தை இராமருக்குச் சொன்னார்; இவ்விரண்டும் ஆத்ம ஞானத்தை உணர்த்தும் நூல்கள். ஞானம்-என்

பது ஞானத்தைக்கூறும் நூலை உணர்த்தி நின்றது; சரிதை-என்பது வரலாற்றைக்கூறும் நூலை உணர்த்தி நின்றது. பிரமாணம்-பிரமைக்குக் காரணமாயிருப்பது; அதாவது, உண்மைஞான முண்டாவதற்குக் கருவியாயிருப்பது; பிரமை-மெய்யறிவு. (111)

மகாராஜன் சமாதியிலிருக்க மந்திரி பார்த்து வியப்புறல்.

112 என்றங் கனேக மாய்விரித்தே
யிராச யோகி யுரைசெய்து
நின்று வாக்குத் தனையடக்கி
நிமிடத் தகற்றி மனத்தினையும்
ஒன்று மில்லா வெறும்பாழா
யொன்றுஞ் சமாதி தனையடைந்தான்
நின்றங் கமைச்ச னிதுகண்டிந்
நேர்மை புதிதென் றதிசயித்தான்.

இ-ள்: என்று-என, இராசயோகி-இராஜயோகியான மன்னன், அங்கு-அவ்விடத்தில், அனேகமாய் - பலவிதமாக, விரித்து-(ஞான சாஸ்திரத்தின் அர்த்தங்களை) விளக்கி, உரை செய்து-உரைத்து, நின்று-யோக சாதனத்தில் நிலைபெற்றுச் (சுகாதனத்திலிருந்து, வாக்குத்தனை அடக்கி-பேச்சை ஒடுக்கி, (மௌனமாய்), நிமிடத்தில் - நிமைப்போதிற்குள், மனத்தினையும் - மனத்தையும், அகற்றி-(விஷயங்களினின்றும்) நீக்கி, (ஒருமுகப் படுத்தி), ஒன்றும் இல்லா - (நாமரூபங்களில்) ஒன்றுந் தோன்றாத, வெறும் பாழாய்-வெறும் சூனியமாய், ஒன்றும்-ஏகமாய் விளங்குதற்குரிய, சமாதிதனை அடைந்தான்-நிர்விகற்ப சமாதியிலிருந்தான், அமைச்சன்-மந்திரி, அங்கு நின்று - அவ்விடத்தில் நின்று, இதுகண்டு-(இராஜ யோகியினுடைய) இச்செயலைப் பார்த்து, இந்நேர்மை-இந்த ஒழுங்கான நிலை, புதிது என்று-புதுமையானதென்று, அதிசயித்தான்-ஆச்சரியத்தை யடைந்தான்; எ-று.

"என்று இராஜயோகியான மகாராஜன், ஞானசாஸ்திரத்தின் அர்த்தங்களைப் பலவிதமாக விரித்துரைத்துச் சுகாதனத்திலிருந்து மௌனமாய் நிமைப்போதில் மனத்தை ஒருமுகப்படுத்தி, நாம ரூபங்களில் ஒன்றுந் தோன்றாத வெறும்பாழாய் ஏகமாய் விளங்கு தற்குரிய நிர்விகற்ப சமாதியிலிருந்தான்; மந்திரி இதைக்கண்டு இச்செயல் புதுமை என்று ஆச்சரியத்தை யடைந்தான்" என்பது இதன்கருத்து. (112)

மந்திரி சென்று அரசன் தன்மையை

நகரத்தார்க்குக் கூறல்.

113 இந்த வுணர்வு நமக்கின்ன
மெய்த லில்லை நாமிங்கே
எந்த வுணர்வு கொடுநிற்பே
மென்ன வமைச்சன் யூகித்து
வந்த வழியே தான்றிரும்பி
வளப்ப முடைய மாபுரிக்கே
பந்த முடையோ ருடனிருந்து
பகர்ந்தா னரச னியற்கையெல்லாம்.

இ-ள்: (அவ்வாறு ஆச்சரியத்தை யடைந்த), அமைச்சன்-மந்திரி, இந்த உணர்வு-(நம்முடைய மகாராஜன் இந்நிலையில் இருப்பதற் கேதுவான) இந்த ஞானம், நமக்கு இன்னம் எய்தல்இல்லை-நமக்கின்னும் உண்டாகவில்லை, (ஆதலின்) நாம்-, எந்த உணர்வைக் கொடு - எந்த அறிவைக்கொண்டு, இங்கே நிற்பேம் - இவ்விடத்தி லிருப்போம், என்னயூகித்து - என்று ஆலோசித்து, தான் வந்த வழியே-தான் முன்பு வந்த வழியாகவே, மாபுரிக்கே-சிறந்த நகரத்திற்கே, திரும்பி-திரும்பிப்போய், (அங்கு) பந்தமுடையோருடன்

இருந்து - (அரசனுக்கு) உறவுடையவர்களாயுள்ளவர்களுடன் இருந்து, அரசன் இயற்கை எல்லாம் - மகாராஜனுடைய ஞான யோக வொழுக்கங்களின் தன்மைகளை யெல்லாம், பகர்ந்தான்- (அவர்களுக்குக்) கூறினான்; எ-று.

"அவ்வாறு ஆச்சரியத்தை அடைந்த மந்திரி, 'நம்முடைய மகாராஜன் இந்நிலையிலிருப்பதற் கேதுவாயுள்ள இந்த ஞானம் நமக்கின்னும் உண்டாகவில்லை; ஆதலின், நாம் எந்த அறிவைக்கொண்டு இவ்விடத்திலிருப்போம்?' என்று ஆலோசித்து, தான் முன்பு வந்த வழியாகவே நகரத்திற்குத் திரும்பிப்போய் அங்கு அரசனுக்கு உறவினராயுள்ளவர்களுடனிருந்து, மகாராஜனுடைய ஞான யோக வொழுக்கங்களின் தன்மைகளை யெல்லாம் அவர்களுக்குக் கூறினான்" என்பது இதன்கருத்து. (113)

## அரசனுடைய உறவினர்வந்து அரசனைக்காண அவன் பேசாதிருந்ததால் அவர்கள் திரும்பிச் செல்லுதலும், அரசன் விதேக முத்தியடைதலும்.

114 கேட்ட பேர்கள் மிகவியந்து
கிட்டா தென்று மிம்முனிபோல்
தேட்ட முடனே யவரவர்கள்
தேடி வந்து பணிந்திடவும்
வாட்ட முடனே தாய்தந்தை
மனையாள் பதத்தில் வீழ்ந்திடவும்
நாட்ட மாறு பாடின்றி
நகைசெய் திருந்தா னற்றவனே.

இ-ள்: (அவ்வாறு மந்திரி கூறியவற்றை) கேட்டபேர்கள்- கேட்ட அந்த உறவினர்கள், மிகவியந்து-(அந்த மகாராஜயோகியை)

மிகவும் வியந்துபேசி, இம்முனிபோல் - இந்த இராஜயோகியைப் போல, (வேறு எந்த உயர்ந்த பொருளும்) கிட்டாது என்று-கிடைக்கமாட்டாது என்று, (நிச்சயித்து) தேட்டமுடனே-(அந்த மகாராஜனைக்கண்டு தரிசிக்கவேண்டும் என்னும்) விருப்பத்துடனே, அவரவர்கள்-அவரவர்களும், தேடிவந்து-(அந்த ராஜயோகியிருக்கு மிடத்தைத்) தேடிவந்தடைந்து, (அந்த மகாமுனியை வணங்கினார்கள்; அவ்வாறு) பணிந்திடவும்-வணங்கவும், (பின்னர்) வாட்டமுடனே-சோகத்தோடு, தாய் தந்தை மனையாள் - (அந்த மகாராஜனுடைய) தாயும் தந்தையும் மனைவியும், பதத்தில் - (அவனுடைய) பாதத்தில், (வீழ்ந்தார்கள்; அப்படி) வீழ்ந்திடவும்-வீழவும், (அவற்றைக்கண்ட) நற்றவன் - (அந்த) நல்ல தவத்தையுடைய இராஜயோகி, நாட்டம் மாறுபாடுஇன்றி - தன்னுடைய ஞானநாட்டத்தினின்றும் சிறிதாவது மாறுபாடில்லாமல், நகைசெய்து-புன்னகை புரிந்து, இருந்தான் - (அவர்களுடன் ஒரு வார்த்தையும் பேசாமல்) இருந்தனன்; எ-று.

"அவ்வாறு மந்திரி கூறியவற்றைக் கேட்ட அந்த உறவினர்கள் அந்த ராஜயோகியை மிகவும் வியந்துபேசி, 'இந்தத் தவராஜயோகியைப்போல வேறு எந்த உயர்ந்த பொருளும் கிடைப்பதருமை' என்று நிச்சயித்து அந்த மகாராஜனைக்கண்டு தரிசிக்க வேண்டுமென்னும் பெரிய ஆசையுடனே தேடிவந்து அவனிருக்குமிடத்திற் சேர்ந்து அவனைப் பணிந்தார்கள்; அந்த மகாராஜனுடைய தாயும், தந்தையும், மனைவியும் அவன் பாதத்தில் வீழ்ந்தார்கள்; அவ்வாறு அவர்கள் வணங்கியும், பாதத்தில் வீழ்ந்தும் அவற்றைக்கண்ட அந்த இராஜயோகி தன்னுடைய ஞானநாட்டத்தினின்றும் சிறிதும் மாறுபடாமல் புன்னகை புரிந்து அவர்களோடு ஒரு வார்த்தையும் பேசாமலிருந்தான்" என்பது இதன்கருத்து. 'கிட்டாது' என்ற அஃறிணை முடிபுக்கேற்ப, 'வேறு எந்த உயர்ந்த

பொருளும்' என்பது வருவித்துரைக்கப்பட்டது. வேறு சில சொற்களும் இடையில் இசையெச்சமாகக் கூட்டியுரைக்கப்பட்டன.(114)

115 வந்த பேர்க ளுடன்வார்த்தை
மலரா திருப்ப தவர றிந்து
பந்த முடையே நமக்கென்னே
பகர்ந்தாற் றோன் று மெனத்திரும்பித்
தந்த மிடத்திற் சென்றுர்கள்
தவனுஞ் சிறிது நாட்கழித்துத்
தொந்த மொன் று மில்லாத
சுயமா முத்தி தானுனன்.

இ-ள்: (அவ்வாறு) வந்தபேர்களுடன் - வந்தவர்களிடத்தில், வார்த்தை மலராதிருப்பது - வார்த்தை பேசாமலிருப்பதை, அவர் அறிந்து-அவர்கள் உணர்ந்து, பந்தமுடையேம் - (நாம்) உலகப்பற்றுள்ளவர்களாய் இருக்கின்றோம், (அத்தகைய) நமக்கு-, என்னே பகர்ந்தால் தோன் றும்-(இவர்) எதைச்சொன்னால் (பொருள்) விளங்கும்?, (இவர் சொல்லும் எதையும் நாம் தெரிந்துகொள்ளுதல் முடியாது) என-என்று, திரும்பி-(அவ்விடத்தினின் றும்) திரும்பி, தம் தம் இடத்தில் சென்றார்கள்-தம்தம் இருப்பிடத்திற்போய்ச் சேர்ந்தார்கள், (அப்படி அவர்கள் சென்றபின்) தவனும்-தவத்தோனாகிய மகாராஜனும், சிறிதுநாள் - சிறிது நாட்கள்வரை, (நிர்விகற்ப சமாதியிலிருந்து) கழித்து-(தன்) வாழ்நாட்களைக் கழித்து, (பின்னர்) தொந்தம் ஒன் றும் இல்லாத - (விருப்பு வெறுப்பு, சுகம் துக்கம், பாவம், புண்ணியம் முதலிய) துவந்துவம் (இரண்டிரண்டாக அமைந்த விஷயங்களின் பற்று) சிறிதும் இல்லாத, சுயமாம் முத்தி தான்ஆனன் - கலப்பற்றதாகிய விதேக முத்தியை அடைந்தான்; எ-று.

"அவ்வாறு வந்தவர்களிடத்தில் வார்த்தை பேசாமலிருப்பதை அறிந்த அவர்கள், 'நாமோ உலகப்பற்றுடையவர்களாயிருக்கின்றோம்; நமக்கிவர் எதைச் சொன்னாலும் நாம் அதன் பொருளைத் தெரிந்துகொள்ளுதல் முடியாது' என்று திரும்பிப்போய்த் தங்கள் தங்கள் இருப்பிடங்களிற் சேர்ந்தார்கள்; அவர்கள் சென்றபின் தவராஜ யோகியானவன் சில நாட்கள்வரை நிர்விகற்ப சமாதியிலிருந்து தன்னுடைய வாழ்நாட்களைக் கழித்துப் பின்னர், விருப்பு வெறுப்பு, சுகம் துக்கம், பாவம் புண்ணியம் முதலிய இரண்டிரண்டாக அமைந்த விஷயங்களின் பற்றுச் சிறிதுமில்லாத கலப்பற்றதாகிய விதேக முத்தியை அடைந்தான்" என்பது இதன்கருத்து.

மலர்தல் - வெளிப்படுதல்; அஃதிங்குப் பேசுதலை யுணர்த்தி நின்றது. 'துவந்துவம்' என்பது, 'தொந்தம்' எனத் திரிந்து நின்றது; அஃதிங்கு இரட்டையாகவரும் நன்மை தீமையாகிய விஷயங்களின் பற்றை விளக்கி நின்றது. சுயம்-கலப்பற்றது. தான்-அசை. முத்தி-விடுதலை. விதேகமுத்தியாவது - புடவையில் ஒரோர் இழையாக நூல்களை யெடுத்துவிட்டால் புடவையென்னும் தன்மையில்லாது போனாற்போலத் தத்துவங்களை, 'இது நானல்ல, இது நானல்ல' என்று கிரமமாகக்களைந்து, உடலென்னும் உபாதிபோய்-கேவலாவஸ்தையு நீங்கி, வேத மகா வாக்கியமாகிய, தத்துவமசி-அது நீயானாய் என்னும் மூன்று பதங்களின் இலக்கணைகளையும் அறிந்து தெளிந்த ஜீவன்முத்தன், ஆனந்தானுபவம் பெற்றுக் குடமென்கிற உபாதிபோனால் ஆகாயமொன்றானாற்போல, ஆதிமத்தியாந்த ரகிதனாய் உட்புறமின்றி எப்போது மிருந்தவண்ணமாய் விளங்குவதாம்;

"கடமெனு முபாதி போனாற் ககனமொன் றானாற் போல
உடலெனு முபாதி போன வுத்தராஞ் சீவன் முத்தர்
அடிமுடி நடுவு மின்றி யகம்புற மின்றி நின்ற
படிதிகழ் விதேக முத்திப் பதமடைந் திருப்ப ரென்றும்"

என்னும் கைவல்யச் செய்யுளும் இதனை விளக்கும். விதேகம்-தேக விமோசனம். (115)

இவ்வாறு சூதபுராணிகர் மகாராஜன் துறவினை, நைமிசாரணிய வாசிகளுக்கு உரைத்தருளினர். நைமிசாரணிய வாசிகளாகிய முனிவர்கள், இதைக்கேட்டு, 'இந்த மகாராஜன் துறவுக் கதை மிக உயர்வானது' என்று வியந்து கூறிச் சூதமாமுனிவரை வணங்கிப் புகழ்ந்து அவரிடம் விடைபெற்றுத் தங்கள் தங்கள் ஆசிரமங்களுக்குச் சென்றார்கள்.

## இந்த நூற்பயன்.

116 இந்தமா ராஜன் சென்ற விதிகாசந் தன்னைப் பார்ப்போர்
சிந்தனை யொன்று மின்றித் தீரவே துறவ ராகி
அந்தமு மாதி யில்லா வமலமே வடிவ மாவர்
எந்தமை யருளி னாண்ட வெழிற்குரு பரையே வாழி.

இ-ள்: இந்த மாராஜன் - இந்த மகாராஜயோகி, சென்ற-(துறவிற்) சென்று முத்தியடைந்த, இதிகாசந்தன்னை-பழங்கதையை, பார்ப்போர் - (படித்து இதன் உண்மையைக்) காண்பவர், சிந்தனை ஒன்றும் இன்றி - (வேறு உலகநினைவு) சிறிதுமில்லாமல், தீர-(பந்தமெல்லாம்) நீங்கும்படி, துறவர்ஆகி- துறவினையுடையவர்களாய், அந்தமும் ஆதிஇல்லா-முடிவும் முதலுமில்லாத, அமலவடிவம் ஆவர்-பரிசுத்தமாகிய பரமாத்ம சொரூபத்தை அடைவார்கள், எம்தமை - எங்களை, அருளினின் - கிருபையினாலே, ஆண்ட - ஆட்கொண்ட, எழில்-அழகு பொருந்திய, குரு-குருத்தன்மை வாய்ந்த, பரை-பார்வதியாகிய பெரியநாயகி, வாழி-வாழ்க; எ-று.

"இந்த மகாராஜயோகி துறவிற்சென்று முத்தியடைந்த பழங்கதையைப் படித்து இதன் உண்மையை அறிபவர், உலகநினைவு சிறிதுமில்லாமல் பந்தமெல்லாம் நீங்கும்படி துறவிகளாய் ஆதியந்த

மில்லாத பரிசுத்தமாகிய பரமாத்ம சொரூபத்தை அடைவார்கள்; எங்களைக் கிருபையினலே ஆட்கொண்ட பரையாகிய பெரியநாயகியம்மை வாழ்க" என்பது இதன்கருத்து.

விருத்தாசலத்தில் எழுந்தருளியிருக்கும் பெரியநாயகியின் கிருபையினலேயே இந்நூலாசிரியராகிய குமாரதேவர் இந்நூலைச் செய்து முடித்தன ராகலின், அந்த அம்மையை ஈற்றில் வாழ்த்தினர். (116)

## துறவின் உயர்வு.

117 அரியது துறவற மல்ல தில்லையால்
மருவிய துறவற மொருவி மன்னனாய்
உருகெழு முடிகவித் துலக மாள்வது
பெருவிலை மணியினைப் பிண்டிக் கீதலே.

இ-ள்: (மனிதர் அடையவேண்டிய பொருள்களில்)அரியது-அருமையான பொருள், துறவறம் அல்லது-துறவறத்தை அன்றி, இல்லை-வேறொன்றுமில்லையாம், (அதாவது, துறவறமே அடையத்தக்க அருமையான பொருளாம்) மருவிய - (பெரியோர்கள்) கைக்கொண்டு முத்தியடைந்த, துறவறம்-துறவறத்தை, ஒருவி-(ஒருவன்) விட்டுநீங்கி, மன்னன் ஆய்-அரசனாகி, உருகெழு-அழகு பிரகாசிக்கின்ற, முடிகவித்து - கிரீடத்தைச் சிரசில் தரித்து, உலகம் ஆள்வது - உலகத்தை ஆட்சிபுரிந்து, தனது ஆத்மசக்தியை வீணாக்குவது, பெருவிலை - உயர்ந்த விலை மதிப்புள்ள, மணியினை - இரத்தினத்தை, பிண்டிக்கு-பிண்ணாக்குக்கு, (ஈடாக) ஈதல்-கொடுப்பதை நிகர்க்கும்; எ-று.

"மனிதர் அடையவேண்டிய பொருள்களில் அருமையான பொருள் துறவறத்தையன்றி வேறொன்றுமில்லையாம்; பெரியோர்கள் கைக்கொண்டு முத்தியடைந்த அந்தத் துறவறத்தை ஒருவன்

விட்டுநீங்கி, அரிஜுனுக்கி கிரீடந்தரித்து உலகத்தையாண்டு தனது ஆத்மசக்தியை விளக்குவது உயர்ந்த விலை மதிப்புள்ள இரத்தினத்தைப் பிண்ணாக்குக்கு ஈடாகக் கொடுப்பதை நிகர்க்கும்'' என்பது இதன்கருத்து.

இதில், அரசைக் காட்டினும் நித்தியானந்தத்தைத் தரத்தக்கதாகிய துறவே சிறந்ததென்பதும், அதனையடைதலே மேன்மையென்பதும் குறிக்கப்பட்டன. (117)

மகாராஜா துறவு மூலமும், உரையும்
முற்றுப்பெற்றன.


## புத்தக விளம்பரம்.

| | | |
|---|---|---|
| மஹாராஜா துறவு (மூலமும்-உரையும்) | விலை ரூ | 1—8—0 |
| மதுரை ஹாலாசிய மகுத்துவம்(தெலுங்கு)ரப் | ரூ | 1—8—0 |
| டிெ கிளேஸ் | விலை ரூ | 2—0—0 |
| மதுரை மீனாக்ஷி ஸகஸ்திர நாம ஸ்தோத்திரம் தமிழிலும் கிரந்தத்திலும் ரப் | விலை ரூ | 1—0—0 |
| டிெ கிளேஸ் | விலை ரூ | 1—8—0 |

மேற்கண்ட புஸ்தகங்களும் மற்ற இதர புஸ்தகங்களும் கீழ்க்கண்ட விலாசதாரிடம் கிடைக்கும்.

எம். நடனசுந்தரம் பிரதர்ஸ்,
புத்தக வியாபாரம்,
புதுமண்டபம், மதுரை.

**M. Nadanasundaram Brothers,**
Book-Sellers & Stationers,
Pudumandapam, MADURA.


## பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 40 | 22 | நற்றவத்தா.யிலுரெலாம் | நற்றவத்தா லுயிரெலாம் |